E-ISSN: 2584-167X

Academic Research News
Development relies in Research

கல்வி ஆராய்ச்சி செய்திகள்

மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை.

தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)

தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை

நாள் : 05.08.2026 – புதன்கிழமை



CP - தொகுதி 2, இதழ் 2 – ஜூலை 2026
CP - Volume 2, Issue 2 – July 2026

Our Journals

I. International Journal of Tamil language and Literary Studies - E-ISSN – 2581-7140

UGC CARE, MLA, DOAJ, MIAR, ERIHPLUS, MIR@BEL, ASI, ICI, INTERNET ARCHIVE, Google Scholar Indexed

2. Chenkaantal - E-ISSN: 2583-0481

MLA, DOAJ, Google Scholar, MIR@BEL, INTERNET ARCHIVE Indexed

3. Pandian Tamil Journal of Temple Studies - E-ISSN: 2583-0880

MLA, DOAJ, Google Scholar, MIR@BEL, INTERNET ARCHIVE Indexed

4. Pandian Journal of Women Studies - E-ISSN: 2583-715X

MLA, DOAJ, Google Scholar, MIR@BEL, INTERNET ARCHIVE Indexed

5. Literary Druid - E-ISSN: 2582-4155

MLA, MIAR, ERIHPLUS, Google Scholar, MIR@BEL, ASI, ICI, INTERNET ARCHIVE Indexed

6. Pandian Journal of Mathematical Sciences (PJMS) E-ISSN: 2583-8822

DOAJ, Google Scholar, INTERNET ARCHIVE Indexed

7. Academic Research News - E-ISSN: 2584-167X

Google Scholar, INTERNET ARCHIVE Indexed

8. Tamil Journal of Artificial Intelligence - E-ISSN: 3139-5996

Google Scholar, INTERNET ARCHIVE Indexed

SUSTAINABLE DEVELOPMENT GOALS



To save environment and end climate change critical situations print if only it is needed.

E-ISSN: 2584-167X

கல்வி ஆராய்ச்சி செய்திகள்

மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை.

தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)

தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை

நாள் : 05.08.2026 – புதன்கிழமை

CP - தொகுதி 2, இதழ் 2 – ஜூலை 2026

CP - Volume 2, Issue 2 – July 2026

Be Eco-friendly

Title Verso

Journal title : **Academic Research News**

Abbreviated key-title: **Acad. Res. News**

E- ISSN Number : **2584-167X**

Editor-in-Chief : **Mrs. A. Gomathi**

Publication frequency: Bi-Annual (Calendar Cycle - June and December)

Volume/Issue Type : **CP - Volume 2, Issue 2, July 2026**

Place of Publication : **Virudhunagar**

Start of Publication : **June 2023**

Paper Size (Format) : **Digital A4 Size**

Medium of Publication: E-version

Subject : **Multidisciplinary Studies**

Language : **Tamil, English**

Access Type (URL or DOI): Diamond OA, Online, Indexed long time in Internet Archive

Subscription Type : **APC**

Publisher : **Maheswari Publishers,** (The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN-32-0003213)

Publisher Website : https://pandianeducationaltrust.com/

Journal Site : https://pandianeducationaltrust.com/academic-research-news.html

Pandian Educational Trust supports SDG Goals and is a member of UN SDG Publisher compact.

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

Academic Research News is *a Peer-Reviewed Journal* (E-ISSN: 2584-167X) published **Bi-yearly (June – December)** which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. **Academic Research News** aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of academic news related to research, indexing, ethical publishing and other related news. Research through this academic medium motivates in all aspects of main and inter-disciplines of the core area of study with authentic e-publication. Making Internationalization of **Academic Research News** in the globalized world aids the scholarly community to gather knowledge on Academic Research in the all fields of learning. The impudence and revelation of academic research on internet could foster green printing and open access nature in the domain research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of research and education and the unification of the people in our world. In achieving the aim, our journal **Academic Research News** has been created**.**

Disclaimer

Academic Research News E-ISSN: 2584-167X is committed to research Ethics and consider plagiarism as a crime done to the original author. So, the authors are advised to follow academic ethics with respect to acknowledgment of quotations from other scholarly works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions must be original, must accompany the declaration form stating the research paper as an original work, and has not been published elsewhere for any academic or research purpose. The contributor will be liable for such lapses on any legal issues and publication ethics. **Contact:** president @pandianeducationaltrust.com other information. For Institutional Subscription contact the publisher.

Message from the Editor-in-Chief

Academic Research News is a Peer Reviewed Journal which is committed to academic research, welcomes academicians, scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas in all the field of academic studies. Research is to establish, substantiate facts, restate previous works and to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal to bring down scholarly articles to the academic world.

Publisher Contact:

Maheswari Publishers

(The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST-UDYAM-TN-32-0003213)

3/350, Veterinary Hospital Back Side,

Virudhunagar- 626001, Tamil Nadu, India.

Mobile: +91 8526769556,

Email: arnmultijournal@gmail.com

Copyright © 2026 – Authors'

Academic Research News E-ISSN: 2584-167X is an Open Access journal and the Pdf copy can be reused within the terms of the CC BY license https://creativecommons.org/licenses/by/4.0/. Think before you print so that you can save trees and environment.

Editorial Board

Mrs. A. Gomathi, (Editor-in-Chief)
Assistant Professor of Commerce, BBA Department,
Don Bosco College of Arts and Science, Keelaeral, Tamil Nadu, India.
Email: editorarn@pandianeducationaltrust.com
Profile: https://kamarajcollege.ac.in/commerce/

Dr. M. Annalakshmi,
Assistant Professor of Mathematics,
Department of Mathematics,
VHNSN College,
Virudhunagar - 626001,
Tamil Nadu, India.
Email: annalakshmi@vhnsnc.edu.in
Profile: https://www.vhnsnc.edu.in/dl.php?fid=AMAT7&id=15

Dr. G. Rajesh Kumar,
Assistant Professor,
Department of English,
Directorate of Distance Education,
Madurai Kamaraj University,
Madurai.
Email: drrajeshmkudde@mkuniversity.ac.in
Profile Page: https://mkuniversity.ac.in/dde/faculty.php

Mrs T. Jeyappradha,
Assistant Professor of Management,
NMSSVN College,
Nagamalai, Madurai. Tamil Nadu, India.
Email: jeyappradha@nmssvnc.edu.in
Profile: https://nmssvnc.edu.in/academics/departments/department-of-business-administrationaided/

Dr. D. Maheswari,
The President,
Pandian Educational Trust, Virudhunagar.
Tamil Nadu, India.
Email: president@pandianeducationaltrust.com
Profile: http://pandianeducationaltrust.com/trustees.html

Dr. S. Prema
Assistant Professor of Tamil,
PSGR Krishnammal College for Women,
Coimbatore - 641004,
Tamil Nadu, India.
Email: prema@psgrkcw.ac.in
Profile: https://psgrkcw.irins.org/profile/135952

Associate Editors

Mr. M. Vinoth Kumar,
Head i/c & Guest Lecturer,
Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thothukudi District,
Tamil Nadu, India.
Email: vinothkumar@pandianeducationaltrust.com
Profile: https://sites.google.com/view/msuccenglish/home

Mr. S. Kulandhaivel,
Assistant Professor,
Department of English,
Ganesar Arts and Science College, Melasivapuri-622403,
Pudhukkotai District,
Tamil Nadu, India.
Email: english.kulandhai@gmail.com

Mr. B. Senthil Kumar,
Assistant Professor,
Department of English,
Alagappa Govt. Arts College, Karaikudi,
Sivaganga-630003,
Tamil Nadu, India.
Email: skbosesk@gmail.com

Mr. B.Thangamarimuthu,
Guest Lecturer in English,
Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thothukudi District,
Tamil Nadu, India.
Email: goldchangepearl@gmail.com
Profile: https://sites.google.com/view/msuccenglish/home

ARN Conference Proceedings

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை.

தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)

மற்றும்

செங்காந்தள், E-ISSN: 2583-0481

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்

(PTJTS) E-ISSN: 2583-0880

Academic Research News

(ARN) E-ISSN: 2584-167X

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்

(PJWS) E-ISSN: 2583-715X

தமிழ் செயற்கை நுண்ணறிவு ஆய்விதழ்

(TJAI) **E-ISSN: 3139-5996**

இணைந்து நடத்தும்

தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை

நாள் : 05.08.2026 – புதன்கிழமை

CP - தொகுதி 2, இதழ் 2 – ஜூலை 2026

CP - Volume 2, Issue 2 – July 2026

Be Eco-friendly

Editorial Board

இதழ் ஆசிரியர் / Editor-in-Chief

ஆ. கோமதி

சிறப்பிதழ் ஆசிரியர்கள் / Guest Editors

முனைவர் தி. பரிமளா,
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி.

முனைவர் நா. இரஞ்சித் குமார்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி.

முனைவர் அ. தேன்மொழி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி.

பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details

இச்சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This special issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

வாழ்த்துரை

பொறியாளர் சு. இரா. ஸ்ரீதர்,
செயலாளர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி) ,
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழியாக மட்டுமல்லாமல், காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்து வரும் அறிவியல் மொழியாகவும் விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் மனிதநேயம், பண்பாடு, அறநெறி, இயற்கைச் சிந்தனை, சமூகப் பொறுப்பு போன்ற உயரிய வாழ்வியல் விழுமியங்களை உலகிற்கு எடுத்துரைத்துள்ளன. அந்தச் சங்க இலக்கியப் பாரம்பரியத்திலிருந்து இன்று செயற்கை நுண்ணறிவு எனும் நவீன தொழில்நுட்ப உலகம் வரை தமிழின் பயணம் பெருமைக்குரிய ஒன்றாகும். **"தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை"** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், தமிழரின் பண்பாட்டு மரபையும் நவீன அறிவியல் முன்னேற்றங்களையும் ஒருங்கிணைக்கும் சிறந்த அறிவுப் படைப்பாக அமையும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. மரபும் புதுமையும் இணையும் இவ்வாய்வுத் தளம், தமிழ் ஆய்வுலகிற்கு புதிய சிந்தனைகளையும் பரந்த ஆராய்ச்சி வாய்ப்புகளையும் வழங்கும்.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் செயற்கை நுண்ணறிவு கல்வி, ஆய்வு, மொழியியல், இலக்கியம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இத்தகைய சூழலில் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் மற்றும் தமிழர் பண்பாட்டு மரபுகளை நவீன தொழில்நுட்ப அணுகுமுறைகளுடன் இணைத்து ஆராய்வது காலத்தின் தேவையாகும். அந்த உயரிய நோக்கத்தை முன்னிறுத்தி இச்சிறப்பிதழ் உருவாக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்க முயற்சியாகும். இச்சிறப்பிதழின் உருவாக்கத்திற்காக அயராது உழைத்த கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் தி. பரிமளா அவர்களுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத்தெரிவித்துக் கொள்கிறேன். தரமான ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் இச்சிறப்பிதழின் அறிவுசார் மதிப்பை உயர்த்திய பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் ஆய்வுலகில் நிலையான இடத்தைப் பெற்று, மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழார்வலர்கள் அனைவருக்கும் சிறந்த ஆய்வு வழிகாட்டியாகவும் அறிவுக் களஞ்சியமாகவும் விளங்கிட எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பாராட்டுரை

முனைவர் அ. ராமசுப்பையா,
முதல்வர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி ஆயிரமாண்டு காலப் பண்பாட்டு மரபையும் அறிவியல் சிந்தனையையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் உலகின் தலைசிறந்த செம்மொழிகளில் ஒன்றாகும். சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல், அறநெறி, சமூக ஒற்றுமை, இயற்கை உணர்வு மற்றும் மனிதநேயப் பண்புகளைப் பதிவு செய்த அரிய அறிவுக் களஞ்சியங்களாக விளங்குகின்றன. அந்தப் பாரம்பரியச் செல்வத்தை இன்றைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உலகத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும் முயற்சி காலத்திற்கேற்ற சிறந்த கல்விசார் முன்னெடுப்பாகும். **"தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை"** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், தமிழின் தொன்மையையும் தொழில்நுட்பத்தின் புதுமையையும் ஒருங்கிணைக்கும் அறிவியல் நோக்கமிக்க ஆய்வுப் பதிவாக அமைகிறது. மரபு, இலக்கியம், மொழியியல், கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பல்துறைப் பார்வைகளை இணைக்கும் இச்சிறப்பிதழ், தமிழ் ஆய்வுலகிற்கு புதிய பரிமாணங்களை வழங்கும் என்பதில் ஐயமில்லை. ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் தங்களது ஆழமான சிந்தனைகளையும் ஆராய்ச்சி முடிவுகளையும் இச்சிறப்பிதழின் வாயிலாகப் பகிர்ந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அறிவுப் பரிமாற்றங்கள் உயர்கல்வி மற்றும் ஆய்வுத் துறையின் வளர்ச்சிக்கு வலுசேர்ப்பதோடு, இளம் ஆய்வாளர்களுக்கு புதிய ஆய்வுத் திசைகளையும் உருவாக்கும். இச்சிறப்பிதழை சிறப்பாகத் திட்டமிட்டு வெளியிடும் கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் தி. பரிமளா அவர்களுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கருத்தரங்கம் மற்றும் சிறப்பிதழில் பங்களிப்புச் செய்த அனைத்து ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மதிப்பாய்வாளர்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க மேற்கோள் இதழாகத் திகழ்ந்து, மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழறிஞர்கள் அனைவருக்கும் பயனுள்ள அறிவுச் செல்வமாக விளங்க என் மனமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

வாழ்த்துரை

திரு. ச. பிரபு,
இயக்குநர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி உலகின் தொன்மை வாய்ந்த செம்மொழியாக மட்டுமல்லாமல், அறிவியல் சிந்தனை, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் மனிதநேயக் கோட்பாடுகளைத் தலைமுறைகள் தழுவப் பரப்பி வரும் உயரிய மொழியாகவும் திகழ்கிறது. சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல் நெறி, சமூக அமைப்பு, இயற்கை உணர்வு, அறவாழ்வு மற்றும் பண்பாட்டு மேன்மையை வெளிப்படுத்தும் அழியாப் பொக்கிஷங்களாக விளங்குகின்றன. இத்தகைய செழுமையான மரபை நவீன தொழில்நுட்ப உலகின் முக்கிய முன்னேற்றமான செயற்கை நுண்ணறிவோடு இணைத்துப் பார்ப்பது காலத்தின் தேவையாகும். **"தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை"** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், தமிழின் பாரம்பரியச் செல்வத்தையும் அறிவியல் வளர்ச்சியையும் ஒருங்கிணைக்கும் அரிய அறிவியல் முயற்சியாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கியம், மொழியியல், வரலாறு, பண்பாடு, கல்வி மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பல்வேறு துறைகளை ஒரே ஆய்வுக் களத்தில் இணைக்கும் இம்முயற்சி, தமிழ் ஆய்வுலகிற்கு புதிய பரிமாணங்களை வழங்கும். இன்றைய அறிவுசார் உலகில் பல்துறை ஆய்வுகளின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழின் தொன்மையையும் தொழில்நுட்பத்தின் புதுமையையும் இணைக்கும் இச்சிறப்பிதழ், எதிர்கால ஆய்வுகளுக்கான வலுவான அடித்தளமாக அமையும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. இச்சிறப்பிதழின் வெளியீட்டிற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் தி. பரிமளா அவர்களுக்கும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தரமான ஆய்வுக் கட்டுரைகளால் இதன் அறிவியல் மதிப்பை உயர்த்திய பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வுகளில் புதிய சிந்தனைகளை உருவாக்கி, மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழார்வலர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் சிறந்த அறிவுக் களஞ்சியமாகத் திகழ எனது நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

அணிந்துரை

முனைவர் தி. பரிமளா,
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதி),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை.

தமிழ்மொழி ஆயிரமாண்டு காலமாகத் தனது இலக்கிய வளம், சிந்தனை ஆழம், பண்பாட்டு மேன்மை மற்றும் அறிவுசார் மரபின் மூலம் உலக அரங்கில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியல் நெறி, சமூக அமைப்பு, இயற்கை அறிவு, அறவியல் சிந்தனை மற்றும் பண்பாட்டு அடையாளத்தைப் பிரதிபலிக்கும் முதன்மையான அறிவுக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. இவ்வகையான செழுமையான இலக்கிய மரபை, இன்றைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைத்து ஆராய்வது தமிழ் ஆய்வுலகில் புதிய சிந்தனைப் பரப்பை உருவாக்கும் முயற்சியாகும். **"தமிழர் பண்பாட்டில் சங்க இலக்கியம் முதல் செயற்கை நுண்ணறிவு வரை"** என்ற தலைப்பில் வெளிவரும் இச்சிறப்பிதழ், மரபும் நவீனமும் சந்திக்கும் அறிவியல் மேடையாக அமைந்துள்ளது. சங்க இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டுப்புறவியல், வரலாறு, கல்வியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பல்துறை ஆய்வுகளை ஒருங்கிணைத்து வழங்கும் இச்சிறப்பிதழ், தமிழ் ஆய்வின் பரிணாம வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இன்றைய ஆய்வுலகம் பல்துறை அணுகுமுறையை வலியுறுத்துகின்ற நிலையில், தமிழின் தொன்மையான அறிவையும் நவீன அறிவியல் கருவிகளையும் இணைக்கும் இத்தகைய முயற்சிகள் எதிர்கால ஆய்வுகளுக்கு உறுதியான அடித்தளமாக அமையும்.

செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாத்து, உலகளாவிய ஆய்வுப் பயன்பாட்டிற்கு கொண்டு செல்லும் வாய்ப்புகளை இச்சிறப்பிதழ் சுட்டிக்காட்டுகிறது. இச்சிறப்பிதழில் பங்களித்துள்ள பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் அறிவார்ந்த ஆய்வுக் கட்டுரைகள், தமிழ் ஆய்வுலகின் தரத்தையும் திசையையும் மேலும், உயர்த்தும் என்பதில் உறுதியான நம்பிக்கை உள்ளது. இச்சிறப்பிதழை சிறப்பாக ஒருங்கிணைத்து வெளியிடும் முனைவர் நா. இரஞ்சித் குமார் மற்றும் முனைவர் அ. தேன்மொழி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டுரைகளை வழங்கிய அனைத்து அறிஞர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சிறப்பிதழ் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆய்வுகளில் புதிய சிந்தனைகளுக்கு வழிகாட்டியாகவும், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழறிஞர்களுக்கு பயனுள்ள ஆய்வுக் கருவூலமாகவும் விளங்கிட எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பொருளடக்கம் / Contents

வ. எண் Sl. No	தலைப்பு / பெயர் Title/Author Name	பக்க எண் Page No
1.	புறநானூற்றில் சிவப்பெயர்கள் ம. அல்லிமுத்து	1 - 3
2.	சிலப்பதிகாரத்தில் கண்கள் வெளிப்படுத்தும் காப்பிய நயம் திருமதி மா. கயல்விழி	4 - 8
3.	புறநானூற்றில் விருந்தோம்பலும் பண்பாடும் முனைவர் ர. சங்கரேஸ்வரி	9 - 12
4.	நற்றிணையில் கற்பு மெய்ப்பாடு முனைவர் து. சிவசித்ரா	13 - 17
5.	திருக்குறள் கூறும் மருந்தும் மருத்துவமும் முனைவர் ந. த. சுமதி	18 - 24
6.	புறநானூறு வெளிப்படுத்தும் தமிழர் வீரம் முனைவர் மு. செந்தில்குமார்	25 - 34
7.	தமிழர் பண்பாட்டில் கல்வி முனைவர் மா. செல்வத்தரசி	35 - 39
8.	தொல்காப்பியமும் போர் முறையும் முனைவர் இரா. செல்வராணி	40 - 42
9.	பாலகுமாரனின் 'இரும்புக்குதிரை' புதினத்தில் குடும்ப உறவு சா. தனலட்சுமி	43 - 48
10.	மகாகவி பாரதியாரின் படைப்புகளில் பொருளாதாரச் சிந்தனை முனைவர் பா. நேருஜி	49 - 54

Be Eco-friendly

11.	சிலப்பதிகாரத்தில் பயண இலக்கியக் கூறுகள் முனைவர் தி. பரிமளா	55 - 60
12.	சீனு. ராமசாமியின் ‘தயை’ கவிதைத் தொகுப்பின் கருத்தாடல்கள் முனைவர் தி. பிருந்தா	61 - 66
13.	திருக்குறளில் செயற்கை நுண்ணறிவு முனைவர் அ. மரிய செசிலி,	67 - 71
14.	சங்க அகப்பாடல்களில் ஆளுமைப் பண்பு முனைவர் சு. மலர்விழி	72 - 77
15.	சங்கத் தமிழரின் அறிவியல் சிந்தனைகள் முனைவர் வே. மீனா	78 - 90
16.	சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் சிறப்புகள் ப. ரதிதேவி	91 - 97
17.	உமா மகேஸ்வரியின் தொலைந்தவன் சிறுகதை உணர்த்தும் ஆண் மையச் சிந்தனைகள் முனைவர் பெ. வீரபுத்திரன்	98 - 102

Be Eco-friendly

Be Eco-friendly

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

புறநானூற்றில் சிவப்பெயர்கள்

ம.அல்லிமுத்து, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி, மதுரை – 011
https://orcid.org/0009-0001-7072-1394

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களில் சிறப்புமிக்க நூலான புறநானூறு, தமிழர்களின் அரசியல், சமூக, பண்பாட்டு மற்றும் சமயச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியமாகும். இந்நூலில் சிவபெருமானைக் குறிக்கும் பல்வேறு சிவப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவை இறைவனின் உருவம், இயல்பு, ஆற்றல், பெருமை மற்றும் தத்துவச் சிறப்புகளை உணர்த்துகின்றன. இவ்வாய்வு, புறநானூற்றில் இடம்பெறும் சிவப்பெயர்களைத் தொகுத்து அவற்றின் பொருள், பயன்பாட்டுச் சூழல் மற்றும் இலக்கியப் பங்களிப்பை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

குறிப்புச்சொற்கள்: புறநானூறு, வரலாற்றுக் கருவூலம், சிவம், பரிமாணங்கள்.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு, தமிழர்களின் அரசியல், சமூக, பண்பாட்டு, அறநெறி மற்றும் வீர வாழ்வை எடுத்துரைக்கும் சிறப்புமிக்க இலக்கியமாகும். இந்நூலில் புலவர்கள் மன்னர்கள், வீரர்கள், வள்ளல்கள் ஆகியோரைப் புகழ்ந்துரைத்ததோடு, அக்கால மக்களின் சமயச் சிந்தனைகளையும் மறைமுகமாகப் பதிவு செய்துள்ளனர். சங்க காலத்தில் சமயங்கள் முறையாக நிறுவப்படுவதற்கு முன்பே, இறைவனைப் பற்றிய பல்வேறு கருத்துகளும் வழிபாட்டு மரபுகளும் மக்களின் வாழ்வோடு இணைந்திருந்தன. அவற்றுள் சிவபெருமானைப் பற்றிய குறிப்புகள், அவரது பண்புகளையும் பெருமைகளையும் உணர்த்தும் பல்வேறு சிவப்பெயர்கள் (திருப்பெயர்கள்) வாயிலாக வெளிப்படுகின்றன. இப்பெயர்கள் வெறும் அழைப்புப் பெயர்களாக இல்லாமல், இறைவனின் இயல்பு, ஆற்றல், உருவம், செயல்கள் மற்றும் தத்துவப் பொருளை உணர்த்தும் அடையாளங்களாக அமைகின்றன. எனவே, புறநானூற்றில் இடம்பெற்றுள்ள சிவபெருமானின் திருப்பெயர்களைத் தொகுத்து, அவற்றின் பொருள், இலக்கியச் சூழல் மற்றும் சமயப் பின்னணியை ஆராய்வதே நோக்கமாகும்.

சிவப்பெயர்கள் – பொருள்

ஒரே தெய்வத்தைப் பல்வேறு பண்புகள், செயல்கள், உருவங்கள், சிறப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பல பெயர்களால் அழைப்பதே "சிவப்பெயர்கள்" எனப்படுகிறது. புறநானூற்றில் சிவபெருமான் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல பெயர்களால் போற்றப்படுகிறார்.

சிவபெருமான்

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான் ஆகிய பரம் பொருளின் திருமுடி திருமார்பு, மற்றும் திருவுருவக் கோலங்கள் ஆகிய இவை குறித்து இலக்கியங்கள் பலபட விதந்து பேசும், சங்கப் பழந்தமிழ்ப் பனுவலாகிய புறநானூறும் அந்நெறியில் நின்று உலக முதல்வனின் ஒளிமிகும் திருமேனி நலங்களைத் திறலுற விளக்கும்.

புறநானூற்று கடவுள் வாழ்த்து

புறநானூறு கடவுள் வாழ்த்துப் பாடல் சிவபெருமானின் திருவுருவப் பொலிவையும்,

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

அவரது சிறப்புகளையும் போற்றிப் புகழ்கிறது. இப்பாடலை 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' பாடியுள்ளார்.

பாடல்

கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை;
ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப;
கறைமிடறு அணியலும் அணிந்தன்று;
அக்கறை மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று;
அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினும் சுரக்கும்;
பிறை நுதல் வண்ணம் ஆகின்று;
அப்பிறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே;
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய, நீரறவு
அறியாக் கரகத்துத்,தாழ்சடைப்
பொலிந்த அருந்தவத் தோற்கே.

பாடலின் சுருக்கம்

தலையிலும், அழகிய மார்பிலும் நறுமணம் கமழும் கொன்றை மாலையை அணிந்தவர் சிவபெருமான். தூய வெண்ணிறக் காளை வாகனமும், அதே காளைச் சின்னத்தைக் கொண்ட கொடியும் உடையவர். உலகைக் காப்பதற்காக நஞ்சை உண்டு தன் கழுத்தைக் கரிய நிறமாகக் கொண்டவர். தன் உடலின் ஒரு பாகத்தில் பெண்ணுருவைக் (உமையம்மை) கொண்டுள்ளவர். பிறை சந்திரனைத் தன் நெற்றியில் சூடியவர். அனைத்து உயிர்களுக்கும் அடைக்கலமாய் (பாதுகாவலாய்) விளங்கும், வற்றாத கமண்டலத்தைக் கையில் ஏந்திய, நீண்ட சடைமுடியுடைய அந்த சிவபெருமானை வணங்குகிறோம் என்று பெருந்தேவனார் பாடுகிறார். மேலும், சிவபெருமானின் உருவச் சிறப்பினைக் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.

சிவப் பெயர்கள்

சிவபெருமானை இடைவிடாமல் எண்ணி எண்ணி உள்ளத்து உணர்வால் வழிபடும் புண்ணிய நெறி சைவ சமயமாகும். சிவம் என்று சொல்லுக்கு முக்தி, செம்மை, நன்மை முதலான பொருள்கள் உள்ளன. சிவம் என்பது அனைத்துக்கும் அப்பாலாய் நிற்பது, அனைத்தையும் அடக்குவது, எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பது என பல பொருள்கள் உண்டு. சைவர்களின் முழுமுதற் கடவுளாக கருதப்படும் சிவம் என்ற பெயர் புறநானூற்றில் பிற பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது. அவை,

"தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன்" - புறம். 1
"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" - புறம். 6
"கறைமிடற்று அண்ணல்" - புறம். 55
"மணி மிடற்றோன் " - புறம். 56
"நீலமணி மிடற்று ஒருவன் " - புறம். 91
"முக்கட் செல்வன்" - புறம். 181

போன்ற பெயர்களால் வழங்கப் பெறுகிறார். மேலும், சிவம் முப்புரம் எரித்தமை உள்ளிட்ட செய்திகள் புறநானூற்றில் காணக் கிடைக்கின்றன. தீயைப் போல் விளங்கும் சடையும், முழு ஆயுதமும், நீலமணி போன்ற கழுத்தும் உடையவர் என்பதை,

"ஏற்றவலம் உயரிய உரிமருள் அவிர்சடை
மணி மிடற்றோன்" புறம். 56
"தோலா நல்லிசை நால்வருள்ளும் கூற்று

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

ஒத்தீயே" புறம். 56

போன்ற செய்யுட் பகுதிகள் உணர்த்துகின்றன. சிவ பெருமானின் அழித்தல் தொழிலால் கூற்று என்று அழைக்கப்படுகிறார். சுந்தரரும் கூற்றானை என்று கூறியுள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும், சிவபெருமான் நஞ்சு மணியைத் தொண்டைக்குள் அடக்கிக் கொண்டவன் என்று கூறும் அடியினை, " மணி மிடற்றோனும் எண்கையாய்" (1) என்று கலித்தொகை அடி புகழ்கின்றது. இரு கண்கள் சிவனைக் காண்பதற்கு, இரு செவிகள் சிவனின் பெருமைகளைக் கேட்பதற்கு, நெஞ்சம் அவனை நினைப்பதற்கு, இரு கரங்கள் அவனை வணங்கி மகிழ்வதற்கு மட்டுமே உள்ளது என்பதனை,

"நீல மிடற்றானை என்கை ஒத்து
நேர் கூப்புக" (2)

எனும் அடிகள் மூலம் சிவனை போற்றி மகிழ்கின்றார். புறப்பொருள் என்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார். வேதங்கள் சிவபெருமானின் நாவில் இருந்து தோன்றியது என்பதை,

"நன்றாய்ந்த நீணிமிர் சடை
முதுமுதல்வன் வாய் போகா"புறம். 166

எனும் அடிகள் மூலம் அறியலாம்.

முடிவுரை

புறநானூற்றில் இடம்பெறும் சிவப்பெயர்கள் தமிழரின் சமய உணர்வையும், சிவபெருமானின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக்காட்டுகின்றன. இப்பெயர்கள் வெறும் அடைமொழிகள் அல்ல; அவை தமிழரின் பண்பாடு, அறம், இறை நம்பிக்கை, இலக்கிய நயம் ஆகியவற்றின் சான்றுகளாக விளங்குகின்றன. எனவே, புறநானூற்றில் காணப்படும் சிவப்பெயர்களை ஆராய்வது சங்க இலக்கியத்தின் சமயச் சிந்தனையைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான ஆய்வாக அமைகிறது.

குறிப்புகள்

[1] புலியூர் கேசிகன், புறநானூறு.
[2] கந்தையா பிள்ளை, ந. சி. செந்தமிழ் அகராதி.
[3] அ.ரேணுகா, சங்க இலக்கிய ஆய்வு.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

சிலப்பதிகாரத்தில் கண்கள் வெளிப்படுத்தும் காப்பிய நயம்

திருமதி மா.கயல்விழி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

ஆய்வுச் சுருக்கம்

தமிழின் ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரம், இளங்கோவடிகளின் இலக்கிய ஆளுமையையும் கலைநயத்தையும் வெளிப்படுத்தும் அரிய படைப்பாகும். இக்காப்பியத்தில் இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும், உவமையும், குறியீடும் கதையின் போக்கிற்கும் கருத்தின் ஆழத்திற்கும் துணைநிற்கின்றன. அவற்றுள் ''கண்கள்'' என்ற படிமம் குறிப்பிடத்தக்க இலக்கியச் சிறப்புடையதாகும். கண்ணகி, மாதவி, தேவந்தி போன்ற பாத்திரங்களின் அறிமுகத்திலிருந்து காப்பியத்தின் இறுதிவரை கண்கள் பல்வேறு பரிமாணங்களில் சித்தரிக்கப்படுகின்றன. அவை அழகியல் கூறாக மட்டுமல்லாமல், காதல், கற்பு, பிரிவு, துயரம், கற்பனை, முன்அறிவிப்பு, சாட்சியம், ஆகியவற்றை வெளிப்படுத்தும் கலைநயமிக்க குறியீடாகவும் அமைகின்றன. மேலும் இயற்கைப் பொருட்களுக்குள் மனித உணர்வுகளை ஏற்றித் தற்குறிப்பேற்றம் செய்யும் இடங்களிலும் கண்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. எனவே, சிலப்பதிகாரத்தில் ''கண்கள்'' என்பது காப்பியத்தின் கருத்துக் கட்டமைப்பையும் உணர்வியல் செழுமையையும் வெளிப்படுத்தும் மைய இலக்கிய உத்தியாக விளங்குகிறது. இவ்வாய்வு, கண்கள் இடம்பெறும் சூழல்களை இலக்கிய நோக்கில் ஆராய்ந்து அவை வெளிப்படுத்தும் காப்பிய நயத்தை விளக்குகிறது.

குறிப்புச்சொற்கள்: சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், கண் குறியீடு, தமிழ் காப்பிய இலக்கியம், இலக்கிய அழகியல்.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரம் அறம், நீதி, கற்பு, ஊழ், அரசியல், சமூகம், மனிதநேயம் ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் சித்தரிக்கும் தலைசிறந்த காப்பியமாக விளங்குகிறது. இளங்கோவடிகள் படைத்த இந்நூல், கதைச் சிறப்பினால் மட்டுமல்லாது, கலைநயம், சொல்லாட்சி, உவமை, குறியீட்டியல் மற்றும் படிம உருவாக்கம் ஆகியவற்றாலும் தமிழறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இலக்கியத்தில் ''கண்'' என்பது வெறும் பார்வை உறுப்பாக மட்டுமல்ல; மனித மனத்தின் மொழியாகவும் உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் கருதப்படுகிறது. அன்பு, காதல், மகிழ்ச்சி, துயரம், கோபம், இரக்கம், நீதி, உண்மை போன்ற பல்வேறு மனநிலைகள் கண்களின் வழியே வெளிப்படுகின்றன. சிலப்பதிகாரம் முழுவதும் ''கண்கள்'' என்ற படிமத்தைப் பல்வேறு இலக்கிய உத்திகளுடன் இணைத்துப் இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ளார்.

பாத்திர அறிமுகத்தில் கண்கள்

இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும்போது அவர்களின் உடலழகை மட்டும் வருணிக்காமல், அவர்களின் உள்ளப்பண்பையும் எதிர்கால வாழ்க்கைப் போக்கையும் உணர்த்தும் வகையில் சொல்லாட்சியை அமைக்கிறார். அதில் ''கண்கள்'' முக்கிய இடம் பெறுகின்றன. மனையறம் படுத்த காதையில் இல்லற வாழ்வைத் தொடங்கும் கோவலனையும் கண்ணகியையும் அறிமுகப்படுத்தும் போது, ''கயமலர்க் கண்ணியும் காதல் கொழுநலும்'' என்று கண்ணகியை ''கயமலர்க் கண்ணி'' எனச் சுட்டுகிறார். குவளை மலர் நீருடன் தொடர்புடையது. அதுபோல கண்ணகியின் கண்கள் தூய்மை, மென்மை, அமைதி, ஆழ்ந்த அன்பு ஆகியவற்றின் அடையாளமாக அமைகின்றன. பின்னர் பல இடங்களில்,

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

“கயல் நெடுங்கண்ணி”,
“செங்கயல் நெடுங்கண்”,
“செங்கயல் நெடுங்கண் காதலி”

எனக் கயல் மீனோடு கண்ணகியின் கண்கள் ஒப்பிடப்படுகின்றன. தமிழ்ச் சங்க இலக்கிய மரபில் கயல் கண்கள் என்பது பெண்மையின் அழகிய அடையாளமாகக் கருதப்படுகிறது. ஆனால் இளங்கோவடிகள் அதனை அழகியல் நோக்கில் மட்டுமல்லாது, நீரின் இயல்பைப் போல வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளையும் உணர்த்தும் குறியீடாகப் பயன்படுத்துகிறார். கண்ணகியின் வாழ்க்கை மகிழ்ச்சியிலிருந்து துயரத்திற்கும், மானுட நிலையிலிருந்து தெய்வ நிலையிற்கும் உயர்வதை இவ்வுவமைகள் நுட்பமாக முன்கூட்டியே சுட்டுகின்றன. அதேபோன்று மாதவி, “மாமலர் நெடுங்கண் மாதவி” என்று தாமரை மலருடன் ஒப்பிடப்படுகிறாள். தாமரை சூரிய ஒளியில் மலர்ந்து, சூரியன் மறைந்ததும் குவிவது போல, கோவலனின் வருகையில் மகிழ்ந்து, பிரிவில் வாடும் அவளது வாழ்க்கைச் சூழலை இளங்கோவடிகள் ஒரு சொல்லில் வெளிப்படுத்துகிறார்.

தேவந்தி போன்ற துணைப் பாத்திரங்களுக்கும் “வேலரி நெடுங்கண்”, “பூவந்த உண்கண்” போன்ற அடைமொழிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தனித்துவமான அழகியல் அடையாளத்தை உருவாக்குவதில் “கண்கள்” முக்கிய பங்கு வகிப்பதை அறிய முடிகிறது. இதனால், சிலப்பதிகாரத்தில் பாத்திர அறிமுகம் என்பது வெறும் தோற்ற வருணனையாக அமையவில்லை; எதிர்கால நிகழ்வுகளையும், பாத்திரத்தின் உளவியல் தன்மையையும் முன்கூட்டியே சுட்டும் கலைநயமிக்க இலக்கிய உத்தியாக “கண்கள்” பயன்படுத்தப்பட்டுள்ளன.

காட்சி அறிமுகத்தில் கண்கள்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் நிகழ்வுகளை விவரிப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றை வாசகரின் மனக்கண் முன் உயிர்ப்புடன் நிறுத்தும் காட்சிப்படுத்தல் உத்தியையும் திறம்படக் கையாள்கிறார். அந்தக் காட்சிநயத்தை உருவாக்குவதில் "கண்கள்" முக்கிய இலக்கியக் கருவியாக அமைகின்றன. இதனால் வாசகர் நிகழ்வுகளைப் படிப்பதோடு மட்டுமல்லாமல், நேரில் காண்பதைப் போன்ற அனுபவத்தையும் பெறுகிறார். மங்கல வாழ்த்துப்பாடலில் கோவலன்–கண்ணகி திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது. அந்நிகழ்வைக் கண்ட மக்களின் மகிழ்ச்சியை,

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை"

என்ற அடிகள் வெளிப்படுத்துகின்றன. இங்கு "காண்பார் கண்" என்பது சாதாரண பார்வையைக் குறிப்பதல்ல. வரலாற்றில் நிலைத்திருக்கும் ஓர் உயரிய இல்லற இணையரைத் தங்கள் கண்களால் கண்ட பெரும்பேற்றைப் பெற்றவர்கள் என்ற கருத்தை உணர்த்துகிறது. இதன் மூலம், கண்ணகி–கோவலன் தம்பதியர் சாதாரண மனிதர்கள் அல்லர்; அறத்தின் அடையாளங்களாக உயரப் போகும் இணையர் என்பதை இளங்கோவடிகள் மறைமுகமாக உணர்த்துகிறார். இதனைத் தொடர்ந்து இந்திர விழவு ஊரெடுத்த காதையில், புகார் நகரின் விழாக்கோலம் விரிவாகச் சித்தரிக்கப்படுகிறது. அந்தச் சூழலில்,

"கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன"

என்ற வரிகள் இடம் பெறுகின்றன. தமிழர் மரபில் பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நன்மையையும், வலக்கண் துடித்தல் தீமையையும் குறிக்கும் நம்பிக்கை நிலவுகிறது. இவ்வழக்கை இலக்கிய உத்தியாகக் கையாண்ட இளங்கோவடிகள், கண்ணகியின் வருங்கால உயர்வையும் மாதவியின் வாழ்க்கையில் நிகழவிருக்கும் மாற்றத்தையும் முன்னறிவிக்கிறார். இங்கு "கண்" என்பது உடல் உறுப்பாக இல்லாமல், விதியின் அறிகுறியாக விளங்குகிறது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

கொலைக்களக்காதையில் கண்ணகி வறுமையிலும் கணவனுக்காக அன்போடு உணவு சமைத்து பரிமாறும் காட்சி மிகவும் நெகிழ்ச்சியூட்டுவதாக அமைகிறது. அதனைப் பார்த்த மாதரியும் ஐயையும், "கண்கொளா நமக்கு இவர் காட்சி" என்று வியக்கின்றனர். அவர்களின் பார்வையில் கோவலனும் கண்ணகியும் கண்ணன்–நப்பின்னை போன்ற தெய்வீகத் தம்பதிகளாகத் தோன்றுகின்றனர். இங்கு "கண்கள்" வெளிப்புற அழகைக் காணும் கருவியாக இல்லாமல், உள்ளத்தின் தூய்மையை உணரும் ஆன்மிகப் பார்வையாக உயர்கின்றன. இதுபோன்ற இடங்கள் முழுவதும், இளங்கோவடிகள் "காட்சி"யை "கண்கள்" வழியாக உருவாக்கி, வாசகரின் மனதில் நிலைத்திருக்கும் காப்பிய அனுபவத்தை உருவாக்குகிறார். இதுவே சிலப்பதிகாரத்தின் காட்சிநயத்தை வளப்படுத்தும் முக்கிய இலக்கிய உத்தியாக அமைகிறது.

தற்குறிப்பேற்றத்தில் கண்கள்

தமிழ் இலக்கிய மரபில் இயற்கைப் பொருட்களுக்கு மனிதப் பண்புகளை ஏற்றிக் கூறுவது "தற்குறிப்பேற்றம்" எனப்படும். இளங்கோவடிகள் இவ்வுத்தியை மிகுந்த கலைநயத்துடன் சிலப்பதிகாரத்தில் கையாண்டுள்ளார். குறிப்பாக "கண்கள்" மற்றும் "கண்ணீர்" வழியாக இயற்கையே மனித உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதாகச் சித்தரிப்பது அவரது கற்பனை வளத்திற்குச் சான்றாகும். அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில் கதிரவன் மறையும் மாலைப்பொழுதை வருணிக்கும் போது,

"திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்..."

என்ற வரிகள் இடம்பெறுகின்றன. இங்கு கடலை ஆடையாக உடுத்திய நிலமகள், கதிரவனைப் பிரிந்த துயரத்தால் கண்களில் நீர் பெருகி நிற்பதாகக் கூறப்படுகிறது. இயற்கை நிகழ்வாகிய மாலை நேரத்தை, பிரிவால் வாடும் பெண்ணின் மனநிலையுடன் இணைத்து விளக்கும் இப்பகுதி, இளங்கோவடிகளின் கற்பனை வளத்தை எடுத்துக்காட்டுகிறது. இது வெறும் இயற்கை வருணனை அல்ல. கண்ணகியின் வாழ்க்கையில் விரைவில் நிகழவிருக்கும் கணவன் பிரிவையும் துயரத்தையும் முன்னறிவிக்கும் இலக்கிய உத்தியாகவும் இது அமைகிறது. இதன் மூலம் காப்பியத்தில் இயற்கையும் மனித வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதை அறிய முடிகிறது. அதேபோல் புறஞ்சேரி இறுத்த காதையில் வையையாறு, "கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி" என்று கண்களில் பெருகும் நீரை மறைத்துக் கொண்டு ஓடுவதாகச் சித்தரிக்கப்படுகிறது. ஆற்றிற்கு மனித உணர்வுகளை அளிக்கும் இக்கற்பனை, கண்ணகியின் எதிர்காலத் துயரத்தை எண்ணி இயற்கையே இரங்குவதாகப் பொருள் தருகிறது.

இளங்கோவடிகளின் தற்குறிப்பேற்றத்தில் "கண்கள்" என்பது கண்ணீரின் வழியாக உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாக மட்டுமல்லாமல், இயற்கையையும் காப்பிய நிகழ்வுகளோடு இணைக்கும் இலக்கியப் பாலமாகவும் அமைகிறது. இதனால் வாசகரின் உணர்வுகள் கதையுடன் ஒன்றிணைந்து பயணிக்கின்றன. எனவே, சிலப்பதிகாரத்தில் தற்குறிப்பேற்றத்தின் வழியாக "கண்கள்" வெளிப்படுத்தும் காப்பிய நயம், காப்பியத்தின் உணர்ச்சி ஆழத்தையும் கலைச் செழுமையையும் பல மடங்கு உயர்த்துகிறது.

கற்பனைநயத்தில் கண்கள்

இலக்கியத்தின் உயிர்நாடி கற்பனையாகும். நிகழும் உண்மைகளை அழகுணர்வோடும் கருத்துச் செறிவோடும் வடிவமைத்து வாசகரின் மனதில் நிலைநிறுத்துவது கற்பனையின் சிறப்பாகும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கையாண்டுள்ள கற்பனைநயம், காப்பியத்தின் அழகியல் மதிப்பை உயர்த்தும் முக்கியக் காரணிகளில் ஒன்றாகும். குறிப்பாக "கண்கள்" தொடர்பான உவமைகள், உருவகங்கள், குறியீடுகள் ஆகியவை காப்பியத்திற்கு தனித்துவமான கவித்துவப் பொலிவை அளிக்கின்றன. இந்நயம் சிறப்பாக வெளிப்படும் பகுதி

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

கானல்வரி ஆகும். கோவலனும் மாதவியும் பாடும் கானல்வரிப் பாடல்களில் இயற்கை, காதல், கற்பனை ஆகியவை ஒன்றோடொன்று கலந்துள்ளன. அங்கு காவிரி ஒரு பெண்ணாகக் கற்பனை செய்யப்படுவதோடு, அவளது கண்கள் "கருங்கயற்கண்" என வருணிக்கப்படுகின்றன. இவ்வருணனை இயற்கையை மனித உருவில் சித்தரிப்பதோடு, தமிழர் அழகியல் மரபையும் வெளிப்படுத்துகிறது. அதேபோல், கோவலன் தன் தலைவியின் கண்களை, "குவளை அல்ல; கொடிய" என்ற கருத்தில் வருணிக்கிறான். முதலில் அவை குவளை மலரைப் போன்ற மென்மையும் அழகும் கொண்டதாகத் தோன்றினாலும், பின்னர் தன்னை வதைக்கும் ஆற்றல் பெற்றவை எனக் கூறுகிறான். இங்கு குவளை மலரின் மென்மையும், காதலின் வேதனையும் ஒரே படிமத்தில் இணைக்கப்படுகின்றன. மேலும், "செங்கண் கொன்னே வெய்ய கூற்றும் கூற்றம்" என்ற வரிகளில் தலைவியின் கண்கள் எமனின் கூற்றுக்கும் மேலான வலிமை உடையவை என மிகைநவிற்சியுடன் கூறப்படுகின்றன. இவ்வுவமை தலைவியின் பார்வை உயிரைக் கவரும் ஆற்றல் கொண்டது என்பதை உணர்த்துகிறது. இது சங்க அகப்பாடல்களில் காணப்படும் காதல் இலக்கிய மரபைத் தொடர்வதோடு, இளங்கோவடிகளின் தனித்துவமான கற்பனை வளத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

இளங்கோவடிகள் கற்பனைநயத்தில் "கண்கள்" என்பதை அழகின் அடையாளமாக மட்டும் கருதவில்லை. காதலின் இன்பமும் பிரிவின் துன்பமும், மனநிலையின் மாற்றமும், வாழ்வின் நிலையாமையும் கண்களின் வழியே வெளிப்படுத்தப்படுகின்றன. இதனால் "கண்கள்" காப்பியத்தின் அழகியல் மொழியாக உயர்கின்றன. எனவே, சிலப்பதிகாரத்தில் கற்பனைநயத்தை வெளிப்படுத்தும் முதன்மையான படிமங்களில் "கண்கள்" ஒன்றாகத் திகழ்கின்றன என்பது தெளிவாகிறது.

சாட்சியமாகக் கண்கள்

சிலப்பதிகாரம் அறத்தையும் நீதியையும் மையமாகக் கொண்ட காப்பியமாகும். அறம் வெல்லவும், அநீதி தோற்கவும் சாட்சியம் அவசியமாகிறது. இந்நிலையில், இளங்கோவடிகள் "கண்கள்" என்ற குறியீட்டை உண்மையை நிலைநாட்டும் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். அடைக்கலக்காதையில், கண்ணகியுடன் மதுரைக்கு வந்த கவுந்தியடிகள், அவளது பொறுமையையும் கணவன்பற்றையும் நேரில் கண்டு,

"கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

என்று புகழ்கிறார். இது வெறும் பாராட்டாக இல்லாமல், கண்ணகியின் கற்புக்கு நேரில் கண்ட சாட்சியாக அமைகிறது. இவ்வாறு, கவுந்தியடிகளின் கண்கள் உண்மையை உறுதிப்படுத்தும் சான்றாகின்றன. அதேபோல், பதிகத்தில் குன்றக் குறவர்கள் கண்ணகி தேவருலகம் சென்ற காட்சியைத் தாங்கள் நேரில் கண்டதாக இளங்கோவடிகளிடம் தெரிவிக்கின்றனர். இதன் மூலம் கண்ணகி மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்தமை கண்கண்ட சாட்சியத்தின் அடிப்படையில் நிறுவப்படுகிறது. காப்பியத்தின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் இலக்கிய உத்தியாக இது அமைகிறது.

துன்பமாலையில், கோவலன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு கொல்லப்பட்டதை அறிந்த கண்ணகி, கதிரவனை நோக்கி, "காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" என்று வினவுகிறாள். உலகில் நடைபெறும் அனைத்தையும் கண்டு அறிந்த சாட்சியாக கதிரவன் கருதப்படுகிறார். அதற்கு வானிலிருந்து, "கள்வனோ அல்லன்" என்ற அசரீரி ஒலி எழுகிறது. இதன் மூலம் மனித நீதிமன்றம் தவறினாலும், இயற்கையின் நீதிமன்றம் தவறாது என்ற உயரிய அறக்கருத்தை இளங்கோவடிகள் நிலைநிறுத்துகிறார். மேலும், நாடுகாண் காதையில் "வான்கண் வழியா" என்று சூரியன் வானத்தின் கண்ணாகக் குறிப்பிடப்படுவது குறிப்பிடத்தக்கது. உலக நிகழ்வுகளைக் காணும் பேரறிவின் குறியீடாக "கண்" இங்கு

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

விளங்குகிறது. இதனால், சிலப்பதிகாரத்தில் "கண்கள்" என்பது நிகழ்வுகளைக் காணும் உறுப்பாக மட்டுமல்லாமல், உண்மை, அறம், நீதி ஆகியவற்றை நிலைநாட்டும் சாட்சியாகவும் காப்பியத்தின் கருத்தியல் அடித்தளமாகவும் அமைகிறது.

முடிவுரை

சிலப்பதிகாரத்தில் "கண்கள்" என்பது வெறும் உடல் உறுப்பாக மட்டுமல்லாமல், பாத்திரங்களின் பண்புநலம், உணர்வுகள், கற்பனை, காட்சிநயம், தற்குறிப்பேற்றம் மற்றும் சாட்சியம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் காப்பிய உத்தியாக விளங்குகிறது. கண்ணகி, மாதவி உள்ளிட்ட பாத்திரங்களின் வாழ்க்கைநிலைகளையும் காப்பியத்தின் கருத்தியல் ஆழத்தையும் இளங்கோவடிகள் கண்கள் என்ற குறியீட்டின் வழி சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே, சிலப்பதிகாரத்தில் "கண்கள்" காப்பியத்தின் அழகியலையும் கருத்துச் செறிவையும் ஒருங்கிணைக்கும் முக்கிய இலக்கியப் படிமமாக அமைந்துள்ளது என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

குறிப்புகள்

[1] இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.
[2] இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை.
[3] இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். பொ.வே. சோமசுந்தரனார் உரை.
[4] மு. வரதராசனார். தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: சாகித்திய அகாதெமி.
[5] தமிழண்ணல். ஒப்பிலக்கிய அறிமுகம். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
[6] சு. வே. சுப்பிரமணியன். சிலப்பதிகாரத் திறனாய்வு. சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

புறநானூற்றில் விருந்தோம்பலும் பண்பாடும்

முனைவர். ர.சங்கரேஸ்வரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை-04.

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியமான புறநானூறு தமிழர்களின் அக மற்றும் புற வாழ்க்கையோடு, அவர்களின் உன்னத பண்பாட்டு அடையாளமான விருந்தோம்பல் அறத்தையும் விரிவாகப் பதிவு செய்கிறது. தொல்காப்பியரின் 'விருந்தே புதுமை' என்ற இலக்கணத்திற்கு ஏற்ப, சங்கச் சமூகம் முன்பின் அறியாத புதியவர்களையும் இன்முகத்தோடு வரவேற்று உணவளிப்பதைப் பாரம்பரியக் கடமையாகக் கொண்டிருந்தது. தங்களின் உழைப்பால் ஈட்டிய பொருளைத் தாமே நுகர்ந்துவிடாமல் பிறரோடு பகிர்ந்து உண்ணும் பகுத்துண்ணும் பண்பே தமிழர்களின் விருந்தோம்பலுக்கு அடித்தளமாக அமைந்தது. பகலில் மட்டுமன்றி, அல்லில் (நடு இரவில்) விருந்தினர் வந்தாலும் இல்லத்தரசிகள் சினக்காமல் நெஞ்சம் மகிழ்ந்து உணவிட்ட உயரிய பண்பினைப் புறநானூறு போற்றுகிறது. கடும் வறுமை நிலையிலும், மறுநாள் விதைப்பதற்காக வைத்திருந்த விதைத்தினையை உரலில் குற்றிச் சமைத்து விருந்தினரின் பசியைப் போக்கிய பெண்களின் தியாகம் நெஞ்சை நெகிழ வைக்கிறது. அதுமட்டுமன்றி, வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரிக்கத் தன் பழைய இரும்பாலான வாளையும், அடுத்த நாள் சீறியாழையும் அடகு வைத்து உணவளித்த தலைவர்களின் ஈகைச் சிறப்பும் இதில் சுட்டப்படுகிறது. சங்க அரசர்களும் தங்களை நாடி வந்த பாணர்களுக்கும் புலவர்களுக்கும் தேன், பால், ஊன் மற்றும் பொற்கலங்களில் உணவளித்து வள்ளல்களாகத் திகழ்ந்தனர். அதியமான் தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஔவையாருக்கு வழங்கிச் சிறப்பித்தது தமிழரின் விருந்தோம்பல் அன்பிற்குச் சான்றாகத் திகழ்கிறது. புறநானூறு காட்டும் இவ்விருந்தோம்பல் பண்பாடு வெறும் உணவளிப்பதோடு நிற்காமல் வறுமை ஒழிப்பு, சமூக நல்லிணக்கம் மற்றும் தமிழ் வளர்த்தல் போன்ற சமூக விளைவுகளையும் ஏற்படுத்தியது. மனிதநேயம் சுருங்கி வரும் இன்றைய இயந்திரத் தனமான உலகில், புறநானூறு வெளிப்படுத்தும் இவ்விருந்தோம்பல் அறம் நாம் மீட்க வேண்டிய உன்னதத் தத்துவமாகும்.

குறிப்புச்சொற்கள்: புறநானூறு, விருந்தோம்பல், பண்பாடு, சிறப்பு

முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் அக வாழ்வையும் புற வாழ்வையும் நெறிப்படுத்தும் வாழ்வியல் நெறிகளைக் கொண்டவை. அவற்றுள், புறப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாய் விளங்கும் நூல் ‘புறநானூறு’ ஆகும். இந்நூல் வீரத்தையும் கொடையையும் மட்டும் பேசாமல், தமிழர்களின் உன்னத பண்பாட்டு அடையாளமான விருந்தோம்பல் குறித்தும் அரிய பல செய்திகளைப் பதிவு செய்துள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலகளாவிய நேயத்தைக் கற்பித்த சங்கச் சமூகம், தன் இல்லம் தேடி வரும் எளியோரையும் புதியோரையும் எவ்வாறு உபசரித்தது என்பதைப் புறநானூறு விரிவாக உரைக்கிறது. இவ்வியாசம் புறநானூற்றுப் பாடல்களின் வழி சங்க கால தமிழரின் விருந்தோம்பல் அறத்தை ஆய்வு செய்கிறது.

தமிழ்ப் பண்பாட்டில் விருந்து

'விருந்து' என்னும் சொல் இன்று நாம் பயன்படுத்தும் உறவினர் அல்லது நண்பர்களைக் குறிக்கும் சொல் அன்று. தொல்காப்பியர், "விருந்தே புதுமை" (தொல். பொருள். 540) என்று இதற்கு இலக்கணம் வகுக்கிறார். அதாவது, முன்பின் அறியாத புதியவர்களையே சங்கத் தமிழர்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

'விருந்தினர்' என்று அழைத்தனர். அறிமுகமில்லாத புதியவர்களையும் இன்முகத்தோடு வரவேற்று உணவளிப்பது தமிழர்களின் பாரம்பரியக் கடமையாகும். பண்டையத் தமிழர்கள் தங்களின் உழைப்பால் ஈட்டிய பொருளைத் தாமே நுகர்ந்துவிடாமல், பிறரோடு பகிர்ந்து உண்பதை அரும்பெரும் அறமாகக் கருதினர். பகுத்துண்ணும் இப்பண்பே விருந்தோம்பலின் அடித்தளமாகும். செல்வத்தின் பயனே ஈதல் என்பதைச் சங்கப் பாடல்கள் உரக்கச் சொல்கின்றன.**விருந்தினரின் இலக்கணமும் புறநானூற்றுப் பார்வையும்**

தன்னை நாடி வருபவர் வறியவரா, பாணரா, புலவரா அல்லது வழிப்போக்கரா என்று பாராமல், வந்தவர் பசி தீர்ப்பதே இல்லறத்தானின் முதன்மைக் கடமையாகும். புறநானூற்றில் இல்லறத்தின் பெருமையே விருந்தோம்பலில் தான் அடங்கியுள்ளது என்று சான்றோர்கள் பாடியுள்ளனர். பகலில் மட்டுமல்லாமல், நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவளிக்கும் உயரிய பண்பைப் பெண்கள் பெற்றிருந்தனர். இதனை நற்றினையும் புறநானூறும் ஒருசேரப் பாராட்டுகின்றன. தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் உன்னத மனிதர்களால் தான் இவ்வுலகம் இயங்குகிறது என்று கூறும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, அதற்குக் காரணமாக விருந்தோம்பலையே குறிப்பிடுகிறார். மேற்கோள் பாடல் (புறநானூறு 182):

"அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே;" [1]

விளக்கம் : தேவர்களே பெறுவதற்கரிய அமிழ்தமே கிடைத்தாலும், அது தமக்கு மட்டும் நல்லது என்று எண்ணித் தனித்து உண்ண மாட்டார்கள் சான்றோர்கள். பிறருக்கும் பகிர்ந்து கொடுக்கும் இப்பண்பே தமிழரின் விருந்தோம்பல் பண்பிற்குச் சான்றாகும்.

வறுமையிலும் விருந்தோம்பல்

செல்வந்தர்கள் விருந்தளிப்பது இயல்பு. ஆனால், தன்னிடம் ஏதுமில்லாத வறுமை நிலையிலும், தேடி வந்த விருந்தினருக்குத் தன் உயிரைப் பணயம் வைத்தாவது உணவளிக்கத் துடித்த சங்க கால மக்களின் மனநிலை நெஞ்சை நெகிழ வைப்பதாகும். புறநானூற்றின் 327 முதல் 335 வரையிலான பாடல்கள் 'மூதின் முல்லை' என்னும் துறையின் கீழ் அமைந்து, வறியவர்களின் இல்லத்து விருந்தோம்பலை வியந்து பாடுகின்றன.

அ) விதைத்தினை அவித்து உணவாக்கிய தாய்:

ஒரு வீட்டில் கடுமையான வறுமை. அன்று சமைப்பதற்கு ஒரு பிடி தானியம் கூட இல்லை. அந்த நேரத்தில் விருந்தினர் சிலர் வீட்டிற்கு வருகின்றனர். திண்ணையில் அமர்ந்திருக்கும் அவர்களைப் பசியோடு வைத்திருக்க அந்த இல்லத்தரசி விரும்பவில்லை. மறுநாள் வயலில் விதைப்பதற்காக வைத்திருந்த விதைத்தினையை உரலில் இட்டுக் குற்றி, அதனைக் கொண்டு சமைத்து விருந்தினரின் பசியைப் போக்கினாள்.

மேற்கோள் பாடல் (புறநானூறு 327):
"மடவள் மாதோ, தானே; இடவகை
அறியாள் நல்கூர்ந்தனளே;...
விதைக்குச் சென்ற நெல்லின் விழுத்திணை
கண்டனள் தட்ட உவக்கும் பண்பின்" [2]

ஆ) இரும்பைக் கடகு கொடுத்து விருந்தோம்பல் :

மற்றொரு பாடலில், வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு உணவளிக்கப் பொருள் இல்லை. அதனால், வீட்டிலிருந்த பழைய இரும்பாலான வாளைக் கொண்டு போய் அடகு வைத்து உணவளித்தான் ஒரு தலைவன். மறுநாளும் விருந்தினர் வர, அன்று தன் வீட்டிலிருந்த கருங்கோட்டுச் சீறியாழை அடகு வைத்து விருந்தினரை உபசரித்தான் என்று புறநானூறு கூறுகிறது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

அரசர்களின் விருந்தோம்பல்

சங்க கால அரசர்கள் வெறும் போர்க்கள வீரர்களாக மட்டுமன்றி, பாணர்களையும் புலவர்களையும் இன்முகத்தோடு வரவேற்று விருந்தோம்பும் வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். கடையெழு வள்ளல்களும், மூவேந்தர்களும் தங்களை நாடி வந்த இரவலர்களுக்குத் தேனும், பாலும், ஊனும் அள்ளி வழங்கினர்.

அ) அதியமானின் விருந்தோம்பல்:

ஔவையாருக்கு அதியமான் நெடுமான் அஞ்சி நெல்லிக்கனி ஈந்த வரலாறு உலகறிந்தது. அமுதுண்பார் சாவாது வாழும் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல், தமிழின் பால் கொண்ட அன்பினாலும், வந்த விருந்தினரை உபசரிக்கும் பண்பினாலும் ஔவைக்கு அளித்தான் அதியமான்.

மேற்கோள் பாடல் (புறநானூறு 91) :

"பெற்றாங்கு அமிழ்தம் முட்டுறாது பயப்ப,
நல் நெறிப் படருங் கோலக், கைம்மிக
இறும்பூது கவின்ற நெல்லி அம் தீங் கனி" [3]

ஆ) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்:

புலவர் மாறோக்கத்து நப்பசலையார், கிள்ளிவளவனின் அரண்மனைக்குச் சென்றபோது, அங்கே பழுத்த மரத்தைத் தேடி வரும் பறவைகளைப் போல இரவலர்கள் மொய்த்திருப்பதையும், அவர்களுக்குக் கள்ளும் இறைச்சியும் இடைவிடாது வழங்கப்படுவதையும் பாடியுள்ளார்.

உணவளிக்கும் அறமும் பெண்களின் பங்களிப்பும்

சங்கச் சமூகத்தில் விருந்தோம்பல் பண்பைச் செவ்வனே வளர்த்தெடுத்த பெருமை பெண்களையே சாரும். கணவன் பொருளீட்டச் சென்றிருக்கும் போதோ அல்லது வீட்டில் இல்லாத போதோ கூட, இல்லத்தரசிகள் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்றனர்.

அ) அல்லில் ஆயினும் விருந்து வரின் உவத்தல் :

இரவு நேரத்தில் கதவை அடைப்பதற்கு முன்னால், "வெளியே பசியோடு யாராவது இருக்கிறீர்களா?" என்று கேட்கும் வழக்கம் சங்க காலத் தமிழர்களிடம் இருந்தது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும், இல்லத்தரசிகள் சினந்து கொள்ளாமல்> நெஞ்சம் மகிழ்ந்து அவர்களுக்கு உணவிட்டனர்.

ஆ) புறநானூறு காட்டும் உணவு வகைகள்:

விருந்தினருக்குப் படைக்கப்பட்ட உணவுகள் பற்றிய குறிப்புகள் புறநானூற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

- **நெய் பெய்து சமைக்கப்பட்ட மாமிச உணவு (கொழுஞ்சோறு).**
- **பாலோடு கலந்த தேன் மற்றும் தினை மாவு.**
- **நன்கு முற்றிய கள் (மது வகை).**
- **வரகரிசிச் சோறும், அவரைப் பருப்பும் கலந்த உணவு.**

இத்தகைய சுவையான உணவுகளைத் தங்களுக்குக் கிடைக்காவிட்டாலும், வந்த விருந்தினருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தனர்.

பாணர்களும் கூத்தர்களும் பெற்ற விருந்து

சங்க காலத்தில் கலையை வளர்த்த பாணர்களும் விறலியர்களும் ஊர் ஊராகச் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் பாடிப் பரிசு பெற்றனர். அவர்கள் செல்லும் வழியெல்லாம் மக்கள் அவர்களைத் தங்களின் சொந்த உறவுகளைப் போல வரவேற்று உணவளித்தனர். புலவர் புறத்திணை நன்னாகனார் ஒரு பாடலில், தான் ஒரு ஏழை வேடனின் வீட்டிற்குச் சென்றபோது, அவன் காட்டில் வேட்டையாடித் தந்த உடும்பின் கறியையும், தினைச் சோற்றையும் தந்து உபசரித்ததை நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

மேற்கோள் பாடல் (புறநானூறு 326):

"வேட்டுவ வரி நிணக் கொழுப்பு உறைத்து
நெய் கனிந்து வரகின் சோறோடு விறலியர்க்கு ஈயும்"

அரசர்களின் அரண்மனைக்குச் செல்லும் பாணர்களுக்குப் பொற்கலங்களில் (தங்கத் தட்டுகளில்) உணவும், விலையுயர்ந்த ஆடைகளும் வழங்கப்பட்டதாகப் பல பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

விருந்தோம்பலின் சமூக விளைவுகளும் சிறப்புகளும்

புறநானூறு காட்டும் விருந்தோம்பல் என்பது வெறும் உணவு வழங்குவதோடு நின்றுவிடவில்லை. அது சமூக ஒற்றுமையையும், மனிதநேயத்தையும் வளர்க்கும் ஒரு ஆற்றல்மிக்க கருவியாகச் செயல்பட்டது.

முடிவுரை

பண்டையத் தமிழர்கள் வீரத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களோ, அதே அளவிற்கு ஈரத்திற்கும் (கருணை) முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதைப் புறநானூறு மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. விதைத்தினையை உரலில் குற்றியும், பழைய வாளை அடகு வைத்தும் விருந்தினரின் பசி போக்கிய தமிழரின் அரும்பண்பு, உலக இலக்கிய வரலாற்றிலேயே தனித்துவமானது. இன்றைய இயந்திரத் தனமான உலகில் மனிதநேயம் சுருங்கி வரும் வேளையில், புறநானூறு காட்டும் இவ்விருந்தோம்பல் பண்பாடு, நாம் மீட்க வேண்டிய உன்னத அறமாகும். 'விருந்தினரைப் போற்றுதல்' என்பது வெறும் சடங்கல்ல, அது மனித குலத்தை வாழ வைக்கும் உன்னதத் தத்துவமாகும்.

குறிப்புகள்)

[1] புறநானூறு, பாடல் 182: பாடியவர் - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி. திணை - பொதுவியல், துறை - பொருண்மொழிக் காஞ்சி.
[2] புறநானூறு, பாடல் 327: பாடியவர் - அள்ளூர் நன்முல்லையார். திணை - வாகை, துறை - மூதின் முல்லை.
[3] புறநானூறு, பாடல் 91: பாடியவர் - ஔவையார். திணை - பாடாண்டிணை, துறை - வாழ்த்தியல் (அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடியது).
[4] புறநானூறு, பாடல் 326: பாடியவர் - புறத்திணை நன்னாகனார். திணை - வாகை, துறை - வல்லாண் முல்லை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

நற்றிணையில் கற்பு மெய்ப்பாடு

முனைவர் து. சிவசித்ரா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை-625004

ஆய்வுச்சுருக்கம்

நல்' என்ற நல்ல அடைமொழியையும், அகத்திணையை குறிக்கும் 'திணை' என்ற சொல்லையும் சேர்த்து 'நற்றிணை' (நல் + திணை) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை 'நற்றிணை நானூறு' என்றும் அழைப்பர். தலைவன் தலைவிக்கு இடையே நிகழும் அன்பு, ஊடல், பிரிவு போன்ற அகப்பொருள் உணர்ச்சிகளை இயற்கையின் பின்னணியில் மிக இயல்பாக விவரிக்கிறது. தலைவனைப் பிரிந்து இறந்துவிட்டால் மறுபிறவியில் தலைவனை மறந்து விடுவோமா என்று துன்பம் கொள்வதால் அச்சம் என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. தலைவனின் சிறந்த பண்பை எண்ணித் தோழிக்குப் பெருமிதம் என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. தலைவியின் மகிழ்ச்சியே இன்பமான மனவாழ்க்கையைக் கண்டு செவிலிக்கு நற்றாய்க்கு உண்டான வெளிப்படுகிறது. அதனால் தலைவன் உவகை தலைவியின் அறியாமையை எண்ணியும் எனும் மெய்ப்பாடாக எவ்வாறு துன்பம் அடைவான் என்றும் செவிலியும் துன்புறுகின்றார் எனவே வாதம் என்னும் மெய்ப்பாடு தோன்றுகிறது.

குறிப்புச்சொற்கள்: நற்றிணை, கற்பு, மெய்ப்பாடு.

முன்னுரை

சங்க இலக்கியம் தமிழர் மானிடம், வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், மொழியியல் குறித்த ஆவணங்களின் களஞ்சியமாகும். மிகப் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்களின் அகப் புற ஒழுகலாறுகள், அவற்றைச் சார்ந்த வாழ்வியல் மதிப்பீடுகள் முதலானவற்றை அரிய முறையில் பதிவுசெய்துள்ள சங்கப்பாக்கள் சொல்லடைவு நிலையில் கட்டற்ற ஆய்வுகளுக்கு இட்டுச்செல்லக் கூடியவை எனலாம். செவ்வியல் இலக்கியங்களே மிகுதியான அழகியல் சார்ந்த வருணணைகளைக் கொண்டுள்ளன. பல்வேறு சொல்லியல் ஆய்வுகளுக்கு அவை ஆழமான களமமைத்துக் கொடுக்கின்றன. இலக்கணம், இலக்கியம், அழகியல் உள்ளிட்ட பன்முக நிலைகளில் தனித்துவம் கொண்டதாக அமைந்துள்ளது. அவ்வகையில் நற்றிணையில் அமைந்துள்ள கற்பு குறித்த கருத்தமைவை ஆய்ந்து அதனடிப்படையில் சில கருத்துகளை முன்வைக்கிறது

நற்றிணை

நற்றிணை என்பது தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை என்ற சங்க இலக்கிய வகைப்பாட்டினுள் காணப்படும் ஒரு நூலாகும். இந்நூல் தனிப்பாடல்களாகப் பலராலும் பாடப்பட்டுப் பின்னர் தொகுக்கப்பட்டது. எட்டுத்தொகை நூல்கள் இவையெனக் குறிப்பிடும் பழைய வெண்பாவில் முதலிடம் பெற்றுத்திகழ்வது நற்றிணை ஆகும். எட்டுத்தொகை நூல்களில் "நல்" என்ற அடைமொழி பெற்ற நூல் (நல்+திணை) இதுவேயாகும். இதனை நற்றிணை நானூறு என்றும் தூதின் வழிகாட்டி என்றும் (வாப் பறை விரும்பினைஆயினும், தூச் சிறை - பாடல் எண் 54) கூறுவர். அவைகளில் பெரும்பான்மையானவை ஒன்பது அடி முதல் 12 அடிகள் கொண்ட பாடல்களாக அமைந்துள்ளன. நற்றிணையில் ஏழு அடிகள் கொண்ட பாடலும் 13 அடிகள் கொண்ட பாடல்களும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.தலைவனைப் பிரிந்து இறந்துவிட்டால் மறுபிறவியில் தலைவனை மறந்து விடுவோமா என்று துன்பம் கொள்வதால் அச்சம் என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. தலைவனின் சிறந்த பண்பை எண்ணித் தோழிக்குப்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பெருமிதம் என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. கற்புக்கு இலக்கணம் உணர்த்தியதால் கற்பியல் என்னும் பெயர் பெற்றது என்பர் இளம்பூரணர்.

கற்பெனப் படுவது காரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக் (தொல்.கற்பு 1088)

கற்பென்று சொல்லப்படுவது கரணத்தோடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன், கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது என்பர் தொல்காப்பியர்.

நாலுக்கு கோள் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யார்கழற் (குறுந். 15)

மேற்குலத்தராகிய அந்தணர், அரசர், வணிகர், என்ற மூன்று வர்ணத்தாருக்கும் வகுத்த இக்காரணம் கீழோராகிய மாந்தர்களுக்குமாந்தர் கூறியது தொல்காப்பியர். இன்பமும் இது போன்ற சூழ்நிலைக்கு தகுந்த மாதிரி இருந்தது என்பதற்கு பல மெய்ப்பாடுகள் நமக்கு விளக்க வைக்கிறது.

தலைவனின் மெய்ப்பாடுகள்

முல்லைநில தலைவனின் இன்ப மெய்ப்பாடமிகுந்த, அன்புடைய தலைவன், தலைவியைப் பிரிந்து சென்று வினை புரிந்து, வெற்றியை களிப்பில் திரும்புக அப்போது தலைவியைக் கண்டு இன்புற விரும்பும் உந்துதலை உவகை எனும் மெய்ப்பாடாகும்.

புலரா வீமணன் மலிரக் கொண்டி
நாளிரை கவர மாட்டித்
தன்பெடை நோக்கிய பொருந்தகு நிலையே-

தலைவன் பொருள் தேடுவதற்குச் சென்றான். அவ்வினையை நெற்றியுடன் முடித்துத் திரும்பும்போது, தலைவியைக் கண்டு இன்புற எண்ணுவதாகக் தேர்ப்பாகனிடம் கூறுகின்றான். இப்பாடலில் தலைவனுக்கு, தலைவியை நினைத்து உள்ளத்தில் ஏற்படுகின்ற இன்ப உணர்வே அமைகிறது. உவகை என்னும் மெய்ப்பாடாக

முல்லை நிலத் தலைவனின் துன்ப மெய்ப்பாடுகள்:

தலைவி தன்னைப் பிரித்து துன்புற்றபிருக்கும் நிலையில் இயற்கையில் ஏற்படும் பருவ மாற்றங்கால் தலைவி துன்புறுவதை எண்ணித் தலைவனின் உள்ளத்தில் ஏற்பட்ட துன்ப நிலையை வருத்தம் மெய்ப்பாடு. "கண்டு காதல் செய்து, இல்வாழ்க்கையில் ஈடுபட்டு சில காலமே கழிந்த இளம் பருவத்துத் தலைவன் தலைவியர் பிரிவு அவர்களாலும் பிறராலும் தாங்க முடியாததாகும். **“பெயல் தொடங் கினவே பெய்யாவானம் நிழல்திகழ் சுடர்த்தொடி ஞெகிழஏங்கி அழல் தொடங்கினளே ஆயிழை அதனெதிர்”** பிரிவு துன்பத்தில் தலைவி வறுத்த முற்றிருக்கும் காலத்தில் மழை பெய்தால், கோவலன் குழல் இசைக்கத் தொடங்குவார்கள், மழை இப்பகுதியில் மட்டும் செய்தால் கவலையில்லை.

மருத நிலத் தலைவனின் இன்ப மெய்ப்பாடு

ஊடல் காரணமாகப்பிரிந்த தலைவன், மீண்டும் தலைவியைக் கண்டு மகிழ்ந்ததால் உள்ளத்தில் ஏற்பட்ட இன்பம், வெளிப்படுகிறது.

சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்கான் கம்மே (நற். 120)

பரத்தைப் பிரிவால் தலைவியைக் காணாமல் தலைவன் தவித்தான். பின்பு விருந்தினரோடு வீட்டிற்குச் சென்று தலைவியின் இன்பமுகம் கண்டு மகிழ்ந்தான். இம்மகிழ்ச்சியே உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றக் காரணமாகின்றது. மருத நிலத் தலைவனின் துன்ப மெய்ப்பாடுகள்: தலைவி கோபம் கொண்டு தலைவனைக் காணாமல் தவித்தாள். அதனால் தலைவனுக்கு உண்டாக்கிய துன்ப உணர்வே வருத்த மெய்ப்பாடாகும். பெயல் தொடங் கினவே பெய்யாவானம் நிழல்திகழ் சுடர்த்தொடி ஞெகிழஏங்கி அழல் தொடங்கினளே ஆயிழை

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

அதனெதிர் பிரிவு துன்பத்தில் தலைவி வறுத்த முற்றிருக்கும் காலத்தில் மழை பெய்தால், கோவலன் குழல் இசைக்கத் தொடங்குவார்கள், மழை இப்பகுதியில் மட்டும் செய்தால் கவலையில்லை. தலைவி கோபம் கொண்டு தலைவனைக் காணாமல் தவித்தாள். அதனால் தலைவனுக்கு உண்டாக்கிய துன்ப உணர்வே வருத்த மெய்ப்பாடாகும்.

தல்வனைப் உள்ளினென் உறையும் எற்கண்டு
மெல்ல முகைநாள் முறுவல் தோற்றித் (நற். 370)

பெற்றபோது தலைவியைத் தலைவன் குவளை பலரால் தீண்டினாள். அப்போது தலைவி கைகளைக் குவித்து தன் மண்களைப் புதைத்துக் கொண்டது தலைவனுக்கு நகைப்பையே ந்தது. அத்தகைய தலைவி இப்பொழுது ஊடி நிற்பதைக் காணும் போது துன்பத்தை உண்டாக்குகிறது. தலைவன் பாகனிடம் கூறியதால் இப்பாடலில் வருத்தம் என்ற மெய்ப்பாடு புலப்படுகிறது.

குறிஞ்சி நிலத் தலைவியின் இன்ப மெய்ப்பாடுகள்

தலைவனை நினைக்கும் பொழுது தலைவிக்கு உள்ளத்தில் இன்ப உணர்வுகள் தோன்றுகிறது. அவ்வகை இன்ப உணர்வே உவகை மெய்ப்பாடாகும். நின்ற சொல்வர் நீடு தோன்றினியர் நீரின்றமையால் வுலகம் தண்ணீர் இல்லாமல் தலைவன் இல்லாமல் இவ்வுலகில் உயிர் வாழ்வது அமையாது. அதுபோ இயலாது மிக விருப்பம் கொண்ட தலைவன் பிரிந்தால் நெற்றியில் பசன படரும்.

குறிஞ்சி நிலத் தலைவியின் துன்ப மெய்ப்பாடுகள்

தன் நிலையை அறியாமல் பிரிந்து சென்ற தலைவனுக்கு பிரிவுத் துன்பத்தை உணர்த்த வேண்டும் என்ற கருத்திலே அவள் மீது கொண்ட வேளிப்படுகிறது. கோபமே தலைவிக்கு வெகுளியாக, **நனிபெரிது இனியன் ஆயினுந் துனிபடர்ந்து / ஊடல் உறுவேன் தோழி நீடு (நற். 217)** பரத்தமை ஒழுக்கம் காரணமாகத் தலைவன் பல முறை தலைவியுடன் புணர்ச்சியாலும், விருப்பத்தாலும் கூடிய இனிய பண்பினை உடையவன். ஆயினும் பிரிவால் உண்டாகிய துன்பத்தைத் தலைவனுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகத் தலைவி கோபம் கொண்டதாக இப்பாடல் அமைந்துள்ளது. இது வெகுளியின் கண் வந்த மெய்பாடாகும்.

பாலை நிலத் தலைவயின் இன்ப மெய்ப்பாடு

பிறரைக் துன்புறுத்தாமல் உண்டாகும் இயல்பான மகிழ்ச்சியை உவகை என்னும் மெய்ப்பாடாகும். அவ்வகையில் தலைவனின் சிறந்த பண்பினை எண்ணி தலைவிக்கு உவகை தோன்றுகிறது. **“நன்றெனப் புரிந்தோய் நன்றுசெய் தனையே செயல்படு மனத்தர் / செயல்வ ராடவ ரதுவதன் பண்பே” (நற். 24)** இவ்வாறு பிரியும் பொழுது மறுத்துக் கூறாமல் உன்படுவதே அதற்குரிய பண்பாகும் வருள்மேற் செல்லுவதை தால் இப்பாடல் உவகை எண்ணித் என்று தலைவி தலைவன் உவந்து எனும் மெய்ப்பாடாயிற்று. தலைவனைப் பிரிந்து இருந்த பொழுது இறந்து விடுவமே ன்றும் இறந்து விட்டால் மறுபிறப்பில் தலைவனை மறந்து விடுவோமே அன்று அச்சம் தோன்றுவதாக தலைவி கூறுகிறாள். காதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின் பிறப்புப்பிறி தாகுவது ஆயின் மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே வினை காரணமாகப் பிரிந்த தலைமகன் பருவத்தில் வராத்தால் தலைவி தலைவனைப் பிரிந்து ஆற்றாமையில் போக அஞ்சவில்லை.

முல்லை நிலப் பாகனின் இன்ப மெய்ப்பாடுகள்

தலைவன் வினை காரணமாக சென்று வெற்றியுடன் திரும்பும் நிலையில் தலைவனின் உள்ளத்தினை அறிந்து தான் நடந்து கொள்வதால் அவனுக்கு பெருமிதம் தோன்றுகிறது. வண்பரி தயங்க வழீ இத் தண்பெயல் கான்யாற் றிடுமணல் கரைபிற்க் கொழிய வெவ்விருந் தயரும் மனைவி மெல்லிறைப் படைத்தோள் துயிலமர் போயே வினைவயின் பிரிந்த தலைவன் அவ்வினை வெற்றியுடன் முடித்து மீள்கிறான். அப்பொழுது தலைவியின் ஊர் இப்புறத்துள் இருக்கிறது. ஆதலால் விரைவாகச் சென்று காணும்படி தேரைச் தலைவனின் தலைவியிருக்கும்

இடம் பற்றிக் செலுத்துவேன் எனத் கூறியும் வெற்றியுடன் வருவதையும் பெருமைபட நினைத்துப் பாகன் உள்ளத்தில் இன்பம் கொள்கிறான். இவ்வின்பம் பெருமிதம் தோன்ற களமாக அமைகிறது.

பரத்தையின் மெய்ப்பாடுகள்

தனது மைந்தனைக் காணத் தலைவன் கள்வனைப் போல செல்வதைப் பரத்தை கண்டாள். தலைவனின் அச்செயல் அவளுக்கு நகையை உண்டாக்கியது. இது பிறரை ஏளனப்படுத்தியமையால் உண்டான எள்ளல் ஆகும். தன்னைப் பிரிந்து சென்ற தலைவனின் இந்நிலை பரத்தைக்கு இன்பமாய் உள்ளதாம்.

"நள்ளென் கருங்கற் கள்வன் போல் அகன்துறை யூரனும் வந்தனர்
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே" (நற்- 40)

தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைவி மகவு ஒன்றது அறிந்தான். தலைவி உறங்கும் சமயத்தில் தலைவன் தமந்தன் பிறந்தமைக்கு மகிழ்ந்து இடையாமத்து இருளிலே னக்குரிய இல்லத்திற்குக் கள்வனைப் போலச் சென்றான். என வரத்தை தலைவனை எள்ளி இகழ்ந்தால் என்னும் பாடல் இதுவாகும்.

மருத நிலப் பரத்தையின் துன்ப மெய்ப்பாடுகள்

தலைவன் இல்லாததால் பரத்தைக்கு மனதில் தோன்றிய வெறுப்பே வருத்தமெனும் மெய்ப்பாடாக இங்கு புலப்படுகிறது. **"துனிநீர் கூட்டமொடு துன்னா ராயினும் இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்." (216)** தலைமகனால் அன்பும் அருளும் பெற்றபின் அவனைப் பிரிந்தமையால் பரத்தை துன்புற்றாள். தலைவனை முன்னிலைப்படுத்தி இன்பம் நுகராவிடினும் அவனைக் காணுதல் இனிதாய் இருந்தது. ஆனால் அவன் இல்லாத போது இவ்வூரும் துன்பம் தருவதாய் உள்ளது எனப் பரத்தையின் மனமுற்ற துன்பமே வருத்தமெனும் மெய்ப்பாடாகும். நெய்தல் நிலப் பரத்தையின் துன்ப மெய்ப்பாடுகள்: தலைவன் மீது இருந்த வெறுப்பினால் அவனைச ர்ந்தவர்களிடமும் வெறுப்பு உண்டாகியது. இந்த நிலையில் வகுளி மெய்ப்பாடு தோன்றுகிறது. நெய்தல் பரத்தைக்கு இது பான்று வெகுளி மெய்ப்பாடு தோன்றுவதைக் கீழ்காணும் பாடல் விளக்குகிறது. **"தவறு நன்கு அறியா யாமினி எம் போல் ஞெகிழ்கோட் கலுழ்ந்த கண்ணர் மலர்த்ய்த்து அனையர் நின் நயந்தோரே" (315)** தலைவி தலைவன் ஆர்ந்துவிடாதவாறு மீது கொண்ட நட்பில் ஏதும் நன்றாக அறிந்து நடக்க வேண்டும் அவ்வாறு அறியாவிட்டால் தலைவனை விரும்பும் மகளிர் தன்னைப் போலவே தளர்ந்து போன தோள்களையும் அழுத கண்களையும் உடையவராய் மலர்ந்த உடனேயே கருகிப்போன போல ஆகிவிடுவார் எனப் பூக்களைப் வெளிப்படையாகத் தலைவனைக் கடித்து பரத்தை கூறியதால் இப்பாடல் வெகுளி எனும் மெய்ப்பாடாயிற்று.

முல்லை நிலக் கண்டோரின் இன்ப மெய்ப்பாடுகள்

கண்டோர்க்கு தலைவனின் செயலைக் பார்த்து உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சி உவகை மெய்ப்பாடாக இங்கு அமைகிறது. **"சென்றிசின் வாழியோ இடைச்சுரத்து பனிக்குட நாளே எழிலி உரைத்தென மார்பில்" (நற் .394)** முன்பு வினைமேற் சென்ற தலைவன் சுரநெறியின் வழி முன்பனி நாளிற் சென்றான். இப்பொழுது தலைவியைக் காண, குறித்த கார்பருவத்தில் திரும்புகின்றான் எனத் தலைவனின் குளிர்ந்த உள்ளத்தைக் கண்டு கண்டோர் மனம் மகிழ்ச்சி கொண்டதால் இப்பாடல் உவகை எனும் மெய்ப்பாடாயிற்று.

செவிலி மற்றும் நற்றாய் மெய்ப்பாடுகள்

பிறர் மூலம் உண்டாகும் இயல்பான மகிழ்ச்சியே உவகை எனும் மெய்ப்பாடு தோன்ற காரணமாகிறது. தலைவியைக் கண்டு செவிலிக்கு இதுபோன்ற உவகை மெய்ப்பாடு தோன்றுகிறது. **"கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள் ஒழுகுநீர் நுணங்கறல் போலப் பொழுது மறந்து உண்ண சிறுமதுகையாளே" (நற் - 110)** செவிலி மனம் நிகழ்ந்த பின் தலைவியின் இல்ல சிறப்பினைக் காணச் சென்றால்சென்றால். திரும்பி வந்த செவிலி

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

நற்றாய்க்கு தலைவியின் கற்பொழுக்கத் உணர்த்துகிறாள். அவ்வழி தலைவி முன்பு உணவுன்ன மறுத்த சிறு விளையாட்டினளாக இருந்தால். இப்பொழுது அறிவு ஒழுக்கம் நிறைந்தவள் உள்ளாள். தந்தையின் வளம் பொருந்திய சோற்றைக் கருதவில்லை. அவர் பொழுது மறுத்துண்ணும் வன்மையுடைய ஆயினால் என கூறியதால் இப்பாடல் எனும் மெய்ப்பாடாயிற்று. பாலை நிலச் செவிலி, நற்றாய் துன்ப மெய்ப்பாடு: மகிழ்ந்து பிரிந்து சென்ற அவளது செயல் தலைவி தலைவரே எவ்வாறு எப்படி இருக்கிறாளோ, வருகிறதோ என்று எண்ணியதால் அன்னைக்கு வருந்த மெய்ப்பாடு உண்டானது. **"வரிப்புறப் புறவின் புலம்புகொள் தெள்ளிய உருப்பவிர் அமையத்து அமர்ப்பனள் நோக்கி" (நற்-305)** மகளின் பிரிவை துன்புற்றார். தலைவி ஆகிய நற்றாய் தாங்க இயலாத பத்தும், அவள் பாதுகாத்து வந்த வயலைக் கொடியும், விளையாடுய நொச்சியும், அவள் இல்லாமல் தனியே வெறிச்சேடி கிடைக்கின்ற சோலையும் மிகவும் வருத்தத்தை தருகிறது. மேலும் காட்டிலே நண்பகலில் புறாவின் ஓசையை கேட்டு அச்சம் விளைவிக்கும் தலைவியின் பார்வையைக் கண்டு தலைவன் வருவானோ என்று நம்புவதால் இங்கு வருத்தம் எனும் மெய்ப்பாடு புலப்படுகிறது.

தோழிகள் மெய்ப்பாடுகள்

மிஞ்சி நிலத் தோழியின் இன்ப மெய்ப்பாடுகள்: தலைவியின் இன்பமான மணவாழ்க்கையைக் கண்டு நாழிக்குத் தோன்றிய மகிழ்வு தான் தோன்றக் காரணமாக அமைந்துள்ளது. உவகை மெய்ப்பாடு **"தீயும் வளியும் விசும்புயந்தாங்கு நோயும் இன்பமும் ஆகின்று மாதே மாயும் அன்று..." (நற்-294)** தலைவியைக் கண்டவுடன் கொண்டு சென்று கொண்டான். இதனை அறிந்து மணந்து தலைவன் வீடு சென்று தலைவியின் புதிய அழகு கண்டு தோழி வியந்தாள். தலைவனின் மார்பு, முன்பு நோயும் பின்பு இன்பமும் தந்தது. இது மாயமன்று உண்மையாகும் எனக் தோழி இன்பம் கொள்வதால் இப்பாடலில் உவகையெனும் மெய்ப்பாடு புலப்படுகிறது.

முடிவுரை

தலைவனைப் பிரிந்து இறந்துவிட்டால் மறுபிறவியில் தலைவனை மறந்து விடுவோமா என்று துன்பம் கொள்வதால் அச்சம் என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. தலைவனின் சிறந்த பண்பை எண்ணித் தோழிக்குப் பெருமிதம் என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது. தலைவியின் மகிழ்ச்சியே இன்பமான மனவாழ்க்கையைக் கண்டு செவிலிக்கு நற்றாய்க்கு உண்டான வெளிப்படுகிறது. அதனால் தலைவன் உவகை தலைவியின் அறியாமையை எண்ணியும் எனும் மெய்ப்பாடாக எவ்வாறு துன்பம் அடைவான் என்றும் செவிலியும் துன்புறுகின்றார் எனவே வாதம் என்னும் மெய்ப்பாடு தோன்றுகிறது.

குறிப்புகள்

[1] ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை.). *நற்றிணை*. தமிழ்மண் பதிப்பகம், 2016.
[2] புலியூர்க் கேசிகன் (உரை.). *நற்றிணை தெளிவுரை*. பாரி நிலையம், 1967.
[3] பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர். *நற்றிணை*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1952.
[4] தொல்காப்பியர். *தொல்காப்பியம் – பொருளதிகாரம்*. கழக வெளியீடு, சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

திருக்குறள் கூறும் மருந்தும் மருத்துவமும்

முனைவர் ந. த. சுமதி, உதவிப்பேராசிரியர், தமித்துறை, ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை.

ஆய்வுச்சுருக்கம்

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் 'மருந்து' என்னும் அதிகாரத்தின் வாயிலாகத் திருவள்ளுவர் உணர்த்தும் உடல் நலம் பேணல், நோய் தோன்றுவதற்கான காரணங்கள், உணவு நெறிமுறைகள் மற்றும் மருத்துவக் கோட்பாடுகள் ஆகியவற்றை இன்றைய நவீன மருத்துவ நடைமுறைகளோடும் சான்றோர் கருத்துக்களோடும் ஒப்பாய்வு செய்து விளக்குவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: *திருக்குறள்*, மருந்து, மருத்துவம்.

முன்னுரை

வள்ளுவர் அருளிய தமிழ்மறைச் செல்வமாம் திருக்குறள். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - என்பது பாரதியின் வாக்கு. பல்வேறு அறக்கருத்துக்களைக் கூறுகின்றது. உலகப் பொதுமறை, முப்பால் நூல், தெய்வநூல் என்று பல்வேறு வகையில் சிறப்புப் பெயர்கள் பெற்று விளங்குகின்றது. திருக்குறளில் 95வது அதிகாரமாக "மருந்து" அதிகாரம் அமைந்துள்ளது. உரையாசிரியர் பரிமேலழகர் "பழவினையாலும் பிற காரணங்களாலும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வரும்" அவற்றுள் பழவினையால் வருவன அதன் கிழிவின் கண் அல்லது தீராமையின் அவை ஒழித்து ஏனைய காரணங்களால் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் நிறம் கூறுகின்றார்" என்று மருந்து அதிகாரம் நோய் நீக்கும் மருந்தினைக் கூறுவதாக விளக்கியுள்ளார். திருவள்ளுவரின் மருந்து அதிகாரம் கூறும் உடல் நோய்க்கான காரணங்கள், உணவு, மருத்துவம் பற்றி நுட்பங்கள், மருத்துவ நெறிமுறைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

குறள் கூறும் மருத்துவம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி உடல், உள்ளம் நோய் எதுவானாலும் அதன் காரணம் காண்பதே மருத்துவத்தின் முதல் அணுகுமுறையும், சிகிச்சைப் பணியும் ஆகும். எகிப்திய மனிதன் இறவா வரம் பெற்றவன் என்று நம்பினார்கள். கண்ணுக்குத் தெரியாத சில ஆவிகள், தேவதைகள், பிசாசுகள் போன்றவைகளின் செயல்களில்தான் மனிதன் நோய்வாய்ப்படுவதாக நம்பினார்கள். இந்நிலை சீனம், அரேபியம் போன்ற பண்டைய நாடுகளில் நிலவிவந்ததை உலக வரலாறு உணர்த்துகிறது. மருத்துவத்தை மந்திரம், மாயம், மதம் ஆகியவைகளிலிருந்து. பிரித்து வேறுபடுத்திக் காட்டி அதைக் கலை என்று முதன்முதலாக அழைத்தவர் ஹிப்போகிரேடிஷ்தான் என்கிறார்கள் அறிஞர்கள். உலகின் இச்சமகாலச் சூழ்நிலையில் தமிழ்ச்சிந்தனையில் முகிழ்த்த மருத்துவக் கலையைக் காணும்போது, நோய்களைப் பற்றியும் நோய்தீர்க்கும் முறைகள் பற்றியும் தமிழர் நன்குணர்ந்திருந்தனர் என்பதற்குப் பண்டைய தமிழர்களது மருத்துவ அறிவிற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்வது திருக்குறளில் உள்ள 'மருந்து" எனும் அதிகாரம் அய்யநீதிபற்ற ஒன்றாகிறது. இவற்றில் முதல் ஏழு குறள்களும் நோய் தோன்றும் காரணத்தையும், நோயின்றி வாழப் பசித்துப் புசிக்க வேண்டியதன் அவசியத்தையும், இறுதி மூன்று குறள்களும் மருத்துவனின் செயல்பாடு மற்றும் மருத்துவத்தின் நான்கு கூறுகளையும் திறம்பட எடுத்துரைக்கிறது.

உடல் நலம் பேணுதல்

உடல் நலம் பேணுதல் பற்றி அறிஞர்கள் பல விளக்கம் தந்துள்ளனர். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' மக்கட்பிறப்பை விட உயர் பிறப்பு வேறில்லை என்று

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

ஒளவையாரும். 'ஊன் உடம்பு ஆலயம்' உடம்பு இறைவன் எழுந்தருளி மிருக்கும் உயர்ந்த கோயில் என்று அப்பரும். 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' உடம்பின் தெய்வீக ஆற்றலை உணர்ந்து திருமூலரும் பாடியுள்ளனர். வள்ளுவரும் உடம்பைப் போற்றிப் பாதுகாக்க மருந்து என்னும் அதிகாரத்தை அமைத்து உடலின் சிறப்பை உணர்த்தியுள்ளார். பிற உயிர்களை விட மனிதன் நீண்ட காலம் வாழும் ஆற்றல் உடையவன். மருத்துவத்துறை முன்னேறி வரும் இக்காலச்சூழலில் மனிதனும் உடல் நலனில் கவனம் செலுத்தினால் நூறாண்டு வாழ முடியும்.

உணவு அளவோடு இருத்தல்

உயிர் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. உணவு, உடல் நலத்தைப் பேணுவதற்கும் நோயைப் போக்குவதற்கும் உணவு சிறப்பாக வேண்டப்படுகிறது. 'உணவே மருந்து மருந்தே உணவு' என்பவர் சரியான உணவை சரியான அளவிலும் சரியான நேரத்திலும் சரியான தன்மையிலும் உட்கொண்டால் அந்த உணவே மருந்தாகி உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து நோய் நீக்கி, நீண்ட காலம் மனிதனை வாழ வைக்கும்.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று" (குறள். 941)

என்கிறது குறள். உணவு செயல்களும் உடல் இயல்பிற்கும் ஒத்த அளவின்றி அதனின் மிகுமாயினும், குறையுமாயினும், மருத்துவ நூலோரால் சொல்லப்பட்ட வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்று நோய்களும் ஒருவனுக்குத் துன்பம் செய்யும். உண்ணும் உணவு, செய்யும் செயல்களும் மிகுமாயின் குறையுமாயினும் நோய் ஏற்படும். உடல் நலத்துடன் இருப்பதற்கு உணவும் செயல்களும் அளவோடு இருத்தல் வேண்டும் என்று விளக்கப்படுகிறது.

மருத்துவர்களின் கருத்து

ஆயுர்வேத மருத்துவர்கள் கூறும் வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் நோய்களையே வள்ளுவரும் 'வளிமுதலா எண்ணி மூன்று' என்கிறார். இன்று மருத்துவர்களும் இத்தகைய மூன்றின் அடிப்படையில்தான் நோய்களை அணுகி ஆராய்கின்றனர். இன்றைய மருத்துவ நெறிமுறைகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவரின் மருத்துவக் கொள்கையோடு பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் செய்யும் வேலையைப் பொறுத்து உணவு உட்கொள்ள வேண்டும். பொதுவாக ஆண்களுக்கு 3000 முதல் 3500 வரை கலோரி சக்தி தரும் உணவும், பெண்களுக்கு அதில் ஐந்தில் நான்கு பங்கு அளவு உண்ணும் உணவும் போதுமானது ஆகும். அளவுக்கு அதிகமாக உண்ணுகின்ற நிலையில் அஜீரணம் ஏற்படுகின்றது. இரப்பை, குடல், தசை. இயக்கங்கள் போதுமான அளவு வேலை செய்ய முடியாமல் போய்விடுகிறது. அளவுக்கு மீறி உணவின் அளவை உயிர்ச்சத்துக் குறைபாடும் குறைத்து உண்பவர்களுக்கு (Vitamin Deficiency) நோய் எதிர்ப்பு சக்தி குறைவும் ஏற்படுகிறது. அதிகளவு உண்பவர்களுக்கு சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற நோய்கள் வரக்கூடும். உணவைக் கட்டுப்படுத்தாதபோதுதான் உணவு உண்பவர்களுக்கு சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், மாரடைப்பு நோய்கள் வருகின்றன என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

வள்ளுவர் கூறும் உணவு நெறிமுறைகள்

ஒரு முறை உண்ட உணவு முழுமையாக சீரணமான பின்னர் அடுத்த வேளை உணவை உட்கொண்டால் உடலுக்கு மருந்து தேவைப் படாது. அதனை குறள் வழியில்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்ற உணின்" (குறள்.942)

என்று விளக்குகிறார். நோய்கள் அணுகாது என்று கூறுகிறது. காமத்துப் பாலிலும் ஊடல் உவகை என்ற அதிகாரத்தில்

"உணலினும் உண்டது அறல்இனிது காமம்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

புணர்தலின் ஊடல் இனிது" (குறள். 1326)

என உண்பதைவிட முன் உண்ட உணவு செரிப்பது இன்பமானது என்று விளக்குகிறார் வள்ளுவர்.உணவானது சீரணமாக 3 மணி நேரம் வேண்டும். உணவு சீரணமானதை உணர்ந்து அடுத்த வேளை உணவை அளவோடு உண்ண வேண்டும். அது உடலைப் பாதுகாத்து நீண்ட காலம் வாழ வழி வகுக்கும். அளவோடு உண்ணல், சீரணமான பின்னர் உண்ணல், ஏற்ற உணவை அளவறிந்து உண்ணல் என்பன வள்ளுவர் வகுத்துறைத்த உணவு நெறிமுறைகள் ஆகும்.

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுயிர்க்கு மாறு" (குறள்.943)

என்று குறள் விளக்குகிறது. உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவை, முன் உண்ட உணவு நன்றாக சீரணமாகி பசி எடுத்த பின்னரே உண்ண வேண்டும். அப்போதுதான் சுரப்பி நீர் முழு அளவு வெளிப்படும். உணவில் உள்ள உயிர்ச்சத்துக்களும் பிறவும் முற்றிலும் உறிஞ்சப்பட்டு உணவின் முழுப் பயனும் உடலுக்குக் கிடைக்கும். இதனை,

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
தூய்க்க துவரப் பசித்து" (குறள்.944)

என்ற குறளின் மூலம் திருவள்ளுவர் விளக்கம் தருகின்றார். மனிதர்களின் உடற்கூற்று முறைமைப்படி எல்லா மனிதர்களின் உடல் அமைப்பும், உடல் உறுப்புகளின் தன்மையும் ஒரே அளவில் இருந்தாலும், ஒருவருக்கு ஒத்துக் கொள்ளும் உணவு இன்னொருவருக்கு ஒத்துக் கொள்ளாமல் இருக்கலாம். இதனால் ஒத்துக்கொள்ளும் உணவையே உட்கொள்ளவேண்டும். இதனையே மாறல்ல கடைப்பிடித்து என்கிறார். உடலின் வாத பித்த சிலேத்துமங்களை அறிந்து அவற்றிற்கு ஏற்ப உணவுகளை உண்ண வேண்டும்.

காலத்திற்கு ஏற்ப உணவு உட்கொள்ளுதல்

உடம்பின் இயல்பு அறிந்து குளிர் காலம். மழைக்காலம். கோடைக்காலம் என்று காலச் சூழலுக்கேற்ப உணவை உண்பதே உடலுக்கு நல்லது.

"மாறுபாடில்லாத உணவு மறுத்து உண்ணின்
ஊறுபாடில்லை உயிர்க்கு" (குறள்.945)

என்கிறது குறள், அவரது வயது, தொழில், செரிமானத் தன்மை அறிந்து அளவுடன் அரை வயிறு உணவு, கால் வயிறு தண்ணீர், கால் வாயிறு வெறுமையாக இருக்க வேண்டும் என்பதே இன்றைய மருத்துவர்களின் ஆலோசனை.

ஒரு வேளை உண்பவன் யோகி
இரு வேளை உண்பவன் போகி
மூன்று வேளை உண்பவன் ரோகி
நான்கு வேளை உண்பவன் துரோகி

என்பர். இரண்டு வேளை உட்கொண்டாலே தேவையான சக்தியும், சத்தும் கிடைத்து விடும். உடலில் எந்தவித உபாதை தோன்றினாலும், அடுத்த வேளை உணவை நிறுத்தி விட வேண்டும். உணவை நிறுத்துவதால் உணவு செரிப்பதற்குத் தேவையான ஆற்றல் மிஞ்சுகிறது. இயற்கை மருத்துவ முறைகளும் உணவுக் கட்டுப் பாட்டையே வலியுறுத்துகின்றன. என்ன வகை உணவு உட்கொள்ள வேண்டும்? எவ்வளவு உண்ண வேண்டும்? எப்பொழுது உண்ண வேண்டும்? ஏன் உண்ண வேண்டும்? எப்படி உண்ண வேண்டும்? என்னும் வினாக்களுக்கு விடை தரும் வகையில் வள்ளுவரின் மருந்து அதிகாரம் அமைந்துள்ளது.

மருத்துவத்துறை கூறும் நான்கு கூறுகள்

நோயாளி, மருத்துவன், மருந்து, உடன் இருந்து கவனிப்பவன் ஆகிய நான்கும், மருத்துவத்துறையின் நான்கு கூறுகளாக கருதப்படுகின்றன. இந்த நான்கும் கூடிய வழியில்லது நோய் நீங்காமையின் இத்தொகுதிகளையும் மருந்து என்கிறார் வள்ளுவர்.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

“உள்ளவன் தீர்ப்பான் மருத்துழைச் செல்வான்
அப்பால் நாற்கூற்றே மருந்து” (குறள்.950)

என்று குறிப்பிட்டிருப்பது வள்ளுவரின் மருத்துவப் பேரறிவைப் புலப்படுத்துகிறது. பரிமேலழகர் இந்நான்கும், நான்கு பகுதிகளையுடையதாகக் கூறியுள்ளார்.

1. உற்றவன் வகை நான்கு

பொருளுடமை, மருத்துவன் வழி நிற்றல் நோய் நிலை உணர்த்த வன்மை, மருத்துவத் துன்பம் பொறுத்தல்.

2. தீர்ப்பான் வகை நான்கு

நுண்ணறிவும் உடைமை, பலகாணாம் தீர்த்து வருதல் வனம் மொழி நோய் கண்டு அஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டு ஓதிய கல்வியும் மெய்கள் தூயவாதல்

3. மருந்தின் வகை நான்கு

பல பிணிகளுக்கு ஏற்றல், சுவை வீரியம் விளையாற்றல் களால் மேம்படுதல், எளிதில் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்துதல்

4. இவற்றுவான் வகை நான்கு

நோயாளியின் பால் அன்புடைமை மனமொழி மெய்கள் தூயவாதல் சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை அறிவுடைமை. பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ என்று பரிமேலழகர் உரைவளம், சான்றோர்களால் பாராட்டப்படும் பெருமை மிக்கது. பரிமேலழகரின் ஆராய்ச்சி உரை, வள்ளுவரின் கருத்துக்களை மேலும் அரண் செய்வதாய் உள்ளது. மேலும், மருந்து அதிகார குறட்பாக்களுக்கு உரை கூறும் வேதாத்திரி மகரிஷி ‘நீ சீரணிக்கும் அளவிற்குள்ளாக உணவு உட்கொண்டால் உணவை நீ சீரணிக்கின்றாய் அதிகமாக நீ உட்கொண்டால் உணவு உன்னை சீரணிக்கும் சுத்தமான சத்தான உணவு நம் அன்றாட உடலுக்குத் தேவை காரம், புளிப்பு, உப்பு, சர்க்கரை இவற்றை மிதமாக உட்கொள்ள வேண்டும். உணவில், தரமும், அளவும் முறையும் தவறினால் நோய்கள் உண்டாகும். நோய் நீக்க உண்ணும் சில மருந்து வகைகள் ஒரு நோயை குணப்படுத்தி வேறொரு நோயை உண்டு பண்ணிவிடலாம். இவற்றை தவிர்க்க இயற்கையான அறிவின் வழி முன் உண்ட உணவு முற்றிலும் சீரணமான பின்னரே அடுத்த உணவு கொள்ளலாகும் என்பன போன்ற விளக்கங்கள் வள்ளுவரின் கருத்துக்களை மேலும் வலியுறுத்துவதாய் உள்ளன.

உடலும் நோயும் அறிகுறிகளும்

மருந்துகளே வேண்டாத வாழ்வுக்கு வழிசொன்ன வள்ளுவர் அதையும் மீறி நோய் ஒருவனைப் பற்றிக் கொண்டால் அதற்குரிய அறிகுறிகளையும் காட்டுவிடுகிறார்.

‘மிகினுங் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று’ (குறள்.950)

நிலம், நீர், வளி, நெருப்பு ஆகிய நான்காலும் பின்ஏற்படும் இத்துடன் உணவுமுறை, பழக்கவழக்கங்களிலும் நோய்கள் ஏற்படுகின்றன. சித்தர்களும், ஞானிகளும் நுன்மாண் நுழைபுலம் மிக்கவர்களும் மனிதனுக்கு மூன்றுவிதக் காரணங்களால் நோய் ஏற்படுகின்றன எனக் கண்டறிந்தனர். வாதம், பித்தம், சிலேட்டுமம் (கபம்) என்பவை அவை. மேற்சுட்டிய இம்மூன்றின் துடிப்பு வேறுபடும் பொழுது மாந்தர் தம் உணவு உழைப்பு உறக்கம் சீராக அமைவதில்லை. அவ்வாறு சீராக இயங்காத பொழுது நன்கு உழைத்தால் நன்கு ஓய்வு எடுக்க முடியாமலும் நன்கு ஓய்வெடுத்தால் நன்கு உழைக்க முடியாமலும் போய்விடும். உழைப்பிற்கேற்ற உணவையோ, உண்டதற்கேற்ற உழைப்பையோ தரவும் இயலாது. எனவே உழைப்பு, உறக்கம், உணவு ஆகியன குறைந்தாலும் மிகுந்தாலும் நோய் ஏற்படும். எனவே பித்தம் சிதேத்துமம் சீராகத் துடிக்க வேண்டும். இவையே நோய்களுக்கு உரிய அறிகுறிகள் என்று உடலியல் வல்லுநராய் வள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார்.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

உணவே மருந்து

“மருந்தென வேண்டாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்" (குறள்.942)

முன் உண்ட உணவு சீரணித்த பின்பு எவ்வளவு உண்ண வேண்டுமோ அந்த அளவு உண்ணல் வேண்டும். ஈண்டு எவ்வளவு என்பது உடல் செய்யும் உழைப்பின் அளவையும், பசியின் அளவையும் குறிக்கும். எனவே உழைப்பிற்கேற்ற உணவு கொள்வதா? உட்கொண்ட உணவிற்கேற்ப உழைப்பதா? பசியின் அளவிற்கேற்பவா? என்ற வினாவிற்கு ஐயன் வள்ளுவர் பசியின் அளவிற்கேற்ப உண்டு. பின்பு உண்ட உணவுக்கேற்ப உழைக்க வேண்டும் என்கிறார். அதாவது உண்டபின் அப்படியே உறங்கிவிடக்கூடாது என்பது ஐயனின் ஆழ்ந்த கருத்து. தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று வேண்டியதில்லை என அறிவுறுத்துகின்றார். இதனையே இக்காலக் கவிஞர் ஒருவர். ‘செரிக்காத உணவும் எரிக்காத சக்தியும் சுடுகாட்டுத் தேரின் இருசக்கரங்கள்’என்று கூறுகிறார். இன்றைய அவசர யுகத்தில் நாம் கொண்டிருக்கும் உணவுப் பழக்கம் உடலுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதே வேலைக்குச் செல்வோர் பலரும் காலை உணவைத் தவிர்த்தலும் கிடைத்ததை கண்ட நேரத்தில் உண்ணுவதும் சுத்தமில்லாத கையேந்தி பவன்களில் சாப்பிடுவதும். சாயமேற்றப்பட்ட உணவுகளை விரும்பி உண்பதுமாக அடிமைப்பட்டுப் போனவர்கள் உடல் நலத்தைக் காப்பதெப்படி? இதனால் எண்ணற்ற நோய்கள் புதிது புதிதாய்த் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இதனையெல்லாம் விடுத்து முறையான உணவு முறையைப் பின்பற்றும் போது யாக்கைக்கு மருந்தென்பதே வேண்டாவாம் என்கிறார் வள்ளுவர்.

உடலும் உணவு அளவும்

முன் உண்ட உணவு செரித்த பிறகு பசியினது அளவும் செறிமானமாகும் நிலையும் அறிந்து அதற்கேற்ப அளவோடு உண்ண வேண்டும். அவ்வாறு உண்ணும் நெறி பெறுதற்கறிய இவ்வுடம்பினைப் பெற்றவன் அதை நீண்ட காலத்திற்கு காத்து வாழும் வழியாகும். இதனை.

“அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுயிக்கு மாறு" (குறள்.943)

உண்ட உணவு செரித்தும், குருதியில் சேர்ந்தும் செயலிழந்தும் நம் உடலைவிட்டு நீங்கிய பின்னர் உணவு உண்ண வேண்டும். உணவை நம் உடலின் செரிக்கும் தன்மை அறிந்து அளவாக உண்ண வேண்டும். அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். அரிதின் பெற்ற மானிடப் பிறவியின் பயனாய் விளைந்த இவ்வுடம்பை நோய் அணுகாது கொண்டு செலுத்துதற்கு அளவறிந்து உண்ண வேண்டும் என்றார் வள்ளுவர். இதனையே திருமூலர் உடம்பார் அழியில் உயிரார் அழிவர் உடம்பை வளர்க்கும் உபாயத்தைக் கூறுகிறார். காளிங்கரும் - அளவறிந்து உண்க - என்று வள்ளுவரின் கருத்தை வழி மொழிகிறார். வாழ்க்கையில் உணவுக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் போற்றிக் காக்கப்பட வேண்டும்.

“அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து" (குறள். 944)
“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை யுயிர்க்கு" (குறள். 945)

என்னும் குறட்பாக்கள் மூலம் பசித்தபின் உண்ண வேண்டும். என்பதையும், அவ்வாறு பசித்த பின்பும் உணவின் அளவு மீறாமல் உண்டால் நோயானது மனித உடலை நெருங்காது என்பதையும் தெரிவிக்கின்றார். இக்கூற்றையே உண்டி முதற்றே உணவின் பிண்டம் என்று புறநானூறும் சுவையும் வீரியமும் மாறுபாடு இல்லாத உணவை உண்ணுதல் வேண்டும் என்று மணக்குடவர் கைப்பு, புளிப்பு, தித்திப்பு. காழ்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்ற அறுவகைச் சுவைகளுக்கு உணப்பெறின் நோய் ஏற்பட்டால் என்று காளிங்களும் வலியுறுத்துகின்றனர்.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

அளவுக்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சு

அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு என்னும் பழமொழிக்கேற்ப உணவையும் அளவோடுதான் உண்ணவேண்டும். இல்லையென்றால் அவ்வுணவே நஞ்சாகி நோயின் வருகைக்கு வழிகாட்டியாகிவிடும் இதனால் தான் வள்ளுவரும்

"இழிவறிந் துண்பான்கண் இன்பம், போல்நிற்கும்
கழிபே நிரையான்பிகண் நோய்" (குறள்.946)

குறைவாக உண்ணுதல் எல்லோருக்குமே நன்று என்பதை நன்கறிந்து என்கிறார். இக்குறளில் இழிவு என்பது உணவு குறைதலைக் குறிக்கும். அவ்வாறே உண்பவனுக்கு நோய்வராது. உயிர் வாழ்வதற்குத்தான் உண்ணவேண்டுமே தவிர உண்பதற்காகவே உயிர் வாழ்வது இழிவு தரும் செயலாகும். மேலும்,

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்" (குறள்.947)

இங்கு தீயளவு என்பது பசியின் அளவைக் குறிப்பதாகும். தன் உடலுக்கேற்ற உணவும் காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுக்குத் தேவையான அளவு ஒருவன் உண்பானாயின் அவனிடம் நோய்கள் நெருங்குவதில்லை என்பது இக்குறள் கூறும் கருத்து.

நோய் தீர்க்கும் முறை

மருத்துவத் துறையில் யாக்கை அறிவது முதல் நிலையாகும். உடலின் அக, புறத் தோற்றத்தைப் பார்த்த அளவிலேயே நோய் கண்டறிய வேண்டும். தோற்றப் பொலிவு நோயின் அளவை எடுத்துரைக்க வல்ல சிறந்த கருவியாகும். உடல் தெரிவிக்கும் நோயை நாடிபிடித்துப் பார்த்து உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு உறுதிசெய்த பின்னர் அந்நோய்க்குரிய காரணங்கள் ஆராயப்பட வேண்டும். இந்தக் காரணத்தால்தான் இந்நோய் இத்தகைய அறிகுறிகளைப் பெற்றுள்ளது எனத் தெளிதல் வேண்டும். அவ்வாறு தெரிந்த பின்பு அந்நோய்க்குரிய சிறந்த மருத்துவமுறை ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். அந்த மருந்தை ஏற்ற காலத்தில் கொடுத்து நோயைக் குணப்படுத்த வேண்டும். சித்த வைத்தியத்தில்தான் மருந்து கொடுக்கும்போது காலம் போற்றப்படுகிறது. நோய்க்கிருமிகள் காலச்சூழலுக்குகேற்ப உடம்பினுள் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். எனவே அந்தக்காலத்தில் எந்த அளவு மருந்து உட்கொள்ள வேண்டும் என்பதறிந்து வழங்க வேண்டும். இதில் வரும் காலம் என்பது நோயின் காலம் காணல் நன்று. மருத்துவன் தான் கற்ற நூல் நெறியானும், உணர்வு மிகுதியாலும் ஆராய்ந்து பிழையின்றி மருத்துவம் செய்க என்பதனை "கற்றான் கருதிச் செயல்' என்றார். இதனை,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள். 948)
"உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்" (குறள்.349)

என்னும் குறட்பாக்களால் அறிய முடிகிறது. இவ்விரு குறட்பாவில்தான் மருந்து செயல் எனும் சொல்லாட்சியை மேற்கொண்டு மருத்துவர்களுக்கே உரித்தான செயல்பாட்டை எடுத்தியம்புகிறார். நோயைக் குணப்படுத்தும் மருத்துவமுறை நோயாளி உடல்நிலை, மருந்து, நோய், தீர்ப்போர் என்னும் நான்கு கூட்டமைப்பினை உள்ளடக்குகிறது. இந்நான்கும் முழுமையாக அல்லது இந்நான்கனுள் ஏதாவது ஒன்று சரியாக வாய்க்கப் பெறவில்லையானால் எந்த ஒரு நோயையும் குணப்படுத்துவது கடினம்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து" (குறள். 950)

எனக் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

நிறைவுரை

இன்றைய நிலையில் பொது சுகாதரத்தில் ஒருவனுடைய உடல்நலத்தின் பொறுப்பு. பங்கு அவனிடமே இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த சுயபங்கு என்பது அவனிடமுள்ள சுயசுத்தம் உணவுமுறை, பழக்க வழக்கங்கள் என்பவற்றைச் சார்ந்துள்ளது. உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம் என்னும் திருமந்திரத்தை இங்கு நினைவு கூறுதல் வேண்டும். உடலை நோய் வராமல் காத்தல் வேண்டும். வியக்கத்தக்க வகையில் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நோய் நம்மை அணுகாதிருக்க உதவும் வழிமுறைகளை மருந்து என்ற அதிகாரத்தில் நமக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார். நோயின்றி வாழ நாம் ஆற்ற வேண்டிய கடமையை நமக்குச் சொல்லியிருக்கிறார். உணவே மருந்து என்று எடுத்துரைக்கிறார். மருத்துவன் இயல்பை தெள;ளத் தெளிவாக விளக்கும் இவரது வாய் மொழியைக் கடைபிடிப்போமானால் நோயற்று ஆரோக்கியமாக வாழலாம் என்பதில் ஐயமில்லை. வள்ளுவரின் கருத்து இன்றும் காலத்தை வென்று இன்றைய மருத்துவர்களும் வியக்கும் வண்ணம் ஒளிர்கின்றது.

குறிப்புகள்

[1] திருவள்ளுவர். *திருக்குறள்*. பரிமேலழகர் உரை. சாரதா பதிப்பகம், சென்னை, 2018.
[2] திருவள்ளுவர். *திருக்குறள்*. மு. வரதராசனார் உரை. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2016.
[3] பரிமேலழகர். *திருக்குறள் பரிமேலழகர் உரை*. உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2014.
[4] கு. மோகனராசு. *திருக்குறளில் வாழ்வியல் சிந்தனைகள்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2012.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

புறநானூறு வெளிப்படுத்தும் தமிழர் வீரம்

முனைவர் மு. செந்தில்குமார், உதவிப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை – 01

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியமான புறநானூறு, பண்டைத்தமிழர்களின் புற வாழ்வியலையும் போர் முறைகளையும் வீரத்தையும் விரிவாகப் பதிவு செய்யும் இணையற்ற வரலாற்று ஆவணமாகும். இவ்வாய்வுக் கட்டுரை, புறநானூற்றுப் பாடல்கள் வழியே வெளிப்படும் தமிழர்களின் வீர உணர்வையும், அதன் பல்வேறு பரிமாணங்களையும் ஆராய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆதிக்குடி மக்களின் வேட்டைச் சமூக வாழ்விலிருந்து உருவெடுத்த வீர உணர்வு, பின்னாளில் நாட்டுப்பற்றாகவும், மான உணர்வாகவும், வீர விளையாட்டுகளாகவும், நடுகல் வழிபாடாகவும் பரிணமித்ததை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. தந்தை, கணவன் இருவரையும் போரில் இழந்த நிலையிலும் தன் ஒரே மகனைப் போர்க்களத்திற்கு அனுப்பிய தாயின் தியாகம்; தன் மகன் புறமுதுகிட்டு இறக்கவில்லை, மார்பில் விழுப்புண் பெற்றே மடிந்தான் என்பதை அறிந்து உவந்த வீரத்தாயின் மாண்பு; அரசன் முதல் எளிய குடிமகன் வரை போர் மற்றும் நாட்டுப் பாதுகாப்பில் கொண்டிருந்த கடமையுணர்வு ஆகியவை விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், புறநானூறு காட்டும் வீரம் என்பது வெறும் வன்முறைச் செயலன்று; அது "படை மடம் படான்" என்ற கோட்பாட்டின்படி எளியோரிடம் காட்டாத வீரம், பசுக்கள் மற்றும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் போரறம், சான்றோர்களின் அறிவுரையைக் கேட்டு போரைத் தவிர்க்கும் பெருந்தன்மை, வீரத்துடன் இணைந்த கொடைப்பண்பு என அறநெறி சார்ந்ததாகத் திகழ்ந்தது என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

குறிப்புச்சொற்கள்: புறநானூறு, தமிழர் வீரம், சங்க இலக்கியம், போரறம், வீரத்தாய், நடுகல் வழிபாடு, திணை-த்துறை.

முன்னுரை

சங்க காலத் தமிழர்களின் வாழ்வியல் முறைகளை எடுத்துரைப்பது எட்டுத்தொகை – பத்துப்பாட்டு என்னும் 18 நூல்களாகும். இவை அகப்பாடல்கள் - புறப்பாடல்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. அகப்பாடல்கள் தலைவன் - தலைவியின் காதல் வாழ்வு குறித்துப் பேசுகின்றன. இது களவொழுக்கம் எனப்படும். புறப்பாடல்கள் மன்னர்கள், குறுநில வேந்தர்கள் போன்றோரின் போர், வீரம், கொடை, ஆட்சிமுறை மக்களின் வாழ்க்கைமுறை பற்றிய செய்திகளை விரிவாகக் கூறுகின்றன. இது புறவொழுக்கம் எனப்படும்.

“நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குநூறு(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோ(டு) அகம், புறம் என்(று)
இத்திறத்த எட்டுத் தொகை”

என்னும் நூற்பா எட்டுத்தொகை நூல்களைக் குறிக்கும். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு தமிழர்களின் புற வாழ்வியல் செய்திகளை விரிவாக எடுத்தியம்புகிறது. புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறம், புறப்பாட்டு, நந்தா விளக்கம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. தொகுத்தவர் - தொகுப்பித்தவர் அறியப்படவில்லை. 4 அடி முதல் 40 அடிகளைக் கொண்டது. பல்வேறு காலங்களில் 157 –க்கும் மேற்பட்ட புலவர்களால் பாடப்பட்டவை. இவர்களுள் 15 பெண் புலவர்கள் இடம்பெற்றுள்ளனர். அதிகப்பாடல்கள் பாடிய பெண்புலவர் ஔவையார்(33) அதிகப்பாடல்கள் பாடிய ஆண்புலவர் கபிலர் ஆவார்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

(28). புலவர்கள் ஒரே சமூகத்தையோ, நாட்டைச் சார்ந்தவர்களோ அல்ல. அரசர் முதல் எளிய குறவர் வரை சங்கப்பாடல்களைப் பாடியுள்ளனர்.

புறத்திணை

புற ஒழுக்கங்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உமிஞை, தும்பை, வாகை என்று எட்டுத் திணைகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணையும் அடங்கும். திணையின் உட்பிரிவு துறை எனப்படும்.

திணையென்பது - ஒழுக்கம், நிலம் அல்லது வாழ்வியல் பிரிவைக் குறிக்கும்
துறையென்பது - திணையின் உட்பிரிவாகும்
வெட்சி - பகைவர் நாட்டுப் பசுக்களை வெட்சிப் பூச்சூடி கவர்தல்
கரந்தை - கவரப்பட்ட பசுக்களை கரந்தைப் பூச்சூடி மீட்டல்
வஞ்சி - பகை நாட்டின் மீது வஞ்சிப் பூச்சூடி போர் தொடுத்தல்
காஞ்சி - படையெடுத்து வந்த பகைவரை எதிர்த்து காஞ்சிப் பூச்சூடி மோதுதல்
உமிஞை - பகைவர் கோட்டை மதிலை உமிஞைப் பூச்சூடி வளைத்தல்
நொச்சி - கோட்டைச்சுவரை நொச்சிப் பூச்சூடி காத்தல்
தும்பை - இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூச்சூடி நேருக்குநேர் போரிடுதல்
வாகை - போரில் வென்றவர் வாகைப் பூச்சூடி ஆரவாரித்தல்

ஏராளமான வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. 15 பாண்டிய மன்னர்கள்; 18 சோழ மன்னர்கள்; 18 சேர மன்னர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். வெண்ணிப்பறந்தலை, வாகைப் பறந்தலை, தலையாலங்கானம், கழுமலம், தகடூர், கானப்பேரெயில் போர்க்களச் செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. பழைய உரை 246 பாடல்களுக்கு மட்டுமே கிடைத்தது. ஓலைச் சுவடிகளில் இருந்த புறநானூற்றுப் பாடல்களை உ.வே.சா குறிப்புரையோடு பதிப்பித்தார். டாக்டர் ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 267, 268 எண்ணிட்ட பாடல்கள் கிடைக்கவில்லை. 14 பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர் தெரியவில்லை. ஆதிக்குடிமக்கள் காடுகளில் விலங்குகளை வீரத்தோடு வேட்டையாடி உணவாக்கினர். அவற்றிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள போராட வேண்டியிருந்தது. வேளாண்மை வசமான பிறகு இனக்குழுக்களாக உருவெடுத்தனர். தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். தலைவர், தனது இனக்குழு மக்களை அந்நியரிடமிருந்தும், விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு வீரத்தோடு இயங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அண்டை இனக்குழுக்களோடு ஏற்பட்ட சிறு சண்டைகள் பின்னர் போர்களாக மாறின. விலங்குகளால், போரினால் வீர மரணமடைந்த வீரர்களின் நினைவைப் போற்றி கல்லை நட்டுவைத்து வழிபட்டனர். இது 'நடுகல்' வழிபாடு எனப்பட்டது. ஓய்வு நேரத்தில் சேவல் சண்டை, கிடாய்முட்டு, ஜல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுக்களை நடத்தினர். தங்கள் வீட்டில் வளர்த்த காளை மாடுகளை வீரத்தோடு அடக்கும் ஆண்களுக்கே பெண்களைத் திருமணம் முடித்து வைத்தனர். சங்ககாலத் தமிழர்களின் குருதியோடு கலந்திருந்த வீர உணர்வுகளை புறநானூறு வழியாக வெளிப்படுத்துவது உரையின் நோக்கமாகும்.

பாலகனைப் போருக்கு அனுப்பிய தாய்

முதல் நாள் நடந்த போரில் இவளது தந்தை யானைமேல் வேல் வீசிக்கொன்று வீழ்ந்தான். நேற்று நடந்த போரில் இவள் கணவன் பகைவர் கவர்ந்த பசுக் கூட்டங்களை மீட்டு வந்தான். மீண்டும் பகைவர் பசுக் கூட்டங்களை மீட்க வந்தபோது போரிட்டு மடிந்தான். போர் முடியாமல் போர்ப்பறை தொடர்ந்து ஒலிக்கிறது. போருக்கு இனி யாரை அனுப்புவதென்று மயங்கினாள். மயக்கம் தெளிந்து, தனது ஒரே மகனான சின்னஞ் சிறு பாலகனை அழைத்து

வெள்ளதை; துணி உடுத்தி, பரட்டைத் தலைக்கு எண்ணெய் தடவி, குடுமி முடித்து போர்க்களம் நோக்கிப் 'போ' என்று அனுப்பி வைத்தாள்.

எந்தச் சூழ்நிலையிலும் பெற்ற மகனை விட்டுத்தரமாட்டாள் தாய். தாய் நாட்டுக்காக தந்தை, கணவனை இழந்து பாலகனையும் இழக்கத் தயாராகிவிட்டாள் சங்கத் தமிழ்த் தாய்.

"மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத்து ஒழிந் தன்னே
நெருதல் உற்ற செருவிற்கு இவள் கொழு நன்
பெருநரை விலங்கு ஆண்டுப் பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துஉடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகன் அல்லது இல்லோள
செருமுகம் நோக்குச் செல்க என விடுமே" (புறம் – 279)

மகனைப் பற்றி செய்தியறிந்த தாயின் வேதனை

போருக்குச் சென்ற தனது சிறுவயது மகன் போரிடப் பயந்து புற முதுகிட்டு போர்க்களத்தில் இறந்தான் என்ற செய்தியை அறிந்த தாய், புறமுதுகிட்டு போர்க்களத்தில் என் மகன் இறந்தான் என்பது உண்மையானால் அவன் வாய் வைத்துக் குடித்த என் மார்பை அறுத்தெறிவேன் எனக் கோபத்தோடு கையில் வாளை எடுத்து போர்க்களம் சென்றாள். போர்க்களத்தில் இறந்த வீரர்களின் உடலைப் புரட்டிப் பார்த்தாள். ஓரிடத்தில் தன் மகன் மார்பில் விழுப்புண் பெற்று உடல் சிதைந்து சிதறிக் கிடப்பதைக் கண்டாள். அவனைப் பெற்ற நாளைவிடவும் பெரிதும் மகிழ்ந்தாள்.

மகனின் இறப்பினை எண்ணி வருந்தாமல் நாட்டுக்காக வீரச்சமர்புரிந்து மார்பில் விழுப்புண் பெற்று மானத்தோடு இறந்ததைக் கண்டு இறும்பூதடைகிறாள் தாய்.

"படை அழிந்து மாறினன் என்றுபலர் கூற
மாண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலை அறுத் திடுவன் யான் எனச் சினை இக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந் தனளே" (புறம் -278)

மக்களுக்கு அறிவித்த மன்னன்

பசுக்கள், பார்ப்பனர், பெண்கள், நோயுற்றோர், ஈமச்சடங்கு செய்ய பிள்ளைகள் அற்றோர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள். எனது அம்புகள் உங்களைத் தாக்கக்கூடும் என அறிவித்த வீர மறக்குணம் கொண்டவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன். யானை மேல் அசைந்து வரும் அவனது வெற்றிக் கொடிகள் மேகத்தை இருளடையச் செய்கின்றன. கூத்தர்களுக்குச் செம்பொன் காசுகள் தந்தவன். கடல் தெய்வத்திற்கு விழா எடுத்தவன். நெடியோன் பாண்டியன் உண்டாக்கிய, பஃறுளி ஆற்றின் பரந்த மணல் பரப்பினும் மேலாகப் பல கோடி ஆண்டுகள் புகழோடு வாழ்க! என்று நெட்டிமையார் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியனை வாழ்த்துகிறார். போருக்கு முன்பாகவே மக்களுக்கு அறிவிப்புச் செய்யப்படுகிறது. மன்னரின் வீரம், கொடைப்பண்பு கூறி வாழ்த்துகிறார் புலவர்.

போர் வேண்டாம் என அறிவுறுத்தல்

தங்கப் பூக்களை வெள்ளி நாரில் கட்டி மாலையாகப் பாணர்களுக்குச் சூடுகிறாய். பொற்பட்டம் அணிந்த யானைகள், தேர்களைப் புலவர்களுக்குத் தந்து புகழின் உச்சத்தில்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

இருக்கிறாய். பிற நாடுகளின் மீது படையெடுத்து அவர்களை இல்லாதவர்களாக்கி துயரமடையச் செய்யும் போர் வேண்டுமா? எனக் கேட்கிறார். எளிய மனிதர்களான பாணர்களை பெருவழுதிப் பாண்டியன் மதித்துப் போற்றியதும் புலவர்களுக்கு வாரி வழங்கிய வள்ளன்மையும் காட்சியாகிறது. சாதாரணப் புலவர் பேரரசரிடம் போர் வேண்டாம் என அறிவுரை கூறும் துணிச்சலும் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

“பாணர் தாமரை மலையவும், புலவர்
புதுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்றிது விறல்மாண் குடுமி!
இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே” (புறம் – 12)

போரா…? வேள்வியா…?

போருக்குச் சென்ற நாடுகளில் தேரோடிய வீதிகளில் கழுதையைப் பூட்டி உழவு செய்து பாழாக்கினாய்; விளைநிலங்களில் குதிரைத் தேரினைச் செலுத்தி அழித்தாய்; குளங்களை யானைகளை விட்டுச் சேதமாக்கினாய். பகையரசர்கள் உன்னோடு போரிட முடியாமல் புறமுதுகிட்டு ஓடினார்கள் இவ்வாறு போரிட்டு ஓடியவர்கள் அதிகமா? அறநூல் கூறியபடி நீ நடத்திய யாகங்கள் அதிகமா? எது அதிகமாகவேண்டும். எது நல்லது முடிவு செய் என கேள்விகேட்டு அறிவுறுத்துகிறார்.

போரினால் விளையும் சேதங்கள் விளக்கப்பட்டு, போரைவிடவும் அறநூல் கூறும் யாகங்கள் நடத்துவதே சிறப்பு என உணர்த்துகிறார் நெட்டிமையார் பெருவழுதிக்கு

“யூபம் நட்ட வியன்களம் பலகொல்?
யாபல கொல்லோ? பெரும! வார்உற்று
விசிபிணிக் கொண்ட மண்களை முழவின்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே!” (புறம் -15)

தன் ஆயுள் சுருக்கி புலவர் ஆயுள் நீட்டித்தவர்

கூரிய முனையுடைய வாளேந்தி பல போர்களை வென்றவன்; போர்க்கள வெற்றிக்குரிய பொன்னெரி மாலை அணிந்தவன்; பிறை நிலா சூடிய திருமுடியும், கருநீல மணி போன்ற கழுத்தும் கொண்டு இறையொத்த அதியனே நீடு வாழ்க! நெடிய மலையிடுக்கில் உச்சியில் பழுத்திருந்த அரு நெல்லிக் கனியை அதன் பெருமை கூறாது, என்னுயிர்க்கு நெடுநாள் வாழ்வளித்தவனே வாழ்க! அதியமானின் வீரம், இறைத்தன்மையை எடுத்தியம்பி தன்னலம் கருதாமல் தமிழ்நலன் காப்பதற்காக ஔவைக்கு கொடுத்த நெல்லிக்கனி அதியனின் பெருந்தன்மை போற்றப்படுகிறது.

“வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை,
ஆர்கலி நறவின், அதியர் கோமான்,
கழற்கால் நள்ளி, கானமந் தும்பை,
எமக்கே
அமர்வெங் காதலி, அமர்க்கண்
நளியிரும் முந்நீர் நளியிரும் பரப்பின்” (புறம் – 91)

வீரமும் - மானமும்

காற்றின் இயல்பறிந்து கலம் செலுத்தி வெற்றிகளைக் குவித்தவன்; மதயானைப் படைகொண்டவன் கரிகால் வளவன்; வெண்ணியூரில் நடந்த போரில் அறியாமல் புறப்புண் பட்டதால் வடக்கிருந்து உயிர்விட்டுப் புகழ் பெற்றான் சேரலாதன். உனது வீரம் சிறந்ததா? பழியஞ்சி உயிர்துறந்த சேரலாதனின் மானம் உயர்நதததா?

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

வெண்ணியூர் போரின் மூலமாக தமிழருக்கு வீரமும் - மானமும் இரு கண்கள் என்பதனை வெண்ணிக் குயத்தியார் பதிவு செய்கிறார்.

“களிஇயல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லள் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!” (புறம் -66)

புலிக்குகை

உன் மகன் எங்கே? எனக் கேட்ட பெண்ணுக்கு, என் மகன் எங்கே செல்கிறான் என எனக்குச் சொல்லவில்லை. ஆனால், ஒன்று மட்டும் தெரியும். அவன் சென்றிருந்தால் போர்க்களத்திற்கு மட்டும் தான் சென்றிருப்பான். அவனைச் சுமந்த என் வயிறு புலிக்குகை. குகைவிட்டு வெளியேறிய புலி புகழ் வேட்டையை முடித்தே வீடு திரும்பும் எனச் சூளுரைக்கிறாள் தாய். தனது பிள்ளை போர்க்களம் செல்வதையே பெருமையாகக் கருதியவர்கள் சங்கப்பெண்கள்.

“என் மகன்...
யாண்டுஉள னவாயினும் அறியேன்! ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவான் மாதோ போர்க்களத் தானே!” (புறம் – 86)

உண்டு கொழுத்த குதிரை போருக்கு உதவாது

பருத்திக்காடளவு எல்லைகொண்ட சிற்றரசனின் குதிரை உளுத்தம்பொட்டைத் தின்று வளர்ந்தது. போர்க்களத்தில் கடலைக் கிழித்துச் செல்லும் தோணி போல் பாய்ந்து பகைக் கூட்டத்தை அழித்தது. பகை அரசனின் குதிரை நெய்யுணவு உண்டு வளர்ந்தவை. பிடரி மயிர் கத்தரிக்கப்பட்டு மாலையணிந்து வந்த மருதநாட்டைச் சார்ந்த குதிரை போர்க்களத்திற்குள் செல்லாமல் மாதவிலக்கான பெண்கள் கோவிலுக்குள் செல்லாமல் ஒதுங்கி ஓரமாக நிற்பதைப்போல் நின்றன.

போர்க்களத்திற்குச் செல்லும் வீரர்கள் அளவோடு உண்டு தொடர்ச்சியாக பயிற்சி பெற வேண்டும் என்னும் கருத்து மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது.

“பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்தஅதர் உண்ட ஓய்நடைப் புரவி
கடல்மண்டு தோணியின் படைமுகம் போழ
நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்
தண்ணடை மன்னர் தாருடைப் புரவி
அணங்குஉடை முருகன் கோட்டத்துக்
கலம்தொடா மகளிரின் இகழ்ந்துநின் றவ்வே” (புறம் – 299)

மகனின் வீரத்தை நினைந்துருகும் தாய்

போர்க்களத்தில் வலிய யானையை தனியொருவனாய் வீழ்த்தி பெருமிதத்தோடு மார்பினை நோக்கும் போது அம்பு பாய்ந்துள்ளதை அறிகிறான். எப்போது? எப்படி? விழுந்ததென்று தெரியவில்லையே என நினைத்துக் கொண்டே கேடயத்தின் மீது விழுந்து உயிர் துறக்கிறான். இதனைக் கண்ட தாய், சிறுவயதில் சிறு கோல் கொண்டு மிரட்டினால் மட்டுமே உண்பான். ஆனால், போர்க்களத்தில் எவரின் மிரட்டலுக்கும் அஞ்சியிருக்கமாட்டான். இவனின் தந்தையும் மிகப்பெரும் போர் வீரன். பல களம் கண்டு வீரமரணமடைந்தவர் என தனக்குத்தானே பேசி நெகிழ்கிறாள்.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

போர்க்களத்தில் மகன் இறந்த வீரக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த தாய் - அவனின் நினைவுகளைச் சுமந்து வருந்துவது காட்சியாக விரிகிறது.

"பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் - அஞ்சியோடு
உயவோடு வருந்தும் மனனே இனியே
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே
உன்னிலன் என்னும் புண் ஒன்று அம்பு
மான்உளை அன்ன குடுமித்
தோல்மிசைக் கிடந்த புல்அண லோனே" (புறம் -310)

கடமை

பிள்ளை பெற்று வளர்த்து ஆளாக்குவது தாயின் கடமை; கல்வியில் சான்றோனாக்குவது தந்தையின் கடமை; போர்ப் பயிற்சிக்கு ஆயுதங்களை வடித்துத்தருதல் கொல்லர் கடமை; பிள்ளைக்கு நல்வழி காட்டுவது மன்னர் கடமை; போர்க்களம் சென்று வெற்றியோடு திரும்புவது பிள்ளையின் கடமை. இளம்தலைமுறைக்கான வாழ்வை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு நாட்டை ஆள்பவரின் கடமையென புலவர் உறுதிப்படுத்துகிறார். அங்ஙனம் வளர்ந்தவர் நாட்டுக்காக எதனையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதனை பொன்முடியார் நிலை நிறுத்துகிறார்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்நடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் உருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம் – 312)

உயர்ந்த உள்ளம்

முள்ளுடைய கழல் கொடி வேலியாகவும், குளங்களும் நிறைந்த ஊரில் இளம் பெண்ணொருத்தி நாள்தோறும் நடுகல்லை வணங்குகிறாள். விருந்தினரை உபசரிக்கும் இனிய இல்லறம், பகைவென்று நாடு காக்கும் நல்ல கணவன் அமையவேண்டும் என்பதற்காகவே நடுகல்லை வணங்குகிறாள். 'நடுகல்' வீரத்திற்கான அடையாளம் மட்டுமல்ல. வேண்டியதைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையும் வளர்க்கப்படுகிறது.

"களிறுபொரக் கலங்கு கழல்முள் வேலி
அரிதுஉண் கூவல் அங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது
விருந்து எதிர் பெறுகதில் யானே என்ஐயும்
ஒ ...வேந்தனொடு
நாடு தரு விழுப்பகை எய்துக எனவே" (புறம் – 306)

உண்மையான தலைவன்

உறவினர், நண்பர்களின் தீங்கினைப் பொறுத்தல்; பிறர் துயரைக்கண்டு உதவுதல்; போர்க்களத்தில் வலிமையுடன் இருத்தல்; அரசவையில் புகழ் பெறும் தன்மை இவை அனைத்தும் தன்னை மணக்க வந்த எவருக்குமில்லை. வில் அளவு விரிந்த மார்பு, வேல், காந்தள் மலர்மாலை கொண்ட குறவர் குலத்தலைவன், சூரியன் மறையும் பொழுதில் தன் இடம் மறந்த இளைய பெண்மானின் குரலை மலைக் குகைக்குள் பதுங்கியிருக்கும் ஆண் புலி காது கொடுத்துக் கேட்கும் மலை நாட்டுத் தலைவன் 'ஏறைக்கோ' ஒருவனே என்னவன் என்கிறாள் குறப்பெண்.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தலைவன் எப்படியிருக்க வேண்டும் என்பதனை அறிவுறுத்துவதோடு மன்னர்கள் அல்லாத மலைத் தலைவர்களையும் புறநானூறு பேசியிருப்பது சிறப்பாகும்.

“தமர் தன் தப்பின் அதுநோன் றல்லும்
பிறர்க்கை யறவு தான் நாணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன அல்ல எம்கோன்” (புறம் – 157)

குறு நாட்டு மன்னர் வீரம்

குறு நாட்டையுடைய எங்கள் மன்னன் தனது வேலால் பகையரசனின் யானையை வீழ்த்தினான், பகையரசன் எறிந்த வேல் என் தலைவனின் மார்பில் பாய்ந்து ஊடுருவியது. அதனை என் தலைவன் கையால் பிடுங்கி பகையரசனை வீழ்த்தினான். பகைவரின் யானைகள் புறமுதுகிட்டு ஓடின. குறுநாட்டு மன்னர்களை ஏளனம் செய்யக் கூடாது என்பதனை பாடல் உணர்த்துகிறது.

“சீறூர் மன்னன் சிறிஇலை எஃகம்.
வேந்தூர் யானை ஏந்துமுகத் ததுவே
வேந்துடன்று எறிந்த வேலே என்னை
சாந்தார் அகலம் உளம்கழிந் தன்றே
உளம்கழி சுடர்ப்படை ஏத்திநம் பெருவிறல்
ஓச்சினன் துரந்த காலை மற்றவன்
புன்தலை மடப்பிடி நாணக்
குஞ்சரம் எல்லாம் புறக்கொடுத் தனவே” (புறம் – 308)

எமனை விஞ்சிய வீரன்

கூற்றுவன் ஒரு உயிரைக் கொல்ல காலம் நோக்கிக் காத்திருப்பான். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் நினைத்தவுடன் போரை முடிக்கும் ஆற்றலுடையவன்.இவனைப் பகைத்த பகையரசனின் நாட்டில் எரிகொள்ளி வீழவும்; பச்சைமரம் பட்டுப்போகவும்; பறவைகள் அஞ்சி ஒலியெழுப்பவும்; சூரியன் வெப்பம் கக்கவும்; தலையில் பிறர் எண்ணெய் வார்க்கவும்; பன்றி மேலேறவும்; உடை களையவும்; படைக்கருவிக் கட்டில் முறிந்து வீழவும் தீ நிமித்தங்கள் தோன்ற பகை வீரர்கள் பயந்து சொல்ல முடியாமல், எதிர்க்க முடியாமல் மறப்பதற்காக தங்கள் குழந்தைகளோடு விளையாட முயற்சிப்பர். எமனுக்கும் அஞ்சாத வீரனாக கிள்ளிவளவன் சித்தரிக்கப்படுகிறான். அக்காலத்திய தீ நிமித்தங்களை அறியமுடிகிறது.

“காலனும் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்தே!
திசைஇரு நான்கும் உற்கம் உற்கவும்
பெருமரத்து அலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்” (புறம் – 41)

எதற்கும் துணிந்தவன்

கிள்ளிவளவன், ஐந்து தலையுடைய பாம்பு புகுவதுபோல தன்னை எதிர்த்தவரின் நாட்டினுள் நுழைந்து மலையை இடி விழுந்து அழிப்பதைப்போல் அழிப்பவன். புறாவின் துயர் போக்கிய செம்பியன் வழி வந்தவன். முதலைகள் நிறைந்த அகழி, வலிமைமிக்க யானைப்படை உடையவன் பகைவன் எனத் தெரிந்தும் போரிட்டு வெல்பவன். எதிரிகள் பலம் நிறைந்தவர்கள் எனத்தெரிந்தும் போரிட்டு வெல்லக் கூடிய வீரம் நிறைந்தவர்கள் சங்ககால மன்னர்கள்.

“நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த
வேக வெந்நிறல் நாகம் புக்கென

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத்து உரும் எறிந்தாங்குப்
புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்" (புறம் – 37)

மரணம் வெற்றிப்பரிசு

அடைமழை போல் அம்பு வந்து தைத்தாலும், வயல்களில் கெண்டை மீள் புரள்வதைப்போல் மார்பில் வேல்கள் வந்து பாய்ந்தாலும், கூரிய தந்தத்தால் யானை குத்தித் தூக்கி எறிய வந்தாலும் புறமுதுகிட்டு ஓடாத வீரர்கள் இவர்கள். போரில் வென்று நீர் வளம், வாளை மீன்கள் நிறைந்த மருத நில ஊர்களைப் பரிசாகப் பெறுவதால் என்ன பயன்?. போர்க்களத்தில் இறந்தால் தேவலோகப் பெண்களை மணந்து பேரின்ப வாழ்வு பெறலாம். மரணமே வேண்டுமென வீரர்கள் வேண்டி நாட்டின்மீதும், மன்னன் மீதும் வீரர்கள் பற்றுகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"காலமாரியின் அம்பு தைப்பினும்.
வயல்கெண்டையின் அம்பு தைப்பினும்
பொலம்புனை ஓடை அண்ணல் யானை
இலங்குவான் மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டு முதல்புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே" (புறம் – 286)

முரசுக் காற்று

அதியனின் படை வீரரிடம் பகை நாட்டு வீரன் எமது நாட்டு அரசனோடு போர் புரியும் ஆற்றல் அதியனுக்கு உண்டா எனக் கேட்டபோது, அடிக்கும் தடியைக் கண்டு அஞ்சாது சீறிப்பாயும் பாம்பினைப் போன்று வலிமைமிக்க வீரர்கள் பலர் உள்ளனர். பொதுவிடத்தில் வைக்கப்பட்டுள்ள முரசின் மேல் காற்று மோதியதால் ஏற்பட்ட ஓசையைப் போர்ப் பறை முழக்கம் என்றெண்ணி போர்க்களம் விரையும் தலைவன் எமது நாட்டின் தலைவன் அதியன் என்பதைப் புரிந்துகொள்வாயாக. மன்னர்கள் எப்போதும் போருக்குத் தயாராக இருந்தது சங்கப் பாடல்கள் மூலமாக அறியமுடிகிறது.

"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளியொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னும் என்னையு முன்னே" (புறம் – 89)

பொய்யாகக் கூடாதா? செய்தி

அகுதை என்பவன். தன்னை நாடி வருபவருக்கு, யானைகளைப் பரிசாகத் தரும் வள்ளல். அவனிடம் பொன்னால் செய்த சக்கரம் ஒன்று உள்ளதென்றும், அதனால் அவனுக்கு தோல்வி கிடையாதென்றும் கூறுவர். ஒரு நாள் அகுதை போரில் தோற்றான், பொன்சக்கரம் இருப்பது பொய்யானது. அதுபோல, பாணர் கூட்டத்தலைவன் போர்க்கலையில் சிறந்த எவ்வியின் மார்பில் வேல் பல தைக்க விழுப்புண் ஏற்றான் என்ற செய்தி விடியற்காலை கிடைத்தது. அச்செய்தி பொய்யாகக் கூடாதா என வெள் எருக்கிலையார் வேதனைப்படுகிறார். ஏழு கடல் - மலை தாண்டி மரத்திலிருக்கும் கிளியின் கண்ணில் உயிர் ஒளிந்திருப்பதாக சிறுவயதில் கூறும் கதையைப்போல் சங்ககாலத்திலும் 'பொன் சக்கரம்' போன்ற செய்தி உள்ளது. மன்னர்களைப் பற்றி பேசிய புறநானூறு பாணர் தலைவரைப்பற்றியும் பேசியிருப்பது குறிப்பிடத்தது.

"பொய்யா கியரோ பொய்யா கியரோ
பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்தாள் அகுதைக்கண் தோன்றிய

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பொன்புனை திகிரியின் பொய்யா கியரோ
இரும்பாண் ஒக்கல் தசைவன் பெரும்பூண்
போர் அடு தானை எவ்வி மார்பின்
எஃகுஉறு விழுப்புண் பல என
வைகுறு விடியல் இயம்பிய குரலே" (புறம் – 234)

வெற்றி வேல்

வாள், வேள் போன்ற படைக்கருவிகளைப் பயன்படுத்தி போரில் வெற்றி பெறுவது சாதாரண வீரர்களின் செயல். நல்ல பாம்பு தங்கும் புற்றைப் போல, கண்டவரைக் முட்டிக் கொல்லும் முரட்டுக்காளை திரிகின்ற பொது இடம் போன்றது, எமது மன்னரின் பாசறை, பலரைக் கொன்று வெற்றி வாகை சூடிய நெடிய வேல் எம் தலைவனின் வேல் அவர் தங்கியிருக்கும் பாசறைப்பக்கம் எவரும் வர அஞ்சுவர். ஆயுதம் ஒன்றாக இருந்தாலும் அதனைப் பயன்படுத்தும் முறையும், திறனும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும் என்பதனை நுணுக்கமாய் பாடல் உணர்த்துகிறது.

"இரும்பு முகம் சிதைய நூறி ஒன்னார்
இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே
நல்லரா உறையும் புற்றம் போலவும்
கொல்ஏறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றரும் துப்பின் மாற்றோர் பாசறை
உளன் என வெரூஉம் ஓர்ஒளி
வலன் உயர் நெடுவேல் என்ஐகண் ணதுவே" (புறம் – 309)

பேகன் பெருமையும் - வீரமும்

வறண்ட குளம், களர் நிலம், விளை நிலம் வேறுபாடு பார்க்காமல் பெய்வது மழையின் இயல்பாகும். அதுபோல யானைப்படையும், வீரக்கழல் அணிந்த கால்களும் கொண்ட பேகன் முன்னவர், பின்னவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் வேறுபாடு காட்;டாமல் வாரிவழங்குபவன். இருப்பினும், தனக்குச் சமமான வீரருடன் அன்றி மற்றவருடன் போரிடமாட்டான். தன்னைவிட வலிமை குறைந்த எளிய மன்னர்களோடு போரிடக்கூடாது என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

"அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையர் மரபில் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படை மடம் படான்பிறர் படைமயக் குறினே!" (புறம் – 142)

வஞ்சினம் உரைத்தல்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் இளம் வயதில் பதவியேற்றான். தன்னைச் சிறுவன் என்றெண்ணி எனது வலிமையும், திறனறியாமலும் சினமூட்டும் வார்த்தைகளை என் செவியில் கேட்கும்படி பேசியவர்களை வெற்றி கொள்ளவில்லையெனில், எமது மக்கள் 'கொடியன் எமை ஆண்ட வேந்தன்' என என்னை வசைபாடட்டும். மாங்குடி மருதனார் போன்ற புலவர் என்னைப் பாடாது போகட்டும்; உறவினர், நண்பர்களுக்கு உதவ முடியாத வறுமை என்னைச் சேரட்டும் எனச் சூளுரைக்கிறான். தனது வீரத்தை நிலைநிறுத்துவதைப் போன்று தன் மக்களையும், உறவினர், நண்பர், புலவர்களைக் காப்பதிலும் சங்ககால மன்னர்கள் உறுதி பூண்டுள்ளது தெரிகிறது.

"…கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மை யாணுறவே!" (புறம் - 72

ஒரே குடிப்போரைத் தவிர்த்தல்

சோழர் குடிப்பிறந்த நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் போரிடத் துணிந்தனர். கோவூர்க் கிழார் இருவருக்கும் அறிவுறுத்தும் போது அரசே! உன்னோடு போரிட வந்திருப்பது பனம்பூ சூடிய சேரனல்ல; வேப்பம்பூச் கூடிய பாண்டியணல்ல; ஆத்தி மாலையணிந்த நின் குடியைச் சேர்ந்த சோழனே. இருவரும் போரில் வெல்வது இயலாத காரியம். எவர் தோற்றாலும் தோற்பது உங்கள் குடிப் புகழே! போரை விட்டொழிப்பதே சிறப்பாகும். புலவர்கள் பரிசு பெறுவது மட்டும் நோக்கமாக இல்லாமல் சமாதானம் செய்வதிலும், போரை நிறுத்துவதிலும் அக்கறை காட்டினர் என்பது தெளிவாகிறது.

முடிவுரை

சங்க காலத் தமிழர்களின் வாழ்வியலில் வீரம் என்பது வெறும் போர்ச் செயலாகவோ அல்லது நிலத்தைக் கைப்பற்றும் பேராசையாகவோ சுருங்காமல், மானம், கொடை, அறம் மற்றும் தியாகம் ஆகியவற்றின் உன்னத வெளிப்பாடாகத் திகழ்ந்துள்ளது என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் தெள்ளத்தெளிவாகப் புலப்படுத்துகின்றன. நாட்டைக் காக்கத் தன் ஒரே மகனையும் போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கும் தாய்மார்களின் தியாகமும், மார்பில் விழுப்புண் பெற்றுத் துஞ்சிய மகனைக் கண்டு பெருமிதம் கொள்ளும் வீரத் தாயின் மாண்பும் சங்கத் தமிழ்ப் பெண்களின் வீர உணர்விற்குச் சான்றுகளாகும். அதேவேளையில், பகைவர் எனினும் பசுக்கள், பெண்கள், நோயுற்றோர் போன்றோருக்குப் பாதிப்பு வராமல் காக்கும் 'போரறமும்', தன்னை விட எளியவரிடம் போர் செய்யாத 'படை மடமின்மையும்', புலவர்களின் அறிவுரைக்குச் செவிசாய்த்துப் போரைத் தவிர்க்கும் பெருந்தன்மையும் தமிழரின் வீரத்தில் அறம் கலந்திருந்ததை உணர்த்துகின்றன. சுருங்கக் கூறின், புறநானூறு என்பது மன்னர்களின் வெற்றி வரலாறுகளை மட்டும் பதிந்த ஏடன்று; மாறாக, ஈன்று புறந்தருதல் முதல் களிறு எறிந்து பெயர்தல் வரை ஒவ்வொரு குடிமகனின் கடமையையும், வீரத்தையும், தன்னாட்டுப் பற்றையும் உலகிற்குப் பறைசாற்றும் காலத்தின் அழியாப் பேரேடாகும்.

குறிப்புகள்

[1] உ. வே. சாமிநாதையர் (பதி.). *புறநானூறு: மூலமும் உரையும்*. வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை, 1923.
[2] ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை.). *புறநானூறு*. தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
[3] மு. வரதராசன். *சங்க இலக்கியத்தில் வீரமும் வாழ்வியலும்*. பாரி நிலையம், சென்னை.
[4] ச. வே. சுப்பிரமணியன். *சங்க இலக்கிய அறிமுகம்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தமிழர் பண்பாட்டில் கல்வி

முனைவர் மா. செல்வத்தரசி, உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

ஆய்வுச் சுருக்கம்

தமிழரின் பண்பாட்டுக் களம் கல்வி ஆகும். கல்வியின் மூலமே சாதி, சமய, பொருளாதாரப் பாகுபாடு இன்றி அனைவரும் ஒன்று என்று பிரம்மிக்க வைக்கும் பண்பாட்டுப் பிறப்பிடம் கல்வி நிலையமாகும். கல்வியால் ஒற்றுமை உணர்வு உடைய பண்பாடு வெளிப்படுகிறது. அடிமைச் சமூகத்தின் வேறருந்தது கல்வியாலே ஆகும். மனிதர்களின் கருத்துப் பரிமாற்ற வெளியில் பிறந்த மொழி, எழுத்தமைப்பின் வடிவில் புகுந்ததே கல்வியாகும். அத்தகு கல்வியால் வளர்ச்சி அடைந்த ஒரு சமூகப் பண்பாட்டினை அறியமுடிகிறது.

குறிப்புச்சொற்கள்: பண்பாடு, ஒழுக்கம், கல்வி சமமான கல்வி, கல்வியின் சிறப்பு.

முன்னுரை

காட்டுமிராண்டி வாழ்வில் இருந்து பண்பாட்டில் உயர்ந்த சமூகமாகத் தமிழ்ச் சமூகம் விளங்குகிறது. வேட்டை சமூகம் வேளாண் சமூகம் என்று சமூகத்தில் மனிதன் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முற்பட்டான். அத்தகைய சமூகத்தில் கல்வியும் பண்பாடும் ஒருமித்திருந்தன. ஏற்றத் தாழ்வுகளை அறுத்தெடுந்து கல்வியால் உயர்ந்த பண்பாடு பரிணமித்தது. ஆணுக்கும் பெண்ணுக்குமான சமமான கல்வி. தமிழரின் பண்பாட்டு வடிவிலான கல்வியே மனிதரை தொழில்நுட்ப வளர்ச்சிவரை இட்டுச் சென்றது என்பதனை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

பண்பாட்டுக் கல்வி

பண்+பாடு = பண்பாடு, எது நம்மை பண்படுத்தி வழிப்படுத்துகிறதோ அதுவே பண்பாடாகும். ஒரு சிறந்த பண்பாட்டை கல்வியால் மட்டுமே பெற இயலும். பண்பாடு என்பதற்கு சீ.பக்தவத்சலபாரதி, "பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கிறது"[1] என்கிறார். அறிவு சார்ந்த நிலையிலேயே பண்பாடு உயர்கிறது. அதற்கு அடிப்படைக் கல்வியே ஆகும். பண்பாடு என்னும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் எண்ணற்ற படிநிலைகளை உள்ளடக்கியது ஆகும். மேலும் பண்பாடு குறித்து கார்த்திகேசு சிவதம்பி, "பண்பாடு என்பது நமது வாழ்க்கை முறைமையில் ஒட்டுமொத்தமான ஒருமித்த நிலையை, மிகமிகச் சாதாரண விசயங்களிலிருந்து மிக உயர்ந்தது"[2] என்கிறார்.

கல்வி என்பது அறிவின் திறவுகோலாகும். தனிமனிதரின் திறமையினை வெளிக்கொணர்கிறது. ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே நல்ல பண்பாளனை உருவாக்குகிறது. கல்வி மனதை பண்படுத்துகிறது. கல்வி என்பதற்கு தமிழ் அகராதி முறைப்படுத்தப்பட்ட அறிவு, கல்விக்கூடம், கல்வி கற்பிக்கும் இடம் என்கிறது. கல்வியின் வாயிலாக சமூக நிறுவனத்தில் அனைவரும் தன்னை இணைத்துக் கொண்டனர். ஏனெனில் கல்வி என்பது ஒரு பிறவியில் கற்றால் ஏழு பிறப்பிற்கும் பயன் தரும் என்றார் வள்ளுவர்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் எம்மாப்பு உடைத்து" (குறள். 398)

இத்தகு கல்வியை புறநானூறு, ஒரு தாய் வயிற்றில் நால்வர் பிறந்திருப்பினும், அவரவர் சிறப்பினால் தாயும் தன் பாசத்தால் வேறுபடுவாள். 'மூத்தோனை வருக' என்று அழையாது அறிவுடையோனையே 'வருக' என்று அரசனும் அழைப்பான். நால்வேறு வகையான

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

மக்களுள்ளும், கீழ்நிலையிலுள்ளான் ஒருவன் கல்வி கேள்விகளிலே சிறந்து விளங்கினால், மேல்நிலையில் உள்ளான் ஒருவரும் அவனுக்கு ஆட்படுவான். ஆதலால்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
...கீழ்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" [3]

மிக்கப் பொருளைக் கொடுத்தாவது கற்பது நன்றாகும். முயற்சியுடன் அனைவரும் கற்ற அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும் என்பர்.

கல்வியைக் கற்றுத் தருவதற்கு ஆசிரியன் இருந்தான். மாதா, பிதா, குரு என்று ஆசிரியன் மூன்றாம் நிலையில் வைத்து வணங்கப்பட்டான். சமூகத்தில் ஆசிரியன் மட்டுமே மிக உயர்ந்தவனாக மதிக்கப்பட்டிருக்கிறான். ஆசிரியர் என்பதற்கு தமிழ் அகராதி, கல்வி மற்றும் கலைகளைக் கற்றுத் தருபவர், 'The Person who teacher's an art or a subject' என்கிறது. குரு என்பவன் இறைவனுக்கு நிகர் என்று தமிழ்ப் பேரகராதி இயம்புகிறது. கல்வியின் இன்றையச் சூழலிலும் ஆசிரியனுக்கு சமூகத்தில் உயர்ந்த, மதிப்பான ஒரு நிலை உள்ளது. ஆசிரியர் மாணவர் உறவு என்பது இறுதிவரை வலுவானதாக்கிக் காட்டுவது கல்வி மட்டுமே ஆகும். இன்று ஆசிரியர் மாணவர் சந்திப்புக் கூட்டங்கள் சிந்திக்கப்பட வேண்டியவை ஆகும். சிறந்த ஆசிரியன் சிறந்த பண்பாட்டைக் கற்றுத்தருகிறார்.

கல்வியும் சமூகமும்

சமூகத்தில் ஆரம்பக் கால கட்டத்தில் குருகுலம் என்பது குடியிருப்புக் கல்வியாகும். இங்கு மாணவர்கள் ஆசிரியருடன் இல்லத்திலேயே தங்கி கல்வி கற்றுள்ளனர். இன்றை மாணர்கள் தங்கும் விடுதிகள் உருவாவதற்கு இது ஒரு அடிப்படைக் காரணமாக இருந்திருக்கலாம். குருவிற்கு மாணவர்கள் மிகச் சிறந்த மரியாதையினை கொடுத்துள்ளனர். தங்களிடம் உள்ள பொருளைக் கொடுத்தும், அவருக்கு உதவிகள் செய்வதுமாக கல்வி பயின்று வந்துள்ளனர். குருகுல கல்வியில் மாணவர்களிடம் நீதி, நேர்மை, ஒழுக்கம் மூன்றும் மிகுந்து இருந்திருக்கின்றன. கல்வியின் மூலம் ஞானத்தை வளர்த்துக் கொண்டுள்ளனர். கல்வியால் பிறருக்கு கொடுக்கும் குணத்தையும், பிறரை மதிக்கும் பண்பும் கல்வியால் வளர்ந்துள்ளது. திண்ணைப் பள்ளிகள் தோன்றி இருக்கின்றன. இந்தத் திண்ணைப் பள்ளிகள் கற்றுத்தரும் ஆசிரியரின் வீட்டு முன்பு போடப்பட்ட ஒருவகை அமைப்பாகும். திண்ணைப் பள்ளிக் கூடம் என்பதனைத் தமிழகராதி முன்காலத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர் வீட்டுத் திண்ணையில் அமரவைத்துக் கல்வி கற்பித்தமுறை, 'The School which was conducted on a paid by the teacher in olden days' என்கிறது. திண்ணைப் பள்ளியின் கல்வி ஆர்வத்தால் தமிழகத்தில் கல்வி நிலையங்கள் தோன்ற ஆரம்பித்தன. திண்ணைப் பள்ளிக்கு தாங்கள் வசிக்கும் இடங்களில் உள்ள இடங்களைப் பயன்படுத்தி உள்ளனர். திண்ணைப் பள்ளியில் பயின்ற தமிழறிஞர் ஒருவரை அறிவுடைநம்பி குறிப்பிடுகிறார். "சோழவந்தானில் தெற்கு மாடவீதியில் சிதம்பர விநாயகர் கோயில் இன்றும் உள்ளது. அதன் பக்கத்தில் கல்மண்டபம் என்னும் இடத்தில் திண்ணைப் பள்ளி நடைபெற்று வந்தது"[4] என்கிறார். இப்பள்ளியில் தமிழறிஞர் அரசஞ் சண்முகனார் கல்வி பயின்றுள்ளார். அவர் தமது 18ஆவது வயதிற்குள் அளவற்ற நூல்களை மனப்பாடம் செய்துள்ளார். அரிச்சுவடி மேல்வாய் இலக்கம், கீழ்வாய்க் இலக்கம், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, நல்வழி, நன்னெறி, மூதுரை, நீதிநெறி விளக்கம், கலம்பகம், கோவை, நிகண்டு என்று இளமையிலேயே தமிழ் நூல்கள் அனைத்தையும் கற்று முடித்துள்ளார். அன்றைய கல்வியில் இருந்து இன்றைய கல்வி முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

சங்க காலத்தில் இருந்த ஆண் பெண் வேறுபாடு இன்றி சமமான பண்பாட்டுக் கல்வி வழங்கப்பட்டிருக்கிறது. பெண்களும் கல்வி கற்றனர் என்பதற்கு சங்க கால பெண்பாற்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

புலவர்களைக் குறிப்பிடலாம். ஔவையார், ஆதிமந்தியார், ஓக்கூர் மாசாத்தியார், காக்கைப் பாடினியார், காவற்பெண்டு, பொன்முடியார், பாரிமகளிர், வெள்ளிவீதியார், வெண்ணிக் குயத்தியார்... நாற்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர். இவர்களைக் கொண்டு பெண்கள் ஆண்களுக்கு நிகரான புலமை உடையவர்களாக இருந்துள்ளனர் என்பது புலனாகிறது. சங்க காலத்தில் முறைப்படுத்தப்பட்ட கல்வி இருந்திருக்கிறது. சங்க கால கல்விக் கூடங்களில் இளம் பாலாசிரியர்கள் இருந்திருக்கின்றனர். கல்வி கற்பதற்கு வயதில்லை. இளைய மாணவர், முதிய மாணவர் என்று கல்வி பிரித்து வழங்கப்பட்டிருக்கிறது. கேரளப் பழங்குடிகள் என்ற தமது ஆய்வில் மா.செல்வத்தரசி அவர்கள் 'ஆலம்பட்டி என்ற பழங்குடிகள் வசிக்கும் குடியில் நான்காம் வகுப்பு வரை உண்டு. ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரையிலான இந்தக் குழந்தைகள் ஒரே அறையில் அமர்ந்திருக்கிறார்கள். அவருக்குத் தகுந்த பாடத்தை நடத்த வேண்டும்' என்கிறார். இக்கல்வி SSA - SARVA SIKSHA ABHAYAN - சர்வ சிக்ஷா அபயன் ITDP - Tribal Development Program என்றும் குறிப்பிடப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தைப் போன்று பிற சமூகங்களும் கல்வியை கற்றுத்தருவதில் முனைப்புடன் செயலாற்றி இருக்கின்றன.

சங்க காலத்தில் கல்வி நிலையங்களும் மிகுந்திருந்தன. வீட்டைப் பிரிந்து வெளியூரில் சென்று தங்கிப் படித்துள்ளனர். இதனையே கல்வியிற் பிரிவாக தொல்காப்பியர் மூன்றாண்டு என்று காலவரையறை செய்துள்ளார். இவ்வாறு பிரிந்து சென்று பயிலும் போது மற்றவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள வழிவகுக்கிறது. ஆரம்ப காலத்தில் எழுத்தும் எண்ணும் படிப்பதே துவக்க நிலை கல்வியாக இருந்துள்ளது. பண்பாட்டின் மிகப் பெரிய அடையாளமான நீதிநெறிக் கல்வி புகட்டப்பட்டிருக்கிறது திருவள்ளுவர்,

"எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு" (குறள். 392)

எண்ணும் எழுத்தும் உலகில் வாழும் மக்களுக்குக் கண் என்றார். கணித அறிவு ஊட்டப்பட்டிருக்கிறது. சமூகத்தில் பொதுக் கல்வியுடன் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையுடனான பண்பாட்டுக் கல்வியும் வழங்கப்பட்டிருக்கிறது.

நீதிநெறிக் காலத்தில் திருக்குறளும், நாலடியாரும், நான்மணிக்கடிகை என்று அனைத்து நீதி நூல்களும் கல்வி பற்றி குறிப்பிடுகின்றன. திருவள்ளுவர் கண் உடையவர் என்று கூறப்படுபவர் கற்றவர் மட்டுமே என்றும், மற்றவர்களது கண் புண்ணுக்கு ஒப்பாகப் பேசப்பட்டது. ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் போது செல்வந்தர் முன்னுன்று உதவி கேட்டும் எளியவர் போல் பணிவோடு நின்று கற்றல் வேண்டும் என்கிறார். கற்க வேண்டிய நூல்களை தேர்வு செய்து கற்பதும் அதன் வழி ஒழுக வேண்டும் என்கிறார். மேலும்

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு" (குறள். 396)

மணலை தோண்டும் அளவிற்கு நீர் சுரப்பது போல கல்வி கற்பதற்கு ஏற்ப அறிவு வளரும் என்கிறார். கற்றவனுக்கு எந்த நாடும் நாடாகும், எந்த ஊரும் ஊராகும் என்கிறார். இதனை அடியொற்றி ஔவையார் அதியமானிடம் பரிசில் பெறச் சென்றார். அப்போது பரிசில் வழங்க காலம் தாழ்த்தியதால் ஔவையார், அறிவாலும் புகழாலும் நிறைந்தோர் அனைவரும் இறந்தனர் என உலகம் வறுமைப் படவில்லை. அதனால் எங்கள் இசைக் கருவிகள் உள்ள முட்டையைக் கட்டுகிறோம். யாழினை உறையிட்டுத் தூக்குகிறோம்.

"மரம்கொல் தச்சன் கைவல் சிறா அர்,
மழுவுடைக் காட்டகத் தற்றே;
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"[5] (பாடல் 206)

கற்றவருக்கு எந்த நாடும் சொந்த நாடு என்று நிறுவினார். செல்வங்களுள் அழிவில்லாத, பிறரால் கொள்ளையிட, அழிக்க முடியாத ஒன்று கல்விச் செல்வம் மட்டுமே என்றார்.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை" (குறள். 400)

பொன், பொருள், மண் எல்லாம் அழியும் செல்வங்கள். கல்வி மட்டுமே அழியாத செல்வம் என்றது. நாலடியார் கல்வி பற்றிக் கூறும் போது அன்னப் பறவையைப் போல நூல்களை தெளிவாக ஆராய்ந்து கற்க வேண்டும் என்கிறது. பழமையான வருணாசிரம முறைப்படி படகைச் செலுத்துவோன் கடைப்பட்ட இனத்தானாக இருந்தாலும் அவனது துணையால் ஆற்றைக் கடப்பார்கள். நூல்களைக் கற்ற வரை வைத்து நல்லவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்கிறது. கல்லாதவராக இருந்தாலும் கற்றவர்களோடு சேர்ந்து பழகினால் நல்ல அறிவை நாள்தோறும் பெறலாம். எதுபோல் எனின் பனிப்பூ சேர்ந்த புதுப்பாலைக்கும் தண்ணீருக்கும் அம்மலர் வாசனை தருவது போலாகும். அழகு எது என்பதற்கு நாலடியார் கல்வி அழகே அழகு என்கிறது.

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நின்மையால்
கல்வி அழகே அழகு"[6]

தலை முடியின் அழகும், மடிக்கப்பட்ட ஆடையின் கரையழகும், பெண்கள் பூசும் மஞ்சளின் அழகும் அழகல்ல. மனதளவில் உணர்வோடு நடுவு நிலையில் நிற்பதைத் தரும் அழகே அழகாகும். கல்வி கொடுப்போரிடம் குறைவுபடாது. அவர்களைப் புகழவே செய்யும். அறியாமையை நீக்கும் மருந்தும் கல்வியே ஆகும். ஒருவன் தன் குழந்தைக்கு சேர்த்து வைக்கும் பெருஞ் செல்வம் கல்விச் செல்வம் மட்டுமே செல்வமாக மதிக்கப்படும் என்கிறது. நான்மணிக்கடிகையில் கல்வியானது ஒருவனுக்கு துணையாகும் பொருளாகும் என்கிறது. மக்களுக்கு பெருமையும் அழகும் தருவது கல்வியே ஆகும். செல்வம் போல் வலிமை உடையது. கல்வியானது நெருப்பில் வேகாது தண்ணீரால் அழியாது. திருடரால் திருட முடியாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க பெருகும் தன்மை உடையது. துன்பம் வந்த காலத்து கல்வி அறிவே துணையாக விளங்கும்.

காலமுறை கல்வி

இருண்ட காலம் என்பது வருகையால் தமிழ் மொழி பண்பாடு, கலாச்சாரம் ஆகியன அழிவுற்றன. அத்தகைய காலத்தில் சமண பௌத்த காலத்திற்கு அடுத்து மூவகை கல்வி நிலையங்கள் இருந்திருக்கின்றன. இவற்றின் மூலம் சமயக் கல்விகள், தத்துவக் கோட்பாடுகள், தர்க்கம், யோகம் போன்றவை கற்பிக்கப்பட்டன. வேத கல்வியை பல்லவ மன்னர்கள் நிறுவினர் உண்டியும் உறையுளும் பெற்று மாணவர்கள் கல்வி பயின்றனர். "அங்கே வேதம், வேதாங்கம், மீமாம்சை, தத்துவம், நியாயம், தர்மசாத்திரம், புராணம், ஆயுர்வேத மருத்துவம் போன்றவை கற்பிக்கப்பட்டன."[7] சோழர் கால கல்வி முறை அன்றைய சமூக நிலையை எடுத்துரைத்தது. மானியத்துடனான வேத கல்வி நிலையங்கள் தோன்றின. அங்கும் வேதம், சாத்திரம், காப்பியம், புராணம் முதலியவையே கற்பிக்கப்பட்டன. சோழர் காலத்தில் வேதியர் குல மாணவர்கள் இலவசமான உண்டியும் உறையுளும் பெற்றுக் கற்றனர். அவர்களை ஊக்கப்படுத்த உதவிப் பணம் வழங்கப்பட்டது. தற்காலத்தில் தமிழகம் பாரதி கண்டது போல், "கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ் / கம்பன் பிறந்த தமிழ்நாடு" (பாரதி) கல்வியில் சிறந்து விளங்குகிறது. ஆணுக்குப் பெண் நிகராக அதைவிட அதிகமாகவே கற்கும் நிலை காணப்படுகிறது. பெண்களும் கல்வியில் உயர்ந்து விளங்கினர். அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதித்து வருவது கண்கூடாகும்.

இன்றைய கல்விச் சூழல்

இன்றைய கல்விச் சூழல் என்பது தொழில் நுட்பம் மிகுந்ததாகும். அறிவு, பண்பாடு, ஒழுக்கம் ஆகிய இவற்றை எல்லாம் தாண்டி நுண்ணறிவுத் திறன் மிக்கதாக விளங்குகிறது.

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

மனப்பாட சக்தி மாறி முதல் வகுப்பில் இருந்தே செய்முறை கல்வி உருவாகிவிட்டது. செய்முறை கல்வி மூலம் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்தி சாதனங்களும் சாதனைகளும் மிகுந்துவிட்டன. ஒரு பாடத்தை எடுத்துக் கொண்டால் அதில் பல பிரிவுகள் உள்ளன. அவற்றை மனப்பாடம், செய்முறை நுண்ணறி மற்றும் A1 வரை பயன்படுத்தும் அளவுக்கு கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது. Digital (இலக்குமுறை) கல்வி Digital Board கைகளால் தொட்டு இயக்கக் கூடியவை, இதனை திறன் பலகை' என்கின்றனர். மேலும் ஆன்லைன் (online) மூலம் கற்பது என்ற அறிவு நுட்பம் பல்கிப் பெருகிவிட்டது.

Digital Class Room இன்றைய கல்விக்கு மிகத் தேவையான ஒன்றாகி விட்டது. செயல் முறை கல்விகளே அனைத்துப் பாடத்திலும் மேலோங்கிக் காணப்படுகிறது. இதன் மூலம் ஒரு சமூகம் சிறந்த கல்வித் திறன் உடைய சமூகமாக விளங்குகிறது. கற்றல் அனைத்து மாணவர்களையும் ஒரே நேர்கோட்டில் இட்டுச் செல்கிறது. இவ்வாறு கற்பதால் இளம் விஞ்ஞானிகள் அதிகம் உருவாகின்றனர். தங்களது கல்வி தொடர்பான சந்தேகங்களை அலைபேசி வாயிலாகவும் கணினி வாயிலாகவும் தீர்த்துக் கொள்கின்றனர். பள்ளி மாணவர்களுக்கான கல்வித்தரம் கல்லூரிக் கல்வியை அடியொற்றியதாக அமைந்துள்ளது. சாதாரண கல்வி உடைய ஒரு மாணவன் உயர்கல்வியைக் கற்பதற்கு பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

முடிவுரை

சமூக நீதிக் கல்வியின் மூலம் அனைத்துத் தரப்பு மாணவர்களும் சமமான கல்வியைப் பெறுகின்றனர். வளர்ந்துவிட்ட கல்வித் தரத்தால் உயர்கல்வியில் மாணவர்களின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. சமமான கல்வியால் சமூகம் அறிவியல், சமயம், பொருளாதாரம் என்று உயர்ந்து விளங்குகிறது. ஆண்களுக்கு நிகராக பெண்களும் சங்க காலம் முதல் இன்றுவரை கல்வி கற்று வருகின்றனர். மதிப்பெண் வீதத்தில் ஆண்களை விட பெண்களே அதிக மதிப்பெண் பெற்று வருகின்றனர். கல்வியின் முன்பு ஏற்றத் தாழ்வு அற்ற சமமான நீதி அனைவரையும் சென்றடைகிறது.

குறிப்புகள்

[1] இளங்குமரன், இரா. புறநானூறு. வர்த்தமானன் பதிப்பகம், 2003, ப. 313.
[2] இளங்குமரன், இரா. புறநானூறு. வர்த்தமானன் பதிப்பகம், 2003, ப. 340.
[3] கார்த்திகேசு சிவதம்பி. தமிழ்ப் பண்பாடும் இலக்கியமும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2011, ப. 3.
[4] செல்லம், வே.தி. தமிழக வரலாறும் பண்பாடும். மணிவாசகர் பதிப்பகம், 2009, ப. 266.
[5] பத்மதேவன். நாலடியார். ப. 78.
[6] பக்தவத்சல பாரதி, சீ. பண்பாட்டு மானிடவியல். மணிவாசகர் பதிப்பகம், 1990, ப. 157.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தொல்காப்பியமும் போர் முறையும்

முனைவர் இரா. செல்வராணி, உதவி பேராசிரியர், தமிழ் உயர் ஆய்வு மையம், யாதவர் கல்லூரி, திருப்பாலை, மதுரை.

ஆய்வுச்சுருக்கம்

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே போர் செய்யும் முறையில் தமிழர்கள் சிறப்பு கொண்டு இருந்தனர் அக்காலத்தில் நிலப்பகுதிக்கு ஏற்பவே போர்கள் நிகழ்ந்து இருக்கின்றன என்பதை தொல்காப்பிய புறத்திணையில் வழியாக அறிய முடிகிறது . மேலும் மனிதனின் நாகரிக வளர்ச்சியின் அடிப்படையில் போர்களுக்குக்கான காரணமும் வளர்ந்து வந்து உள்ளது. சான்றாக ஆதியில் வாழ்ந்த குறிஞ்சி மக்களுக்கு அவர்கள் பழக்கப்படுத்திய கால்நடைகளே முக்கியமானவையாக இருந்துள்ளன. எனவே குறிஞ்சியில் ஆநிரைகளைக்கவர்தல், அதை மீட்டலுக்குமான போர்கள் நடைபெற்றன. பின்னர் குழுவாக வாழ தொடங்கிய வளர்ச்சி, நிலையான முல்லையில் தன்னை மதிக்காத வேந்தனை எதிர்த்தும், காட்டு வளம் மீது கொண்ட ஆசையாலும் போர்கள் நிகழ்ந்துள்ளன. வேளாண்மை நாகரிகம் கூடிய ஊர்கள் நாடு என்னும் கலாச்சாரமும் வளர்ந்த மருத நிலப்பகுதியில் சொத்தாக கருதப்பட்ட எயிலை அரணை முற்றுகையிட்டு நாட்டை கைப்பற்றுதலாலும் எயிலைக் காத்து தம் நாட்டை பாதுகாக்கும் பொருட்டுப் போர்கள் நடைபெற்றன. ஒரு நாடு என உருவான பின்னர் நாட்டின் வலிமையைப் பறைசாற்றும் விதமாக வர்த்தகம் பார்க்கப்பட்டது. எனவே யார் அப்பகுதியை ஆளுவது என்பதை உற்பத்தி பெருக்கம், கடல் வாணிபம், மற்றும் பண்டமாற்று ஆகியன நிர்ணயத்தன. எனவே நெய்தல் நிலத்தில் வலிமை குறித்த போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவ்வாறு நான்கு வகைப்போர்க்கள நிகழ்ந்ததாக தொல்கப்பிய புறத்திணையில் எடுத்து உரைக்கிறது. இக்கட்டுரை வாயிலாக தொல்கப்பியம் கூறும் தமிழர்களின் போர் மரபுகள் பற்றி அறிய முடிகிறது.

குறிப்புச்சொற்கள்: தொல்காப்பியம், போர், முறை.

முன்னுரை

தொல்காப்பியம் பழந்தமிழரின் இலக்கண நூலாக திகழ்கிறது என்று இறையனார் களவியல் என்னும் அக இலக்கண நூல் கூறுகிறது. தொல்காப்பியம் என்பது இன்று கிடைக்க பெரும் மிக மூத்த தமிழ் இலக்கணமாகும். இந்நூலை இயற்றியவர் தொல்க்காப்பியர் என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. "தொல்காப்பியதில் இடை செருகல்கள் உள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றன". பழங்காலத்து நூலாக இருப்பினும், இன்று வரை தமிழ் இலக்கண விதிகளுக்கு அடிப்படையான நூல் இதுவே ஆகும். தொல்காப்பியத்தை முதல் நூலாக கொண்டு காலம்தோறும் பல வழி நூல்கள் தோன்றின. தமிழ் மக்கள் வாழ்க்கையில் ஒழுக்கம் பற்றிய சிறப்பினை அகம், புறம் என வகுத்து கொண்டனர். "அகவொழுக்கம் தொடர்புடைய மக்கள், உற்றார், உறவினரோடு ஏற்படுவது அகவொழுக்கம்" எனவும், அரசன் பொது மக்கள். போர் வீரர் என்பவரோடு ஏற்படுவது புறவொழுக்கம் எனவும் பிரிக்கப்படுகிறது திணை என்பது ஒழுக்கம் என்பதால் தொல் காப்பியர் அகத்திணை புறத்திணை எனப் பாகுபடுத்தினார். மேலும் அவற்றுள் அகமாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,பாலை, கைக்களை, பெருந்திணை எனவும் , புறமாக வெட்சி, வஞ்சி, உழிஞை , தும்பை.வாகை, காஞ்சி, பாடாண் என எழுதிணைகளாகவும் அகத்திற்குப் புறமாகப் படைத்துள்ளார். புறம் என்ற சொல் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும், பல இடங்களில் பயின்று வந்துள்ளன. புறம் என்னும் சொல் பல்வேறு உணர்வுகளுக்குரிய தாயிருப்பினும் மறவுணர்வு வாகிய

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

வீரத்தினையே பெரிதும் குறிப்பதாக அமைந்திருக்கிறது. புறத்திற்குரிய ஏனைய உணர்வுகளிலும் வீரமே விழுமிய உணர்வாகப் போற்றப்பட்டிருக்கிறது. ஆண்மகனின் பெருந்தகுதியாக மறவுணர்வுகள் கருத்தப்பட்டிருப்பதை மைந்தன், ஆடவன், ஆடுஉ, ஆகிய பெயர்களும், காளை விடலை ஆகிய உவம ஆகுபெயர்களும் காட்டுகின்றன. "மைந்தன்" என்பதற்கு "வலிமை" என்பது பொருள் ஆகவே மறவுணர்வு நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் தேவையானதொரு பண்பாக அக்காலத்தில் கருதப்பட்டது. மனித வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு இயல்பு சிறப்பாகப் போற்றப்படுகிறது. சங்க இலக்கியத்தில் தமிழரின் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. இக்கருத்தினை புறநானுறு,

"வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்க்குக் கடனே,
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே,
ஒளிறுவா ளருஞ்சிம் முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே." (புறம் 12)

எனும் புறப்பாடல் வழி அறிய முடிகிறது இப்புறப் பாடல் குறிப்பிடும் கடமைகளும் போரோடு தொடர்புடையனவாக இருப்பதைக் காணலாம். இப்பாடலில் வரும் சான்றோனாக்குதல் என்னும் சொல்லுக்கு "வீரனாக்குதல்" என்று பொருள் கொள்வார் உ.வே.சா. சான்றோர் என்னும் சொல் பழைய காலத்தில் "வீரம்" என்னும் பொருளிலே பயின்றிருக்கும் என்பார் வ.சுப. மணியக்கம்.

போர் முறைகள்

தொல்கப்பியம் புறத்திணையியலில் கூறப்பட்டுள்ள திணைகளும் துறைகளும் அக்காலம் போர் வகை பற்றியும் ஒவ்வொரு வகைப் போரிலும் அமைந்த பல்வேறு படி நிலைகளையும், விளக்குவனவாக உள்ளன. தொல்கப்பியத்தில் கூறப்பட்டுள்ள போர் முறைகள் ஒவ்வொரு சூழ்நிலைக் கேற்றவாறு அமைந்த தனித் தனிப் போர் முறைகளாகக் காணப்படுகின்றன.

வெட்சி	-	**ஆக்களைக் கவர்தலுக்கான போர்**
கரந்தை	-	**ஆகளைக் மீட்டலுக்கான போர்**
வஞ்சி	-	**மாற்றார் மண்ணைக் கவரச் செய்யும் போர்**
காஞ்சி	-	**தடுப்பதற்கான போர்**
நொச்சி	-	**பிறரிடமிருந்து கோட்டையைக் காப்பதற்கான போர்**
உழிஞை	-	**கோட்டையைக் கவர முற்றுகை இடும் போர்**
தும்பை	-	**நேருக்கு நேர் நின்று வலிமையைக் காட்டும் போர்**
வாகை	-	**வெற்றி பெற்ற மன்னரைக் குறிப்பது**
பாடாண்	-	**பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறு**

வெட்சி

வெட்சித் திணை என்பது பகையரசர்கள் மீது படையெடுத்துச் செல்வதற்கு முன்னர் அரசரால் ஏவப்பட்ட படை வீரர்கள் பகை நாட்டின் மீது சென்று அந்தநாட்டு பசுக் கூட்டங்களை யாரும் அறியாத படி கவர்ந்து வருதல் ஆகும்.

"வேந்துவிடு முனைஞர் வெற்றுப்புலக்கலவின்
ஆதந் தோம்பல் மேயவற்றாகும்." (தொல் புறத் – நூ -2)

பெரும் போர் மறவர் சிறப்பு

"ஆரமர் ஓட்டலும் அப்பெயர்த்து தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்" (தொல் -புறம் 5)

வெட்சி வீரர்கள் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டல், தங்களை எதிர்த்து வரும் படையை நின்று தன் வாள்வன்மையால் பகைவரையும் வீழ்த்தி தானும் இறந்து விடும் மறவர்களையும், போர்களத்தில் இறந்த வீரர்களுக்கும், கல்லைத்தேடி எடுத்து, கல்லைப் புனித நீராட்டி,

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தக்கஇடத்தில் நட்டு, கோவில் கட்டி, இறந்த வீரனுக்கு பீடங்களைக் எழுப்பி சிறப்பித்து வழிபடும் முறையானது தொல்கப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் நிரையை மீட்கா விடில் யான் உயிர் விடுவேன்." போன்ற வீரர்களின் சிறப்புகளையும் கூறுகிறது.

வஞ்சித்திணை

குறையாத மண்ணாசையினால் மிக்கு விளங்கும் மன்னவனுடன், மற்றொரு மன்னன் சென்று அஞ்சும் படியாகும் போர் செய்வதைக் குறிப்பது வஞ்சித்திணை எனத் தொல்காப்பியர் **"அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்றே" (தொல் புறம் -6.2)** கூறுகிறார்.

கடுமையும், கொடுமையும்

தும்பை என்பது கடும் போர் நால்வகைப் படைகளும் ஒரு பரந்த போர்களத்தில் நேருக்கு நேர் நின்று போர் செய்வது தும்பை. ஆநிரை பற்றிய போர் வெட்சியும், கரந்தையும், நாடும் நிலமும் பற்றிய போர் வஞ்சி, மதிற்போர் உழினஞ, நொச்சி, வலிமையைக் காட்ட நடத்தும் போர் தும்பை என்கிறார் தொல்காப்பியர் இதையே.

"கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒரு சிறப் பின்றே." (தொல் -புறம் 13)

ஒரு வீரனின் உடலில் அம்புகளும் வேல்களும் நெருக்கமாகப் பாய்ந்து உடல் முழுதுமிருந்தாலும் உயிர் சென்ற பிறகும் யாக்கை கீழே விழாமல் நிற்கிறது. அது மிகப் பல கால்களையுடைய அட்டையின் உடம்பு தரையில் விழாது அம்பும், வேலும் தாங்கி நிற்கின்றன. மேலும் அட்டை இரண்டாக வெட்டினாலும் உயிர்போகாது, ஊர்ந்து செல்லும் வீரனும் இறந்த பின்பும் சினத்துடன் கூடிய போர்முகம் காட்டுகின்றான். இது இரு பாக்கத்தாலும் சமமாகப் போரிடுவதால் ஒரு பக்கத்திற்கே சிறப்பென்று கூறவியலாத நிலை. இது போர் மறவனின் வீரச் சிறப்பை மட்டுமின்றிப் போரின் கடுமையையும் காட்டுகிறது. எனக் கூறுகிறார்.

முடிவுரை

ஓர் அரசன் "நாடோறும் நாடி" முறை செய்யதான், அவ்வாறு செய்யா திருந்தால் அவன் ஆண்டுதோறும் அவன் நாடு கெடும் என்பதை நன்கு அறிந்திருந்தான். ஆகவே அவனுடைய நாடு செல்வச் செழிப்புடன் விளங்க பிற நாட்டு வேந்தர்களின் மீது படையெடுத்து நல்ல அரசனின் போர் மரபாக விங்கியது என்பதை தொல்காப்பியப் போர்கள் பற்றிய செய்தியின் வாயிலாக அறிய முடிகிறது.

குறிப்புகள்

[1] அப்பாத்துரை, கா. தென்னாட்டு போர்க்களங்கள். மெய்யப்பன் தமிழாய்வகம்.
[2] இராமையா பிள்ளை, நா. தொல்காப்பியம் புறத்திணை விளக்கம்.
[3] இராமலிங்கம், இரா. சங்க இலக்கியத்தில் வேந்தன். மணி பிரின்டர்ஸ்.
[4] தமிழண்ணல். தொல்காப்பியமும் உரையும். மீனாட்சி புத்தக நிலையம்.
[5] விவேகானந்தன், சிவ, டாக்டர். போர்ப்படை இலக்கியங்கள்.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பாலகுமாரனின் 'இரும்புக்குதிரை' புதினத்தில் குடும்ப உறவு

சா. தனலட்சுமி, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 625 014.
முனைவர் செள. மைதிலி, தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 625 014.

அறிமுகம்

வாழ்க்கையில் நடைபெறுவனவற்றை உள்ளவாறு பதிவு செய்வது நடப்பியலாகும். "நடப்பியலாவது வாழ்க்கைச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் உள்ளபடியே விளக்க வேண்டும்" என்று ஓவெல் என்ற அமெரிக்கத் திறனாய்வாளர் கூறுகிறார். நிகழ்ந்தவைகளை, நிகழ்ந்தவற்றைக் கூற வேண்டும் என்பது இவரது கருத்து எனினும் படைப்பாளி தகுதியானவற்றைத் தேர்ந்து படைப்பது நல்லது என்பதும் அவர் கருத்தே. அன்றாட வாழ்க்கை அனுபவங்களை உள்ளவாறு விளக்குவதுடன் இயற்கைத் தன்மையினையும் கூற வேண்டும். நாவலில் நடப்பியல் என்பது குறிக்கோளோடு (Ideal element) அமையும். "வாழ்க்கையினின்று புதினம் தோன்றுகின்றது; அது வளர்கிறது. வாழ்க்கையில் அது எதிர்விளைவையும் உண்டாக்குகிறது. எனவே வாழ்வுக்கு அதற்குரிய பொறுப்பினையும் புறக்கணிக்கக் கூடாது." படைக்கும் கதைகள் சமூக நாவல்களில் வாழ்க்கையோடு தொடர்புடையனவாகவே அமையும். பாத்திரங்கள் நம்மிடையே உலவுவதால் உணர்வுகளும் உறவுகளும் இயற்கைத் தன்மையனவாகும். பாலகுமாரன் படைத்த நாவல்களில் ஆய்வுக்கு எல்லைக்குள் அமைந்த புதினங்களில் காணலாகும் குடும்ப உறவுகளை இவ்வியல் ஆராய்கிறது. குடும்ப உறவுகள் முன்னதைக் கூட்டுக்குடும்ப அமைப்பில் மட்டுமே மதிப்பிடப்பட்டன. இன்றோ ஒவ்வைக் குடும்ப அமைப்பும் பணத்தின் அடிப்படையில் மதிக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. பாச உணர்வைக் காட்டிலும் பொருளாதாரமே வாழ்க்கையின் உறவுகளின் வன்மை, மென்மைகளை மதிப்பிடுகிறது. இல்லுறை மகளிர் கணவனின் வருமானத்தை எதிர்பார்க்க, அதுவே மகளிர் ஊதியத்தைக் குடும்பத் தலைமை எதிர்பார்ப்பதுமான நிகழ்வுகளே இன்றைய நடப்பியலாகும். நட்புறவு, காதல், உறவு, பாச உணர்வு குடும்பங்களில் காணப்படுவதைப் பாலகுமாரன் தம் நாவல்களில் சித்தரிக்கும் பாங்கினைக் குடும்ப அமைப்புகள் வழி ஆய்வுக் களத்தில் காண்பதே இவண் நோக்கமாகும். குடும்பம் என்பது மனித வாழ்வின் அடிப்படை அலகு. அது அன்பின் கூடு; பாதுகாப்பின் கோட்டை; கற்றலின் பள்ளிக்கூடம்; மனித உறவுகளின் முதல் பாடசாலை. ஆனால், அதே குடும்பம் சில வேளைகளில் சிறையாகவும், தடையாகவும், மனிதனின் சுய வெளிப்பாட்டிற்குத் தடைகோலாகவும் அமைந்துவிடுகிறது. பாலகுமாரனின் புகழ்பெற்ற புதினமான 'இரும்புக்குதிரை' (1984) இந்த இருமைநிலையை அழகாகப் பதிவு செய்துள்ளது. லாரிப் போக்குவரத்து சூழலில் அமைந்த இந்நாவல், தனக்குள் ஒரு படைப்பாளியை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கும் விஸ்வநாதன் என்ற மனிதனின் வாழ்க்கையூடாக, குடும்பம் எனும் நிறுவனத்தின் பன்முகத் தன்மையை நமக்கு வெளிப்படுத்துகிறது. பாலகுமாரனின் படைப்புகள் குடும்பத்திலும் சமூகத்திலும் ஆழமாக வேரூன்றியவை. அவரது நாவல்கள் குடும்ப உறவுகளை ஆராய்வதற்கு விரிவான இடத்தை வழங்குகின்றன. நடுத்தர வர்க்கத்தினரையும் சாதாரண வாழ்க்கை நடத்துபவர்களையும் மையமாகக் கொண்டு, குடும்பம் எனும் நிறுவனத்தைப் பற்றிய ஆழமான புரிதலை அவரது நாவல்கள் வழங்குகின்றன. 'இரும்புக்குதிரை' அத்தகைய நாவல்களில் மிகச் சிறந்த ஒன்று.

குடும்ப அமைப்பு

கற்பு, ஒருவனுக்கு ஒருத்தி, நிச்சய திருமணம் போன்ற விழுமியங்கள் தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய கூறுகளாகும். குடும்ப அமைப்பில் தான் இப்பண்பாடு அமையும். குடும்ப அமைப்பு என்பதில் முறையாக மணந்த ஆண் பெண் தம்பதியர் உறவு முறைப் பெயர்களால் அழைக்கப் பெறுகின்றனர். கணவன்-மனைவி என்னும் உறவுப் பெயர்கள் மக்கட் பேற்றுக்குப்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பின் தந்தை-தாய் எனும் உறவுமுறைப் பெயரில் அழைக்கப் பெறுகின்றனர். பிறக்கும் மகவு ஆண் ஆயின் மகன், பெண் ஆயின் மகள் எனும் உறவு முறையில் அமைகின்றனர். திருமணத்தால் கட்டப்பட்ட மாந்தர் குழுவே குடும்பம் எனப் பெயர் பெறுகின்றது. கணவன், மனைவி, மகன், மகள் ஒரே வீட்டில் வாழ்வர். தத்துப் புத்திரன் இருப்பின் அவனும், உடன்பிறப்பினர் பலராயின் அவர்களும் குடும்ப உறவில் வாழ்வர். குடி, குலம், குலன் எனும் சொற்கள் தமிழ் இலக்கியத்தில் குடும்பம் எனும் பொருளாத் தருவன. கூடி வாழ்வதால் குடும்பம் எனும் சொல் வழக்குப் பிறந்தது.

குடும்ப உறவுகள்

ஒர் ஆணும், பெண்ணும் இணைந்து வாழ்வது குடும்பம் ஆகும். அக்குடும்பமானது ஒழுங்கான பாலியல் எல்லைக்குட்பட்ட நிலையில், சமுதாயம் ஏற்கும் அடிப்படையில் அமைதல் வேண்டும். குடும்பத்திலுள்ள ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனியே பணிகள் இருந்தாலும் குடும்பத்திற்கென்று நான்கு பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. "குடும்பம் தனி மனிதருக்காகவும், சமுதாயத்திற்காகவும் பெரும்பங்காற்றுகிறது. இது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது." மனித இனப் பெருக்கத்திற்குக் குடும்ப அமைப்பு அவசியமாகிறது. தக்க வயதில் ஆண், பெண் இணை சேர்வதன் மூலம் குடும்ப வாரிசு ஏற்பட வழி உண்டு. ஆண் தன்னுடைய ஆண்மையை நிலைநாட்டிக் கொள்வதற்கும், குடும்ப உறுப்பினர்களின் தொகையை அதிகரிப்பதற்கும் பாலியல் பணி சிறப்பிடம் பெறுகிறது. மனித உற்பத்தி இனப்பெருக்கம் எனப்படுகிறது. அவ்வினப்பெருக்கத்திற்கு மண உறவு அவசியமாகிறது. அவ் மண உறவின் மூலமே குடும்ப உறவுகள் தோற்றம் பெறுகின்றன.

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒன்றைச் சார்ந்து தான் வாழ வேண்டியுள்ளது. ஒரு மனிதன் பிற மனிதனுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பை உறவு எனும் சொல்லால் அழைப்பர். உறவுக்கு உணர்வு அவசியம். உணர்வுகளின் ஆழம் தான் உறவின் வலிமை என எம்.எஸ். உதயமூர்த்தி கூறுகிறார். குருதிக் கலப்பால் எழும் உறவும் உண்டு. முதலாதையர் வழி வம்சாவழி உறவும் வருவதுண்டு. குருதி வழி உறவு, குருதி அல்லா வழி உறவு என மனித உறவுகளை இரு வகையாக்கலாம். கணவன்-மனைவி உறவில் விளையும் மக்கள் உறவு குருதி உறவாகும். பிற மனிதருடன் கொள்ளும் உறவு குருதி அல்லா உறவாகும். நண்பர்களிடையே மலரும் உறவைச் சான்றாக்கலாம். சமுதாயத்தில் கூட வாழும் குணம் மனிதனுக்கு உண்டு. மனிதரிடையே காணப்படும் ஒழுங்குமுறையான உறவு ஒரு சமுதாயத்தில் இருப்பது இயல்பு. உறவுகளின் அடிப்படையில் குடும்ப அமைப்பு உள்ளது. குடும்பத்தில் ஆதியில் பெண் தலைமை தாங்கியிருப்பினும் தொல்காப்பியர், சங்கப்புலவர் காலங்களில் தமிழ்க் குடும்பங்களில் தலைவர்களாக ஆண் மக்களே இருந்து வந்தனர். அவர்கள் எல்லோரையும் உறவினர்களாக மதித்துப் போற்றினர். புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலில் உலகத்து யாவரும் உறவினரே எனக் குறிப்பிட்டுள்ளார். குடும்பங்களால் ஆன சமுதாயம் ஒரு திட்டமான அமைப்பினைக் கொண்டது. அந்த அமைப்பில் மாற்றம் வரும்போது சமூகக் கட்டமைப்பும் மாறும். இடைக்கால அமைப்பு சமூகத்தில் உள்ள குடும்பங்களில் தந்தை தன் கடமைகளைச் செய்பவர், மற்ற உறுப்பினர்க்கு உரிமை அதிகம் இல்லை. கல்வி, வேலை, தொழில் முதலியவற்றின் வளர்ச்சியால் இடைக்கால அமைப்பில் மாற்றம் தோன்றும் வேளையில் உணவு, உடை முதலியவற்றில் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. குடும்ப உடை முறைகளில் மாற்றம் ஏற்படுகிறது.

குடும்பம் – ஒரு நுண்ணுலகம்

குடும்பம் என்பது சமூகத்தின் ஒரு நுண்ணுலகம். அதில் அன்பும் வெறுப்பும், புரிதலும் முரண்பாடும், தியாகமும் சுயநலமும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்துள்ளன. பாலகுமாரனின் புதினங்கள் மனித உறவுகளும் முரண்பாடுகளும் சமூக இயக்கவியலின் உந்து சக்திகளாகச்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

செயல்படுவதை விளக்குகின்றன. 'இரும்புக்குதிரை' நாவலில் விஸ்வநாதன் ஒரு லாரி கம்பெனியில் பணிபுரிபவன். அவனுக்குள் ஒரு படைப்பாளி இருக்கிறான். ஆனால் அந்தப் படைப்பாளியை வெளிப்படுத்த அவனால் முடியாமல் தவிக்கிறான். அவனது குடும்பமும் அலுவலகமுமே அவனுக்குள் இருக்கும் தடைகள் என்று அவன் உணர்கிறான். இங்குதான் குடும்பத்தின் இருமைநிலை வெளிப்படுகிறது. ஒருபுறம் குடும்பம் அவனுக்குப் பாதுகாப்பும் அன்பும் வழங்குகிறது. மறுபுறம் அதே குடும்பம்தான் அவனது கனவுகளுக்கு ஒரு சங்கிலியாக அமைகிறது.

விஸ்வநாதனின் மனைவி, குழந்தைகள், அவனது அன்றாடக் கடமைகள் – இவையனைத்தும் அவனைப் பூமிக்கு இறுக்கிப் பிடிக்கின்றன. "கல்யாணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பன்" என்ற நிலையில் அவன் இருப்பதாலேயே, அவனால் தன் கனவுகளைத் தொடர முடியாமல் போகிறது. இது ஒவ்வொரு நடுத்தர வர்க்க மனிதனும் எதிர்கொள்ளும் பிரச்சினைதான். குடும்பப் பொறுப்புகளுக்கும் தனிப்பட்ட ஆசைகளுக்கும் இடையிலான போராட்டம் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் நிகழும் உளவியல் நாடகமாகும்.

குடும்பத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையிலான முரண்

விஸ்வநாதனின் கதை ஒவ்வொரு மனிதனின் கதை. அவன் "திரைத்துறையில் நுழைந்துவிட வேண்டும் என்னும் கனவுடன் பிழைப்புக்காக குமாஸ்தாவாக" இருக்கிறான். இது கனவுக்கும் நிஜத்துக்கும், ஆசைக்கும் கடமைக்கும் இடையிலான பிரமாண்டமான முரண். குடும்பம் அவனுக்கு உணவும் உறையும் வழங்குகிறது. ஆனால் அதே குடும்பம்தான் அவனது ஆன்மாவின் பசியைப் போக்க மறுக்கிறது. பாலகுமாரன் தன் நாவலில் இந்த முரணை மிக நுணுக்கமாகப் பதிவு செய்துள்ளார். விஸ்வநாதனின் மனைவிக்கும் அவனது கனவுகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவள் ஒரு நடைமுறைப் பெண். அவனோ ஒரு கனவுக்காரன். இந்த இருவேறுபட்ட மனநிலைகளுக்கிடையேயான மோதல்தான் குடும்பத்தின் உள்வட்டத்தில் நிகழும் மிகப் பெரிய சோகம். குடும்பம் என்பது இரண்டு வேறுபட்ட ஆன்மாக்கள் ஒன்றாக வாழ முயலும் ஒரு முயற்சி. அந்த முயற்சி வெற்றிபெறும் போது அது அன்பாகும்; தோல்வியுறும் போது அது துயரமாகும்.

குடும்பத்தின் பார்வை

இந்நாவலில் இடம்பெறும் மேற்கோள்கள் குடும்ப வாழ்க்கையின் ஆழமான தத்துவங்களை நமக்கு உணர்த்துகின்றன.

> **“ஞானத்துக்கும் தொழிலுக்கும் என்னப்பா சம்பந்தம்? இரை தேடறது நமக்கும் உண்டே. புத்தியை வயத்தாலே கட்டிப் போட்டிருக்கே. ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழி யாய்ன்னு ஒளவைக் கிழவி பாடறாளே. இரை தேட வேண்டாம்னா பாறாங்கல்லாய்ப் போயிடுவோம். பாறைக்குப் பிரச்சனை இல்லை. மிருகம் மாதிரி இரை மட்டும் தேடற சுபாவமும் இல்லை. இரையும் தேடி ஞானமும் தேடி... அட்டா என்ன சுகம், எப்படிப்பட்ட போராட்டம். இது பனிஷ்மென்ட் இல்லை அம்பி. சுயமா புடம் போட்டுக்கற வித்தை, சுவாரஸ்யமான விளையாட்டு."**

இந்த வரிகள் குடும்ப வாழ்க்கையின் அடிப்படை இயல்பைப் பேசுகின்றன. 'இரை தேடுவது' – அதாவது பிழைப்புக்காக உழைப்பது – மனிதனின் அடிப்படைக் கடமை. ஆனால் 'ஞானம் தேடுவது' – அதாவது தன்னை வெளிப்படுத்திக் கொள்வது, தன் கலைத்திறனை வளர்த்துக் கொள்வது – அதுவும் மனிதனின் கடமை. குடும்பம் பிழைப்பிற்கான தேடலை மட்டுமே நியாயப்படுத்துகிறது; ஞானத்திற்கான தேடலை அது பெரும்பாலும் புறக்கணிக்கிறது. விஸ்வநாதன் இந்த இரண்டிற்குமிடையே சிக்கித் தவிக்கிறான்.

> **“ரீகலெக்ஷன் ஆஃப் தாட்ஸ் மனுஷாளுடைய பெரிய சொத்து இது. நடந்ததை நினைவுக்குக் கொண்டுவந்து யோசனை பண்ணத் தன்னைப் பக்குவப்படுத்திக்கறது**

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

மனுஷாளுக்கு மட்டுமே உண்டு. மிருகம் மாதிரி சட்டென்று கோபமோ, காமமோ வந்துடறதில்லே. வாலை மிதிச்சவுடனே பாஞ்சுடறதில்லை. கோபப்பட்டா என்னாகும்னு நம்மாலே யோசிக்க முடியும். தொடர்ந்து யோசிக்கிறவன் ஞானி. முடியாதவன் மிருகம். யோசனை பண்ணினதின் விளைவு இன்றைய வாழ்க்கை, வளர்ச்சி."

இந்த வரிகள் குடும்ப வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு பாடத்தைக் கற்றுத் தருகின்றன. குடும்பத்தில் முரண்பாடுகள் வரும்போது, உடனடியாக எதிர்வினையாற்றாமல், சிந்தித்துச் செயல்பட வேண்டும். 'தொடர்ந்து யோசிக்கிறவன் ஞானி' – இந்த உண்மை குடும்ப உறவுகளில் மிகவும் பொருந்தும். கோபத்தில் பேசப்படும் ஒரு வார்த்தை குடும்பத்தை நொறுக்கிவிடும்; சிந்தித்துப் பேசப்படும் ஒரு வார்த்தை அதைக் கட்டியெழுப்பும். குடும்பம் என்பது மிருகங்களின் கூட்டம் அல்ல; அது ஞானிகள் வாழும் இடம். ஞானம் என்பது அறிவு மட்டுமல்ல; பொறுமை, புரிதல், மன்னிப்பு இவையனைத்தும் சேர்ந்ததே.

குடும்பத்தின் பொருளாதாரப் பரிமாணம்

'இரும்புக்குதிரை' நாவல் குடும்பத்தின் பொருளாதாரப் பரிமாணத்தையும் தொடுகிறது. லாரி ஓட்டுநர்கள் "மாதக்கணக்கில்" குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டிய நிலை. அவர்களின் குடும்பங்கள் காத்திருக்கும் காத்திருப்பு, பிரிவின் வேதனை, மீண்டும் ஒன்று சேரும் போது ஏற்படும் மகிழ்ச்சி – இவையனைத்தையும் பாலகுமாரன் தன் நாவலில் பதிவு செய்துள்ளார். பொருளாதாரத் தேவைகளுக்காக குடும்பம் பிரிகிறது; மீண்டும் பொருளாதாரப் பாதுகாப்பிற்காகவே ஒன்று சேர்கிறது. இது ஒரு விந்தையான முரண். குடும்பம் என்ற அமைப்பு பொருளாதாரத்தால் பாதிக்கப்படுகிறது; ஆனால் அதே சமயம் பொருளாதாரத்திற்காகவே குடும்பம் உழைக்கிறது. விஸ்வநாதன் ஒரு குமாஸ்தாவாக உழைப்பதும், அவனது குடும்பம் அவனது உழைப்பில் தங்கியிருப்பதும் இந்த உண்மையை எடுத்துக்காட்டுகின்றன.

குடும்பமும் சமூகமும்

பாலகுமாரனின் புதினங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் பிரிக்க முடியாத இரு அம்சங்களாகப் பார்க்கின்றன. குடும்பத்திற்குள் நிகழும் முரண்பாடுகள் சமூகத்தில் எதிரொலிக்கின்றன; சமூகத்தில் நிகழும் மாற்றங்கள் குடும்பத்தில் பிரதிபலிக்கின்றன. 'இரும்புக்குதிரை' நாவலில் லாரிப் போக்குவரத்து சூழலில் நிகழும் "சிறு ஊழல்கள், சமரசங்கள், எழுதப்படாத விதிகள்" குடும்ப வாழ்க்கையிலும் நிகழ்கின்றன. குடும்பத்தில் உள்ள எழுதப்படாத விதிகள், மௌனமான ஒப்பந்தங்கள், சிறு சிறு சமரசங்கள் – இவையனைத்தும் சமூகத்தின் பிரதிபலிப்புகளே. ஒரு மனிதன் தன் குடும்பத்தில் எப்படி நடந்து கொள்கிறானோ, அப்படித்தான் சமூகத்திலும் நடந்து கொள்கிறான். குடும்பம் என்பது சமூகத்தின் முதல் பாடசாலை.

நாயகன் தொடர்பு உறவு

'உறவுகள்' என்ற கதையில் பாரிஜாதன் ஒரு நிறுவனத்தில் பணிபுரிகிறான்; தனக்குத் தேவையான பொருளாதாரத் தேவைகளைத் தானே பெற்றுக் கொள்கிறான்; இவனுக்குத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லை. ஆனால் தனக்கு ஒரு குழந்தை மட்டும் வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. "எனக்கு வேலை சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இல்லை; ஆனால் ஒரு குழந்தை பெற வேண்டும் என்ற ஆசை உள்ளது. வேலை சம்பாதித்து குழந்தை பெறலாமா என்ன?" என்று பாரிஜாதன் கேட்கும் போது, அது ஒரு இளம் பெண்ணின் பதில் போல் உள்ளது. அதை நாவலாசிரியர் விளக்கும் வகையில், இந்த உரையாடலில் கருத்தில்லாத ஒரு பெண்ணின் கூற்றில் அமைந்துள்ளது. இது ஒரு வகையான திருமண வாழ்க்கையை மாற்றியமைக்கும் பெண்களுக்கு உரிமை உண்டு என்ற கருத்தில் நாவலாசிரியர் இந்த நடவடிக்கையைப் பற்றி விளக்கமாகப் பேசுகிறார். திருமணத்திற்கு முன் ஒரு நிலை

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்பது தமிழ் சமூகத்தில் தவறு என்று கருதப்படுகிறது. ஆனால் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வழக்கம் மேற்கு நாடுகளில் உண்டு. சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றால் பிரிந்து விடு என்ற கருத்தாக்கத்தைக் கொண்ட இணையர் வாழ்க்கை தமிழகத்தில் இல்லை. பிராமணப் பெண் பாரிஜாதன் அப்படி ஒரு திருமணக் கோட்பாட்டை விரும்புகிறாள். அதனையே பாலகுமாரன் இந்த வாக்கியத்தில் விளக்குகிறார். குடும்பத் தலைவன் தலைவிக்குரிய உறவு முறைப் பெயர் இல்லை. ஆனால் தாய்-மகன் உறவு முறை மட்டும் தனித்து வாழும் பெண்ணிற்குக் கிடைக்கிறது.

தாய் உறவு உயர்ந்தது, உண்மையானது, தன்னலமற்றது. பெற்ற மக்களை நேசிப்பது தாயின் உள்ளம் ஆகும். தனக்குப் பிறந்த எல்லா மக்களிடமும் ஒரே விதமான அன்பைச் செலுத்துபவள் தாய். தாயின் தனித்த இயல்பும் தாய்மையின் சிறப்பும் சம அளவில் அன்புப் பரிமாற்றம் செய்வதில் தான் உள்ளது. அறிவுள்ள குழந்தையிடம் அதிக விருப்பம் காட்டுவாள் என்று புறநானூறு கூறினாலும், அன்புறவு என்பது அனைவரிடத்தும் ஒன்று போலவே அமையும்.

குடும்பம் – சிறையா? கோட்டையா?

இறுதியாக, 'இரும்புக்குதிரை' நாவல் நமக்கு எழுப்பும் மிக முக்கியமான கேள்வி இதுதான்: குடும்பம் ஒரு சிறையா, கோட்டையா? விஸ்வநாதனைப் பொறுத்தவரை, அது இரண்டும்தான். ஒருபுறம் அது அவனைப் பத்திரப்படுத்துகிறது; மறுபுறம் அது அவனைச் சிறைப்படுத்துகிறது. அவனது கனவுகள் குடும்பத்திற்காகப் பலியாகின்றன. ஆனால் அதே குடும்பம்தான் அவனுக்கு வாழ்வின் பொருளைத் தருகிறது. குடும்பத்தின் இந்த இருமைநிலையைப் பாலகுமாரன் மிக அழகாகப் பதிவு செய்துள்ளார். குடும்பம் ஒரு பளுவாக இருக்கலாம்; ஆனால் அந்தப் பளு இல்லாமல் மனிதன் பறந்து போய்விடுவான். குடும்பம் ஒரு தடையாக இருக்கலாம்; ஆனால் அந்தத் தடை இல்லாமல் மனிதன் திசை தவறிவிடுவான். குடும்பம் ஒரு சங்கிலியாக இருக்கலாம்; ஆனால் அந்தச் சங்கிலிதான் மனிதனைப் பூமியில் நிலைத்து நிற்க வைக்கிறது.

முடிவுரை

பாலகுமாரனின் 'இரும்புக்குதிரை' நாவல் குடும்பம் எனும் நிறுவனத்தின் பன்முகத் தன்மையை நமக்கு உணர்த்துகிறது. அது அன்பின் கூடு; அது பொறுப்பின் சுமை; அது கனவுகளின் தடை; அது பாதுகாப்பின் கோட்டை. விஸ்வநாதன் என்ற கதாபாத்திரத்தூடாக, ஒவ்வொரு மனிதனும் தன் குடும்பத்துடன் கொண்டுள்ள உறவின் சிக்கல்களைப் புரிந்துகொள்ள முடிகிறது. “தொடர்ந்து யோசிக்கிறவன் ஞானி" என்ற பாலகுமாரனின் வார்த்தைகள் குடும்ப வாழ்க்கைக்கு மிகப் பொருந்தும். குடும்பத்தில் எழும் பிரச்சினைகளைப் பொறுமையாகச் சிந்தித்துத் தீர்க்கும் குடும்பங்களே நிலைத்து நிற்கின்றன. குடும்பம் என்பது இரத்த உறவுகள் மட்டுமல்ல; அது புரிதல், பொறுமை, தியாகம், அன்பு ஆகியவற்றின் கூட்டு வாழ்க்கை. பாலகுமாரன் தன் படைப்புகளில் "மனித உறவுகளும் முரண்பாடுகளும் சமூக இயக்கவியலின் உந்து சக்திகளாக" செயல்படுவதைப் பதிவு செய்துள்ளார். குடும்பம் இந்த உறவுகளின் மையம். அதைப் புரிந்துகொள்வதன் மூலம்தான் மனித வாழ்க்கையின் ஆழத்தை நாம் உணர முடியும். 'இரும்புக்குதிரை' நமக்குச் சொல்லும் இறுதிப் பாடம் இதுதான்: குடும்பம் குறைபாடுகள் நிறைந்தது; ஆனால் அது இல்லாமல் மனித வாழ்க்கை முழுமையடையாது. குடும்பத்தின் குறைபாடுகளை ஏற்று, அதன் பூரணத்துவத்தை நோக்கிப் பயணிப்பதுதான் மனிதனின் பிறவிக் கடமை. அந்தப் பயணத்தில் ஏற்படும் துயரங்களும், சோதனைகளும், மகிழ்ச்சிகளும் தான் வாழ்க்கை. குடும்பம் அந்த வாழ்க்கையின் இரும்புக் குதிரை – கனமானது, உறுதியானது, சில வேளைகளில் சலனமற்றது; ஆனால் அதில் ஏறி அமர்ந்தால்தான் வாழ்க்கை என்ற பயணத்தை நிறைவு செய்ய முடியும்.

குறிப்புகள்

[1] என்றென்றும் அன்புடன். ப. 108.
[2] இரும்புக் குதிரைகள். ப. 324.
[3] கரு. முத்தையா, தொகுப்பாசிரியர். *ஜெயகாந்தன் நாவல்களின் பாத்திரப்படைப்பு*. ப. 19.
[4] கொன்றை வேந்தன். ப. 10.
[5] சீ. பக்தவத்சல பாரதி. *பண்பாட்டு மானிடவியல்*. ப. 340.
[6] சீ. பக்தவத்சல பாரதி. *பண்பாட்டு மானிடவியல்*. ப. 356.
[7] தா.ஏ.ஞானமூர்த்தி. *இலக்கியத் திறனாய்வியல்*. ப. 348.
[8] ம. சேராஜா. *பாலகுமாரன் நாவல்களில் பெண்மை கோட்பாடு*. ப. 56.
[9] Johnpaul, Pristchbord. *Criticism in America*. p. 164.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

மகாகவி பாரதியாரின் படைப்புகளில் பொருளாதாரச் சிந்தனை

முனைவர் பா. நேருஜி, உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-01.

ஆய்வுச்சுருக்கம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வெறும் தேசியக் கவிஞர் மட்டுமன்றி, சிறந்த சமுதாய மறுமலர்ச்சியாளராகவும், தொலைநோக்குப் பார்வை கொண்ட பொருளாதாரச் சிந்தனையாளராகவும் திகழ்ந்தவர். அந்நியர் ஆட்சியின் கீழ் பாரத தேசம் சந்தித்த வறுமை, பஞ்சம், கடுமையான வரி விதிப்பு மற்றும் பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றைக் கண்டு கொதித்தெழுந்த பாரதி, அதிலிருந்து விடுபடத் தொழில்துறை மேம்பாடும் தற்சார்புப் பொருளாதாரமும் இன்றியமையாதவை என வலியுறுத்தினார். இவ்வாய்வுக் கட்டுரை, பாரதியாரின் கவிதைகள் மற்றும் 'இந்தியா' இதழில் வெளியான அவரது கட்டுரைகளின் வழியே அவரது பொருளாதாரக் கோட்பாடுகளை ஆராய்கிறது. வறுமையை ஒழிக்க முதற்கண் கல்வி அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டும் பாரதி, நாட்டின் முதுகெலும்பான வேளாண்மையின் முக்கியத்துவத்தை "நெல் சாகுபடி" கட்டுரையின் வழியே அறிவியல் பூர்வமாக விளக்குகிறார். மேலும், நெசவுத் தொழிலின் நலிவு, கனிம வளங்களின் பயன்பாடு, "கூடித் தொழில் செய்" என்ற தொழில்துறை ஊக்குவிப்பு ஆகியவை பற்றி அவர் முன்வைத்த கருத்துகள் விரிவாக விவாதிக்கப்படுகின்றன. வ.உ.சிதம்பரனாரின் சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு பாரதி அளித்த ஆதரவும், நாட்டின் உள்கட்டமைப்பு, வணிகம் மற்றும் போக்குவரத்து அனைத்தும் உள்நாட்டினரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற 'தற்சார்பு வணிகக்' (Self-reliant trade) கோட்பாடும் கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஏழை-பணக்காரர் என்ற பாகுபாடற்ற சமத்துவச் சமுதாயத்தையும், சர்வதேச அளவிலான நேர்மையான வணிகத்தையும் கனவு கண்ட பாரதியின் பொருளாதாரத் தொலைநோக்குப் பார்வை இன்றைக்கும் வழிகாட்டியாக அமைவதை இவ்வாய்வு உறுதி செய்கிறது.

குறிப்புச்சொற்கள்: மகாகவி பாரதியார், பொருளாதாரச் சிந்தனை, தற்சார்புப் பொருளாதாரம், சுதேசி இயக்கம், வேளாண்மை, தொழில்துறை மேம்பாடு, புதிய ஆத்திசூடி.

முன்னுரை

தோன்றின் புகழோடு தோன்றுக என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப முண்டாசுக் கவியாத் தமிழகத்தில் தோன்றியவர் மகாகவி பாரதியார். தமிழுலகில் பல புதுமைகளை புகுத்திய பாரதியின் தோற்றம் தமிழன்னையின் தவப்பயனே ஆகும். பாரதி ஒரு வரலாற்றுப் பெட்டகம். கருத்துப் புதையல், மலை எனக் குவிக்கும் கவிதைக் குவியல் அக்குவியலில் சமூகம், இலக்கியம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, அரசியல், பொருளாதாரம், பெண் விடுதலை, கல்வி, வேளாண்மை, தொழில், அறம் உள்ளிட்ட பல்வேறு கூறுகள் இடம்பெற்று உலகத் தமிழர்களின் வாழ்வியல் களஞ்சியமாகத் திகழ்கிறது. நம் இந்திய நாட்டின் வளர்ச்சி பொருளாதாரத்தை மையமிட்டு அமைகிறது. ஒரு வீடும், நாடும் வளமும் நலமும் பெற வேண்டும் எனில் பொருளாதாரத் திட்டமிடல் என்பது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு இல்லை எனில் சமுதாயம் பெரும் சீரழிவை நோக்கியே செல்லும். பாரதி தனது படைப்புகளில் பாரதத் தாய்த்திருநாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மையப்படுத்திகிறார். தன் காலத்தில் நிலவிய பஞ்சம், கடுமையான வரி விதிப்பு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இவற்றுக்கு மாற்று வழியாக இருப்பது தொழில்துறை மேம்பாடு என்று கருதினார். அவரது படைப்புகளில் காணப்படும் பொருளாதார மேம்பாட்டு சிந்தனைகளை விளக்குவதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பாரதி காலத்துத் தமிழகம்

பாரதநாடு ஆங்கிலேயரின் அரசியல் சூழ்ச்சிகளுக்கு அடிமையாகிப் பொருளாதார சுரண்டலுக்கு இலக்காகிய நிலையில், பாரதி,

"தனி ஒருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்" என்றும் (பா.பாடல்.ப. 47)
"தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலைத் தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை" (பாரதி.பாடல்.ப. 47)

என்று வருந்திக் கூறும் கூற்றுகள் நமது இந்திய பொருளாதாரத்தின் நிலையை வெளிப்படுத்துகின்றன. இச்சீர்ழிவிலிருந்து நாம் மீட்டுருவாக்கம் பெற்றிடும் வகையில் மகாகவி பாரதியின் பாடல்கள் இனிமையான வாழ்க்கைக்குத் தேவையான பொருளதாரச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரம் மேம்பட அந்நாட்டு மக்கள் அறிவு பெற்றவர்களாக விளங்க வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பாரதியார்,

"கைப்பொருள் அற்றான் கற்பது எவ்வகை?
பொருளான் ஆன்றக் கல்வியும் வரவில் உணர்ந்த
கல்வியான் அன்றிப் பொருளும் வரவில் பாரதியார்
முதற்கண் கல்வியே பயிறல் முறைமையால்
அதற்குப் பொருளிலை ஆதலின் அடியேன்
வருந்தியே நின்பால் வந்த டைந்தனன்"[1] (பாரதி.சமூக.பொருளாதார.சிந்த.ப.21)

என்று பதிவு செய்துள்ளார். மேற்கண்ட பாடல் வரிகள் அக்காலக் கட்டத்தில் கல்வி கற்க விரும்பிய ஏழை எளிய மக்களுக்கு நேர்ந்த துயர நிலையை நமக்கு எடுத்துரைக்கின்றது. பாரதி தனி மனிதனுக்கு உணவு மட்டுமல்ல கல்வியும் இன்றியமையாதது என்பதை தனது கவிதை வரிகள் வழி பதிவு செய்கிறார்.

பொருளின் இலக்கணம்

பொருள் என்ற சொல், உயிரில் பொருள் சொல்லின் பொருள், செய்தி, உட்கருத்து, மதிப்புப் பண்டம் உள்ளிட்ட பல்வேறு கூறுகளைக் குறிக்கிறது. பொருளாதாரம் (Economics) என்பதற்கு "செல்வநிலை" என்று பாரதி குறிப்பிடுகிறார். பொருளாதாரம் பற்றிய சிந்தனைகள் மனிதன் தன் அன்றாட தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்ற பொருட்களைத் தேடிய தொன்மைக் காலத்திலேயே தோன்றிவிட்டன. ஒரு பொருளாதாரம் நீடித்தும் நிலைத்தும் இருப்பதற்கு நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு காரணிகள் அடிப்படையாக அமைகின்றன. தொழில்நுட்ப உற்பத்தியில் மாறுதல்கள் ஏற்பட ஏற்பட நுகர்பொருட்களுடைய உற்பத்தியும் பெருகின. பொருள் உற்பத்தி பெருகியதன் காரணமாகத் தற்போது 'உலக மயமாதல்' கொள்கை பொருளாதார தளத்தில் முன் நிறுத்தப்பட்டு உள்ளது. இதனை பாரதியார்,

"ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே புய
வீக்கத்தில் உயர் நோக்கத்திலே
காக்கத் திறல் கொண்ட மல்லர்தம் சேனைத்
கடலினிலே உயர் நாடு (பாரதி.ப.16)

என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

தொழில்துறைச் சிந்தனைகள்

கைத்தொழிலின் சிறப்பினையும் அதனை வளர்க்கும் முறைகளையும் பற்றி பாரதி தன் கவிதைகளில் கூறுகிறார். இந்தியா தொழில் துறையில் மேம்படுவதற்கு பல நாடுகளுடன் கொடுத்தும் கொண்டும் வணிகம் மேற்கொள்ள வேண்டும் என்கிறார் பாரதி.

"எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்" (பாரதி.கவிதை.ப. 18)
"கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும்
உண்மையான தேசபக்தரே யாவர்"[2] (பாரதி.தமிழ். ப. 145)

என்று குறிப்பிடும் பாரதி தம் படைப்புகளில் ஏராளமான இடங்களில் தம் தொழில்துறை சிந்தனைகளை வெளிப்படுத்தி இருக்கிறார். பாரதியின் தொழில்துறை சிந்தனைக்கான வித்தினை அவரது "புதிய ஆத்தி சூடியில்", **"கைத்தொழில் போற்று"[3] (பாரதியின்.ஆத்திச்சூடி. 21.ப. 434)** என்றும், **"கூடித் தொழில் செய்"[4] (பாரதி.ஆத்திச்சூடி.ப.434)** என்றும் பாடுவதால் அறியலாம். அவர் காலத்தில் 'பஞ்சம்' மிகுந்திருந்தது எனினும் பஞ்சத்தை காட்டிக்கொள்ளாமல் தமிழ்நாட்டில் செழிப்பை மட்டும் தம் பாடல்களில் பதிவு செய்திருக்கிறார்.

"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - யென
மேவிய யாறு பல வோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு" (பாரதி.கவிதை.ப.43)

என்ற பாடல் பாரதி தமிழகத்தின் செழிப்பினையே பெரிதும் விரும்புகிறார் என்பதை புலப்படுத்துகிறது.

வேளாண்மையின் முக்கியத்துவம்

வேளாண் தொழிலே இந்தியாவின் முதுகெலும்பு. மனித வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களுள் முதன்மையாக விளங்குவது உணவு ஆகும். உணவு பற்றாக்குறை நீங்க வேண்டுமெனில் வேளாண்மை வளம் பெற வேண்டும் நமது இந்திய வேளாண்மை எவ்வாறு வளர்ச்சிப் பெற வேண்டும் என்ற தனது கனவை பாரதி,

"நெல்சாகுப்படி" என்ற கட்டுரையில் எழுதுகையில் நோயில்லாத நாற்றுகளை 6 முதல் 9 அங்குல இடைவெளியில், நாற்றின் வேரை நிலத்திற்குள் பலமாக ஊன்றி நட வேண்டும் என்று எழுதியுள்ளார். இவ்வாறு வேளாண் தொழில் சிறப்படைய பாரதி வலியுறுத்திய கருத்துக்களும், இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மையை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற அறிக்கையும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. அதேநேரத்தில் கடந்த 15 முதல் 20 ஆண்டுகளாக வேளாண் விளை நிலங்களின் அளவு குறைந்து வருகிறது. இதை எச்சரிக்கும் விதமாக பாரதியார், வியாபாரம் செய்வதும் பெரிய இயந்திர சாலைகள் ஏற்படுத்தும் செயற்கை பொருட்களை விருத்திபடுத்துவதிலுமே கண்ணாய் இருக்கிறார்கள். அதனால் ஜனங்கள் தங்கள் கிராமங்களில் உள்ள பயிர்த்தொழில்களை கைவிட்டு பட்டணங்களில் வசிக்கின்றார். அதனால் விளைபொருள்கள் என்பதே அடியோடு போய்விட்டது "பொன்விளையும் நாட்டில் நமக்கு ஜீவனத்திற்கே அபாயம் என்றால் உலகம் சிரிக்கும் அல்லவா?"[5]

என்று வினா எழுப்பி நம்மை சிந்திக்கத் தூண்டுகிறார். மேற்கண்ட கூற்றினை ஆராயுங்கால், நம் இந்திய நாட்டைவிட செழிப்பான நாடு வேறு எதுவும் இல்லை என்பதும், அதனை மேன்மேலும் நாம் செழிப்படையச் செய்ய வேண்டுமே அன்றி உணவு பற்றாக்குறை, பசி, பட்டினி, பஞ்சம், வறுமை போன்ற சீரழிவுகளுக்கு ஆட்படாமல் இருக்க வேண்டும் என்றும் பாரதி எச்சரிக்கிறார். வேளாண் தொழில் செய்வோர் பெரும்பான்மையான அளவில் வாழும் இந்தியாவில் வேளாண்மையை புறத்தள்ளினால் சமூகத்தில் குற்றங்கள் மலிந்து அமைதி கெட்டுவிடும் என்று உளவியாளர்கள் இன்று சுட்டும் உண்மையை அன்றே பாரதியார் சுட்டிக்காட்டியுள்ளார். பாரதி வேளாண்மையை போற்றும் விதமாக,

"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்" (பாரதி.பாடல்.ப.17)
"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" (பாரதி.பா.ப. 59)

என்று குறிப்பிடுகிறார்.

நெசவுத்தொழில் நலிதல்

பாரதம் தேசம் தன்னில் கைத்தொழில்களில் நெசவுத்தொழில் முக்கிய இடத்தைப் பெறுகிறது இத்தொழிலை நம்பியே பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இங்கிலாந்து நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா அடிமையான பின்னர் இந்திய கைத்தொழில்கள் நலிவடைந்தன. இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக விளங்கிய நெசவுத்தொழில் நலிந்ததை பற்றி பொருளியல் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் எடுத்துரைத்து வந்தனர். கார்ல் மார்க்சு நெசவாளர்கள்படும் துயரினை அறிந்து நெஞ்சுருகினார். **"இந்தியாவின் சமவெளியைப் பருத்தி ஆடை நெய்யும் நெசவாளர்களின் எலும்புகள் வெளுக்கச் செய்தன"[6] (பாரதி.சமூக.பொருள.பக்.21),** என்ற கூற்று வெளிப்படுத்துகிறது. இந்நிலை பாரதியார் காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்தது. நெசவாளர்கள் பொருளாதாரத்தில் மேன்மை அடைந்து நிம்மதியான வாழ்க்கை வாழ வேண்டுமெனில், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும். மேல்நாட்டு விசைத்தறிகளால் ஏற்படும் போட்டியை வெல்வதற்கு இந்தியர்களுக்கு தொழில் திறமையும் கல்வியும் இருத்தல் அவசியம் என்று குறிப்பிட்டு, **"தொழில் முயல்வோர்க்கு சர். பிட்டி தியாகராயர் வழிகாட்டுகிறார்" (பா.ச.பொருளாதார.ப.48)[7],** என்று பாரதியார் குறிப்பிட்டுள்ள கருத்தாக்கம் நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் தீபமாக ஒளிர்வதை வெளிப்படுத்துகிறது. நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில்,

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்" (பாரதி.பா.ப. 18)

என்று நெசவாளர்களைப் போற்றுகிறார்.

தொழில் வளர்ச்சியில் இன்றியமையாமை

நமது இந்திய நாட்டின் உற்பத்தியை பெருக்குவதற்காக பல்வேறு தொழில்கள் செய்து சுயசார்பான பொருளாதாரத்திற்கு வழிவகுப்போம் என்றார் பாரதி. தொழில்கள் என்ற தலைப்பில் 'இந்தியா' பத்திரிகையில் 1910-ஆம் ஆண்டில் குறிப்பிட்ட கருத்துக்களும், சேலத்தில் கிடைக்கின்ற உயர்ந்த இரும்பு கனிமம் பற்றியும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற அலுமினியம், மங்கனீசு, துத்தநாகம், தங்கம், வைரம், செம்பு போன்ற உலோகங்களின் உற்பத்தி பற்றியும், கண்ணாடி, ஜிப்ரம், கருங்கல் போன்ற தொழில் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

"இரும்பை காய்ச்சி உரிக்கிடுவீரே!
யந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே (பாரதி.பா.ப.497)
திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானமெய்தி
வாழ்வ மிந்த நாட்டிலே" (பாரதி.பா.ப.57)

என்னும் பாடல்களில் பாரதியார் இந்தியாவில் பல்வேறு தொழில்கள் செய்யப்பட்டதையும் இந்தியாவின் கனிம வளம் பற்றியும் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு இத்தனை வளங்களும் நிரம்பிய நம் நாட்டில் நேர்மையான வழியில் தொழில்செய்து இவ்வுலகில் வாழ்வாங்கு வாழவும் அறிவுறுத்தப்படுகிறது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு ஆதரவு

02.08.1907 ஆம் ஆண்டில் 'இந்தியா' பத்திரிகையில் தூத்துக்குடி சுதேசிக் கப்பல் நிறுவனம் உருவாவது குறித்து வரவேற்றும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் (வ.உ.சி.) அவர்கள் எடுக்கும் பல்வேறு முயற்சிகள் பற்றியும் பாரதி பாராட்டியுள்ளார். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் சுதேசி கப்பல் போக்குவரத்துக் கழகம் பதிவு செய்யப்பட்டது. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கப்பல்கள் நடத்துவதற்கு ஐந்து லட்ச ரூபாய் மூலதனம் போதுமானது இந்த மூலதனத்துடன் கப்பல் நடத்தும் தொழிலில் சகல செலவும் நீங்க வருடம் ஒன்றுக்கு 10 லட்ச ரூபாய் லாபம் கிடைக்கத்தக்கதாய் உள்ளது இவ்வளவு பெரிய லாபத்தை கொடுக்கும் தொழில் வியாபாரம் வேறெதுவுமில்லை. இத்தகைய தொழிலை சென்ற பல வருடங்களாக அந்நிய நாட்டவர்கள் கைப்பற்றிக் கொண்டு அதில் கிடைக்கும் லாபத்தை சிறிதளவுகூட நம்மை அடையவிடாமல் நம் தேசத்தையும் குறிப்பாகத் தென்னாட்டையும் மிக்க வறுமைக்கு உட்படுத்திவிட்டார். நமது சுதேச மற்ற நாடுகளைப் பார்க்கிலும் உயரிய நிலைக்கு வருவதற்கு நாம் இவ்வுலகில் உள்ள துறைமுகங்களுக்கு நமது **"சுதேசிக் கப்பல் போக்குவரத்து இருக்கும்படி செய்வது அவசியமாகிறது" (பா.சமூக.பொ.பக்.62-63)**[8], என்று பாரதி குறிப்பிட்டுள்ளார். சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு பண உதவி தேவை என்பதை அறிந்த பாரதி பொதுமக்கள் தானாக முன்வந்து உதவிடுமாறு 'இந்தியா' ஏட்டில் கேட்டுக்கொள்கிறார் செல்வந்தர்கள் இந்த நிறுவனத்திற்கு உதவி செய்யாதவர்களாய் இருப்பதைக் கண்டு பாரதி விமர்சனம் செய்துள்ளமையைக் காணமுடிகிறது. **"ஏழைகள் அன்றாடம் நிறுவனம் செல்வோர், வக்கீல் குமாஸ்தாக்கள், சொற்பத் தொழிலாளிகள் ஆகிய நாம் எல்லோரும் சேர்ந்து இந்த பெரும் முயற்சி அழிந்துவிடாமல் காப்பாற்ற வேண்டும் நாம்தான் ஒரு ஊக்கமாக மறுபடியும் மூச்சைப் பிடித்துக் கொண்டு 'ஏலேலோ' பாடி கப்பலை மேலே அபிவிருத்தி அடையும்படி தள்ளவேண்டும்"** என்றும் தூத்துக்குடி கம்பெனி நமது முதல் பெரும் முயற்சி ஆகும். இதை கைவிட்டு விட்டால் நம்மை பிறகு உலகத்தில் யாருமே நம்பமாட்டார்கள். **"உலகத்தார் எல்லாம் சிரிப்பார்கள். நம்மை நாமே நம்பாத நிலைக்கு வந்து விடுவோம்"[9] (பா.சமூக.பொ.சிந்தனை.ப.64)** என்றும் பாரதி தமது கட்டுரையிலே சுதேசிக் கப்பல் போக்குவரத்து பற்றிய செய்திகளை பதிவு செய்து மக்களிடையே விழிப்புணர்வு அடையச் செய்து, இந்திய பொருளாதாரம் மேன்மை அடைய வழிவகை செய்தார்.

பாரதி கூறிய மேற்கண்ட கூற்றுக்களை நாம் சற்று சிந்தித்தால், நமது சமுதாயத்தில் செல்வம் படைத்தவர்கள் ஒரு பிரிவாகவும், ஏழை எளியவர்கள் ஒரு பிரிவினராகவும் இனம் பிரித்துக் காட்டியுள்ளமை வெளிப்பட்டுள்ளது. இந்தப் போக்கு இன்றளவும் மாற்றம் பெறாமல் நிலைபெற்று உள்ளதையும் காணமுடிகிறது. மேற்கண்ட பொருளாதார சிந்தனைகளுக்கு வலுசேர்க்கும் விதமாக பாரதி,

"வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் - அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம் ....
சிங்களத் திவிறுக்னோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" (பாரதி.பாடல்.17)

என்று பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்சார்பு வணிகம்

13.06.1908 ஆம் ஆண்டில் பாரதி இந்தியா ஏட்டில் எழுதிய கட்டுரையில் நாடு வணிகத்தில் தற்சார்பு நிலையை அடைய வேண்டும் என்பதற்காக கைத்தொழில்கள் ஏற்படுத்துதல் சில்லரை வியாபாரங்களை தேசமாக திருப்புதல் உள் நாட்டு வணிகர்களுக்கு அளித்தல் கைத்தொழில் உற்பத்தி மையங்களில் இருந்து வணிகம் செய்யும் இடங்களுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் போக்குவரத்து ஊர்திகள், **"கப்பல்கள் ஆகியவற்றை உள்நாட்டில் ஏற்று நடத்துதல்"[10] (பா. பொ.சிந்தனை.ப.66)** என்ற கருத்துக்களை முன்வைக்கிறார். இதன்

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

வழி நாம் அறியும் கருத்து யாதெனில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்ற போது எவ்வாறு, அந்நிய ஆதிக்க சக்திகள் பொருளாதார வளர்ச்சிக் காரணிகளை தங்களின் பிடிக்குள் கொண்டு வந்தனர் என்பதை உணர்ந்துதான் பாரதி உள்நாட்டுப் பொருள் உணர்ச்சியில் சில்லறை, வணிகம், உள்கட்டுமானம், போக்குவரத்து உட்பட அனைத்தும் இந்தியர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். இந்த தொலைநோக்குப் பார்வையே நம் நாட்டிற்கு நலம் பயப்பது என்பது திண்ணம் பாரதியின் இக்கூற்றுக்கு அரண் சேர்க்கும் வகையில்,

“முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பலநாட்டினர் வந்தே
நந்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே” (பாரதி.பா.ப.18)
“வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலும் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்” (பாரதி.பா.ப. 18)

என்ற பாடல்கள் அமைந்துள்ளன.

நிறைவுரை

பசி, பட்டினி, பஞ்சம், வறுமை போன்ற சீர்கேடுகள் ஏற்படாமல் நமது இந்தியப் பொருளாதாரம் அமைதல் சாலச் சிறந்தது என்ற பாரதியின் பொதுவுடைமை தொலைநோக்குப் பார்வை அவரது படைப்புகள் வழி வெளிப்படுகிறது. மக்கள் அனைவரும் அனைத்து வளங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும் என்ற பாரதியின் கனவு மெய்ப்பட வேண்டும். மேலை நாட்டின் தொடர்பு கொண்டு வணிகம் செய்வதில், நாம் உலக மக்களின் நம்பிக்கை பெற நேர்மையான முறையில் செயலாற்றிட வேண்டும். புதுமையான தொழில்கள் பல செய்து, நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும். பாரதியின் பெரு வேட்கை அவரது பாடல்களில் ஆங்காங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இருக்கக்கூடாது என்று பாரதி வலியுறுத்துகிறார் மேற்கண்டவாறு பாரதியார் தொலைநோக்குப் பார்வையுடன் கண்ட கனவை பொருளீட்டும் நெறிகளை யாவற்றையும் பின்பற்றினால் தமிழர்கள் இந்தியர்கள் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வது திண்ணம்.

குறிப்புகள்

[1] தூரன், பெ., பதிப்பாசிரியர். *பாரதி தமிழ்*. வானதி பதிப்பகம், ப. 145.
[2] நாகநாதன், மு., பேராசிரியர். *பாரதியாரின் சமூகப் பொருளாதார சிந்தனைகள்*. ப. 21.
[3] நாகநாதன், மு., பேராசிரியர். *பாரதியாரின் சமூகப் பொருளாதார சிந்தனைகள்*. ப. 42.
[4] நாகநாதன், மு., பேராசிரியர். *பாரதியாரின் சமூகப் பொருளாதார சிந்தனைகள்*. ப. 48.
[5] நாகநாதன், மு., பேராசிரியர். *பாரதியாரின் சமூகப் பொருளாதார சிந்தனைகள்*. ப. 66.
[6] *பாரதியார் கவிதைகள்*. கற்பகம் புத்தகாலயம், 2007.
[7] “பாரதியின் ஆத்திச்சூடி – 21.” *பாரதியார் கவிதைகள்*, கற்பகம் புத்தகாலயம், 2007, ப. 434.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சிலப்பதிகாரத்தில் பயண இலக்கியக் கூறுகள்

முனைவர் தி. பரிமளா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை- 625004, தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம்

உலக அளவில் இன்று சிறந்த துறையாக மாறி வருவது சுற்றுலாத்துறை. சுற்றுலா என்று பெயர் பெறுவதற்கு முன்பு பயண இலக்கியமாகப் பார்க்கப்பட்டது. பயண இலக்கியங்களின் முன்னோடியாக இருப்பது ஆற்றுப்படை நூல்களாகும். சங்க இலக்கியங்களில் திணை அடிப்படையிலா மக்களின் வாழ்க்கை, இடம்விட்டு இடம் பெயர்தல், இயற்கை வர்ணனை ஆகியவை பயணஇலக்கியத்தின் அடிப்படையாகும். ஆற்றுப்படை இலக்கியங்களில் புரவலர்களைத் தேடிச்செல்லும் கூத்தர், பாணர், பொருநர், விறலியரின் வழிநடைப்பயணம் பயணஇலக்கியமாகவேத் திகழ்கிறது. பயணஇலக்கியங்கள் பிற்கால இலக்கிய வகையாகச் சிறப்புப்பெற்றது. தமிழகத்தில் பயணஇலக்கியங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் ஏ.கே.செட்டியார் மற்றும் சோமலே ஆகியோராவர். இவர்கள் பயணஇலக்கியத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். பயண அனுபவங்கள் ஒருவரின் தனிப்பட்ட அனுபவங்களையும், அடுத்தவர்களுக்கு பயணத்தின் மீதான ஆர்வத்தையும் ஏற்படுத்துகிறது. புதிய இடங்கள், புவியியல் அமைப்பு, மக்களின் பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியவை பற்றிய தகவல்களையும் அளிக்கிறது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ஒரு தேர்ந்த பயணவாதியாக கோவலன் வழியாக வெளிப்படும் வழிநடைப்பயணச் செய்திகள் அனைத்தும் பயண இலக்கியமாகத் தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் பயணம் பற்றிய செய்திகளைக் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது

குறிப்புச்சொற்கள்: திணை, சுற்றுலா, ஆற்றுப்படை, கூத்தர், பாணர், சிலப்பதிகாரம்.

முன்னுரை

சிலப்பதிகாரம் பல்வேறு ஆய்வுகளை உள்ளடக்கியது. பல்வேறு ஆய்வுகளுக்குத் தேவைக்கான ஆய்வுக்களமாக இருப்பது. அந்தவகையில் பயணஇலக்கியத்தை மையப்படுத்தி செய்திகளைத் தரும் ஆய்வாகவும் அமைகிறது. பயணம் என்பது தனிமனிதனின் மகிழ்ச்சி, ஓய்வு, மற்றும் பெரிய வணிகத்தேவையின் அடிப்படையில் நடைபெறுவது. மக்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்காக தாங்கள் வசிக்கும் இடத்தை விட்டு வேறு இடங்களுக்குச் செல்வதை வாடிக்கையாக் கொண்டுள்ளனர். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும் பொழுது, அந்த இடத்தைப்பற்றிய செய்திகளைத்தருவது பயணஇலக்கியமாகும். சிலப்பதிகாரத்தில் கோவலன் வாயிலாக இளங்கோவடிகள் கூறும் செய்திகள் அனைத்தும் ஏற்கனவே பயணம் செய்த அனுபவத்தினைத் தருகிறது. நாம் இருக்கும் இடத்தை விட்டு வேறுநாடு, கடல், மலை என்று வர்ணிக்க வேண்டுமானால் ஏற்கனவே நன்கு பயணம் செய்து அறிந்த ஒருவரால் மட்டுமே முடியும். அதனை சிலம்பில் இளங்கோ செய்துள்ளார்.

பயணஇலக்கியம் (ஆற்றுப்படை) விளக்கம்

தமிழ் இலக்கியங்களில் ஆற்றுப்படை என்ற இலக்கியவகைமை உண்டு. ஆற்றுப்படை என்பதற்கு வழிகாட்டி என்பது பொருள். எட்டுத்தொகை இலக்கியமாகிய முல்லைப்பாட்டில் 'ஹ' ஆற்றுப்படுத்த என்னும் சொல்லிற்கு வழிப்படுத்தல் என்பது பொருளாகும். ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறம் தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம்பூரணர் "கூத்தராயினும் பாணராயினும் பொருநராயினும் விறலியாயினும் நெறியிடைக்காட்சிக் கண்யே எதிர்த்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளம் நுமக்கும் பெறலாகும் எனவும்,

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சொன்ன பக்கமும்" என்று கூறுகிறார். நச்சினார்க்கினியர் ஆடன் மாந்தரும், பாடற் பாணரும்,கருவிப் பொருணரும் இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலரும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர் வந்த பெண்பாலாகிய அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடு" என்று ஆற்றுப்படைக்கு விளக்கம் தருகிறார்.

சிலம்பில் பயணம் பற்றிய செய்திகள்

காப்பியங்களில் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன் வாயிலாக குறிப்பிடும் வர்ணனைகள் ஒரு நல்ல பயணஇலக்கியத்தின் எடுத்துக்காட்டாக அமைகிறது. சிலப்பதிகாரத்தில் பருவகாலங்கள் குறிக்கப்படுகிறது, குறிப்பிட்ட பருவ காலங்களில் மலரும் மலர்கள் பற்றி வர்ணிக்கப்படுகிறது. இன்றும் தமிழக மலைப்பிரதேசங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிமலர்களைப் பார்க்க செல்வதைக் குறிப்பிடலாம். சுற்றுலாத்துறை சிறக்க சுற்றுலாப்பகுதிகளைப் பார்வையிடும் விளக்கப்புத்தகம் தரப்படுகிறது. காலநிலைபற்றிய அறிவிப்பும் தரப்படுகிறது. கோவலன் கண்ணகியை சோழ நாட்டில் இருந்து அழைத்து வரும்பொழுது இயற்கையை அழகுற வர்ணிப்பதைக் காணலாம். கானல் வரிப்பாடல்களில் கடலும், குன்றக்குறவையில் மலைவளமும் விலங்குகள், பறவைகள், நீர்நிலைகள், மக்கள் வசிக்கும் இடங்கள், அங்கு நடைபெறும் நிகழ்வுகள் ஆகியவற்றைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. ஒரு தனிமனிதனின் பயண அனுபவ மறக்க முடியாததாக இருக்கும்.

பயண அனுபவம் தகவல் தொடர்பு, ஆழமான உள்ளூர் அறிவு, கதை சொல்லும் திறன், பொறுமை ஆகியவை மிக முக்கியமானதாகும். அந்த இடங்களுக்குப் பயணம் செய்வோர் வழிகாட்டி இல்லாமலேயே தாங்கள் பயணம் செய்வதற்கு ஏற்றவாறு இருக்கும். பயணம் பற்றியச் செய்திகளைச் சொல்வோர் தான் சென்ற இடங்களைத் தெளிவாகவும் எளிமையாகவும் புரியும் வகையில் அவர்கள் மொழியிலோ அல்லது சர்வதேச மொழியிலோ சரளமாகச் சொல்லும் திறன் கொண்டிருக்க வேண்டும். வரலாற்று உண்மைகளையும் பார்வையிடும் இடங்களைப்பற்றியச் சிறப்புகளையும் பேச்சுவாக்கில் சாதாரணமாகச் சொல்லாமல் அதனை மற்றவர்கள் ரசிக்கும் வகையில் சொல்லவேண்டும்.

சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கிச் செல்லும் பொழுது மலைவளம், நிலவளம், நீர்வளம் கண்டு சொல்வதும், காலநிலைகளை வர்ணிப்பதும் அதனை ஏற்கனவே கண்டிருந்த ஒரு பயணி போலவே இருக்கும். மலைவளம் – காடுகாண் காதையில் கண்ணகியும் கோவலனும் செல்லும் வழியில் மாங்காட்டு மறையோனைக் கண்டு யார்? எவர்? எனக் கேட்கும் பொழுது தனது ஆன்மீக வழிப்பயணத்தைக் கூறுகிறான். அவன் ஏற்கனவே மதுரைக்குச் சென்று வந்த அனுபவம் இருப்பதால்,

"மாமறை முதல்வ மதுரைச் செந்நெறி
கூறு நீயெனக் கோவலற் குரைக்கும்" (சில.வே.வரி)

மாங்காட்டு மறையோனிடம் கோவலன் மதுரைக்கு வழி கேட்கிறான். அம்மறையோனும் மதுரைக்குச் செல்வதற்கு மூன்று வழிகளைக் கூறுகிறார்.

"அறையும் பொறையும் ஆரிடை மயக்கமும்
நிறைநீர் வேலியும் முறைபடக் கிடந்திஇந்
நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத் தருநெறி (சில.வே.வரி)

கற்பாறையும் சிறுமலையும் அரிய வழிகளின் கலப்பும் நிறைந்த நீர்க்கு வேலியாகிய ஏரிக்கரையும் இந்த மிக நீண்ட சுர நெறியைக் கடந்து சென்று,

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

கொடும்பாளூரின்கண் நெடுங்குளக் கரைக்கு உள்ளாகப் புக்கால், முடியிடத்துப் பிறையாகிய கண்ணியைச் சூடிய பெரியோனாகிய இறைவன் ஏந்திய, முக்கூறாக அறுக்கப்பெற்ற சூலம்போல மூன்று வழிகள் பிரியும், என்று அவரும் ஒரு தேர்ந்த வழிகாட்டி போன்று மதுரைக்குச் செல்வதற்கு மூன்று வழிகள் இருப்பதைச் சொல்கிறார்.

ஒரு இடத்திலிருந்து மற்றொரு ஊருக்கு அதுவும் முன்பின் தெரியாத ஊருக்குச் செல்லும்பொழுது வழி, காலநிலை, தங்கும் இடங்கள், கிடைக்கும் உணவுகள், பாதுகாப்பு ஆகியவற்றை நன்கு தெரிந்து கொண்டே செல்லவேண்டும் என்பதற்கு இப்பகுதி உதாரணமாகும். கோவலனும் கண்ணகியும் சோழநாட்டைவிட்டு எதிர்பாராத விதமாக பயணம் செல்கின்றனர். அவர்கள் புறப்பட்ட காலம் நல்ல வேனிற்காலம். இந்த வேனில் காலத்தில், இக்காலத்தில் வரலாமா, என்று கேட்டு வெயிலின் கொடுமையைச் சொல்வதாக இப்பகுதி அமைகிறது. காடுகாண் காதையில், கண்ணகியும் கோவலனும் செல்லும் வழியில் உள்ள வறண்ட பாலைநிலத்தின் கொடுமையையும், அங்குள்ள மரங்கள், பறவைகள், விலங்குகள் வழியாக இயற்கை அழகையும்,

வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்
காலை எய்தினிர் காரிகை தன்னுடன்“ (சில.வே.வரி)

என்று பாலை நிலத்தின் கொடுமையை சிலப்பதிகார காடுகாண்காதை எடுத்துக்காட்டுகிறது. மதுரைக்குச் செல்லும் வழியில் வலது பக்கம் சென்றால் இருக்கக் கூடிய வெண்கடம்பு,ஓமை, வாகை,மூங்கில் புல், நீர் இல்லாதால் வறண்ட குளத்தில் காய்ந்து கிடக்கும் உன்னமரமும், நீர் இல்லாதால் மான்கள் நீர் வேட்கையினாலே சத்தமிடும், அருகில் பாலை நிலத்தில் வாழும் எயினர் ஊர் உள்ளது அவ்வழியாகவும் மதுரைக்குச் செல்லலாம். மதுரைக்குச் செல்லும் இன்னொரு வழி, மலைச்சாரல் வழி. இது நடுப்பகுதி, இதன்வழியாகச் சென்றால் ஐவனநெல் விளையும் மலைப்பகுதியில் இலையற்ற கணுக்களையுடைய கரும்பும், கொய்யும் பருவத்தில் விளைந்திருக்கும் தினையும் வரகும், வெள்ளைப்பூடு, மஞ்சள், வாழையும் கமுகும் தெங்கும், மா, பலாவும் இவை ஒன்றனை ஒன்று அடித்துச் சூழப் பெற்று உயர்ந்த, பாண்டியனுடைய சிறுமலை ,என்னும் பெயரினையுடைய மலை விளங்கித் தோன்றும், இடது பக்கமாகச் சென்றால் வண்டுகள் பாடும் பூக்கள் நிறைந்த குளங்களும் தாழ்ந்த வயல்களும் குளிர்ந்த பூஞ்சோலை, அருஞ்சுரங்கள் பலவும் இடைக்கிடந்த காட்டு நெறியையுங் கடந்து, அழகர் திருமலைக்கண் செல்குவீர்.

சோழ நாட்டில் இருந்து பாண்டிய நாட்டிற்கு வருவதற்கு கொடும்பாளூர் சாலை, சிறுமலை, மற்றும் காட்டுப்பகுதிகளும் இருந்ததை குறிப்பிடுகிறது. அழகர்கோவில் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது அப்பகுதியும் இதில் குறிப்பிடப்படுகிறது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் 41 அரசர்களைப் பெயர்களோடு குறிப்பிடுகிறார். இருபத்தி நான்கு நாடுகளைக் குறிப்பிடுகிறார். அவை அவந்தி, ஈழம், கலிங்கம், சூடகம், குண்டூர்க் கூற்றம், குணகாரை நாடு, குமரிநாடு, குறும்பனை நாடு, குன்றநாடு, கொங்கு, கொல்லம், சோணாடு, தெங்கநாடு, தென்பாலி, நாகநாடு, பாண்டிநாடு, பின்பாலைநாடு, மகதநாடு, மத்திபதேசம், முத்தூர்க்கூற்றம், மதுரைநாடு, முன்பாலைநாடு, வச்சிரநாடு. சிலம்பில் ‘இடும்பில், இரவிபுரம், இருந்தையூர், இலங்காபுரம், உஞ்சை (உச்சைனி), உறந்தை, கச்சி, கபாடபுரம், கபிலபுரம், காப்பியக்குடி, குணவாயில், கொடுக்கோடூர், கொடும்பாளூர், கொற்கை, சிங்கபுரம், செந்தில், சேடி, சோதகர், நய்கால், தலைச்செங்கோடு, திருவதந்தபுரம், திருவரங்கம், தொண்டி, நெடுங்குளம், நேரிலாயில், பட்டினப்பாக்கம், பறையூர், புனர்,

மங்காபுரம் (மங்களூர்), மதுரை, மருவூர்ப் பாக்கம், மாங்காடு, வஞ்சி, வயலூர், வாரணம் (வாரஞ்சி), வியலூர். மண்டிலம் -கொங்கு. என்று முப்பத்தியாறு ஊர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார்.

சிலம்பில் பயன்பாட்டில் இருந்த மலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அழகர்மலை, இமயம், ஏரகம், குடகுமலை, குமரிக் கோடு, கொல்லி, சிறுமலை, செங்குன்று, திருச்செங்கோடு, நீலகிரி, நெடு வேள் குன்றம், பெருமலை, பொதியில், மேரு, வெண்குன்று, வெள்ளியம் பெருமலை, வேங்கடம். என்று பதினாறு மலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. காடுகாண் காதையில் இளங்கோவடிகளால் கூறப்படும் இடங்கள் அனைத்தும் நேரில் பார்வையிட்ட வகையில் அமைந்திருக்கும். ஒரிடத்தை பார்வையிடாத ஒருவரால் இவ்வளவுத் தெளிவாகக் கூறஇயலாத வகையில் இவ்வர்ணனைகள் அமைந்துள்ள.

விருந்தோம்பல் பண்பு தமிழர் பண்பாட்டில் ஒன்று. இன்றைய காலகட்டத்தில் நாம் செல்லும் இடம் தங்கும் இடங்களில் உணவு எங்கு கிடைக்கும் , ஆரோக்கியமாக இருக்குமா என்று விசாரித்து விட்டு செல்வோம். மேலும் நாம் சுற்றுலா சென்றால் ஏற்கனவே நமக்கு ஒரு வழிகாட்டியை அமைத்துக்கொள்வோம். ஆனால் பெரும்பாலும் வழிகாட்டி இல்லாவிட்டாலும் நம்மால் ஏற்கனவே இருக்கும் அனுபவத்தின் அடிப்படையிலும் போகலாம். ஆற்றுப்படை இலக்கியங்களில் பல ஏற்கனவே சென்றவர்கள் புதிதாக வருபவர்களுக்கு வழிகாட்டுகின்றனர். நல்லியக்கோடனைக் காணச் சென்ற பாணர் குழுவினருக்கு உணவு கிடைக்கும் இடங்களையும் உணவுகளையும் பட்டியலிடுகிறது. "அகில் மர விறகினால் தீ மூட்டிக் காய்ச்சி அரித்த (வடிகட்டிய) தேறலை (கள்) மீனவப் பெண்கள் மீனவர்களுக்கு உணவாகக் கொடுப்பர். விறலியரோடு செல்லும் நீங்கள் கிடங்கில் கோமானை (நல்லியக்கோடனை)ப் பாடியும் குழல் ஓசைக்கு ஏற்ப ஆடியும் செல்லும் பொழுது அப்பரதவரின் வீடுகள் தோறும் அவர்கள் மகிழ்ந்து கொடுக்கும் குழல் மீன் சூட்டைப் (ஒரு வகை சுட்ட மீன்) பெற்று உண்டு மகிழலாம்" எனவும், முல்லை நிலப்பகுதி வழியாக, பகல் பொழுதில் சென்று கொண்டே இருந்தால் மாலைப் பொழுதில் வேலூரைச் சென்று அடையலாம். அங்கு, உள்ளேயிருப்போரை வருத்தும் வெப்பம் மிகுந்த குடிலில் (குடில் - வீடு) முல்லை நில மக்களாகிய எயினர்கள் இருப்பர். அக்குலத்துப் பெண்கள்(எயிற்றியர்) தாங்கள் சமைத்த மான் இறைச்சி கலந்த புளியஞ்சோற்றை வழங்குவர்கள். எனவும், உழவர்கள் வலிமையான எருதுகளை உடையவர்கள். உழத்தியர் தங்கள் இல்லத்தின் உள்ளே இருந்துகொண்டு தங்கள் மக்களால் அன்புடன் வரவேற்பர். மருத நில வாழ் மக்கள் விருந்து உபசரிப்பதில் தலைசிறந்தவர்கள். ஆதலால், உழத்தியர் வெண்மையான அரிசிச் சோற்றை நண்டின் கறியுடன் சேர்த்து விருந்து அளிப்பர். இச் சோற்றை உண்டு மகிழலாம்" எனவும், உணவு கிடைக்கும் இடங்களை சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.

பயணம் செல்வோர்க்கு மிகமுக்கியமானது தங்கும் இடவசதி. இன்றைய காலத்தில் எங்கு சென்று தங்க நேர்ந்தாலும் நாடுவிட்டு நாடு சென்றாலும் தங்குவதற்கான முன்பதிவை இருக்கும் இடத்தில் இருந்தே தேர்வு செய்து விடலாம். கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் என்று மூவர் மட்டுமே செல்கின்றனர். கவுந்தியடிகளும் அர்களுக்குத் துணையாக மட்டுமே வருகிறார். இந்நிலையில் வழிநடந்த வருத்தம் தீர மூவரும் கானகத்தில் உள்ள ஐயை கோ ாட்டம் அடைந்து இளைப்பாறுகின்றனர்.

மீதுசெல் வெங்கதிர் வெம்மையின் தொடங்கத்
'தீதியல் கானஞ் செலவு அரிது' என்று (சில.வே.வரி)

கவுந்தியடிகள் கோவலன் கண்ணையோடு குரவம், மா, கோங்கு, வேங்கை ஆகிய மரங்களுக்கிடையே இருந்த ஐயைகோட்டம் அடைந்து அங்கு இளைப்பாறுகின்றனர். ஐயைக் கோட்டத்தில் எயினர்கள் வழிபாடு நடத்தியதையும் காணுகின்றனர். வேட்டுவர் வாழ்க்கையை அவர்தம் வழிபாடுகளை அம்மக்களின் குடியிருப்புகளை, எண்ணங்களை

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

இவ்வளவுத்தெளிவாக இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார் என்றால் அவரின் பயண அனுபவங்களை வெளிப்படுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது. வழிநடைப்பயணம் செய்வோர் பெரும்பாலும் நடந்தே செல்வது அக்கால வழக்கம். பகலில் வெப்பம் அதிகமாகும் பொழுது எங்கேனும் தங்கி இளைப்பாறி வெயில் சாய்ந்ததும் மீண்டும் பயணத்தைத் தொடங்குவர். அதுபோல மூவரும் தங்கள் பயணத்தைத் தொடங்குகின்றனர். அவர்கள் தொடர்ந்து செல்லும் பாதையானது கொடிய விலங்குகள் நடமாடும் பகுதி. நீர்நிலைகளிலிலும் கொடிய முதலைகள் இருக்கும் என்பதை கவுந்தியடிகள் கூறுகிறார்.

"கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா
அரவும்,சூரும்,இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவருக்கு உறுகண் செய்யா" (சி.வே.வ)

பாண்டிய நாட்டில் இவை யாருக்கும் தீங்குகள் செய்யா என்றும் கூறுகிறார். பாண்டியநாடு அடைகின்றனர். பயணம் செய்பவர்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்லும் முறைகளில் ஒன்று போக்குவரத்திற்கு தான் எடுத்துக்கொண்ட முயற்சிகள். இன்று போக்குவரத்திற்கான சாதனங்கள் பல உண்டு. உலகத்தைச் சுற்றி வந்து விடலாம். அந்த அளவிற்கு விரைவு போக்குவரத்துகளும் நேரமேலாண்மையும் உண்டு. அதுபோல மதுரையை வந்தடைந்த கோவலனும் மற்றவர்களும் வைகையைப் பார்க்கின்றனர். நகரத்தை அடைவதற்கு வையையைக் கடக்க வேண்டியிருக்கிறது. வையை ஆறு கடல் போல் பரந்து விரிந்து செல்வதைப் பார்க்கின்றனர். வையையைக் கடப்பதற்கு மக்கள் என்ன செய்கின்றனர்.

"பரிமுக அம்பியும், கரிமுக அம்பியும்,
அரிமுக அம்பியும் அருந்துறை இயக்கும்
பெருந்துறை மருங்கின் பெயராது.ஆங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்,
தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி" (சி.பு.காதை)

வையையைக் கடக்க பலவிதமான படகுகளும் பரிசல்களும் இருக்கின்றது. என்பதை புறஞ்சேரி இருத்த காதை கூறுகிறது. ஆடம்பரமான படகுகள் மதுரை நகரை அடைந்து புறஞ்சிறை நோக்கிப் போகின்றனர்.

முடிவுரை

ஒருவர் தான் சென்ற இடங்களின் காட்சிகள், அங்கே சந்தித்த மனிதர்கள், அவர்களின் பண்பாடு, உணவு முறை மற்றும் தனது சொந்த அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் எழுத்து வடிவமே பயண இலக்கியம். பயணஇலக்கியம் ஒரு வரலாற்று ஆவணமாகத் திகழ வேண்டும். அதுபோல சிலப்பதிகாரம் நாற்பத்தியொரு அரசர்களைப் பற்றியும், இருபத்தியொரு றாடுகளைப்பற்றியும் அன்றைய தமிழகத்தில் இருந்த ஆறுகளைப்பற்றியும், ஐவகை நிலங்கள், காலநிலை, அங்கு வாழும் விலங்குகள், பறவைகள், மரங்கள், செடிகொடிகள், பூக்கள், நீர்நிலைகள் ஆகியவற்றை குறிப்பிடுகிறது. இளங்கோவடிகள் கற்பனையாக எழுதியிருக்க முடியாது. அந்தப்பாதையில் பயணம் செய்திருந்தால் மட்டுமே நிலப்பரப்பினைச் சரியாக ஞாபகமாக எழுதியிருக்கவேண்டும். பயணஇலக்கியம் வரலாற்று ஆவணமாக இருந்திருக்கிறது என்பதற்கு பிளைனி,பெரிபுளூஸ், யுவாங் சுவானின் இந்தியப்பயணம், இபின் பதூதா ஆகியாரின் பயணம் வரலாற்று ஆவணங்கள். அந்தவகையில் சிலப்பதிகாரம் தமிழகத்தின் நிலப்பரப்பினையும், அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் கொடும்பாளூர் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாகவும் சோழர்களின் பெயர் சொல்லும் ஆவணமாகவும் இன்றளவும் குறிப்பிடப்படுகிறது. மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கும் சிறுமலை இன்றளவும் வணகப்பயன்பாட்டில் உள்ள நகரம். அழகர்மலை

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

இன்றளவும் வைணவ சமயத்தாரின் புனிதத்தலமாக விளங்குகிறது. சிறப்புமிக்க பல இடங்கள் இன்று எவ்வாறு இருக்கிறது என்பதனை அறிந்து கொள்ள உதவுகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் பண்பாடு, நம்பிக்கைகள், மற்றும் கலைகளைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவுகிறது. இது உலகளாவிய சகோதரத்துவ உணர்வை வளர்க்கிறது . சிலம்பில் குரவைக்கூத்து, ஆய்ச்சியர் குரவை, இந்திரவிழா மற்றும் சிலம்பு குறிப்பிடும் கடவுளரின் கோயில்கள், வழிபாடுகள் காலம் கடந்து போற்றப்படுகின்றன. புவியியல் மற்றும் இயற்கை அறிவு தரும் வழிகாட்டிகளாக பயண இலக்கியங்கள் இருக்கின்றன. சிலம்பும் குறிப்பிட்ட நில்பரப்பு, புவிவியல் மற்றும் இயற்கை அறிவு தரும் வழிகாட்டிகளாக பயண இலக்கியங்கள் இருக்கின்னறன. குறிப்பிட்ட நிலப்பரப்பு, அங்குள்ள தட்பவெப்ப நிலை, தாவரங்கள், மற்றும் விலங்கினங்கள் பற்றிய தகவல்களை நேரில் கண்டது போன்ற உணர்வைத் தருகிறது. பயண வழிகாட்டியாகவும் சிலப்பதிகாரம் இருந்துள்ளது. ஒரு புதிய இடத்திற்குச் செல்ல விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு, அந்த இடத்தின் சிறப்புகள், அங்கு செல்ல வேண்டிய வழிமுறைகள் மற்றும் பார்க்க வேண்டிய இடங்கள் குறித்த வழிகாட்டியாகச் செயல்படுகிறது. புத்துணர்ச்சி மற்றும் கற்பனைத் திறன் வாசிப்பவருடைய மன அழுத்தத்தைக் குறைத்து, புதிய இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தையும், கற்பனைத் திறனையும் தூண்டுகிறது. அதுபோல தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரமும் பயண இலக்கியமாகத் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

குறிப்புகள்

[1] இளம்பூரணர், உரையாசிரியர். *தொல்காப்பியம்*. தமிழ்மண் பதிப்பகம், 2003.
[2] இளங்குமரன், இரா., உரையாசிரியர். *சிறுபாணாற்றுப்படை*. புரட்சிக்கவிஞர் மன்றம், 2023.
[3] நச்சினார்க்கினியர், உரையாசிரியர். *தொல்காப்பியம்*. திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2011.
[4] வேங்கிடசாமி நாட்டார், நா.மு., உரையாசிரியர். *சிலப்பதிகாரம்*. கௌரா பதிப்பு, சாரதா பதிப்பகம்.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சீனு. ராமசாமியின் ‘தயை’ கவிதைத் தொகுப்பின் கருத்தாடல்கள்

முனைவர் தி. பிருந்தா, நூலகர், தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை .

ஆய்வுச் சுருக்கம்

சமகாலத் தமிழ்க் கவிதை உலகில் தனித்துவமான குரலாக விளங்கும் சீனு. ராமசாமியின் ‘தயை’ கவிதைத் தொகுப்பை மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது. முதலில் படைப்பாளரின் இலக்கியப் பங்களிப்பு அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் சூழலியல், நினைவியல் மற்றும் தொன்மவியல் என்ற மூன்று ஆய்வுக் கோணங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இயற்கையை வெறும் காட்சிப் பொருளாக அல்லாது உயிர் சமத்துவம், கருணை, பகிர்வு, சுற்றுச்சூழல் அறம் ஆகியவற்றின் வெளிப்பாடாகக் கவிஞர் உருவாக்கியிருப்பது எடுத்துக்காட்டப்படுகிறது. மேலும் குழந்தைப்பருவ நினைவுகள், இழந்த காலத்தின் ஏக்கம், இடவியல் நினைவுகள் ஆகியவை நினைவியல் உத்திகளின் வழி எவ்வாறு கவிதையாக்கப்பட்டுள்ளன என்பதும் விளக்கப்படுகிறது. பூதகி, யூதாஸ் போன்ற தொன்மப் படிமங்கள் சமகால மனித வாழ்வின் நெறிசார் மற்றும் சமூக விமர்சனக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ள விதமும் ஆராயப்படுகிறது. மொத்தத்தில், தயை கவிதைத் தொகுப்பு சூழலியல் விழிப்புணர்வு மனிதநேயம், உயிர் அறம், மற்றும் பண்பாட்டு நினைவுகளை ஒருங்கிணைக்கும் குறிப்பிடத்தக்க சமகாலக் கவிதைத் தொகுப்பாக திகழ்வதை இக்கட்டுரை நிறுவுகிறது.

குறிப்புச் சொற்கள்: கவிஞர் சீனு ராமசாமி, தயை கவிதைத் தொகுப்பு, சூழலியல் சிந்தனைகள்.

முன்னுரை

திரைப்பட இயக்குநராகப் பரவலாக அறியப்படும் சீனு. ராமசாமி, கவிஞராகவும் தனித்துவமான படைப்புலகை உருவாக்கியுள்ளார். அவரது ‘தயை’ கவிதைத் தொகுப்பு இயற்கை, மனிதநேயம், நினைவு, தொன்மம், குழந்தைப்பருவ அனுபவம், சமூக விமர்சனம் போன்ற பல்வேறு கருத்தாடல்களை உள்ளடக்கியதாக அமைகிறது. குறிப்பாக இயற்கையை உயிர் அறத்தின் வெளிப்பாடாகவும், நினைவுகளை வாழ்வியல் அடையாளங்களாகவும், தொன்மங்களை சமகால மனித வாழ்வின் மறுவாசிப்பாகவும் பயன்படுத்தியிருப்பது இத்தொகுப்பின் சிறப்பாகும். எனவே, இக்கட்டுரை தயை கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் சூழலியல் சிந்தனைகள், நினைவியல் கூறுகள் மற்றும் தொன்மப் பயன்பாடுகளை ஆய்வுநோக்கில் ஆராய்கிறது.

கவிஞரின் கவிதை உள்ளம்

திரைப்படைப்பின் வழியாக மனித உறவுகளின் நுட்பமான உணர்வுகள், மண்வாசனை, வாழ்வியலின் எளிமை உள்ளிட்டவற்றைப் பதிவு செய்துவரும் படைப்பாளியான சீனு ராமசாமி, உணர்வுமிக்க கவிஞராகவும் தமிழிலக்கிய உலகில் தனித்த தடம் பதித்தும் வருகிறார். திரையில் காட்சிகளைக் கவிதையாய் வழங்கியவர், கவிதைக்குக் காட்சி வழங்கியும் தமிழ்ப் படைப்புலகில் மதிப்புறு இடம் வகிக்கிறார். சீனு ராமசாமியின் முதல் கவிதைத் தொகுப்பு ‘காற்றால் நடந்தேன்’ 2009-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதன் பின்னர் பதினான்கு கால நீண்ட அமைதியைக் கடந்து 2023-இல் ‘புகார்ப்பெட்டியின் மீது படுத்துறங்கும் பூனை’ கவிதைத் தொகுப்பு வாயிலாக கவிதைப் படைப்புலகில் பிரவேசித்தார். அந்த மறுவருகைக்குப் பிறகு அவரது படைப்பாக்கம் அசுரவேகம் பெற்றது. 2024, 2025, 2026 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தலா மூன்று கவிதைத் தொகுப்புகள் வெளியாகி சீனு ராமசாமி அவர்களின்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

படைப்பாற்றலின் செறிவையும், இடைவிடாத படைப்பூக்கத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. இவை படைப்புலகின் புதிய பரிணாமத்திற்குச் சான்றாகவும் சமகாலத் தமிழ்க் கவிதை உலகில் தொடர்ந்து இயங்கும் ஆற்றல்மிக்க படைப்பாளியாக அவரை அடையாளப்படுத்துவதாகவும் அமைகின்றன.

சூழலியல் சிந்தனைகள்

மண்ணில் விழுந்த விதையை மரமாக்கும் அன்னை இயற்கைக்கும், மனதில் விழுந்த எண்ணத்தைக் கவிதையாக்கும் கவிஞனுக்கும் இடையேயான பந்தம் பிரிக்கமுடியாதது. "சூழலியல் என்பது தங்கள் சுற்றுப்புறத்தோடு உயிரினங்களுக்கு உள்ள உறவு பற்றிய ஆய்வு மட்டும்தானா? அதுமட்டுமன்று. சூழலியல் உயிரியலின் ஒரு பிரிவாக மட்டும் விளங்கவில்லை. இது இயற்கை, அறிவியல், சமூக அறிவியல், தத்துவ இயல் ஆகியவற்றை இணைத்து இயற்கையை முழுமையாகப் புரிந்து கொள்ள முனைகிறது. எல்லா உயிர்களும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தன்மைதான் சூழலியலின் அடிப்படையாகும்" (பூவுலகின் நண்பர்கள், சூழலியல் ஓர் அறிமுகம், ப.7). அவ்வகையில், இயற்கையின் பரஸ்பரத் துணைநிலையை 'கருணையின் வடிவம்' என்னும் கவிதையில் வெளிப்படுத்துகிறார். வறட்சியிலும் உயிர்வாழும் சப்பாத்திக் கள்ளி, மருத்துவப் பயனுடைய பிரண்டைக் கொடிக்கு ஆதரவு தரும் (முதுகு தந்து) கருணை உணர்ச்சிக் காட்சியை,

"செங்காட்டுப் பிரண்டை கொடிக்கு
முதுகுதரும் சப்பாத்திக் கள்ளி
கெட்டுப் போகவில்லை
துவையலுக்கு பிரண்டை
தேடி வரும் சிறுவனுக்கு
அவனது இடைநேரப் பசிக்கு
பழுத்திருக்கும் இலந்தையின்
நிழலில்
மஞ்சள் முகமாக பூத்திருக்கிறது" (ப.18)

என்னும் கவிதைவழி சிறுவனுக்கு இலந்தைப் பழமும், பிரண்டைக்குக் கள்ளியும் தரும் இடையறாத கருணையை அறியமுடிகிறது. 'கருணை' என்னும் தலைப்பிலான மற்றொரு கவிதையில், குளம் ஆடு குடிப்பதற்கு நீர் கொடுக்கும் காட்சியில் இயற்கையின் பரிவைக் காட்டுகிறார். ஆடு நீரைக் குடித்தபின்பும் நீரும் குறையவில்லை; கருணையும் குறையவில்லை.

"பொறுமையாக வயிற்றுக்கு
நீரருந்திவிட்டு
மீண்டும்
தலைதூக்கிப் பார்த்து
மந்தையை நோக்கி
மேய்ச்சல் ஆடு போயினும்
குளத்தில்
கருணையின் அளவு குறையாமல்
நிறைந்திருந்தது" (ப.20)

என்னும் கவிதையின் வழியாக இயற்கையின் கருணை அளவற்றது; தன்னலமற்றது; எல்லோருக்கும் பொதுவானது என்பதை காட்டுகிறார். உயிரின் மூலாதாரமான நீர்ப்பெருக்கால் நிலமும் உயிர்களும் வலிகளும் மனித அனுபவங்களும் என உயிரியல் மகிமையை 'நீர்ப்பெருக்கின் மகிமை' (ப.21) என்னும் கவிதையில் பதிவு செய்கிறார்.

'தயை' என்னும் கவிதை (ப.26) இயற்கைச் சூழலும் மனித வாழ்வும் பின்னிப் பிணைந்திருக்கும் தருணத்தைச் சித்திரிக்கிறது. மழை, மின்னல், மலை, விலங்குகள் முதலிய

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

காட்சிப் படிமத்தை உருவாக்கும் கவிஞர், மரங்கள் மனிதர்களைப் போல் கருணையுடன் காப்பதை, 'கிளைக்கரம் நீட்டி நிற்கின்றன' எனும் சொல்லாட்சியின்வழி மனிதரூபப் பாவனை செய்கிறார். வானம், மேகம், அத்துவானம் மூன்றும் இணைந்த அழகான திறந்த உலகில் பொன்வண்டுக்கு இருந்த அளவற்ற சுதந்திரமானது தீப்பெட்டிக்குள் வைத்ததன் மூலம் முடிவுக்கு வருகிறது. சுதந்திரம் பறிக்கப்பட்ட குரல்களின் ஒலியாய் 'பொன்வண்டின் சிறை' என்னும் பின்வரும் கவிதை ஒலிக்கிறது.

"வானம் இருந்தது
மேகம் இருந்தது
அத்துவானம் இருந்தது
எதையும் பார்க்கவிடாமல்
தீப்பெட்டிக்குள் கொண்டுவந்த
பொன்வண்டின் நெருக்கடியை
எவரும் சொல்லவில்லை
ஒரு கவிதையிலும்" (ப.33)

சுற்றுச்சூழல் அழிவு, மனிதப் பேராசை, இயற்கையின் நினைவு, குற்றவுணர்வு ஆகிய கருத்துகளை 'மணல் லாரி' என்னும் கவிதை சமூக – சுற்றுச்சூழல் விமர்சனத்தை ஏழே வரிகளில் கவிஞர் வலுவாக முன்வைக்கிறார். பேராசை கொண்ட கொண்ட மனிதனின் சட்ட விரோதமாக மணல் அள்ளும் செயலால் ஊரணியின் அழிவுச் சீர்கேடு 'கொலை'க்குச் சமமாக வர்ணிக்கப்படுவதை,

"முன்பொரு சித்திரை மாதத்தில்
மணல் அள்ளிய லாரி
நிறைந்த ஊரணியில்
குற்றவுணர்வோடு குளிக்கிறது மார்கழியில்,
கத்திகளுக்கு குற்றவுணர்வு தேவையற்றது
கொலைகாரன் எங்கே
எனத் தேடுகிறது ஊரணி" (ப.53)

என்னும் கவிதை வரிகளில் அறியமுடிகிறது. மணல் அள்ளிய லாரிக்குக் குற்றவுணர்வு ஏற்படும்போது, உண்மையான குற்றவாளியான மனிதனை இயற்கை தேடுகிறது. இதன் மூலம், இயற்கை அழிவை 'கொலை' எனக் கருதி, மனிதன் தனது செயல்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற சுற்றுச்சூழல் குறித்த சிந்தனையை இக்கவிதை வெளிப்படுத்துகிறது.

சீனு ராமசாமி கவிதைகளில் இயற்கை வெறும் காட்சிப் பொருளாகவோ, அழகியல் பின்னணியாகவோ மட்டும் அமையவில்லை. மனித வாழ்வின் பிரிக்க முடியாத அங்கமாகவும், உயிர்களின் சமத்துவத்தை வலியுறுத்தும் அறவியல் வெளியாகவும், சமூக அநீதியை வெளிப்படுத்தும் குறியீட்டு வெளியாகவும் இயற்கை உருப்பெறுகிறது. மலை, காடு, ஊரணி, மரம், மழை, பறவை, விலங்கு, பூச்சி என இயற்கையின் அனைத்துக் கூறுகளும் அவரது கவிதைகளில் உயிருள்ள பாத்திரங்களாக இயங்குகின்றன. இவரது சூழலியல் பார்வை மனித மையச் சிந்தனையை மறுத்து, உயிர் மையச் சிந்தனையை முன்னிறுத்துகிறது. கருணை, நீர்ப்பெருக்கின் மகிமை, பொன்வண்டின் சிறை, மணல் லாரி, தயை போன்ற பல்வேறு கவிதைகள்வழி இதனை அறியமுடிகிறது.

இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை கவிஞர் நேரடியாக முன்வைக்கவில்லை. இயற்கையை மனித வாழ்வின் உள்ளாந்த பகுதியாக உணரச் செய்வதன்வழி கவிஞர் வெற்றி பெறுகிறார்.

நினைவியல் மற்றும் குழந்தைப்பருவம்

நிறைந்துள்ள நினைவுகளும் அதனை அசைபோடுவதும் மனித வாழ்வின் இயல்பு.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

கடந்துபோன காலம் வெறும் நினைவுத் திரளாகக் கவிஞர் சீனு ராமசாமியின் கவிதைகளில் உயிர்பெறுகிறது. கவிஞர், கடந்தகால அனுபவத்தை நினைவுகூரும் பாணியில் நினைவியல் நடையில் பல்வேறு கவிதைகளைப் படைத்துள்ளார். தன் சொந்தக்கால நினைவுகள், இளமைப் பருவம் அல்லது இழந்த காலத்தின் மீதுள்ள ஏக்கத்தைக் கவிதைகளில் வெளிப்படுத்துதல் 'அக நினைவூட்டல்' எனும் நினைவியல் உத்தியாகும்.

செக்காணத்துச் சிற்றோடை என்னும் குழந்தைப்பருவ இடவியல் நினைவுகளுடன் கூடிய 'உயிர்' கவிதை, கூடல் மாநகர் மதுரையின் இடவியல் பின்னணியில் 'சாய்புமாமா' கவிதை, 'ஒரு தலை பஃபூன்', 'தோழியின் கதை', 'சங்கரியின் மரம்', 'பள்ளிக்கூடத்தின் நிழல்', 'கடைசி இருக்கை' உள்ளிட்ட பல்வேறு கவிதைகளைக் குறிப்பிடலாம். 'ஒரு தலை பஃபூன்' கவிதையில் நினைவு, நாடகக்கலை மற்றும் காலத்தின் மாறுபாடு ஆகியவற்றைப் 'பழைய' என்ற சொல்லை மீண்டும் மீண்டும் வருமாறு படைத்து நினைவியல் நடையில் அமைத்துள்ளார். மறைந்து போன ஒரு தோழியின் வாழ்க்கைச் சுவடுகளை மிக எளிய காட்சிகளின் வழியாகக் கவிஞர் 'தோழியின் கதை' கவிதையில் நினைவில் மீட்டெடுக்கிறார். பள்ளிக்காலத் தோழி ஒருவர் திடீரென வாழ்க்கையில் இருந்து மறைந்து போகிறாள். மழை, ஆவாரம்பூ, மஞ்சள் பூத்த காடு, தோழியின் முகம், அவள் பேசவில்லை என்ற உணர்ச்சி வெற்றிடம் என மௌனத்தில் நிற்கும் நினைவுகள் மழை துரத்தி வருவதைப் போல மனதை நினைவுகள் துரத்தி வருவதை,

"பின்னாட்களில்
நானும் காணவே இல்லை
இதுவரை வாழ்வில்
துரத்திவந்து பொழிந்த மழையை" (ப.28)

என்னும் கடைசி வரிகளின் வழி அறியமுடிகிறது. குழந்தைப் பருவ விளையாட்டு நினைவின் வழியாக இழப்பு, தேடல், நினைவு, இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு ஆகியவற்றை வெளிப்படுத்தும் கவிதையாக, குழந்தைப்பருவ நினைவின் மீள்பதிவாக 'சங்கரியின் மரம்' கவிதை அமைந்துள்ளது.

"அந்த சங்கரியை
இன்றுவரை தேடிக் கொண்டிருக்கிறோம்
இங்கிருப்பதாகக் காட்டிக் கொடுக்காத
ஒரு பெருமரத்தின் பின்னால்
இவ்வுலகில்
எங்கோ ஒளிந்திருக்கிறாள் சிவசங்கரி' (ப.29)

என்னும் இக்கவிதையை சி.மோகனுக்கு சமர்ப்பித்தும் உள்ளார் கவிஞர். குழந்தைகள் ஒளிந்துபிடித்து விளையாடும் விளையாட்டைப் பற்றியது போலத் தோன்றினாலும், அதன் பின்னணியில் உணர்ச்சி அடுக்குகள் மறைந்திருக்கின்றன. மரம் வடிவில் இயற்கையானது குழந்தைகள் விளையாட்டில் பங்கேற்கின்றன. சங்கரி என்னும் மறைந்த தோழியும் இழந்த குழந்தைப் பருவமும் மீண்டும் கிடைக்காத காலமும் நினைவின் உருவத்துள் பொதிந்துள்ளதைக் காணமுடிகிறது. குழந்தைப்பருவ அனுபவம், சமூகச் சூழல், பாலியல் உணர்வு உருவாக்கம், பெண் உணர்வு, மனிதநேயம் எனப் பல அடுக்குகளைத் தாங்கிய சிந்தனைக் கவிதையாகும். நிழல் என்பது அனுபவங்கள் நீண்டகாலம் நிலைத்து நிற்பதைக் குறிக்கிறது. திரைப்பட ஊடக மொழியின் தாக்கம், குழந்தை மனத்தின் அறியாமையால் பள்ளிக்குள் வரும்பொழுது, வன்முறை மொழியையும் வார்த்தையின் அர்த்தத்தினை முழுமையாகக் கூட அறியாமல் ஆணாதிக்க மொழியில் பேசிவிட்டாலும்கூட, சித்ரா என்னும் பெண் அன்புடன் உணர்வு பகிர்ந்து கொண்ட மனிதநேயம் அவனை மாற்றும் முரண்பாடு கவிதையின் கருத்தை வலுப்படுத்துகிறது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தொன்மம்

தொன்மத்தை ஆங்கிலத்தில் 'மித்' என்ற சொல்லால் குறிப்பிடுவர். மித் என்ற சொல் உண்மையான அல்லது கற்பனையான கதை அல்லது உட்கரு எனப் பொருள்படும். புராணக்கூறுகளின் வாயிலாக தொன்மம் கட்டமைக்கப்படுகிறது. தமிழில் தொன்மக் களங்கள் விரிந்து கிடக்கின்றன. "சமூக வாழ்வில் பிறப்பால் சாதியுணர்வைக் கற்பிக்கவும், வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் ஏற்றம் தந்து தமிழை இராண்டாமிடம் பெறும் மொழியாக கற்பித்த புராணங்கள் மனிதர் வாழ்வில் சோம்பேரித்தனத்தையும் நம்பிக்கையற்றத்தனத்தையும் உருவாக்க துணை போகின்றன என்ற குற்றச்சாட்டு பகுத்தறிவாளர்களால் முன் வைக்கப்பட்டது. இதை உண்மையில்லை என்று நிரூபிக்க முடியாத அளவிற்கு திருவிளையாடல் புராணத்தில் 'ஆசிரியரின் மனைவியை விரும்பிய மாணவன் அங்கம் வெட்டிய பின்பும் மோட்சம் தருவது (அங்கம் வெட்டின படலம்), தாயைப் புணர்ந்தவனுக்கு இறைவனே நேரே வந்து மோட்சம் தருதல் (மாபாதகந் தீர்த்த படலம்). இவ்விரண்டு கதைகளிலும் அந்தணர் ஓ அந்தணர் அல்லாதோர் என்ற முரண் முன் நிறுத்தப்பட்டு அந்தணர்க்குத் தண்டனையில்லாத மோட்சமும், அந்தணர் அல்லாதார்க்குத் தண்டனையோடு கூடிய மோட்சமும் வழங்கப்படுவதைக் கண்ட உள்ளுணர்வு, தொன்மம் ஆராய்ச்சிக்கு வித்திட்டதாகத் தமிழண்னல் குறிப்பிடுகிறார். (கதிர். மகாதேவன், தொன்மம், அணிந்துரை) வேடம் பூண்டு குழந்தை கிருஷ்ணனைக் கொலை செய்ய முயற்சி செய்த பூதகி தொன்மம் 'பூதகியின் கதை' கவிதையில் இடம்பெற்றுள்ளது.

"தெய்வத்தைக் கொல்வதற்கு
ஒருவள்
அதுவும் தாயாக
வந்திருக்கிறாள்" (ப.59)

என்ற வரிகள் தாய்மையின் மரபு உருவகத்தை மாற்றுகின்றன. பாதுகாப்பு அளிக்கும் தாய் அபாயமாகவும், உயிர்தரும் பால் விஷமாக இருக்கிறது என்னும் முரண்பாடு பெண்களின் இரட்டை உருவகத்தைத் தொன்மம் வழியே காட்டுகிறது. பெண்களைப் பற்றிய எதிர்மறை உருவங்கள் தொன்மத்தில் உருவாவதும், அவை மத உரைகள் வழியே பரவுவதும், பெண்களே அவற்றை ஏற்றுக் கொள்வதுமான பெண்களின் சமூக உருவாக்கத்தை விமர்சனமாக இக்கவிதை ஆராய்கிறது.

'தீராக்கணக்கு' என்னும் கவிதையில் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் பற்றிய விவிலியத் தொன்மம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கவிதையில் மனிதன் சக மனிதனுக்குத் துரோகம் செய்வது வரலாற்றில் தொடங்கி இன்றுவரை தீராக்கணக்காகத் தொடர்வதாகக் குறிப்பிடுகிறார். 'நம்மோடு பிசைந்து உண்டவன்' என்ற உருவகத்தின்வழி உறவின் நெருக்கததைக் காட்டுகிறார். அந்நியன் செய்த துரோகம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது; ஆனால் நெருங்கியவன் திட்டமிட்டுக் காத்திருந்து நேரம்பார்த்துச் செய்த துரோகத்தின் வேதனையை இக்கவிதையில் வடிக்கிறார். 'யூத நிலத்து யோகி' என இயேசுவைக் குறிக்கிறார். யூதாஸ் என்னும் சீடன் காட்டிக் கொடுத்ததும் 'வெறும் முப்பது காசுகள்' என்ற வரி, இயேசுவைக் காட்டிக் கொடுக்க யூதாஸ் பெற்ற முப்பது வெள்ளிக்காசுகள் சம்பவத்தைக் குறிக்கிறது.

"இப் பிரபஞ்சத்தில்
காட்டிக் கொடுப்போரின்
முதல் சம்பளம்
முப்பது காசில்
தொடங்கியிருக்கிறது" (ப.34)

என்ற வரிகள் கவிதைக்கு உச்சமாக அமைகின்றன.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

முடிவுரை

சீனு ராமசாமியின் தயை கவிதைத்;தொகுப்பில் சூழலியல் சிந்தனைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மட்டுமல்லாது உயிர் அறம், கருணை மற்றும் பகிர்வு ஆகிய உயரிய வாழ்வியல் மதிப்புகளையும் முன்னிறுத்துகின்றன. நினைவியல் கூறுகள் தனிமனித வாழ்வனுபவங்களை சமூக நினைவுகளாக மாற்றுகின்றன. தொன்மங்கள் சமகால வாழ்வியலை விமர்சிக்கும் புதிய பொருள் வெளிகளை உருவாக்குகின்றன. எளிய மொழி, ஆழமான படிமங்கள் மற்றும் பலஅடுக்குப் பொருள் அமைப்புகள் மூலம் கவிஞர் தனித்துவமான கவிதை உலகை உருவாக்கியுள்ளார் என்றவகையில், தயை கவிதைத் தொகுப்பு சமகாலத் தமிழ்க் கவிதையின் முக்கியமான படைப்பு என்பதை அறியமுடிகிறது.

குறிப்புகள்

[1] சீனு ராமசாமி, தயை, வேரல் புக்ஸ், சென்னை. ஜனவரி, 2026.
[2] பூவுலகின் நண்பர்கள், சூழலியல் ஓர் அறிமுகம், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை. மூன்றாம் பதிப்பு, 1994.
[3] கதிர். மகாதேவன், தொன்மம், செல்லப்பா பதிப்பகம், 2008.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

திருக்குறளில் செயற்கை நுண்ணறிவு

முனைவர் அ. மரிய செசிலி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஏஏ பொறியியல் கல்லூரி, திசையன்விளை.

ஆய்வுச்சுருக்கம்

செயற்கை நுண்ணறிவு மனித அறிவை போன்ற திறன்களை கொண்ட தொழில் நுட்பமாக வேகமாக வளர்ந்து வருகிறது. திருவள்ளுவர் காலத்தில் செயற்கை நுண்ணறிவு இல்லாவிடினும் அவர் கூறிய அறம், அறிவு, பகுத்தறிவு, ஒழுக்கம், கல்வி, சமூகப்பொறுப்பு தலைமைத்துவம் போன்ற சிந்தனைகள் இன்றைய செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

குறிப்புச்சொற்கள்: திருக்குறள், திருவள்ளுவர், செயற்கை நுண்ணறிவு, அநநெறி, பகுத்தறிவு, மனிதநேயம்.

முன்னுரை

திருக்குறள், சமயக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு உலக முழுமைக்கும் ஒத்துவரக்கூடிய வாழ்க்கை வழிகாட்டி. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலை நினைந்தூட்டும் நூற்பெட்டகம். 'திருக்குறள் சுரங்கம் வற்றாதது" என்று கனிந்துரைத்தவர் தமிழ் முனிவர் திரு.வி.க திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சிகள் புதுமைப்போர்வையில் இனி வெளிவருவது நல்லது என்று தெரிவித்திருக்கிறார். 'திருக்குறளில் செயற்கை நுண்ணறிவு" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுநோக்கம்

குறள்களில் உள்ள அறநெறிச்சிந்தனைகளை நவீன செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டுடன் ஒப்பிட்டு ஆராய்தல்.

ஆய்வு முறை

விளக்கவியல் மற்றும் ஒப்பீட்டு ஆய்வுமுறை.

அறிவுடைமையும் செயற்கை நுண்ணறிவும்

21ம் நூற்றாண்டில் மிக முக்கியமான தொழில்நுட்ப முன்னேற்றங்களில் ஒன்றாக செயற்கை நுண்ணறிவு முன்னேற்றங்களில் ஒன்றாக செயற்கை நுண்ணறிவு விளங்கிறது. மனிதன் சிந்தனை, கற்றல், முடிவெடுத்தல் போன்ற அறிவுச் செயல்பாடுகளை கணிணி அமைப்புகள் மேற்கொள்ளும் திறனாக செயற்கை நுண்ணறிவு குறிப்பிடப்படுகிறது. இதன் வளர்ச்சி கல்வி, மருத்துவம், வங்கி, வேளாண்மை, ஊடகம், மொழிபெயர்ப்பு போன்ற பலதுறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கியுள்ளது. எனினும் செயற்கை நுண்ணறிவு வழங்கும் தகவல்கள் எப்போதும் நம்பத்தகுந்தவை என்று எந்நேரத்திலும் ஏற்க முடியாது. அதனால், திருவள்ளுவர் வலியுறுத்துவது போல,

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள் 423)

என்ற குறள் செயற்கை நுண்ணறிவு சூழலிலும் பொருந்துகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு AI வழங்கும் பதில்களை மனிதன் தனது அறிவு, அனுபவம் மூலம் சரிபார்த்து பயன்படுத்த வேண்டும்.

'அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்" (குறள் 421)

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்ற குறளில், திருவள்ளுவர் அழிவுநேராமல் ஒருவரின் அறிவை மேம்படுத்தும் துணைக்கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு கற்பித்தல், மாணவர்களுக்குள் கற்றலில், ஆராய்ச்சியாளர்களுக்குத் தகவல் தேடலில் AI பெரும் கருவியாக இருக்கிறது. ஆனால் இறுதி முடிவெடுக்கும் பொறுப்பு மனிதனிடமே இருக்க வேண்டும் என்பது இக்குறளின் (குறள் 423) உண்மையான நோக்கத்துடன் ஒத்துப்பொகிறது. எனவே திருக்குறளின் அறிவுடைமைச்சிந்தனை (Critical Thinking), தகவல் மதிப்பீடு (Information Evaluation) ஆகியவற்றின் பயனை வலியுறுத்தும் தத்துவ அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே திருக்குறள் நவீன செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டிற்கு வழிகாட்டும் விதமாக செயல்படுகிறது என்பதை தெளிவாக அறியலாம்.

அறநெறியும் செயற்கை நுண்ணறிவும்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடைவதுடன் அறநெறிச் சவால்களையும் உருவாக்கிறது. தகவல்களின் நம்பகத்தன்மை, தனியுரிமை, தரவுப்பாகுபாடு, மனிதஉரிமை, பொறுப்புணர்வு, வெளிப்படைத்தன்மை போன்றவை உலகளவில் விவாதிக்கப்படுகின்றன. திருக்குறளின் அறநெறி சிந்தனைகள் மனித வாழ்வின் அடிப்படை மதிப்புகளான அறிவு, நீதி, அறம், பொறுப்புணர்வு ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. திருக்குறளில் செயற்கை நுண்ணிறிவு பற்றி நேரக்குறிப்புகள் இல்லாவிடினும் அதில் இடம்பெறும் வாழ்வியல் சிந்தனைகள் இன்றைய AI அறநெறிகளுடன் கருத்தியல் முறையில் ஒப்பிடத்தக்கவை. எனவே திருக்குறளை தொழில்நுட்ப நூலாகக் கருதாமல் செயற்கை நுண்ணறிவின் அறநெறிக்கும் பொறுப்பான பயன்பாட்டிற்கும் வழிகாட்டும் தத்துவ நூலாக அணுகுவது சிறப்பானதாக இருக்கும்.

கல்வியும் செயற்கை நுண்ணறிவும்

திருவள்ளுவர் அழியாச்செல்வமாம் கல்வியை உயர்ந்த செல்வமாக கருதுகிறார்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." (குறள் 391)

என்ற குறள் கல்வியின் நோக்கத்தைச் சுட்டுகிறது. இக்காலத்தில் ஆசிரியர்கள், முனைவர்கள், ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து புதிய அறிவையும், திறன்களையும் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. AI மனிதக் கற்றலுக்கு மாற்றாக அல்ல. மனிதக்கற்றலை மேம்படுத்தும் கருவியாக பயன்படுத்த வேண்டும். இவ்வாறு திருக்குறள் கற்பிக்கும் கல்விச்சிந்தனை நவீன AI சார்ந்த கல்வி முறைகளுடன் இயல்பாக ஒத்துப்போகிறது. மாணவர்கள் சிந்தனை, தரவு மதிப்பீடு, தகவல் பயன்பாடு போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் உருவாகிறது. ஆராய்ச்சியாளர்களும் தரவின் நம்பகத்தன்மை மற்றும் பாகுபாட்டை மனதில் கொண்டு செயல்பட வேண்டியுள்ளது. இதன்மூலம் திருக்குறளின் கல்வி குறித்த சிந்தனைகள் AI காலத்தில் நெறிப்படுத்தப்பட்ட கற்றலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, பராம்பரியச் சிந்தனை மற்றும் நவீன தொழில்நுட்பம் ஒருங்கிணையும் வழியை வெளிப்படுத்துகிறது.

வினைசெயல் வகையும் செயற்கை நுண்ணறிவும்

செயற்கை நுண்ணறிவின் வழியாக, சிறந்த இயந்திரங்களை உருவாக்கி, அவற்றைத் தன் இயக்கம் உடையதாக்கி பலமுறை ஒரே செயலைச் செம்மையுடன் செய்ய வைக்கமுடியும். செயல்திறனில் தர உயர்வு, நேரக்குறைவு, உற்பத்தி செலவீனங்களைக் குறைத்தல், உற்பத்தி அதிகாரி முதலிய நன்மைகள் கிடைக்கும். செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள், தானே தகவல்களைப் பகுப்பாய்வு செய்து முன்னர் நடந்தவற்றை ஆய்ந்தறிந்து சிறந்ததை வழங்கும்.

“செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்" (குறள், 677)

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

செயல்களை வெற்றிகரமாக செய்து முடிக்க சிறந்த வழி முன்னர் செய்தவர்களின் நடைமுறைகளை உள்வாங்கி அதன் பின் செய்தலாகும் என்கிறார் வள்ளுவர். இதுவே செயற்கை நுண்ணறிவுத்தன்மை வாய்ந்த இயந்திரங்களின் நடைமுறையாகக் கொள்ளப்படுகிறதுஇ கற்றலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்து தனித்தனியே ஒவ்வொரு மாணவனையும் அருகில் அமர்த்தி செய்முறை சார்ந்த திறன்மிக்கக் கல்வியை வழங்க முடியும்.

செயற்கை நுண்ணறிவுக் கருவிகளின் செயல்பாடுகள்

மனிதர்கள் பயன்படுத்திய இயற்திரங்களை அவனால் இயக்கப்படும் மற்றும் நிறுத்தப்படும் தன்மை கொண்டவை. மனிதனின் இயக்கம் தொடங்கி வைத்த பிறகு, இயக்கம் குயிப்பிட்ட கால அளவு தானாக கருவிகள் முடித்து வைக்கப்படும் கருவிகள் அடுத்த நிலையில் தோன்றியன. தற்போது தானாகவே செயல்களை ஆற்றி, தானே நிறுத்திக்கொள்ளும் நிலையில் கருவிகள் வந்துவிட்டன. மனிதர்கள் இயக்கப்படுவது கருவி. தானே இயங்குவது செயற்கை நுண்ணறிவுக்கருவி. வள்ளுவர் கருவிகளின் இயல்பை செயற்கை நுண்ணறிவியலுக்கு ஏற்ப விளக்குகிறார்.

'அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்" (குறள் 483)

என்ற குறளில் கருவியைக் காலத்திற்கு ஏற்பர் செயல்படுத்தினால் வினைகர் எளியiவாக அமையும் என்கிறார் வள்ளுவர். மருத்துவம், பயிரியல், சுரங்க ஆய்வு, விண்வெளி ஆய்வு போன்றவந்நில் தற்போது செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் அதிய அளவில் பயன்படுத்தப்படுகின்றன. காலம் அறிந்த கருவிகளை உருவாக்கும் துறையாக செயற்கை நுண்ணறிவுத்துறை விளங்கிறது.

எண்ணிச்செயல்படுதலும் செயற்கை நுண்ணறிவும்

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு" (குறள் 467)

திருக்குறள் ஒவ்வொரு செயலையும் அதன் விளைவுகளையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது. செயற்கை நுண்ணறிவிலும் முடிவேடுக்குமுன் தரவின் தரம், துல்லியம், சமூக விளைவுகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே சிறப்பான செயலாகும் என்பது புலனாகிறது.

தலைமைத்துவமும் செயற்கை நுண்ணறிவும்

அக்காலத்தில் அரசனே நிர்வாகியானவும் (Executive) நீதி வழங்குபவனாகவும் (judge) செயல்பட்டான். உலகம் முழுவதும் இந்நடைமுறையே இருந்தது. தமிழ்நாட்டிலும் இம்முறையே இருந்தது என்பதை மனுநீதிச்சோழன், கொற்கைப்பாண்டியன், சிலப்பதிகார நெடுஞ்செழியன் முதலானோர் வரலாறுகள் உறுதி செய்கின்றன. செங்கோல் அரசனுக்கு நீதி அழகு (சிறுபஞ்சமூலம் 5) அரசனுக்கு அழகு மக்களின் பாராட்டு (முதுமொழிக்காஞ்சி 10) குற்றங்களுக்காக அஞ்சுவதே அரச நேர்மை (நீதிநெறி விளக்கம் 31)

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை (குறள் 541)

யாரிடத்திலும் ஆராய்ந்து கண்டோட்டம் செய்யாமல் நடுவுநிலைமையுடன் பொருந்தி, ஆராய்ந்து செய்வதே தலைமைப்பிண்புடைய வேந்தனுக்கு நீதிமுறையாகும். AI எந்த நபரையும் பாலினம், மொழி, இனம், சமுகப்பின்னணி போன்ற காரணங்களால் பாகுபடுத்தாமல் செயல்பட வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

'அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடையது அரசு." (குறள்: 384)

ஆட்சிமுறைக்கு உரிய அறத்தில் தவறாமல் அறமல்லாதவற்றை நீக்கி, வீரத்தில் குறைபடாத மானத்தை உடையவனே சிறற்ற அரசன் என குறள் விளக்குகிறது. AI

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

உருவாக்கும் நிறுவனங்களும், அதை ஒழுங்குபடுத்தும் அரசுகளும், அறநெறி, பொறுப்புணர்வு, பொதுநலன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தலாம்.

பொச்சாவாமையும் செயற்கை நுண்ணறிவும்

மறவாமை எனும் கருவி கொண்டு போற்றிச் செய்தால், செய்வதற்கு அரியதென்று எதுவுமில்லை என பொருள் கொள்கிறார் மு.வரதராசனார். பொச்சவாத கருவி என்பதற்கு இடைவிடாத நிகழ்ச்சி, தப்பாத சூழ்ச்சியும் உடைய கருவி என்று விளக்கமளிக்கிறார் பரிமேலழகர். ஒரே பணியைச் செய்வதில் சலிப்படையாமல் ஒரே நேர்த்தியுடன் திரும்பத்திரும்பச் செய்யும் பண்பு செயற்கை நுண்ணறிவு சார்ந்த கருவிக்கு உண்டு. இதனையே இடைவிடாத நிகழ்ச்சி செயல்பாடு என்று கொள்ளலாம். இச்செயல்பாடு செயற்கை நுண்ணறிவு கொண்ட கருவிகளின் அடிப்படைச் செயல்திறம் ஆகும்.

தற்காலப் பயன்பாட்டில் திருக்குறள் செயற்கை நுண்ணறிவு

திருக்குறள் நூலிற்குச் செயற்கை நுண்ணறிவின் வழியாக பல நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன. திருச்குறளைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு நோக்கும் இணையதளமும் உருவாக்கப் பெற்றுள்ளது. www. Thirukural.ai என்ற இணையதளத்தில் திருக்குறள் குறித்த எக்கேள்விக்கும் விடைதரப்பெறுகிறது. வேள்விக்கேற்ற பதிலைச் சொல்வதுடன் அதற்கான திருக்குறள்களும் அங்கு எடுத்தாளப் பெறுகின்றன. திருக்குறளைப் பகுப்பாய்வு செய்தல், உலகளாவிய பார்வைக்கத் திருக்குறளை முன்னிறுத்தல் அன்றாட வாழ்க்கைக்குத் திருக்குறள் கொண்டு வழிகாட்டல் போன்ற நோக்கங்களிலும் இத்தளம் செயல்பட வாய்ப்புக்களைத் தருகிறது என்பது வெள்ளிடைமலை.

செயற்கை நுண்ணறிவின் நெறிமுறைகளும் ஆபத்துகளும்

செயற்கை நுண்ணறிவு தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது கட்டுப்பாடற்ற ஆயுதமாக மாறினாலோ மனித குலத்திற்கே ஆபத்தாக முடியும். தொழில் நுட்பத்தின் வளர்ச்சி எப்போதும் நல்வழியில் இருக்க வேண்டும் என்பதை அறன் வலியுறுத்தல் நமக்குக் கற்பிக்கிறது.

'அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" (குறள் 32)

அறத்தை விட நன்மை தருவது வேறோன்றுமில்லை. அந்த அறத்தை மறப்பதை விட வாழ்க்கைக்கு கேடு விளைப்பது வேறொன்றும் இல்லை. தொழில்நுட்பத்தை உருவாக்கும் நிறுவனங்களும் விஞ்ஞானிகளும் மனிதநேயம் மற்றும் அறநெறிகளின் அடிப்படையிலேயே அதை வடிவமைக்க வேண்டும். தவறான பயன்பாடு பேரழியை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையை இக்குறள் நமக்கு நினைவூட்டுகிறது.

செயற்கை அறிவும் இயற்கை அறிவும்

மனிதன் எவ்வளவுதான் நவீன இயந்திரங்களை உருவாக்கினாலும், இயற்கையான மனிதப்பண்புகளும் மனிதாபிமானமுமே முதன்மையானவை என்பதை வள்ளுவர் உணர்த்துகிறார்.

“செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்" (குறள் 637)

ஒரு செயலை செய்வதற்குரிய செயற்கையான நூல்களைக் கற்றறிந்த போதிலும் உலகநடைமுறையோடு ஒத்துப்போகும் இயற்கை அறிவை அறிந்து செயல்பட வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் திறமையாக ஒரு காரியத்தைச் செய்தாலும் உலகியல் நெறிமுறைகளையும், மனித உணர்வுகளையும் கடந்து அதனால் தன்னிச்சையாக செயல்பட முடியாது. இயந்திய அறிவாம் செயற்கை நுண்ணறிவு மனித நேயத்திற்கு உட்பட்டால்தான் மானுடம் சிறக்கும் என்பது வெள்ளிடைமலை.

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

முடிவுரை

செயற்கை நுண்ணறிவு என்பது மனித மூளையினால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை அறிவு மட்டுமே. அது மனிதனை நல்வழிப்படுத்தும் கருவியாக இருக்க வேண்டுமே தவிர மனிதனை அடிமையாக்கும் சக்தியாக மாறக் கூடாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறள் உரைத்த பகுத்தறிலும், மெய்ப்பொருள் காணும் தன்மையும் உலகியல் அறிவும் தான் இன்றைய செயற்கை நுண்ணறிவைச் மிகச்சிறப்பான முறையில் வழிநடத்துவதற்கான 'அறநெறி வழிகாட்டி" என்பதை இவ்வாய்வுக்கட்டுரையின் மூலம் தெளிவாகப் புலப்படுகிறது.

குறிப்புகள்

[1] அறவாணன், க.ப. அற இலக்கியக் களஞ்சியம். தமிழ்க் கோட்டம்.
[2] இளங்குமரனார், இரா. வள்ளுவத் தோன்றல்களே! வாருங்கள். திருவள்ளுவர் தவச்சாலை.
[3] நாராயணசாமி, ஜெ. திருக்குறள். சுரா பதிப்பகம்.
[4] பாலகிருஷ்ணன், எம். திருக்குறளில் தொழிலக மேலாண்மை. பழனியப்பா பிரதர்ஸ்.
[5] வரதராசனார், உரையாசிரியர். திருக்குறள். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
[6] யோகிராஜ், வேதாந்திரி. திருக்குறள் உட்பொருள் விளக்கம். உலக சமுதாய சேவாசங்கம், வேதாத்திரி பதிப்பகம்.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சங்க அகப்பாடல்களில் ஆளுமைப் பண்பு

முனைவர் சு. மலர்விழி, உதவிப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை – 01.

முன்னுரை

சங்க இலக்கிய அகத்திணை மாந்தர்களுள் தோழிக்குத் தனிச்சிறப்பு உண்டு. தோழியே கதையின் நகர்வை தீர்மானிக்கும் முதன்மைப் பாத்திரம். தலைவன் தலைவி இருவருக்கும் பாலமாக இருக்கிறாள். களவு, கற்பு ஆகிய இரு நிலைகளிலும் தலைவிக்குத் துணையாக நிற்கும் அன்புள்ளம் கொண்டவள். தலைவன் தலைவியின் காதலை அறநெறி தவறாமல் திருமணத்தில் முடித்து வைக்கும் ஆற்றல்மிக்க ஆளுமையாகத் தோழி விளங்குகிறாள். தனது தனித்த பண்புகளால் தலைவியின் வாழ்க்கையினை மேன்மை அடையச் செய்பவள் தோழி. அவ்வகையில் தோழியின் ஆளுமைப்பண்பில் உயர்ந்து நிற்பதை விளக்குகிறது.

ஆளுமை

ஆங்கிலத்தில் 'Personality'என்னும் சொல்லே தமிழில் ஆளுமை என்ற பொருளைக் குறிக்கின்றது. ஒரு மனிதரின் தனித்தன்மை ஒருவரை அவர் நிலையில் இருக்கச் செய்யும் பண்புகள் என்னும் பொருளில் அமைந்துள்ளது. உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த இயங்கியல் பண்புகளும் அவை தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளையும் குறிக்கிறது.

சங்க இலக்கியத்தில் ஆளுமைத்திறன்

அகம், புறம் என மக்களின் வாழ்க்கையைப் பகுத்துக் கூறிய சங்க காலத்தில் பண்டைத் தமிழர்கள் சிறந்த ஆளுமைத்திறன் உள்ளவர்களாக வாழ்ந்துள்ளனர். களவு, கற்பு முதலியவற்றை எடுத்துக் கூறும் அக இலக்கியங்களில் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் போன்றோர்கள் அன்பின் வழியில் தனித்தன்மைகளுடன் தன்னியல்பில் மாறா பண்புகளுடனும் வாழ்ந்துள்ளனர். வீரம், கல்வி, கொடை, வெற்றி, போர் முதலியவற்றை எடுத்துக்கூறும் புற இலக்கியங்களில் அரசன், அமைச்சர், புலவர் என அனைவரும் தனித்திறன் வாய்ந்தவர்களாக வாழ்ந்து மக்களை நன்கு வழி நடத்தியுள்ளனர்.

தோழியின் இயல்புகள்

தோழி என்பவள் செவிலியின் மகள் என்பதை, "தோழி தானே செவிலி மகளே" (தொல்.பொருள்- 123) என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். தோழியின் வாழ்வு பற்றிய செய்திகள் சங்கப்பாடலில் காணப்படவில்லை. ஆயினும் அவளுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு முந்தைய தலைமுறையில் ஏற்பட்டதாகும் என்பதை சங்கப்பாடல்கள் வழி அறியமுடிகிறது. தோழி தலைவியோடு ஒத்த வயதுடையவள் உடன் வளர்ந்து விளையாடிப் பழகி அவளை விட்டுப் பிரியாதவள். உணர்வாள் தலைவியோடு ஒன்றியவளாக இருப்பாள். மேலும் தோழி உணர்ச்சிவசப்படாமல் எந்தச் சூழ்நிலையிலும் அறிவுப்பூர்வமாகச் சிந்திக்கும் திறன் படைத்தவள். இரகசியங்களைக் காக்கும் குணம் கொண்டவள். தலைவியின் களவு ஒழுக்கத்தை உரிய நேரம் வரும் வரை பிறர் அறியாமல் காக்கும் மனவலிமை உடையவள். நெறி தவறாத ஒழுக்கமும், நேர்மையும் கொண்டவள்.

தொல்காப்பியர் களவியலில், தோழி எந்தெந்த களங்களில் பேசலாம் (கூற்று நிகழ்த்தலாம்) என்பதற்கான இலக்கணத்தை வகுத்துள்ளார்.

"நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்பவினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி வெளிப்பாடு உள்ளறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை" (தொல்காப்பியம் – களவியல் – 24)

தலைவியின் உடலில் தோன்றும் புதிய நறுமணம் (தலைவன் தந்த மலர்களால் வருவது). தலைவியின் அழகிலும் உடல் பொலிவிலும் ஏற்படும் மாற்றம். தோழிகளுடன்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

விளையாடுவதைத் தவிர்த்துவிட்டுத் தனிமையை விரும்புதல். உணவின் மீது விருப்பமில்லாமை அல்லது குறைவாக உண்ணுதல். தன் செயல்களைப் பிறர் அறியாவண்ணம் மறைத்தல் ஆகிய ஐந்து மாற்றங்களையும் கவனித்து, தலைவியின் காதலை முதலில் கண்டறிபவள் தோழி. அதுமட்டுமன்றி, தலைவனிடம் பேசவும், அவனை கண்டிக்கவும், நற்றாய்க்கு உண்மையை உணர்த்தவும் தோழிக்கு மட்டுமே இலக்கணத்தில் முழு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. அக இலக்கியத்தில் தலைவனை எதிர்த்துப் பேசும் தகுதி தோழிக்கு மட்டுமே உண்டு. தலைவன் எவ்வளவு பெரிய அரச குலத்தவனாக இருந்தாலும், தலைவியைப் பார்க்க இரவில் வரும் போது அவனைக் கண்டிப்பாள். நீ இரவில் வருவதால் காட்டு விலங்குகளால் ஆபத்து நேரலாம். அதுமட்டுமன்றி, ஊரார் பழி தூற்றுவர். எனவே முறைப்படி மணம் முடித்துக் கொண்டு போ என்று கட்டளையிடும் ஆளுமை அவளுடையது.

தோழிக்குரிய மரபு

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்
சொலத்தகு கிளவி தோழிக்குரிய (தொல்.பொருள் – 155)

இதற்கு ஒப்பாக,

“அலந்தாரை யல்லல் நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்” (குறள் -1303)

என்ற வள்ளுவரின் இக்குறளை ஒப்பிடலாம். அதாவது தம்மோடு வருத்தம் கொண்டு பிணங்கிய வரை ஊடலுக்குணர்த்தி தழுவாமல் விடுதல் துன்பத்தால் வருந்தியவரை மேலும் துன்ப நோய் செய்து வருவது போன்றதாகும். அதுபோல் தலைவன், தலைவி இருவரும் நன்மை விளையாது இருவருக்கும் இடையில் ஊடல் தீர்க்க அழும் பொருட்டுத் தோழி செயல்படுகிறாள் என்பதை இந்நூற்பாவின் மூலும் அறியலாம்.

தோழியின் அறிவாற்றல்

தலைவியின் திருமணம் நடப்பதற்கு முன்பு அவள் மணம் ஆகாதவளே. ஆயினும் அவளே தலைவியின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைக்கிறாள். ஏறத்தாழ தலைவியின் வயதுடையவளாயினும் அவள் முதிர்ந்த அறிவுடையவள். அவள் நடுவு நிலைமையும் மன உறுதியும் அருளும் உடையவள். தலைவனுக்கு நிலையாமையை உணர்த்தி பொருள் மட்டுமே வாழ்க்கை அல்ல என்பதை உணர்த்துகிறாள் தோழி. இதனை,

“வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கனை நிழலிற் கழியுமிவ் வுலகத்துக்
காணீர் என்றலோ அரிதே யதுநனி
பேணீர் ஆகுவீர் ஐய” (நற்.46)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

தலைவியை ஆற்றுவிப்பவள் தோழி

தலைவன் போரின் பொருட்டும் , பொருள் தேடும் பொருட்டும், பரத்தையின் பொருட்டும் அடிக்கடி தலைவியைப் பிரிந்து செல்வான். அப்பொழுது தலைவி தலைவனின் பிரிவுத்துயரைத் தாங்காது உடல் மெலிந்து காணப்படுவாள். இந்நிலையில் தோழி தலைவிக்கு ஆறுதல் மொழிகள் கூறி அவளைத் தேற்றுவதாக பல பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. தலைவன் பரத்தையிடம் செல்ல, தலைவி கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது தோழி புள்ளிகளை உடைய நண்டானது நீரிலுள்ள ஆம்பல் தண்டினை அறுக்கும். அதுபோல தலைவனும் பரத்தையிடம் கொண்டிருக்கும் தொடர்பை அறுத்து உன்னைப் பிரியாமல் எப்பொழுதும் உன்னுடனேயே இருப்பான் எனக் கூறி தலைவியை ஆற்றுவித்தாள் என்பதை, “புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்” (ஐங் 21) என்னும் ஐங்குறுநூற்று வரிகள் விளக்குகின்றன. மாலைப் பொழுதைக் கண்டு மயங்கிய தலைவியை நோக்கி தோழி நீ வருந்தாதே, அற்புதமான தன்மையுடைய மாலைப் பொழுதில் மாவலிச்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சக்கரவர்த்தி நீர் வார்த்துக் கொடுக்க, அதனை ஏற்று எல்லா உலகங்களையும் அறிந்து கொண்ட தலைவன் உனக்கு அருள் செய்யாதிருப்பானோ? அருள் செய்வான் எனக்கூறி ஆற்றினாள். இதனை, "நீரேற்றளந்த நெடிய பிரானரு ளாவிடுமே" என்ற திருவாய்மொழி பாடல் அடி விளக்குகிறது.

அறத்தோடு நிற்றல்

சங்க அகப்பாடல்களில் தோழியின் படைப்பாக்கத்தின் சிறப்பாகப் பிற மாந்தர்களுகக்கு இல்லாத தனித்தனிமையாக விளங்குவது அறத்தோடு நிற்கும் பண்பாகும். தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகினர். களவொழுக்கத்தில் தந்தை, தனயர் முதலானோர் திருமணத்திற்கு மறுப்புக் கூறிய நிலையில் தோழி அறத்தொடு நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறாள். அதனால் தலைவியின் காதலை அவளது பெற்றோரிடமும், செவிலியரிடமும் பக்குவமாய் எடுத்துக் கூறி அவள் விரும்பிய தலைவனையே மணம் முடிக்கச் செய்வதில் தோழியின் ஆளுமைப் பண்பு வெளிப்படுகின்றது. இதனை,

"வாங்கு அமைமென் தோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள் வர்த் தொழுது எழலால் தாம் ஐயரும்
தாம்பிழையார் தாம் தொடுத்த தோல் எனவாங்கு
அறத்தொடு நின்றேனக் கண்டு திறம்பட
என்னையர்க்கு உயர்ந்து உரைத்தாள். யாய்
அவரும் தெரிகணை நோக்கிச் சிலை நோக்கிக் கண்சேத்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந்து ஆறி
இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்ந்தார் தலை" (கலி. 39)

என்ற கலித்தொகைப் பாடலில் தோழி செவிலியிடம் அறத்தொடு நின்று தலைவி – தலைவன் இடையேயான காதலை மிகவும் நயமாக எடுத்துரைக்கும் திறத்தை அறியலாம். மேலும்,

"அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே;
இன்னும் பாடுகபாட்டே அவர்
நன்நெடுங் குன்றம் பாடியபாட்டே" (குறு.23)

என்ற குறுந்தொகைப்பாடல் மூலம் கட்டுவிச்சியைத் தலைவனின் நெடுங்குன்றத்தைப் பாடச் சொல்வதன் மூலம் தலைவன் பால் தலைவி கொண்டிருந்த காதலை எடுத்துரைக்கும் தோழியின் ஆளுமை வெளிப்படுகின்றது.

தலைவி - தோழி நட்பு

தலைவியுடன் நிழல் போல் வாழ்பவள் தோழியே. தலைவியின் தாய் தோழியை "என் குறுமகள்" (நற் - 61) என்று உரிமையுடனும், தலைவியை பிரியாது இருப்பவள் தலைவியின் விளையாட்டுப் பருவம் முதல் திருமணம் வரை உற்ற தோழியாகவும், கருவுற்ற நிலையில் மகப்பேற்றிற்குப் பின்னும் அவளது பிள்ளைக்கு செவிலியாகவும் விளங்குபவள் என்பதை,

"யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளியின் ஓருயரம் மே! (அகம் - 12)

என்ற அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

வரைவு செய்தலை விரைவுபடுத்துக

தலைவன் தலைவியைச் சந்திக்க இரவுக்குறியில் வந்தபொழுது எதிர்ப்பட்ட தோழி, தலைவனிடம் இரவுக்குறியில் வருவதனால் ஏற்பாடும் சிக்கல்களையும், அச்சிக்கல்களால் வரும்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

துன்பத்தையும் தன் உள்ளத்து விருப்பத்தையும் எடுத்துரைத்து விரைவில் தலைவியை திருமணம் செய்து கொள்க என வேண்டினாள்.

"விலங்கு ஓரார் மெய் ஓர்ப்பின் இவள் வாழாள், இவள் அன்றிப்
புலம் புகழ் ஒருவ யானும் வாழேன்
அதனால் பொதி அவிழ் வைகறை வந்து நீ குறை கூறி,
வதுவை அயர்தல் வேண்டுதல் ஆங்குப்
புதுவை போலும் நின் வரவும், இவள்
வதுவை நாண் ஒடுக்கமும் காண்குவல் யானே" (கலி.52)

பலரும் பாராட்டும் சிறந்த அறிவினை உடைய தலைவனே ஊரார் தலைவியின் களவொழுக்கம் அறிந்தார் எனில் இவள் உயிர் வாழ மாட்டாள். இவளை இழந்து நானும் உயிர் வாழ மாட்டேன். அதனால் நாளை விடியற் காலத்தே வந்து நின் செயலைப் பலருக்கு அறிய கூறி இவளை மணந்து கொள். புதியவனைப் போல நீ வரும் காட்சியினையும் திருமணக் கோலத்தில் நாணத்தால் தலைவி ஒடுங்கி நிற்கும் காட்சியையும் நான் காண வேண்டும் என்று தோழி தலைவனை நெறிப்படுத்தினாள்.

தலைவன் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தற் பொருட்டுத் தன்னார்க்குப் பிரிந்து சென்ற போது தலைவி அப்பிரிவாற்றாது வருந்திக் கண்ட தோழி. தலைவன் நின்னை மணந்து கொள்வதற்குப் பிரியவும் நீ வருந்துவது எதற்கு என வினவ அதற்கு தலைவி சொல்லியதாக அமைகின்ற பாடல்,

"எக்கர் ஞாழல் செருந்தியொடு
கமழத் துவலைத் தண் துளி வீசிப்
பயலை செய்தன பனிபடு துறையே"(ஐங்.141)

தோழி நம் கடற்கரையின் கண் குவிந்துள்ள மணல் திட்டுக்களில் ஞாழல் மலர்களும் செருந்தி மலர்களும் தம் நறுமணத்தை வீச தண்ணிய துறைகளோ நீர்த்திவலைகளை என் மேல் வீசிப் பசலை நோயை உண்டாக்குகின்றன. மணற் பரப்பிலே தன் காதலனோடு விளையாடியும், நீர்த் துறையிலாடியும் இன்பமடைந்தவள் தலைவியாதலின் அவனில்லாத போது அம்மலர் மணமும் நீர்த்திவலைகளும் பழைமையை நினைவூட்டல் காரணமாய் அவளுக்கு நலிவு செய்தன. அதாவது தலைவி ஆற்றியிருந்த போதும் அவளையும் விஞ்சி ஆற்றாமையே மிகுவதாயிற்று என்னும் விளக்கத்திலிருந்து தலைவியின் ஆளுமையுணர்வு வெளிப்படுகிறது.

வேற்று வரைவும் உடன்போக்கும்

தலைவியின் களவு வெளிப்பட்ட இக்கட்டான நிலையில் தலைவிக்கு வேற்று வரைவிற்கு ஏற்பாடு செய்தலும் கூடும். அங்ஙனம் வேற்று வரைவு நிகழ்த்த தாய் எண்ணிய கணமே தோழி தலைவியை தலைவனுடன் உடன்போக்கு செல்ல ஏற்பாடு செய்கின்றாள். "அறத்தோடு நின்ற பிறகும் பெற்றோர் நொதுமலர் வரைவிற்கு முயலும் போது தோழி உடன்போக்கிற்கு வழி வகுப்பாள்." என்று மு. இராகவையங்கார் தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி என்ற நூலில் சுட்டியிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும் அதற்கு தலைவியும் தனது உடன்பாட்டைத் தெரிவிக்கிறாள். இதனை,

"பொம்மல் ஓதிஎம்மகள் மணன் என
வதுவை அயர்ந்தனர் நமரே அதனால்
அருஞ்சுரம் சேறல் அயர்ந்தனென் யானே" (அகம். 221)

என்ற அடிகளால் அறியலாம். மிகச் சில வேளைகளில் தலைவி தலைவன் மீது கொண்ட அளவு கடந்த பாசம் காரணமாகவும் தன் வீட்டார் தலைவனுடன் தன்னை இணைத்து வைக்கப் போவதில்லை என்ற நிலையிலும் தலைவி தானே தோழியிடம் உடன்போக்கே இதற்குத் தீர்வு என்று தன் ஆற்றாமையை வெளிப்படுத்தலும் உண்டு. "இற்செறிப்பின் கடுமையான நிலையில்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தலைவி செய்யக் கூடியது. பெற்றோர் அறியாமல் தலைவனுடன் சென்றுவிடுதலே ஆகும்" என பாஸ்கரதாஸ் கூறுகிறார். இதனை,

"...இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய அல்ல என் மகட்கு எனப் பரைஇ
நம் உணர்ந்து ஆறிய கொள்கை
அன்னை முன்னர் யாம் என் இதற்படலே" (அகம்.95)

என்று அடிகள் தெளிவுறுத்துகின்றன. தலைவனையும் தலைவியையும் இரவுப்பொழுது உடன்போக்கு அனுப்பி வைக்கும் தோழி தலைவனிடம், நீ தலைவி மீது காதல் கொண்டு பேசிய அத்துணை வார்த்தையையும் இவள் உண்மை என நம்பி இன்று உன்னுடன் உடன்போக்கு செல்லும் அளவிற்குத் துணிந்துள்ளாள். ஆதலால் நீ அவள் மீது கொண்ட காதல் சிறிதும் குறையாத வண்ணம் இல்லறம் நடத்துவாய் என்கிறாள் தோழி. இதன்வழி தோழியின் அளவுகடந்த அன்பினை அறியமுடிகிறது.

புலத்தலை நீக்குக

தலைமகன் பரத்தை வீட்டிலிருந்து தலைமகள் பால் மீளவிரும்பி அதற்குத் தோழி உதவியை வேண்டிப் பெற்றான். தோழி தலைவியிடம் அவன் பரத்தைமை ஒழுக்கம் பூண்டிருப்பதினும் நின்பால் நிறைந்த அன்பன் அருளாளனும் ஆவான். எனவே புலத்தலை நீக்குக என்று அறிவுறுத்தினாள் அதற்கு விடையாகத் தலைவி சொல்லுகின்ற பாடல்

வெள்ளாங்குருகின் பிள்ளை செத் தென
காணிய சென்ற மடநடை நாரை
கையறுபு இரற்று கானல் அம் புலம்பந்
துறைவன் வரையும் என்ப:
அறவன் போலும்: அருளுமார் அதுவே (ஐங். 152)

எனும் இப்பாடலில் வெள்ளளைக் கொக்கின் குஞ்சு இறந்துபட்டதாக அதன் பொருட்டுத் தாய் பறவைக்கு ஆறுதல் கூறுதற் பொருட்டுக் காணச் சென்ற மடப்பமுடைய நடையை உடைய நாரை செயலற்று ஒலிக்கின்ற காலை பொருந்திய கடற்கரைக்கு தலைவன் ஒரு பரத்தையைத் தனக்காக அற்பரத்தையாக வரைந்து கொள்வான் என்ற பலர் கூறிய ஆதலின் அவன் கூறியவாறு அற நெஞ்சினன் போலும் அருட்பண்பும் அதுவேயாம் என்கிறாள் தலைவி. இவற்றிலிருந்து தலைவன் அறவோனாகவும் 'அருளாளனாகவும், அன்புத் தொடர்ச்சியுடைய யானாகவும் இருப்பது நீ சொல்கின்றது உண்மையே ஆனால் அந்த அன்பும், அறமும், அருளும் எனக்கின்றி அவன் புதியவனாக மணந்து கொள்ளப் போவதாகப் பலர் கூறும் பரத்தைக்கே என்பதை தெளிவுறுத்தும் பாங்கு ஆளுமையை உணர்த்துகிறது. மற்றொரு பாடலில் தோழி, தலைவனை நோக்கி, நீ உன் மனைவி மக்களைப் பிரிந்து பரத்தையர் வீட்டிலேயே வாழ்ந்து கொண்டிருந்தாய். நீ உன் மனைவி மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தாய். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஊரார் உன் பரத்தமை வாழ்க்கையைப் பற்றி ஊர் முழுவதும் அலர் மொழிகளைப் பேசுகின்றனர். உன் பண்பு நலன்களைப் பற்றி இழிவாகப் பேசுகின்றனர். அத்துன்பத்தை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, எமக்குத் துன்பம் தருமாறு ஊரார் பேசும் பழிமொழிகளோடு, எமது தெருவிற்கு இனி வராதீர். நீ பரத்தையர் வீட்டிலேயே இன்பமாக வாழ்வீராக எனக் கூறுகிறாள். ஒரு செவ்வியல் தன்மை கொண்ட இலக்கியத்தில்தான், செவ்வியல் பண்புகள் கொண்ட பாடல்களைப் படைக்க முடியும். அதில்தான் எல்லாக் கருத்துக்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கூறமுடியும். அக்கருத்துக்கள் யாவும், எத்தலைமுறைக்கும் நிலைபேறு கொண்ட கருத்துக்களாகவும் நிலைபேறு கொண்ட இலக்கியங்களாகவும் திகழும் என்பதை,

மனைஉறை கோழிக் குறுங்காற் பேடை

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

வேலி வெருகினம் மாலை உற்றெனப்
புகும்இடன் அறியாது தொகுபுஉடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு
இன்னாது இசைக்கும் அம்பலொடு
வாரல், வாழியர்! ஐயஎம் தெருவே (குறு. 139)

என்ற பாடல் உணர்த்துகிறது. காட்டுப் பூனைக் கூட்டத்திற்கு அஞ்சிய தன் குஞ்சுகளைக் காப்பாற்ற, கோழி கத்துகிறது. பரத்தையரால் கைக்கொள்ளப்பட்ட தலைவனைத் தங்கள் தெருவில் பார்த்ததும், ஊரார் பழிமொழிகளைப் பேசுகின்றனர். எனவே, எம் தெருவுக்கு முற்றிலும் வாராது பரத்தையர் வீட்டிலேயே இரும் எனத் தோழி தலைவனை நோக்கிக் கூறுகிறாள். தலைவி படும் துன்பத்தைத் தோழி தான் படும் துன்பமாகக் கருதுகிறாள். தலைவி தன் தலைவனிடம் பேசவேண்டிய அனைத்துப் பேச்சுக்களையும், தோழியே தலைவியின் பொருட்டுத் தலைவனிடம் பேசிவிடுகிறாள். தோழி, தலைவியின் கணவனை உரிமையோடு கண்டிக்கிறாள். தோழி, தலைவனுக்கு அவன் மனைவியின் துன்பத்தையும், குழந்தைகளின் வேதனைகளையும் சுட்டிக்காட்டுகிறாள். இதில், தோழி தலைவியின் குடும்பத்தை ஒன்று சேர்க்க நினைக்கிறாள் என்பதை உணரமுடிகிறது. அவள், தலைவனுக்குத் தன் மனைவி குழந்தைகள் மீது பற்றுவரத் திட்டம் தீட்டுகிறாள் என்பதை இதில் அறியமுடிகிறது.

முடிவுரை

தலைவியின் குணப்பண்பினை தலைவனுக்கு எடுத்துரைத்துக் கூறுகின்ற போது தோழியின் ஆளுமைப்பண்பு வெளிப்படுகிறது. இல்லறம் சார்ந்த அக வாழ்விலும், சமூகம் சார்ந்த புற வாழ்விலும் ஒழுங்கமைந்த பண்பாடுகளுடன் வாழ்ந்து தலை சிறந்த பண்பாட்டினை உருவாக்கியுள்ளனர்.

குறிப்புகள்

[1] அ. தட்சிணாமூர்த்தி. சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள். மங்கையர்க்கரசி பதிப்பகம், தஞ்சாவூர், 2001.
[2] ச. வே. சுப்பிரமணியன். சங்க இலக்கிய அறிமுகம். மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
[3] தமிழண்ணல். சங்க இலக்கிய ஒப்பீடு. மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
[4] மு. வரதராசன். சங்க இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள். பாரி நிலையம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சங்கத் தமிழரின் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் வே. மீனா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி,
போடிநாயக்கனூர் - 13, தேனி மாவட்டம்.

ஆய்வுச் சுருக்கம்

"சங்கத் தமிழரின் அறிவியல் சிந்தனைகள்" என்னும் இவ்வாய்வு நம் முன்னோர்களின் அறிவியல் அறிவை இன்றைய தலைமுறைக்கு எளிமையாகவும் தெளிவாகவும் கொண்டு சேர்க்கும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளது. இலக்கியத்திற்குள் புதைந்திருக்கும் அறிவியல் உண்மைகளைத் தேடி தமிழரின் அறிவுச் செல்வத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களில் மறைந்திருக்கும் வானியல், மருத்துவம், வேளாண்மை, கடலியல் போன்ற அறிவியல் கருத்துகளை ஆதாரத்துடன் விளக்கியுள்ளேன். அழிந்து போகும் நம் மரபை மீட்டெடுத்து, தமிழரின் அறிவுச் செல்வத்தை உலகறியச் செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

குறிப்புச் சொற்கள்: சங்கப்பாடல்கள், சூழலியல், வானியல், மருத்துவம், இயற்பியல்.

முன்னுரை

பண்டைத்தமிழர் அறிவியலுக்கு வித்திட்டுள்ளனர். உணர்வு சார்ந்த இலக்கியத்தைப் பாடும்பொழுதும் அறிவு சார்ந்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. பண்டைத்தமிழர்கள் அகம், புறம் என்ற வாழ்வியலை மேற்கொண்டு ஒழுகியிருந்தாலும் இடைஇடையே அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தும் பேரறிஞர்களாக வாழ்ந்துள்ளனர். அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் பல்வேறு துறைகள் மேம்பட்டு வருகின்றன. அறிவியல் இல்லாமல் இன்றைய யுகமே இயங்க வாய்ப்பில்லை. இன்றைய நிலை இவ்வாறிருக்க சங்கத் தமிழரின் இலக்கியச் சான்றுகள் அக்கால மக்களின் அறிவியல் சிந்தனைகளைப் பலவகைகளில் பறைசாற்றி நிற்கின்றன. அவற்றை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

விலங்கினம்

பழங்காலத்தில் தன் வாழ்வாதாரத்திற்காக விலங்குகளை சார்ந்து இருந்த மனிதன் அதனை படைப்பில் வெளிப்படுத்தும் போது ஒரு விலங்கியலாளரைப் போன்றே அதன் வடிவம், குணம், இயக்கம், இனம் என நுணுக்கமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அணில்

அணில் மரம் வாழ் விலங்காகும். தாவிச் செல்வதற்கு ஏதுவாய் இதன் பின்கால்கள் முன்கால்களைவிடப் பெரியதாய் இருக்கும். இதற்கு நீண்ட, கூரிய வெட்டுப்பற்கள் உண்டு. கடைவாய்ப் பற்களால் உணவை மெல்லும் நடுவே இடைவெளியும் உண்டு என்பதை,

"அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து,
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப" (குறுந். 49)

என்று அணிலின் பல் அமைப்பினைப் பாடுகிறார் அம்மூவனார். **"அணில் வாய்ப்பற்கள் ஊசிபோல் இருக்கும் நீர்முள்ளிச் செடியின் கூரியமுள்போல அணிலின் பல் இருப்பதாகக் கூறியிருக்கின்றது. அணிலின் முன் பற்கள் கூரியவை. விலங்குநூலார் உளி போன்று (Chisel) இருப்பதாகக் கூறுவர். தேயத் தேய வளரும் தன்மையுடையவை."** என்று அணிற்பல் குறித்த செய்தியைப் பதிவிடுகிறார் பி.எல். சாமி அவர்கள். அணிலின் உடலமைப்பைப் பொருத்து இந்தியா மற்றும் தென்நாடுகளில் மூன்றுவரி அணில்களும் வடஇந்தியாவில் ஐந்து வரிகள் கொண்ட அணில்களும் உண்டு. இவ்விருவகை வேறுபாட்டையும் உணர்த்தும் வகையில்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

தொல்காப்பியர் மரபியலில், **"மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு"** என்று மூன்று வரியுடைய அணிலைச் சுட்டியுள்ளார். சங்கப்பாடல்களும் அணிலின் வரியிட்ட முதுகை,

"அணில் வரிக் கொடுங்காய் வான் போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டாது" (புறம். 246)

என்று வெள்ளரிக்காயின் மேலுள்ள வரிபோல் மூன்று வரியுடைய அணிலைப் புறநானூற்றுப் பாடலடி விளக்குகின்றது. மூவரி அணிலைத் தவிர பிறிதோர் அணிலையும் அகநானூறு சுட்டுகிறது. அப்பாடல்கள்,

"காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளில் ஆடுங் கழைவளர் நனந்தலை" (அகம். 109)
"ஏனலங் காவலர் ஆனா தார்த் தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை" (அகம். 12)

என்பனவாகும். இவ்வகை அணிலை சங்கப்புலவர்கள் 'வெளில்' என்ற சொல்லால் சுட்டியுள்ளனர்.

யானை

யானை சூழல் அறிந்து அறிவார்ந்து செயல்படும் விலங்கு. என்பதைச் சங்கப்புலவர்கள் அதன் செயல்பாட்டின் வழி விளக்கியுள்ளனர்.

"பொறிவரித் தடக்கை வேதல் அஞ்சி,
சிறுகண் யானை நிலம் தொடல் செல்லா
வெயில்முளி சோலைய, வேய் உயர் சுரனே" (ஐங். 327)

பாலை நிலத்தின் அதிக வெப்பம் காரணமாக யானை அந்நிலையை தாங்காது. தனது நீண்ட துதிக்கையை நிலத்தில் தோய்க்காது செல்லும் என்ற செய்தி, வெப்பத்திலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும் அறிவுத் திறன் கொண்டதைப் புலப்படுத்துகிறது. தன் இனத்தோடு கூடி வாழும் ஒற்றுமைப் பண்பும் ஆழ்ந்த நினைவாற்றல் திறனும், நீர் நிலைகளைக் கண்டறிந்து பிற உயிரினங்களுக்கு வழிகாட்டும் நுண்ணறிவும் உடைய உயிரினம் யானை மட்டுமே. யானைகள் குன்றுகளும், மலைகளும் நிறைந்த, அடர்ந்த, ஈரம் நிறைந்த காடுகளில் வசிக்கும். யானையின் உறுப்புகளில் வியப்புக்குரியதும் தனித்துவம் கொண்டதும் அதன் தும்பிக்கையே ஆகும். யானையின் மதத்தைப் பத்துப்பாட்டு நூல்கள் கடாம் என்று அழைத்தன. பாகர்கள் வடசொற்களைக் கூறி யானையை அடக்குவர். நெய்யிட்டுப் பிசைந்தசோற்று உருண்டைகளை உணவாகத் தருவார்கள். யானைகள் கரும்பு, நெற்கதிர், அதிமதுரத் தழை ஆகியவற்றைத் தின்னும் என்பதை, **"வயல் விளை யின்குள குண்ணாது நுதல் துடைத்து" (முல். 33)**

என்று முல்லைப்பாட்டு தெரிவிக்கின்றது. **"சிந்துவெளி நாகரிக திராவிட மக்கள் தான் இன்றைக்கு சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் யானைகளைப் பழக்கினர். ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆய்வுகளில் கிடைத்த யானைகளின் அச்சுப் படிவங்களே அதற்கான நவீன வரலாற்றுப் பதிவுகளாக அறியப்படுகின்றன."** சங்க இலக்கியத்தில் பலபெயர் இட்டு யானையை அழைத்தனர். யானை, மா, கரி, சிந்தூரம், அந்தி, அறுகு, ஆம்பல், ஆனை, இபம் இம்மடி எனும்பெயர்களில் அழைக்கப்படுகிறது. யானைகள் மதம் கொள்ளுகின்ற போது மதநீர் ஒழுகுகின்றது. மேலும் இனப்பெருக்கக் காலத்திலும் தலையிலிருந்து மதநீர் ஒழுகுகின்றது. இந்த மதநீர் மணம் உடையது. இம்மணத்தின் காரணமாக வண்டுகள் அதனை மொய்க்கின்றன. இதனை, **"சுரும்பு ணக் களிந்த புகர் முக வேழம்" (ஐங். 239)**

என்ற பாடலடி விளக்குகின்றது. யானைகளுக்கு மூன்று விதமான மதநீர் உண்டு என்று கம்பராமாயணமும் கூறுகிறது. அவை வடியும் இடங்களைப் பொறுத்து கபோலம், கரடம், கோசம் என்று அழைக்கப்படுகின்றது. இதனை,

"ஒழுகிப் பாயும் மும்மத வேழம் உயிரோடும்
எழுகிற்கில்லாச் செம்புனல் வெள்ளத்திடை இற்ற"

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்ற கம்பராமாயணச் செய்யுள் வரிகள் உணர்த்துகின்றன.

புலம்பெயர்தல்

உணவுத்தேவை மற்றும் தன் இன விருத்திக்குத் தேவையான தகுந்த தட்பவெப்ப நிலைகளைத் தேடிச் செல்வதையே 'வலசைபோதல்' அல்லது 'புலம்பெயர்தல்' என்று அழைக்கின்றனர் சங்கப் புலவர்கள். பறவைகள் தமது வாழ்விடத்தை விட்டுப் பருவமாறுதலால் தகுந்த நல்ல சூழல் நிறைந்து விளங்கும் தற்காலிக வாழ்விடங்களுக்குப் பெயர்ந்து செல்லும் பண்பை 'Migration of Birds' என்று இன்றைய பறவை நூலார் கூறுவர். புலம்பெயரும் பறவைகளுக்குப் பூமியின் பல்வேறு காலங்களில் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் தட்பவெப்ப நிலைகளின் மாறுபாடுகளைப் பற்றி இயற்கையிலேயே அறிந்திருக்கின்றது. பறவைகள் வலசைப்போதலுக்கான காரணத்தை சூழலுடன் பண்டைத் தமிழர்கள் 2ஆம் நூற்றாண்டிலேயே விரிவான வருணனைகளுடன் விளக்கியுள்ளனர். சக்தி முற்றப் புலவர்,

"நாராய், நாரர்ய செங்கால் நாராய்,
புழம்படு பைனீய்ன கிழங்கு பிளந்தண்ண
பவளக் கூர்வாய் செங்கல் நாராய்
நீயும்நின்பெடையும் தென்திசைக் குமரி ஆடி
வடதிசைக்கு ஏகுவீர: ஆயின், எம்மூர்"

என்ற அப்பறவையின் இடம்பெயர் பண்பை காட்சிப்படத்தியுள்ளார். பறவைகளின் புலம்பெயர்தலைப் பற்றிச் சங்கப் பாடல்களிலும், **"விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய்" (நற். 167)** என்றும், **"வம்ப நாரை இனன் ஒலித்தன்ன" (அகம். 100)** என்ற அடிகளில் வெளிநாடுகளிலிருந்து வந்த புதிய பறவைகள் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நீண்டதூரம் பறந்து வெளிநாடு செல்லும் பறவைகளைப் "புலம்பெயர்புள்" என்றனர்.

பறவைகளின் இடம் பெயர்தல் நிகழ்வை பாண்டியன், வெங்கட்ராமன் தனது 'உயிரியல் விந்தைகள்' என்ற நூலில், பருவகால மாற்றங்களைப் பறவைகள் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் திறம் படைத்தன. சுற்றுப்புற ஒளியளவுகள் (Intensity of light) பறவைகளின் சில நாளமில்லாச் சுரப்பிகளைத் தூண்டி, சில குறிப்பிட்ட ஹார்மோன்களைச் சுரப்பித்து, இம்மாதிரியான புலம்பெயர்தலைத் தூண்டுகின்றன. ஆயினும், புலம் பெயர்வின் தொடக்கம் பறவைகள் புறப்படும் இடத்தின் அபாயச் சூழ்நிலைக் காரணங்களையும் நீண்ட புலம்பெயர்ச்சிக்கு ஏற்ற உடல் நிலையையும் பொருத்தது. புலம்பெயர்தலுக்கு முன்பு பறவைகள் தங்கள் உடலில் தேவையான அளவிற்குச் சக்தியைக் கொழுப்புகளாகச் சேமித்துவைக்கின்றன. கொழுப்புக்கள் குறைந்த இடத்தையே உடலில் அடைப்பினும் அவை மற்ற உணவுச் சத்துகளாகிய மாவு, புரதம் பொருள்களைவிட எடையில் குறைந்தவை. இது பறப்பதற்குச் சாதகமாக அமைந்துள்ளது. மேலும் இவற்றிலிருந்து வெளிப்படும் சக்தி, மற்றவற்றிலிருந்து வெளிப்படும் அளவைவிட இரண்டு மடங்கிற்கும் சற்று அதிகம் எனவே தான், உட்கொண்ட உணவின் அதிகப்படியான சத்துக்கள் கொழுப்பாகச் சேமித்துவைக்கப்படுகின்றன. சில பறவைகள் தங்கள் இயல்பு எடையைவிட இருமடங்கு எடையை இம்மாதிரிக் கொழுப்பு உணவு சேர்ப்பதன் மூலம் அடைகின்றன. இதனால் இவை 90 மணிநேரம் முதல் 120 மணிநேரம் வரை கூட ஓய்வின்றித் தொடர்ந்து பறக்கக் கூடியனவாய் உள்ளன. பறவையியல் வல்லுநர்கள் கூறும் வியத்தகும் குறிப்புகளையும் சங்கப்புலவர்கள் அழகாக கூறியுள்ளனர். பறவைகள் சூழல் அறிந்து முன்னெச்சரிக்கையாய் புலம்பெயரும் அறிவுடையது என்பதை,

"நிலந்தாழ் மருங்கின் தென்கடல் மேய்ந்த
விலங்கு மென் தூவிச் செங்கா லன்னம்
பொன்படு நெடுங்கோட்டு இமயத் துச்சி
வானர மகளிர்க்கு மேவ லாகும்" (நற். 356)

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

இப்பாடலில் தென்கடல் பகுதியைச் சார்ந்த அன்னம், இமயத்து உச்சிப்பகுதிவரை புலம் பெயர்ந்து சென்றதைப் பரணர் பாடுகிறார். வெயிற்காலத்தில் ஒருவகைக் காட்டு வாத்து இமயமலைப் பகுதிக்குப் புலம் பெயர்ந்ததாகக் கூறுமள் செய்தியுடன் இதனை ஒப்பிடலாம்.

"குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை ஆயின்" (புறம். 67)

என்ற பாடலில் பிசிராந்தையார் அன்னச்சேவல் பெருந்துறையில் ஆடிவிட்டு வடமலைக்குப் பெயரும் புலப்பெயர்ச்சியைப் பாடுகின்றார். இவ்வாறு சங்கப் புலவர்கள் தம் பாடலில் புலம்பெயர் பறவை பற்றிப் பாடியுள்ள செய்தி அறிந்து இன்புறத்தக்கது பாடலின் அடிக்கருத்தை விளக்கத் துணைசெய்யுமாறு இயற்கைப் பின்னணியை ஆளுமிடங்களில் புலவர்கள் மிக நுண்ணிய உயிரியல் உண்மைகளைப் பாடியுள்ள பாங்கு வியந்து பாரட்டற்குரியது. இவ்வாறான பல்வேறு வகை பறவையினங்களான வானம்பாடி, மயில், அன்றில், அன்னம், நாரை, கொக்கு, குயில், கிளி, காடை, கானக்கோழி, கவுதாரி போன்ற பறப்பனவற்றின் சிறப்பு தன்மை ஆராயப்பட்டுள்ளது.

நீர்வாழ் உயிரினங்கள்

நீர்வாழ் உயிரினங்கள் என்பது முதுகெலும்பியாகவோ அல்லது முதுகெலும்பிலியாகவோ இருக்கும் இவை நீரில் கரைந்துள்ள ஆக்சிஜனை சுவாசிக்கின்றன.

நண்டு

உலகில் எல்லாப் பிராணிகளும் முன் பக்கமாகவே நடக்கும். நண்டு மட்டுமே பக்கவாட்டில் நடக்கக் கூடியது. நீர் நிலைகளிலும், சேற்றிலும் வாழும் இயல்புடையது. அனைத்து வகையான நிலைகளிலும் நண்டுகள் காணப்படுகின்றன. அவற்றின் வாழிடங்களுக்கு ஏற்ப கடல் நண்டுகள், நன்னீர் நண்டுகள் என்று அழைக்கப்படுகின்றன. சில வகை நண்டுகள் நிலவாழ்வன ஆகும்.

கடலில் வாழும் நண்டினை அலவன் எனவும் நன்னீரில் வாழும் நண்டினை நெண்டு என்னும் குறித்தனர். கள்வன், அலவன், ஞெண்டு, நளி என நண்டின் பிற பெயர்களும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. **"செக்கரும் புள்ளித் திகிரி அலவனொடு யான்" (கலி. 146)** என்ற வரி குறிப்பிடுகின்றது.

"அளைவா ழலவன் கண்கண்டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி" (பொரு. 9-10)

நண்டின் கண் யாழின் ஆணிக்கு நண்டின்கண் உவமையாகக் கூறப்பட்டுள்ளது

"அவைப்புமாண் அரிசி அமலை வெண் சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்" (சிறுபாண்.194-195)

பண்டைய மக்கள் வெண்ணிறமான அரிசியால் சமைக்கப்பட்ட சோற்றினை நண்டின் கலவையோடு சமைத்து உண்டுள்ளனர். விரைவாகச் செல்லக்கூடிய வளைந்த கால்களை உடைய வளைகளில் வாழும் நண்டானது தன்னுடைய கூர்மையான நகத்தினால் ஈரமான மணலைக் கீறுவதால் கோடுகள் உண்டாகின்றன. அக்கோடுகளை கடலின் அலைகள் அழிக்கும் என்பதை,

"...விரைவுறு கொடுந்தாள்.
அளைவாழ் அலவன் கூருகிர் விரித்த
ஈர்மணல் மலிர்நெறி சிதைய இழுமென" (குறுந். 351:1-3)

என்ற பாடல் விளக்குகிறது. மேனியில் புள்ளிகளைக் கொண்ட நண்டானது ஆம்பலின் தண்டுகளை தன்னுடைய கூரிய நகத்தினால் அறுக்கும் தன்மை உடையது என்பதை ஐங்குறுநூற்றுப் பாடல் வெளிப்படுத்துகிறது. **"புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்'' (ஐங். 21)** மேலும், சிலப்பதிகாரமும் இக்கருத்தை, **"பொற் மான் அவ அலவள்"**

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்று குறிப்பிடுகிறது. தன்னுடைய ஓட்டின்மேல் புள்ளிகளைக் கொண்ட நண்டானது தான் பிறந்தவுடனே தன்னை ஈன்ற தாயினை இறக்கும்படியாகச் செய்யும் கொடுமையைக் கொண்டுள்ளது. இதனை,

“தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு
பிள்ளை தின்னும் முதலை அவன் ஊர்" (ஐங். 24:1-2)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இதனை சிறுபஞ்ச மூலம் வெளிப்படுத்துகிறது . **“கூற்றமாம் நண்டிற்குத் தன் பார்ப்பு"** என்று கூறுவது மனங்கொள்ளத்தக்கதாகும். நண்டிற்கு தன் பார்ப்புகளே உயிர்கொல்லியாக அமையும் உண்மையை,

“**நண்டுசிப்பி வேய்கதலி நாசம்உறும் காலத்தில்**
கொண்ட கருஅளிக்கும் கொள்கைபோல்.”

என்கிறது நீதிநூலில் ஒன்றான நல்வழி. உயிரினங்கள் கூர்ந்து நோக்கியதன் விளைவே, இப்புலவர்களின் அறிவியல் அறிவு.

வானியல்

நிலவின் இயக்கம்

சூரியக்குடும்பக் கிரகங்களின் ஒன்றான பூமி சூரியனை வலம் வரும் நிலையில் துணைக்கோளாகிய சந்திரன் பூமியை வலம் வந்து கொண்டிருக்கும். ஒருமுறை சூரியனை பூமி சுற்றிவர ஓராண்டு ஆகிறது. இயல்பாக நிலவு ஒளிவீசும் தன்மை கொண்டதல்ல ஆனால். தன்மீது படும் ஒளியைத் திருப்பி அனுப்பும் தன்மையுடையது. திங்கள் பூமியை வலம் வரும் நிலையிலேயே தேய்பிறை, வளர்பிறை, பௌர்ணமி, அமாவாசை ஆகிய நிலைகள் ஏற்படுகின்றன. மேலும் அதனுடன் கடல் அலைகளிலும் பல மாறுபாடுகள் உண்டாகின்றன. இவையனைத்தையும் சங்கப்புலவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். பல நூறு விண்மீன்களுக்கிடையே தன் சுற்றுப்பாதையில் பவனி வரும் நிலவை, உறையூர் ஏரணிச்சேரி முடமோசியார். **“பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்” (புறம். 13:6-7)** என்கிறார். ஞாயிற்றிலிருந்து பூமிக்கு எதிர்த்திசையில் சந்திரன் வரும்போது தான் முழுமதி தோன்றுகிறது. இது பௌர்ணமி என்றழைக்கப்படுகிறது. பௌர்ணமி குறித்து இன்றைய அறிவியல் பதிவு செய்வது தொழில்நுட்பக் கருவிகளின் உதவியால் என்பது உண்மை. அன்றைய தமிழருக்கு இவ்விதக் கருவிகள் இல்லை. எனினும் வானியல் அறிவினைத் தமிழர் அன்றே பெற்றிருந்தனர் என்பதற்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இம்மாறுதல்களைக் தங்கள் பாடல்களின் வழி புலப்படுத்துகின்றனர் சங்கப்புலவர்கள். முழுநிலா (பௌர்ணமி) மற்றும் அமாவாசை நாளில் ஈர்ப்பு விசையின் காரணமாகக் கடலில் அலையின் எழுச்சி அதிகமாக இருக்கும். இந்நாட்களில் பரதவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதைத் தவிர்த்த நிலையை,

“பாயிரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது
உவவுமடிந்து உண்டாடியும்” (பட்டின. 84-94)

என்ற அடிகள் விளக்குகின்றன. அமாவாசை, பௌர்ணமி தினங்களில் பரதவர்கள் தம் தீவினை நீங்க கடலுக்குள் செல்லாமல் நன்னீரில் நீராடினார்கள் கடல் அலைகளில் மாற்றம் ஏற்படக்காரணம் சந்திரனின் இயக்கநிலையே ஆகும். அதனை அறிந்தே ஆபத்து உணர்ந்து அன்றைய நாட்களில் கடலுக்குள் செல்லாமல் தவிர்த்துள்ளனர்.

“கடலில் பேரலைகள் தோன்றக் காரணம் குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் வருகையினால் மட்டுமே சூரியனின் வருகையினால் அன்று இதில் குளிர்ச்சி பொருந்திய சந்திரனே காரணம் என்று கூறப்பட்டுள்ளது. இது வெறும் கற்பனையன்று விஞ்ஞான உண்மையாகும் இவ்வுண்மையை அயல்நாட்டு அறிஞர் கெப்ளர், கடலில் பேரலைகள் சந்திரனின் கதிர்களால் தோன்றுகின்றன.’’

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்று குறிப்பிடுகிறார். சுழலும் புவிமேல் அலை ஆற்றல் காரணமாகவும் சந்திரனின் ஈர்ப்பு விசை காரணமாகவும் கடலின் நீர்மட்டத்தில் உயர்வும் தாழ்வும் ஏற்படுவதுடன் பௌர்ணமி நாட்களில் சந்திரனும் சூரியனுமாகிய இரு சுடர்களும் கிழக்கிலும் மேற்கிலுமாக தோன்றும் நிகழ்வைத் தெளிவுபட நம் பண்டைப் புலவர்கள் விளக்கியுள்ளனர். இதற்குப் புறநானூறு சான்று பகருகிறது.

உவவுத் தலைவந்த பெருநாள் அமையத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்
புன்கண் மாலை மலை மறைந் தாங்குத் (புறம். 65:6-8)

பௌர்ணமி அன்று மாலைப் பொழுதுகளில் இந்நிகழ்வு நடந்தேறியதை விளக்கியுள்ளார் புலவர். நீலநீற வானில் பகல் வேளையிலும் நிலவு இருக்கும் என்னும் வானியல் குறித்த செய்தியையும் கூறியுள்ளார். அதுமட்டுமின்றி முழுநிலவு நாளான்று நெடுநேரம் நிலவின் வெளிச்சம் கிடைக்கும் என்பதையும் சுட்டியுள்ளார்.

கருங்கல் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் நிலவே (குறுந். 47)

சில பொழுதுகளில், பகலில் சூரியனையும் நிலவையும் ஒருசேரப் பார்த்திருக்க வாய்ப்பு உண்டு. இரவு நேரங்களில் தெரிவதைப் போல் பகலில் நிலவு தெரியாமல் இருக்க காரணம் சூரியனின் ஒளிக்கதிரின் முன் அவை தெரிவதில்லை என்பதாகும். சந்திரனில் ஏற்படும் மாற்றத்தால் ஏற்படும் நிகழ்வை,

கடல் அலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்குகான காரணம் குறிப்பாக பௌர்ணமி நாட்களில் கிட்டதட்ட 6 மணி நேரத்தில் நீர்மட்டம் மேல் நோக்கி எழுச்சி பெற்று தண்ணீர் கரையின் மீது ஏறிச் செல்கிறது. ஒவ்வொரு பௌர்ணமி நாளின் போதும் இரண்டு எழுச்சி மிக்க அலைகளும் இரண்டு தாழ்வான அலைகளும் ஏற்படுகின்றன. சூரியன், சந்திரன் ஆகியவற்றினால் ஏற்படும் கடல் அலைகளின் எழுச்சியானது மிக நுண்ணிய அளவில் பூமியின் சுழற்சியைத் தாமதப்படுத்துகிறது. இவ்வாறாக நமது நேர அலகாகிய நாளின் கால அளவு இடையூறாது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சந்திரனின் ஒரு பக்கம் மட்டுமே எப்பொழுதும் பூமியை நோக்கி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இவ்வலையெழுச்சி உராய்வு நமக்கு உதவுகிறது.

என்று அறிவியல் அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். மேலும் சந்திரனைப் பாம்பு விழுங்குவது போன்றுள்ள சந்திரகிரகணத்தைக் குறித்தும் அகநானூறு குறிப்பிடுகிறது.

மருத்துவம்

இயற்கைசார் வாழ்வை மேற்கொண்ட சங்ககாலத் தமிழர்கள், தங்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகளுக்கான காரணங்களையும் அதற்கான தீர்வுகளையும், தங்களைச் சுற்றியுள்ள பொருட்கள் கொண்டே மருத்துவ ரீதியில் அணுகியது வியப்பிற்குரியது.

தொற்று நோய்

இப்பூவுலகில் சூழல் மாறுபாடுகளினாலும் அதிலுள்ள விலங்குகள் மற்றும் தாவரங்களிலும் தொற்றுநோய் ஏற்படுகின்றது. நமனிதர்கள் தங்கள் உடலைப் பேணாவிட்டால் எளிதில் நோய் தொற்றிக்கொள்ளும் அதுமட்டுமின்றி நோய் எதிர்ப்புசக்தி உடலில் குறைவடையும் போது நோய்கள் தொற்றிக் கொள்ளும்.

வேட்டச் செந்தாய் கிளைத்தூண்மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மோடுணீ இயர்
வருகதில் அம்ம தானே

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

அளியளோ அளியளெந் நெஞ்சமர்ந்தோளே (குறுந். 56)

இப்பாடல், சூழல்களின் காரணமாகத் தொற்றுநோய் உருவாகும் நிலையை விளக்குகிறது. பாலை நிலத்தின் கொடுமை கண்ட தலைவன் மென்மையானவளான தலைவியை உடன் அழைத்துச் செல்லாததற்கான காரணத்தைக் கூறுமிடத்து தூய்மையற்ற நோய் உண்டாக்கும் சூழல் பாலைநிலத்துக் காணப்படும் என்கிறான். விலங்குகளை வேட்டையாடும் காட்டு நாய்கள் தோண்டிய குழிகளில் தோன்றிய நீரில் அந்த நாய்கள் குடித்து எஞ்சிய சிறிதளவு நீரைக் காட்டுமல்லிகைப் பூக்கள் விழுந்து அந்த நீர் அழுகிய நாற்றமுடையதாக உள்ளது. என்றும் தலைவி, தன்னோடு வந்திருந்தால் அந்த நீரை உண்ண வேண்டியதாக இருந்திருக்கும் என்றும் தலைவன் கூறுகிறான். பண்டைத் தமிழருக்கு தொற்று எதனால் ஏற்படும், அதன் விளைவுகள் எவை என்ற அறிவு இருந்திருக்கிறது.

> **ஒருவர் உண்ட உணவில் எஞ்சியதைப் பிறர் உண்ணுவது அருவறுக்கத் தக்கதாகும். நாய் குடித்தில் எஞ்சியுள்ள நீரைக் குடிப்பது அதைவிட அறுவறுக்கத் தக்கது. நாய் குடித்து எஞ்சிய நீர் அழுகல் நாற்றமுடையதாக இருந்தால் அதைக் குடிப்பது எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அருவருப்புடையது. பாலை நிலத்தைக் கடந்து செல்லும் தலைவன் அத்தகைய நீரை உன்ன வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் பாலை நிலத்தின் கொடுமையை நினைத்துத் தலைவன் வருந்துகின்றான். ஆகவே தலைவியைத் தன்னுடன் அழைத்து வராதது ஒரு நல்ல முடிவு என்று எண்ணுகிறான்.**

என்று உரையாசிரியரும் விளக்குமிடத்து இதிலுள்ள அறிவியல் உண்மை புலப்படுகிறது. உடலுக்கு ஊட்டச்சத்து தரும் சரியான உணவு கிடைக்காமல் அங்குள்ள அசுத்த உணவுகளை உண்ண வேண்டிய சூழல் வரும் அது தலைவிக்கு நோயை உண்டாக்கும் என்பதால். தலைவியை விட்டுச்சென்றதாகத் தலைவன் கூறுகிறான். இன்றை மருத்துவர்களும் நோய்த் தொற்றுக்கான காரணங்களை அறிவியல் வழி நிறுவுகின்றனர்.

> **இரத்த வெள்ளை அணுக்கள் (லீயூக்கோசைட்) இது நிறமிளத்தது. ஒழுங்கற்ற வடிவம் கொண்ட உட்கருவைக் கொண்டது. இது எலும்பு மஜ்ஜையிலும் நிணநீர் சுரப்பிகளிலும் உருவாகிறது. இதன் ஆயட்காலம் 2(அ)3 வாரம் இது உடலுக்கு நோய் எதிர்ப்புத் தன்மையைத் தருகிறது. மேலும் இது உடலின் காவல் படையாக இருந்து உடலுக்கு உள்ளே வரும் நோய் உண்டாக்கும் நோய் கிருமிகளை அழித்து உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.**

என்று உடலுக்குத் தக்க உணவில்லையெனில் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை அளிக்கும் இரத்த வெள்ளையணுக்கள் தோன்றாதுஞ நோய் எளிதில் பற்றிக்கொள்ளும் என்ற மருத்துவ உண்மை விளக்கப்பட்டுள்ளது.

பெண் மருத்துவம்

சங்க இலக்கியத்தில் பெண்களின் அழகு அவர்களின் உடல் மற்றும் உள்ளம் சார்ந்த உணர்வுகள் அதிகம் உரைக்கப்பட்டுள்ளன. வனப்புடைய பெண்களின் நிலையை இயற்கைப் பொருள்களான மாந்தளிர், தாமரை, காந்தள் மலர், குவளை, அனிச்சம் என பண்புகளுக்கேற்ப உள்ளார்ந்து அறிவியலை உட்புகுத்தி வரையறுத்துள்ளனர்.

வீட்டு விலக்கம்

மாத விலக்கு என்பது ஒரு பூப்படைந்த பெண்ணின் உடலில் மாதந்தோறும் சுழற்சி முறையில் நிகழும் ஒரு உடலியங்கியல் மாற்றமாகும். மாதவிடாய் இயற்கையின் இயல்பாக அறிவியல் பாற்பட்டாலும் மக்கள் இதனை பொதுவிடங்களில் குறிப்பிடத் தயங்கினர். அதனாலேயே இடக்கரடக்கலாக வீட்டில் இல்லை வீட்டிற்கு வெளியே வீட்;டுக்குத்தூரம் வீட்டுவிலக்கு என்ற சொல்வழக்கு கையாளப்பட்டுள்ளது. இதேபோல் குறுந்தொகையிலுள்ள தலைவியும் தான் மாதப்பூப்பு எய்தியதை வெளிப்படையாகக் கூறவிரும்பாமல் கோழிகூவியது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பொழுதும் விடிந்தது இனி அடுத்த சில நாட்களுக்குத் தலைவரோடு இன்பம் நுகரமுடியாதே என்று வருந்தும் காட்சியை,

குக்கூ வென்றது கோழி அதன்எதிர்
துட்கென் றன்றென் தூஉ நெஞ்சம்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே (குறுந். 157)

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன இம்மாதிரியான சூழல்களில் பெண் உடலிருந்து உஷ்ணம் வெளியேற்றப்படுவதாலும் தனித்திருக்க வேண்டும் என்று விளக்குகிறது மருத்துவம். அறிவியல் மாதவிடாய் குறித்து,

ஒரு பெண்ணின் உடலில் பிறக்கும் போதே பால் உறுப்புக்கள் (சூல்பை ஃபல்லோபியன் குழாய் கருப்பை முதலியன)வளர்ச்சி பெற்று நிலையில் இருக்கும் பெண் வளர வளர ஃபாஸ்க்கின்கள் முதிர்ச்சி பெற்று சூல் ஃபாலிக்கின் எனும் உறைக்குள் வளர்ச்சியடைந்து வரும். 13 வயதளவில் ஃபாலிக்கின் வெடித்து முட்டை வெளிப்படும் ஃபல்லோபியன் குழாயிலுள்ள புனல் போன்ற வாய் அமைப்பினால் அந்த முட்டை உறிஞ்சப்படுகிறது. அந்தக் குழாயினுள்ளேயிருக்கும் ஒருவகை செல்களின் அசைவினால் உந்தப்பட்டு அந்த முட்டை 12 மணி நேரத்தில் கருப்பையை அடைகிறது. கருப்பை அந்த முட்டையை ஏற்பதற்கு பல ஹார்மோன்கள் உதவுகின்றன.

என்று விளக்கியுள்ளது. வீட்டுவிலக்கு நேரங்களிலும் ஆண் பெண் கருவளர்ச்சியுற்றால் அந்தக்கரு கூன், செவிடு, பேடு போன்றவற்றில் ஒன்றாகப் பிறக்கும் வாய்ப்புள்ளதையும் தமிழர்கள் அறிந்திருந்தனர். இதற்கு,

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்

என்று தொல்காப்பியரின் கூற்று தகுந்த சான்றாகும். வீட்டு விலக்குடைய மூன்று நாளும் இல்லறவாழ்விலிருந்து விலகி இருக்க வேண்டும் என்பதும் மருத்துவச் செய்தியே ஆகும். ஆணும் பெண்ணும் இணைவதால் ஏற்படும் உடலியல் மாற்றங்களே கருவளர்ச்சியடைவதற்கு அடிப்படை எனற கருத்தினை பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர்.

பசலை நோய்

சங்க இலக்கியத்தில் குறிப்பாக நூல்களில் பசலை நோய் பற்றிய குறிப்பு பெரும்பான்மையும் இடம் பெறுகிறது. ஊட்டச்சத்து குறைபாட்டையே பசலைநோய் என்கிறது சங்க இலக்கியம்.

“அலர்வாய்
அயலிற் பெண்டிர் பசலைபாட
ஈங்கா இன்றால் தோழி’’ (நற். 378)
“நோய் தந் தனனே தோழி
பசலை ஆர்ந்த நம் குவளையம் கண்ணே” (குறுந். 13)
“தாதின் செய்த நண்பனிப் பாவை
இன்ன பண்பின் இன்ன பெரிது வழக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசை ஆகு பண்பின் ஒரு சொல்
இசையாது கொல்லோர்” (குறுந். 48)

பெரும்பாலும் தலைவன் பிரிவால் தலைவி சரியாக உண்ணாமல் இருப்பதால் உடல் சோர்வுற்று இந்நோய் ஏற்படுகிறது. இதற்கு மருந்து தலைவன் என்று அகப்பாடல்களில் கூறப்பட்டாலும் உணவே மருந்தாகும். இங்கு பசலை நோய் குறித்து கூறும் நிலையில், **“உடல் எடை குறைந்து உடலில் இரத்த பிளாஸ்மாவின் எண்ணிக்கைக் குறைந்து நோய் எதிர்ப்புச்**

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சக்தியின்றி உடல் வெளிறிக் காணப்படக் காரணம் உடலிலுள்ள செல்களின் இயக்கத்திற்குத் தேவையான உணவு செல்லாமையும், சரியான உறக்கமின்மையுமே ஆகும்.” என்கிறது அறிவியல் நூல். மனதளவில் ஏற்படும் துன்பத்திற்கு உடல் பாதிப்படைவதையே சங்கக் கவிஞர்கள் பசலை என்ற பெயர் கொண்டு அழகாகச் சுட்டியுள்ளனர். இந்நோய் பற்றி சி. சுப்பிரமணியன் விளக்கமளிக்கிறார். **“பசலை எனும் ஒரு வகை குறுகிய காலத் தோலின் நிற மாறுபாட்டு நோயினைப் புலவர்கள் குறித்திருக்கிறார்கள். பெண்களுக்கு மட்டுமே வரக்கூடிய நோயாகவும் உரைத்திருக்கிறார்கள். நாளமில்லாச் சுரப்பிகள் சுரக்கும் மனித வளர்ச்சிக்கு உதவும் நீர்களின் வேதியியல் வினை நிகழ்வால் ஏற்படும் மாறுபாடாக இருக்கலாம் என்று பெண் மருத்துவ அறிஞர்கள் கருதுகின்றனர். உடலில் குருதியோட்டத்தின் அளவில் சிறிது குறைந்தால் தான் தோலில் நிறம் மாறுபடும் என்று மனிதத் தோலியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனைக் குருதிக் குறைபாட்டு நோய் அல்லது இரத்த சோகை என்று அழைக்கலாம்.”** சங்கப்புலவர்களும் இன்றைய மருத்துவர்களும் பசலை நோய்க்கான காரணங்கள்; அதன் விளைவுகள் ஆகியவை பற்றிக் கூறிய கருத்துக்களை ஒப்பிட்டு நோக்க, அவை ஒத்துக் காணப்படுகின்றன.

இயற்பியல்

பண்டைத்தமிழர் இயற்கையை இயக்குவிக்கும் விதிகளை அறிந்ததில்லை. இயற்கையில் நேரிட்ட எல்லாவற்றுக்கும் ஒரு தெய்வத்தையோ, பூதத்தையோ, காரணகர்த்தாவாக்கி பிறகுதான் அவற்றுக்கு விளக்கம் தந்தனர். இயற்கையின் அடிப்படை உண்மையைக் கண்டறிய முற்படும் நிகழ்வே இயற்பியல் ஆகும். இயற்கை நிகழ்வுகளைத் திருத்தமாகவும் கணக்கீட்டிற்கு உட்படுத்தியும் கண்டறியும் இயற்பியல் குறித்த துல்லியமான அறிவினை பண்டைய தமிழர்கள் பெறாவிட்டாலும் தாம் கண்ட இயற்கைப் பொருள்களின் செயல்பாடுகளை வைத்து விசை, ஆற்றல் ஆகியவற்றைத் தம் பாடல்களில் புகுத்தியுள்ளனர்.

விசை

நியூட்டன் ‘விசை’ என்பதற்குக் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் சங்க இலக்கியத்தில் பலபாடல்கள் அமைந்துள்ளன. நீரின் வேகத்தைக் குறிப்பாக புதுப்புனலின் நிலையை கூறுகையில் வேகம், விசை என்ற இயற்பியல் சார் நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன.

நீர் மிகிற் சிறையுமில்லை: தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளி மிகின் வலியும் இல்ல’ (புறம். 51)

நியூட்டனின் முதல்விதிப்படி சுழற்சி நிலையில் அல்லது இயக்கத்தில் ஒரு பொருளில் மாற்றம் ஏற்படச் செய்யும்போது கிடைக்கும் ஆற்றல் விசையெனப்பட்டது. அமைதி நிலையில் இருக்கும் நீர்நிலைப் பகுதியானது அதீத வெள்ளத்தினால் ஏற்படும் மாற்றம் சொல்லப்பட்டுள்ளது. இப்பாடலில் நீரின் வேகத்தில் ஏற்படும் மாற்றம் சொல்லப்படுகிறது.

“The concept of force is based on this Push, Pull or hit. No one has seen, tasted or felt Force. However, we always see or feel the effect of a force. It can only be explaind by describing what happens, when a force is applied to an object push, pull or hit may bring objects into motion because we apply to act on them. Therefore, force is one which changes or tends to change the state of rest or of uniform motion of a body. Force is a Vector quantity.

என்று கண்ணால் காண இயலாத, உணர மட்டுமே முடியும் விசையைக் குறித்து அறிவியல் நூல்கள் கூறியுள்ளது. ஓய்வு நிலையிலிருக்கும் பொருளில் ஏற்படும் திடீர் மாற்றமே விசை என்ற விளக்கம் கொள்ளும் நிலையில் சங்கப்புலவர்கள் தண்ணீரின் வேகத்தை தள்ளு, இழு (Push, Pull) என்ற நிலையில் குறிக்கும் போது இன்றைய இயற்பியல் விதி அன்றே ஒத்திசைந்துள்ளது என்பது வெளிப்படை. வில்லிலிருந்து புறப்படும் அம்பின் செயல்பாடும் ஒரு முற்றுப்புள்ளியைச் சென்றடையும் விதம் குறித்தும் விசை, விசைநிறுத்தம் (Force / Force Stop)

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்ற நிலையில் விசைக்கு சங்கப்பாடல்கள் சான்று பகர்கின்றன. (குறு. 335, 297, புறம். 9. 13, 14). இதில் 'விளிம்பு உரீஇய சிலை' என்ற தொடரில் அம்பினை உருவி இழுத்துக் கட்டிய வில் விசையுடன் இயக்கப்பட்ட செய்தி இடம்பெறுகிறது. காதல் உணர்வை வெளிப்படுத்தும் அகநிலையிலும் வீரஉணர்வை வெளிப்படுத்தும் புறநிலையிலும் வில்லின் அமைப்பு மற்றும் அதன் செயல்பாட்டினைச் சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாலை நில வழிபோக்கர்களைத் தாக்கும் மறவர்கள் வில்லில் அம்பினை பொருத்தி எய்த செய்தியை,

அவ்விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணார் (குறுந். 297)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. **"ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான ஆனால், எதிர்திசையில் செயல்படுவதுமான ஓர் எதிர்வினை உண்டு வினையும் எதிர்வினையும் இரு வேறுபட்ட பொருள்களின் மீது செயல்படுகின்றன."** என்னும் நியூட்டனின் மூன்றாம் விதியுடன் அம்பின் செயல்பாடு ஒத்துக் காணப்படுகிறது. வில்லில் நாணை வலிமையாக இழுத்து விடுவதால் அம்பு விசை கொண்டு சென்று, பகைவரைப் புண் செய்கிறது.

"...தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்" (புறம். 14)

என்ற புறநானூற்றுப் பாடலில் இச்செய்தி வெளிப்படுகிறது. அம்பு முன்னோக்கி விசையுடன் இலக்கு நோக்கிப் பாய்வதற்கு, பின்னோக்கிய இழுவிசை தேவை என்ற இயற்பியல் விதி இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இயற்பியல் சார் கருவிகள்

இயற்கைப் பொருள்களின் இயக்கவியல், சூழல் சார் வெப்பம் மற்றும் அளவைகள் கொண்டு தாங்களாகவே அன்றாடத் தேவைகளின் அடிப்படையில் பல தொழில்நுட்பக் கருவிகளைப் பண்டைத் தமிழர்கள் உருவாக்கியுள்ளனர்.

சேமச்செப்பு

சுடு நீரின் வெப்பநிலை மாறாமல் அதனைப் பாதுகாத்து வைக்கும் கருவியினைச் **"சேமச்செப்பு"** என்று பெயரிட்டு பண்டைத்தமிழர் அழைத்தனர். வெப்ப இயக்கம், வெப்பக் கதிர்வீச்சு, வெப்பக் கடத்தல் ஆகியன குறித்து விரிவான சிந்தனை அவர்களிடம் இல்லாவிடினும் தங்களின் அன்றாடத் தேவைக்கான பொருள்களை உண்டாக்கும் நுட்பம் அறிந்திருந்தனர். சங்க காலத்தில் மழை மற்றும் பனிக்காலங்களில் குடிப்பதற்கு இதமான சுடுநீரைச் சேமித்து வைக்க சேமச்செப்பு என்ற கலன் இருந்துள்ளதைக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. தற்போது பாதரசம், அலுமினியம் போன்ற உலோகங்கள் நீரின் வெப்பநிலை மாறாமல் பாதுகாக்கப் பயன்படுகின்றன. ஆனால் அக்காலத்தில் எவ்விதத் தொழில்நுட்பமும் இன்றி சங்ககால மக்கள் சேமச் செப்பினை உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளனர்.

ஆசுஇல் தெருவில் நாய்இல் வியன் கடை
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீ இயரோ? (குறுந். 277)

என்ற பாடல் இதனை விளக்குகிறது. இதிலிருந்து வெப்பத்தை ஆற்றலின் வடிவமாகத் தமிழர் போற்றினர் என்பது புலனாகிறது. 'சேமசெப்பு' என்பதற்குத் தமிழண்ணல்,

முற்காலத்தில் பெரிய மூங்கில் குழாய்களில் இருபுறமும் கணுவுள்ளதில் துளையிட்டு தூய்மைப்படுத்தி வெந்நீரை ஊற்றி வைத்தால் சூடுகுறையாமல் இருந்துள்ளது. அது சேமம் - பாதுகாவலான செப்பு குப்பி எனப்பட்டது. இன்று பிளாஸ்க் என்பதைப் போல அன்றும் முயன்றுள்ளதை இது காட்டுகின்றது.

எனக் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

வானூர்தி

நவீன தொழில்நுட்பங்களால் வலிமையான எந்திரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட வானூர்தி சங்க இலக்கியத்தில் இருந்தமையைப் பரிபாடல் சுட்டுகின்றது.

உம்பர் உறையும் ஒளிகிளர்வா னூர்பு
அம்பி கரவா வழக்கிற்றே. (பரி. 11)

என்ற பாடலில், தேவர்க்ள உறையும் ஒளிமிகுந்த வானத்தின்கண் பறந்து திரியும் விமானங்களின் நிழல் வைகை ஆற்று நீரில் விழுந்து ஒளிவிட்டதை கூறுவதிலிருந்து இயந்திரம் கொண்டு உருவாக்கப்பட்ட வானூர்தி குறித்த அறிவு பண்டைத் தமிழரிடையே இருந்தது. மேலும் இவ் ஊர்தியை இயக்குவோரின்றி தானாக இயங்கும் என்னும் செய்தியை,

புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப. (புறம். 27)

என்ற பாடல் அடிகள் நிறுவுகின்றன. பழங்காலத்தில் இயக்கம் சார் இவ்வான்கருவி இருந்தது என்ற இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் சிலப்பதிகாரத்தில் பலராலும் புகழப்படும் சிறப்புப்பெற்று விளங்கும் கண்ணகி, வானூ+ர்தியில் ஏறி வானுலகம் அடைந்தது இங்குச் சுட்டத்தக்கது.

வாடா மாமலர் மாரி பெய்தாங்கு
அமரர்க் கரசன் தமர்வந் தேத்தீக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னோடு
வானவூர்தி ஏறினள் மாதோ
கானமலர் புரிகழல் கண்ணகி

என்ற வரிகளில் இந்திரனும் வானோரும் வந்து வாழ்த்தி, கோவலனோடு கண்ணகி தேவ விமானத்தில் ஏறிச் சென்றாள் என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்தியால் வானூர்தி இருந்தமை உறுதியாகிறது. மேலும் இவ்வானவூர்தியின் தொழில்நுட்பம் குறித்து கூறம்போது இதன் பொறியினை வலம் மற்றும் இடமாகத் திருகுவதன் மூலம் அவ்வூர்தி மேகங்களிடையே பறக்கவோ தரையில் இறங்கவோ செய்ய முடியும் என்ற அரிய செய்தியை பிற்காலத்தில் எழுந்த சீவகசிந்தாமணி காப்பியம் வழி அறியமுடிகிறது.

சங்ககாலத் தொழில் நுட்பவியல்

இன்றைய நவீன உலகம் எல்லாவிதத் தொழில்நுட்பக் கலையிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆயினும் 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழந்தமிழர்கள் தாமறிந்த விஞ்ஞான அறிவால் பல நுணுக்கமான கட்டுமானங்களைச் செய்திருந்தனர் என்பதற்குச் சங்க இலக்கியம் சான்று பகர்கிறது. தொழில் முறைப்பட்ட அறிவு பண்டைத் தமிழர்களின் தொடக்ககால அறிவாக இருந்திருக்க வேண்டும். சங்ககால மக்கள் தங்களுக்குக் கிடைத்தவற்றைக் கொண்டு கட்டடங்களை அமைத்திருந்தனர். கலைஞர்கள் தங்கள் குடியிருப்பில் வஞ்சி மரமும் காஞ்சி மரமுமாகிய வெண்மையான மரக்கொம்புகளை நடுவே கலந்து வேழக் கோலை வரிசையாக வைத்தனர். அதனுடன் தருப்பைப் புல்லாலே போடப்பட்ட சரிந்த கூரையினை உடைய குடிலையும் அமைத்தனர். போர்காலங்களுக்கு ஏற்ற வகையிலும் மாடங்கள் அமைக்கப்பட்டிருந்த செய்தி பட்டினப்பாலையில் கிடைக்கிறது.

கோயிலொடு குடிநிறீஇ
வாயிலோடு புழை அமைத்து
ஞாயில் தொறும் புழை நிறீஇ (பட்டின. 287-289)

என்ற தொடர்கள் இதற்குச் சான்றாகின்றன. உறையூரின் மதிலில் பெரிய (பட்டி) வாயில்களையும் சிறிய வாயில்களையும் அமைத்தனர். மேலும் மதிலின் உச்சியில் மறைந்து அம்புக் கட்டுகளைத் தொகுத்து வைத்தனர் என்கிறது. அதுபோல, சிறுவீடுகளோ, பெரிய மாட

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

மாளிகைகளோ தூண்களை நிறுவி வீடு கட்டுவது என்பதும் பண்டைத் தமிழரின் வழக்கமாக இருந்தது என்பதை, **"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்" (புறம். 86)** என்ற தொடர் விளக்குகிறது. உயரமான மாடமாளிகைகளைக் கட்டுதல் போர்க்கருவிகளுடைய அரண்களை அமைத்தல், அரண்களைச் சுற்றி அகழி உருவாக்குதல், செம்பாலான கோட்டை, வானுயர மதில் கட்டுதல் எனப் பல தொழில்நுட்ப அறிவினைச் சங்க கால மக்கள் பெற்றிருந்தமைக்குப் புறநானூற்றுப் பாடல்கள் சான்றாகின்றன அத்துடன்,

வேழம் நிரைத்து வெண்கோடு விரைப்ப
தாழை முடித்து தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை, பறியுடைமுன்றில். (பெரும். 263-265)

என்று தொடரும் ஆற்றுப்படைத் தொடர்களும் மக்கள் தங்கள் வாழ்விடங்களை அமைத்த செய்தியைப் பதிவு செய்கின்றன. நெடுநல்வாடையில், அந்தப்புரத்தின் உட்பகுதி செம்பினால் உருவாக்கப்பட்டது போன்ற தொழில் திறம் விளங்கும்படி வலிமையாக அமைக்கப்பட்ட நீண்ட சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தது. அதுபோல, **"செம்பு இயன்றன்ன செஞ்சுவர் புனைந்து" (மதுரைக். 485)** என்ற மதுரைக்காஞ்சி பாடலும் உறுதிசெய்கின்றன. பண்டைக்காலத்தில் தச்சர்கள் நூல் பிடித்துப் பார்த்து கட்டடங்களை அமைத்தனர். தொழில்நுட்ப முறையுடன் வாஸ்து சாத்திரம் கண்டு பொறியாளர் இன்று கட்டிடம் எழுப்புவது போன்று அன்றே சரியான அளவுநிலையில் அமையும் பொருட்டு நூலை பயன்படுத்தினர்.

"நுண்ணிதின் கயிறு இட்டு தேஎம் கொண்டு
தெய்வம் நோக்கி" (நெடு. 76-77)

என்ற அடிகள் அன்றைய தமிழரின் கட்டடம் சார்ந்த தொழில்நுட்ப அறிவினைப் புலப்படுத்துகின்றன. அரண்மனையில் ஒவ்வொரு பகுதியும் அமைய வேண்டிய திசைகளைக் கருத்தில் கொண்டு தொழில்நுட்ப அறிவுடன் தெய்வ நம்பிக்கையும் இணைத்து திசைகளில் இருக்கும் தெய்வங்களுக்கு எந்தக் குறையும் நேராத விதமாக வாயில்களில் வழிபாடு செய்து கட்டிடம் எழுப்பத் தொடங்கினர் என்கிறது சங்க இலக்கியம். சிற்ப நூலை அறிந்த தச்சர்கள் நூல் பிடித்துப் பார்த்து கட்டடங்கள் அமைப்பர். சித்திரை நாளில் முதல் பத்து இறுதிப் பத்து நாட்களை நீக்கி நடுவில் இருக்கும் பத்து நாட்களில் ஒரு நாள் தெரிவு செய்து பகற்பொழுது பதினைந்தாம் நாழிகையில் வடக்கு தெற்காக அமைந்த கோல்களினிடையே உள்ள நிழல் ஒன்றன் மேல் ஒன்றாய் நேர்க்கோட்டில் விழும். அந்த நாளில் இறங்கி வெயில் பொழுதில் வரும் நிழலினைக் கொண்டு அளவினைக் கண்டுள்ளனர். இதனை நோக்கும் போது இயற்விதியின்படி தொழில் நுட்பங்களைத் தமிழர்கள்; பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

முடிவுரை

கால எல்லையைக் கடந்து மனித சமுதாயத்தின் அனைத்து நிகழ்வுகளையும் பதிவு செய்வதில் இலக்கியத்திற்குப் பெரும்பங்கு உண்டு. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலம் இலக்கியக் காலம். இச்சூழலில் சங்ககாலப் புலவர்கள் இயற்பியல் அறிவியலை, அறிவியல் என்றே தெரியாமல் இயற்கைப் பின்னணி என்ற நிலையில் தான் கண்ட சூழலின் அடிப்படையில் இலக்கியங்களைப் படைத்தனர். தாங்கள் தங்களைச் சுற்றிக் காணப்பட்ட சூழல் சார்ந்த விஷயங்களை அறிவியல் நோக்கில் படைத்தனர். தொழில்நுட்பச் சாதனங்கள் அற்ற நிலையிலும் சாதாரணமாய் அறிவியலைக் கண்ட பண்டைத் தமிழரின் படைப்பாக்கங்கள் அறிவியலின் உச்சநிலையை இலக்கியங்கள் வழியே புலப்படுத்துகின்றன. அறிவியல் என்பது மிக நீண்ட பரப்பும் ஆழமும் உடையது. எண்ணற்ற உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அறிவியலுக்கு வித்திட்டு அறிவியலில் நுட்பம் பெற்றுத் திகழ்ந்துள்ளனர் தமிழர்கள்.

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

குறிப்புகள்

[1] இராம. சுந்தரம். *தமிழக அறிவியல் வரலாறு*. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004.
[2] ச. வே. சுப்பிரமணியன். *சங்க இலக்கியம்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
[3] மு. வரதராசன். *சங்க இலக்கியத்தில் இயற்கையும் வாழ்வியலும்*. பாரி நிலையம், சென்னை.
[4] தமிழண்ணல். *சங்க இலக்கிய ஒப்பீடு*. மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
[5] புலியூர்க் கேசிகன் (உரை.). *புறநானூறு: மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் சிறப்புகள்

ப. ரதிதேவி, தமிழ்த்துறைத் தலைவர், தேனி கம்மவார் சங்கம் கலை அறிவியல் கல்லூரி, கொடுவிலார்பட்டி, தேனி

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனச் சித்தரிக்கப்படும் சங்க காலம் தமிழ்ப் புலவர்கள் நிறைந்து வழிந்த காலம். அக்காலத்தில் பெண்களுக்கு கல்வியும், கவிதை இயற்றும் ஆற்றலும் முழுமையாக இருந்தது எனலாம். சங்கத் தொகுப்பு நூல்களில் 30க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் 300க்கும் அதிகமான பாடல்களைப் படியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், ஆண்பாற் புலவர்களுக்குச் சளைக்காமல் பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாகக் காணப்பட்டனர். சிறந்த பல தனிப்பாடல்களை, தொகுப்புக்களை இப்பெண்பாற் புலவர்கள் தமிழ் உலகுக்கு ஈந்தபோதும் அவர்களின் இயற்பெயர் அத்தொகுப்புக்களிலோ, தனிப்பாடல்களிலோ சுட்டப்படாமல் அவர்கள் எழுதிய இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களில் இருந்து பெயரிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. முச்சங்கத்திலும் 32 பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர் என்பதை நாம் அறியமுடிகிறது. இத்தகைய இலக்கிய ஆளுமைமிக்க சங்ககாலப் பெண் புலவர்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: சங்ககாலம், பெண், புலவர், சிறப்பு.

முன்னுரை

சங்ககாலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் கல்வி கற்று கவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். அதற்குச் சான்றாகச் சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடல் இயற்றியதோடு மட்டுமல்லாமல் அரசவைப் புலவராகவும், சட்ட ஆலோசகராகவும் நட்பு பாராட்டியும், போர் நடைபெறும் காலத்தில் போரினைத் தடுத்து நிறுத்தும் வல்லமைப் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர். இவர்களது பாடல்கள் மன்னர்களை புகழ்ந்து பாடுவதோடு மட்டுமல்லாமல் வீரத்தை தூண்டக்கூடியதாகவும், கருத்துச் செறிவுமிக்கதாகவும் விளங்கின என்பதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

ஔவையார்

சங்ககால பெண்பாற் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஔவையார். இவர் சங்க இலக்கியத்தில் ஐம்பத்தி எட்டு பாடல்களை பாடியுள்ளார். தகடூரை ஆட்சிசெய்த அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைக்களப் புலவராகவும், நண்பராகவும் இருந்தவர்.

அகவ்ன மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பு அல்ல நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே – அவர்
நன்நெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறுந்த – 23 (1))

தலைவனைப் பிரிந்த தலைவி வருத்தடைந்து மெலிந்து காணப்படுகின்றாள். அதனை அறியாத இல்லத்தவர் குறிப்பார்ப்பவளை அழைத்து குறிகேட்கின்றனர். இவ்வாறு குறி கூறுபவளை "அகவன் மகள்" என்று ஔவையார் கூறியிருப்பதைக் குறுந்தொகைப் பாடலடிகள் கூறுகின்றது.

அள்ளூர் நன்முல்லையார்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

சிவகங்கை மாவட்டத்திலுள்ள அள்ளூர் என்ற ஊரில் வாழ்ந்த பெண்பாற் புலவரின் இயற்பெயர் முல்லை என்பதாகும். இவர் பாடிய அகப்பாடல்கள் பத்தும், புறப்பாடல்கள் இரண்டும் கிடைத்துள்ளன. இவருடைய பாடலில் அள்ளூர் என்ற வயல் வளமான மருத ஊரானது நுணுக்கமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

"களிறு பொரக் கலங்கு, கழன்முன்வேலி
அரிது உண்கூவல், அம் குடிச்சீனூர்
ஒலிமென் கூந்தல் ஒன்றுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஒடியது
விருந்து எதிர் பெறுகதில் யானே என் ஐயும்
ஓ ... வேந்தனோடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே"

வீரம் நிறைந்த பெண் ஒருத்தி நாள்தோறும் தன் வீட்டிற்கு விருந்தினர் வரவேண்டும் என்றும், போருக்கு சென்ற தலைவன் வெற்றியோடு திரும்ப வேண்டும் என்றும், போரினை விரும்பும் தலைவன் போரிடும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்றும்., நாள்தோறும் 'நடுகல்லை' கைகூப்பி தொழுது வணங்கினாள் என்று புறநானூற்றடிகள் எடுத்தியம்புகிறது.

பொன்முடியார்

பொன்முடி என்ற ஊரைச் சேர்ந்த இப்புலவர் ஊரின் பெயராலே பொன்முடியார் என்று அழைக்கப்பட்டார். இவர் பாடிய மூன்று பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. இவர் **"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே"** என்ற பாடலில் இனக்குழு சமூகத்தில் பெண்ணின் நிலையினை வெளிப்படுத்தியுள்ளார். இவர் பாடிய பாடல் ஒவ்வொருவருக்கும் உரிய கடமையையும், பொறுப்பையும் உணர்த்துகின்றது. இவரது பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள மூன்று மட்டுமே சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

"ஈன்று புறந்திருதல் என் தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிருவாள் அருஞ்சமப் முருக்கி
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம் : 312)

ஒரு குழந்தையை பெற்றெடுப்பது தாயின் கடமை, அவளை சான்றோன் ஆக்குவது தந்தைக்குக் கடமை, வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமை (போர்ப் பயிற்சி கொடுத்தல் வேந்தனின் கடமை, ஒளிவாளைச் சுழற்றிப் போரில் அஞ்சாது யானையைக் கொன்று வெற்றியோடு திரும்புவது வீரனின் கடமையாகும். இவ்வாறாக ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது என்பதை புறநானூற்றடிகள் மூலம் உணர்த்தப்படுகிறது.

காக்கைபாடினியார்

இவர் சேர நாட்டிலுள்ள காக்கையூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். இவர் பாடிய சங்க இலக்கிய பாடல்கள் மூன்றாகும். பதிற்றுப்பத்தில் கிடைத்த எட்டு பாடல்கள் பாடிய புலவர்களுள் இவர் மட்டுமே பெண்பாற் புலவராவார். சேரமன்னன் போரில் விருப்பம் உடையவன் என்பதை பதிற்றுப்பத்து பாடல்கள் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

"விழவு வீற்றிருந்து வியலூர் ஆங்கன்
கோடியர் முடிவின் முன்னர் ஆடல்
வல்லோள் அல்லாள், வாழ்க கண்ணி
வலம்படு முரசம் ருவைப்ப (வாள் உயர்த்து
இலங்கும் பூணன், பொலங்குடி உழிநெயன்
மடம் பெருமையின் உடன்று மேல்வந்த

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

முவந்து மெய்மறந்த வாழ்ச்சி
வீற்று உகு போர்க்களத்து அடும் கோவே" (பதிற்றுப்பத்து 6ம் பத்தது – 56 (3)

விழாவானது சேரநாட்டில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அவ்விழாவில் ஒலிக்கின்ற கூத்தர்களின் இசைக்கு ஆடக்கூடியவன் அல்ல, சேர மன்னன் போரிலே மிகுந்த விருப்பம் கொண்ட இம்மன்னன் வெற்றி முரசானது மிகுந்த ஒலியெழுப்ப அவ்வொலியினை கேட்டு போர்புரிய வந்துள்ள பகை மன்னனை போரிலே வீழ்த்தி அப்போர்க்களத்தில் இறந்து கிடக்கும் பிணங்களின் நடுவிலே ஆடுவதில் வல்லவன் என்பதை இப்பெண்பாற் புலவர் உணர்த்துகின்றார்.

நக்கண்ணையார்

நக்கண்ணை என்ற பெயர் வடமொழியிலுள்ள சுலோசனா என்ற பெயரின் மொழி பெயர்ப்பாகக் கருதப்படுகிறது. இவர் பாடிய நான்கு பாடல்கள் சங்கப்பாடல்களில் இடம்பெற்றுள்ளது.

இறவுப்புறத்து அஃன்ன பிணர்படு தடவு முதல்
கறவுக் கோட்டளை முன் இலைத்தாழை
பெருங்களிற்று மரப்பின் அன்ன அரும்பு முதிர்வு
நலமான் உளையின் வேறுபடத் தோன்றி
விழஅக் களம் கமழும் உறவுநீர்ச் சேர்ப்ப
கிளமணி நெடுந்தேர் பாகன் இய்க்க
செல்இய சேறி ஆயின் அவளே
வருவை ஆகிய சில்நாள்
வாழானாதல் நற்கு அறிந்தனை சென்மும (16)

வளமிகுந்த நாட்டிற்குரியவனை வினைமுடித்து நீ விரைவில் வீடு திரும்புவாய் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற தலைவியானவள் உனக்காக நீண்டநாள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் உன் பிரிவைத் தாங்கமுடியாதவளாய் உயிர்பிரிய நேரிடும் என்பதை மனதில் நிறுத்தி விரைவாக திரும்புமாறு தலைவனுக்கு அறிவுறுத்துமாறு இப்பாடல் வரிகள் அமைந்துள்ளது.

அறிவியல் பதிவுகளை அமைத்து பாடிய நப்பசலையார்

இருபதாம் நூற்றாண்டை அறிவியல் நூற்றாண்டு என்றே கூறலம். **"நெருங்குவார் ஓதி நினக்கும் அன்றோ"** நிறை கர்ப்பம் அடைந்த பெண் ஆமை மணல் மேட்டில் மறைந்து நின்று புலால் நாறும் முட்டையை இட்டு மறைத்து வைக்கும், பிளவுடைய வாயைப் பெற்ற ஆண் ஆமை குஞ்சு வெளிப்படும் வரை அம்முட்டையைப் பாதுகாக்கும் என்று அரிய விலங்கியல் செய்தியை நப்பசலையார் பதிவுசெய்த நுட்பம் வியத்தற்குரியது.

வாழ்க்கை பற்றியே பேருண்மையைப் பதிவுசெய்த காமக்காணிப பசலையார்

வாழ்க்கை பற்றிய பேருண்மையை நற்றிணை பாவைத்திணைப் பாடல்வாயிலாக காமக்காணிப் பசலையார் அருந்திறத்தோடு வெளிப்படுத்துகிறார். செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்கிறார் குமரகுருபரர். செய்வோம் செய்வோம் என்று சென்றுகொண்டே இருக்கும் தன்மைபெற்ற செல்வதைத் தேடிக் காதலியரை விட்டுப் போகவேண்டாம் என்ற உண்மையைக் காமக்காணிப் பசலையார் உணர்த்துகிறார். வாழ்க்கை சூதாட்டக் கருவியைப் போல நிலையற்றது. சூதாட்டக்கருவி மாறி மாறி விழுவதைப் போல வாழ்க்கை மாறிக்கொண்டே இருக்கும். எனவே தலைவனையே நினைத்து வாழும் காதலிவரைப் பிரியவேண்டாம் என்ற பொருளில்,

தேம்பகு சிலம்பில் தென் அறல் தழீஇய
தற்கல் அயல தூமணக் அடைகரை
அலங்கு சினை பொதுளிய நறுவழ மா அத்துப்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பொதும்புதோறு அல்கும்பூங்கண் இருங்குயில்
கவறு பெயர்த்தன்ன நில்லா வாழ்க்கை இட்டு
கையுறத் துறப்போர்க் கழறுவ போல
மெய்கூற இருந்து மேலா நுவல
இன்னாது ஆகிய காலை, பொருள் வயிற்
பிரிதல் ஆடவர்க்கு இயல்புஎனின்
அரிது மன்றம்ம அறத்திலுள் பொருளே

வாழ்வின் பொருள், பொருள் தேடுதல் மட்டுமன்று, பொருள்பட வாழ்ந்து காதலரோடு மகிழ்ந்திருத்தல் என்று பசலையார் உணர்த்துகிறார்.

கைம்மைக் கொடுமையினைப் பதிவுசெய்த தாயங்கண்ணியார்

சிறுவயதிலேயே மணம் முடித்துக் கணவனை இழந்து, தலைமையிரை நீக்கி, வளையலைக் களைந்து, அல்லி அரிசியுண்ணும் கணவனை இழந்த பெண்டிர் நிலையைப் புறநானூற்றுப் பாடலில் உவமையாகப் பயன்படுத்தித் தாயங்கண்ணியார் யாவரையும் கண்கலங்க வைத்துள்ளார். **"பல் சான்றீரே" பல் சான்றீரே"** என்ற பாடலில் பூதப் பாண்டியன் தேவியர் கல்மேல் துயின்றும் கைம்மை தோன்றியற்றிய பெண்டிர் பட்ட மனவேதனையை வெளிப்படுத்தியுள்ளார். மாறோக்கத்து நப்பசலையார் புறநானூற்றுப் பாடிய என்னை மார்பில் புண்ணும் செய்ய எனும் பொதுவியல் திணைப்பாடலில் தலைவன் மார்பில் பட்ட புண்ணில் வண்டுகள் மொய்ப்பதால் வீட்டில் வைத்த விளக்கு அணைகிறது என்று கொடுமையை வெளிப்படுத்துகிறார்.

வீரம் செறிந்த வீரப்பெண்டிதர்

வீரம் நிறைந்தவர்களாக சங்ககாலப் பெண்டிர் இருந்தனர். முதல் நாளில் போரில் தந்தையை இழந்தாள், இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தார். இன்றைய நாளில் போர் முழக்கம் கேட்டவர் தன் குடப் பெருமையை காக்க எண்ணித் தன் குடிகாக்கும் ஒரே மகனுக்கு எண்ணெய் தடவி வெள்ளாடை உடுத்தி வேலைக் கையில் தந்து போர் முனைக்குச் சங்ககாலப் பெண் அனுப்பினாள் என்ற செய்தியை ஒக்கூர் மாச்சாத்தியவரின் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது.

கெடுக சிந்தை கடிது இவள் துணிது
மூதில் மகளிசாதல் தருமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து, களித்து ஒழுந்தனனே
நெடுல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிலை விலங்கி ஆண்டுப் பட்டனனே
இன்னும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி
வேல்லைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇ
பாறு மயிர்குடுமா எண்ணெய் நீவி
ஒரு மகன் அல்லது இல்லேல்
செருமுகம் நோக்கச் செல்வ என விடுமே.

பாரி மகளிர்

அங்கவை, சங்கவை என்று அறியப்படும் பாரி மகளிர், சங்ககால வள்ளல் வேள்பாரியின் புதல்வியர் ஆவர். தந்தை இழந்த நிலையில், புலவர் கபிலரால் காக்கப்பட்டு, ஔவையாரால் திருமணம் செய்துவைக்கப்பட்ட இவர்கள், தமிழ் இலக்கியத்தால் ஈகையின் புகழையும், பெண்ணின் கற்பையும் உணர்த்தும் அடையாளமாகத் திகழ்கின்றனர். புறநானூற்று 112ஆம் பாட்டு பாரி மகளிரின் பாடலாக வரலாற்றில் பதிவாகியுள்ளது எனலாம்.

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

எந்தையும் உடையலும், எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத்திங்கள் இவ்வெண் ணிலவின்
வெள்ளறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டாள்யாம் எந்தையும் இயலும் **(புறம். 112)**

வெள்ளிவீதியார்

வெள்ளிவீதியார் சங்ககாலப் பெண்புலவர்களில் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் **13** பாடல்கள் இவரால் பாடப்பட்டது. சங்ககால ஔவையார் இந்த வெள்ளிவீதியாரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அகம் சார்ந்த பொருளமைந்த பாடல்களையே வெள்ளிவீதியார் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கன்று முன்னாறு கலத்திலும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅறுங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை சல்குலென் மாமைக்
கவனே (குறுந் - 27)

இப்பாடலின் பொருளானது கன்று உண்டபின் பாத்திரத்தை நிரப்பும் பசுவின் பால்போல, தலைவியின் அழகு அவளுக்கும், அவள் தலைவனுக்கும் பயனளிக்கிறது என்று புலவர் கூறுவதாக அமைந்துள்ளது எனலாம்.

ஆதிமந்தியார்

ஆதிமந்தி என்பவர் சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர். இவர் சோழன் கரிகால் பெருவளத்தாளரின் மகள் ஆவார். இவரது பாடலாக ஒன்றே ஒன்று சங்கத் தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது எனலாம்.

மன்னர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழூஇய துணங்கை யானும்
யாண்குறுங் காணேன் மாண்டக்கோனை
யானுமோ ராடுகள மகனே யென்னைக்
கோடீ நிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகன மகனே **(குறுந் - 313)**

பூங்கண் உத்திரையார்

சங்ககால பெண்பாற் புலவர்களில் ஒருவர். உத்திரம் (உத்திர நட்சத்திரம்) என்னும் விண்மீன் நாளில் பிறந்ததால் இப்பெயர் பெற்றார். இவரது கண்களில் "பூ" என்றும் வெண்படலம் இருந்ததால் அப்பெயர் என்றும் ஒரு கருத்து உண்டு. இவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர். இவர் குறுந்தொகையில் 48, 171 ஆம் பாடல்களைப் பாடியுள்ளார் எனக்கருதலாம்.

வெண்ணிக் குயத்தியார்

சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழ்ப்பெண் கவிஞராவார். குயவர் குலத்தைச் சேர்ந்த இவரின் ஒரு பாடல் மட்டும் புறநானூற்றில் **66**வது பாடலாக அமைந்துள்ளது. வெண்ணி என்பது ஒருவகைப் பூ. ஆதலாம் பூ மற்றும் குலப்பெயரையும் சேர்த்து வெண்ணிக் குயத்தியார் என்று கூறப்படுகிறார்.

நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழல் ஆண்ட உரவோன் மருக
களி இயல் யானைக் கரிகால் வவை
சென்று, அமர்க்கடந்த நின் ஆற்றல்
தோன்ற
வென்பிறாய் நின்னிறும் நல்லன்

அன்றே
கலி கொள் யாணர் வெண்ணிப்
பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்தி
புறப் புண் நாணி வடத்துருந்தோனே? **(புறம்: 66)**

குறமகள் இனவெயினி

சங்ககால பெண்பாற் புலவர்களில் ஒருவரான குறமகள் இளவெயினி புறநானூற்றில் **157**வது பாடலை மட்டும் பாடியுள்ளார். எறையூர் பகுதியில் வாழ்ந்த இவர் குறவர் தலைவனான "எறைக்கோன்" என்பவனின் வீரம், கொடைத்தன்மை மற்றும் அவனது போர்;க்கள மாண்பு ஆகியவற்றைப் போற்றிப் பாடியுள்ளார் எனக்கருதலாம். இவர்,

தமர்தற் தப்பின் அது நோன்றல்லும்
பிறர் கையளவு தான் நாணுதலும்
படைப்பழி தாரா மைந்தனின் ஆகலும்
வேந்துடை அவையத்து ஓங்குபு
நடத்தலும்" (புறம் : 157)

செம்புலப் பெயல்நீரார்

செம்புலப் பெயர் நீர்போல என்பது சங்ககாலப் பாடலான குறுந்தொகையில் வரும் ஒரு புகழ்பெற்ற உவமையாகும். இதை இயற்றிய புலவரின் இயற்பெயர் அறியப்படாததால், அவர் இப்பாடலில் பயன்படுத்திய உவமையின் அடிப்படையிலேயே செம்புலப் பெயர்நீரார் என்று அழைக்கப்படுகிறார்.

யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேனின்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயர் நீர்போல
அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே (குறுந் : 19, 40)

முடிவுரை

பெண்மை உயரிய ஆளுமையின் அடையாளம், நுட்பமான அறிவுணர்வின் அடையாளம், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே படைப்பாற்றல் மிக்கவர்களாகத் திகழ்ந்த பாலினம், தனித்துவம் மிக்கவர்களாகத் தன்னுணர்வின்றி அழகாகத் திறத்தோடு வெளிப்படுத்திய இனம், சங்க இலக்கியப் பெண்பாற்புலவர்கள் மொழியைக் கூரிய அற்புதமாகப் பயன்படுத்தி தம்மை இயல்பாக வெளிப்படுத்தினர். ஒக்கூர் மாசாத்தாயரின் பாடல்களில் வரும் காட்டு களையும், ஔவையாரின் கவிதைகளில் திரும்பத் திரும்ப வரும் பாம்பும் பல செய்திகளை உணர்த்துவதாய் அமைகின்றன. வீரம் என்பது ஆணுக்கு மட்டுமன்று பெண்ணுக்கும் உரியது என்று போர்ச் செய்திகளைப் பாடிய நடும், மன்னனுக்கு ஆலோசனை கூறி, தூதுவராகச் சென்றதும், வலிமையான சங்ககாலப் பெண்பாற் புலவரின் திறமையான ஆளுமைப் பதிவுகள் மொத்தத்தில் சங்ககாலம் ஆளுமையுடைய பெண்களின் சுதந்திரமான பொற்காலம் என்பது சாலப் பொருத்தமாக அமைகிறது. நன்றி!!

குறிப்புகள்

[1] பட்டத்தி மைந்தன். *சங்கத் தமிழ் வளர்த்த பெண்பாற் புலவர்கள்*. கௌரா பதிப்பகக் குழுமம், 2002.
[2] கோவிந்தன், க. *பெண்பாற் புலவர்கள்*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1956.
[3] வையாபுரிப்பிள்ளை, எஸ். *சங்க இலக்கியம்*. மணிவாசகர் பதிப்பகம், 1992.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 **E-ISSN: 2584-167X**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

உமா மகேஸ்வரியின் தொலைந்தவன் சிறுகதை உணர்த்தும் ஆண் மையச் சிந்தனைகள்

முனைவர் பெ. வீரபுத்திரன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.

முன்னுரை

சமூக அமைப்பென்பது குடும்பத்தை மையமாகக் கொண்டது. ஒரு குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருந்தாலும் ஆண் குழந்தையே மையமாக இருக்கிறது. பெண் குழந்தைகள் அதன் முன் உதிரிகளாகவே கருதப்படும் நிலை இன்றைக்கும் காணப்படுகிறது. சாண் பிள்ளையென்றாலும் ஆண் பிள்ளை பெண் பிள்ளையென்றால் கருவேப்பிலையா என்று உணர்ச்சி பொங்க பெண்ணியம் பேச இயலுகிற் இன்றைய சூழலிலும் கூட பெண் பிள்ளைகள் இரண்டாந்தரத்தில்தான் வைத்து எண்ணப்படுகின்றனர். குடும்பத்தில் ஆண் குழந்தைக்கு வழங்கப்படுகிற சலுகைகள் பெண் பிள்ளைகளுக்கு நிச்சயமாக இல்லை. இதனை உமா மகேஸ்வரியின் சிறுகதைகள் பலவற்றில் காணமுடிகிறது. ஆணின் செயல்கள் எவ்வாறேனும் நியாயப்படுத்தப்படுகின்றன. பெண் பிள்ளைகளின் செயல்கள் சரியாகவே இருந்தாலும் தவறாக்கப்பட்டு தண்டிக்கவும்படுகிறார்கள் என்பதைத்தான் தொலைந்தவன் என்னும் சிறுகதை மூலம் உணர்த்த விரும்புகிறார். ஆணாதிக்கம் கோலோச்சும் சமூக அமைப்பில் பெண்கள் குடும்பத்திலேயே ஆணின் நலத்திற்காக ஒடுக்கப்படும் நிலையைக் காணமுடிகிறது. உமா மகேஸ்வரியின் பல கதைகளில் ஆண் மேலாதிக்க எண்ணங்கள் வெளிப்படவே செய்கின்றன. மரப்பாச்சி, ரணகள்ளி, புதர்கள், ஆண் கரு, நெடி, ஜன்னல், காட்டுச்செடி, மடை, ஊமைக் கொலுசு என்பன போன்றவற்றைச் சான்றாகக் கொள்ளலாம். அவருடைய சிறுகதைகள் மட்டுமின்றி புதினங்களிலும் ஆணாதிக்க மேலாண்மையைக் கண்டுணர முடியும். பெண் என்பவள் ஆணின் தன்னிலைக்குள் ஒடுங்குகிற முடக்கப்பட்ட தன்னிலையாகவே வாழ வலியுறத்தப்படும் வகையில்தான் காணப்படுகின்றன. சமூகத்தின் யதார்த்தத்தைத் தன் கதைகளின் வழி வெளிப்படுத்துகிறார் எனக் கொள்ள முடிகிறது. எந்தக் குடும்பத்திலும் பெண் குழந்தைக்குத் தரும் முதன்மை குறைவாகவே இருக்கிறது. ஆண் குழந்தையை போற்றிப் பாதுகாத்து வரும் நிலையே காணப்படுகிறது. இதற்கு அடிப்படையான சொத்து என்பதும் அதைகடந்து சமூகத்தில் உருவாக்கி வளர்க்கப்பட்ட ஆண் என்றால் உரன் என்னும் கருத்தியலுமே காரணமாக அமைகின்றன.

ஆண் என்னும் கருத்தாக்கமும் தமிழ்ப் புனைகதை வெளியும்

சமூக அமைப்பில் ஆண் என்பதாலேயே பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. நினைத்த நேரத்தில் எங்கும் செல்வதற்க ஆணினால் முடியும். ஆனால் பெண்ணிற்கு அத்தகைய உரிமை வழங்கப்படுவதில்லை. பெண் என்பவள் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம், அலுவலகம், தொழிற்சாலை எனப் பல இடங்களுக்குப் பணிக்குச் செல்கின்றனர் என்ற போதிலும் உரிய நேரத்தில் அவர்கள் கூடடைவதற்கே வற்புறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில் ஆணின் வக்கிரத்திற்கு ஆளாக நேரிடும் என வாதிடுகின்றனர். இத்தகைய நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது. இதனை, "ஆண், பெண் குழந்தைகளின் ஒழுக்கங்கள் புகட்டப்படுகின்றன. சமுதாயத்தின் ஆணாதிக்கப் படிமானங்கள் பிறந்தது முதல் தாலாட்டில் இருந்து வேறுபட்டுப் பிளந்து உருவாக்கப்படுகின்றது. சமுதாயத்தில் பெண்களின் நிழைல அவளின் டமையை ஒட்டி வெளிப்படும் தாலாட்டுப் பாடல்கள் தன்னிச்சையாக சுயேட்சையான வெளிப்பாடுகள் அல்ல." (பி.இரயாகரன், ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறையும், ப.169) என்ற பிறந்தது முதலே ஆண், பெண் இருவருக்கிடையிலான வேறுபாடுகளை புகட்டுகின்றனர். இதனால் பெண்ணின் செயல்பாடுகள் மதிப்பற்றனவாகவும் ஆணின் செயல்கள் மதிப்புக் கூடியனவாகவும் கருதப்படுகின்றன. "பல துறைகளில் பெண்களின் உழைப்ப அதிகளவு பயன்படுகிறது. ஆனால் அவர்களின் ஆர்வம், தனிப்பட்ட திறமைகள் என்பவை கவனிக்கப்படாமல் மலிவான உழைப்புச் சக்தியின் இருப்பிடமாகவே அவர்கள் கருதப்படுகின்றனர். பெண்ணின் குடும்பப் பொறுப்பைச் சுலபமாக்குவத தனிப்பட்டப் பிரச்சினையாகவே கருதப்படுகிறது." (சித்திரலேகா மௌனகுரு, பெண்நிலைச் சிந்தனைகள், ப.62) என்ற கூற்றில் பெண்களின் தனித் திறன்களோ, உழைப்போ, தனிப்பட்ட ஆர்வங்களோ மனதில் கொள்ளப்படுவதில்லை. மாறாக அவர்கள் குடும்பத்தில் ஆணிய அதிகாரத்தின் கீழ் ஒடுக்கப்பட ஏதுவான சூழல்களே காணப்படுகின்றன. "பெண்ணின் விருப்பம், உணர்வு எதையும் அறியாது அப்பெண்ணை ஆளுகைக்குட்படுத்த அனுபவிக்க ஆண் மிருகத் தனமாக நடந்து கொள்வதற்கப்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

பண்பாடு அவனக்குத் துணையாகின்றது. பண்பாட்டின் ஆதரவுடன் பெண்ணை ஆளுகையின் கீழ் வைத்துக் கொண்டிருப்பதற்குப் பயன்படுத்தும் ஆதிக்கச் சக்திகளில் வன்முறை பெரிய ஆயுதமாக இருக்கிறது" (அரங்க.மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும, ப.106-107) என்னும் கருத்தின் வழி பெண்கள் குடும்ப அமைப்பில் பெண்கள் நடத்தப்படும் விதம் பற்றிய அறியலாகிறது.

தமிழ் இலக்கியப் பெருவெளியில் ஆண்களின் வகைப்பட்டதாகவே படைப்பகள் இருந்திருக்கின்றன. "ஆண்களை மையமிட்ட இலக்கியப் பரப்பில் ஆண் அடக்குபவனாகவும் பாடுபொருளாகவும் இருந்திருக்கிறான். பெண் அவனது விழைவிற்கும் புனைவிற்கும் ஏற்றவாறு உருவாக்கப்பட்டாள். பெண்ணின் உணர்வுகள் உள்ளவாறு வெளிக்காட்டப்படாமல் ஆணாதிக்கத்தின் குரூரங்களுக்கு ஏற்ப வெளிப்படுத்தப்பட்டன." (பா.செல்வகுமார், இலக்கியத்தில் பெண்ணியம் –தலித் பெண்ணியம், ப.227) என்று கூறுவதற்கிணங்க சங்க காலத்திலிருந்தே இலக்கியங்கள் ஆண்வயப்பட்டாதகவும் ஆணின் தகவமைதலுக்கு ஏற்ப பெண்ணை வடிவமைப்பதாகவும் இருந்தன. தமிழ்ச் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எனப் பலவற்றிலும் பெண்ணின் இருப்பு இரண்டாம் தரத்தில் இருந்தன. இதனை "காத் மில்லத் கூறுவது போலப் பெண்ணுக்கெதிரான அதிகாரச் செயல்பாடுகளைப் பெண்ணே ஏற்றுக் கொள்ளும்படி அவள் அறிந்து கொள்ள முடியாத ஒரு முறையில் நிகழ்கலை நாடகம் போன்ற ஒரு பாணியில் குடும்பமெனும் மேடையில் அரங்கேற்றியிருக்கிற தன்மை, சங்க இலக்கிய அகப்பாடல்களின் இலக்கிய மேன்மைக்கு இன்றுவரை சான்றாக விளங்குகிறது" (க.பஞ்சாங்கம், தலித்துகள் பெண்கள் தமிழர்கள், ப.153) என்று கூறுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு தமிழ்ச் சூழலில் பெண்கள் இலக்கியத்தில், சமூகத்தில், குடும்பத்தில் நடத்தப்படும் விதம் குறித்தும் புனைவுகளில் அவர்கள் கட்டமைக்கப்படும் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

உமா மகேஸ்வரியின் கதைகள்

தமிழ் இலக்கியச் சூழலில் பெண்களின் எழுத்துக்கள் புதிய தடத்தில் பயணிக்கத் தொடங்கி இரு பத்தாண்டுகளுக்கும் மேலாகின்றன. புதிய சிந்தனைகளின் வழித்தடத்தில் பெண்களின் படைப்புகள் வெளிப்படுகின்றன. ஆணாதிக்கத்தை முறையாக அறிந்து கொண்டவர்கள் அதன் அடிப்படையில் சமூகத்தின் நெருக்கடிகளை உணர்ந்து கொண்டனர். இலக்கியத்தில் அதனைப் பிரதபலித்தன. இதில் சிறுகதையாசிரியர்கள் என்று சொல்லும் போது "அம்பை, காவேரி, திலகவதி, சிவகாமி, பாமா, அனுராதா, உஷா சுப்பிரமணியன், தமயந்தி, உமா மகேஸ்வரி, சு.தமிழ்ச்செல்வி போன்ற பெண் எழுத்தாளர்கள் எழுதி வருகின்றனர்" (பா.செல்வகுமார், தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம் தலித் பெண்ணியம், பக்.229-230) என்று குறிப்பிடுவதில் தற்காலத்தில் எழுதி வருகிற சிறுகதையாளர்களில் பெண்ணிய நோக்கிலான கருத்தியலை முன் வைத்து எழுதுபவர்களும் இருக்கிறார்கள். பெண்களின் இருண்ட வாழ்வை வெளிப்படுத்தும் நோக்கினை வெளிப்படுத்துபவர்களும் இருக்கிறார்கள். உமா மகேஸ்வரியின் சிறுகதைகள் பெண்ணின் அகமன உலகை அவர்களின் இயல்பான விருப்பத்தை, சமூகத்தின் மீதான கோபத்தை, நெருக்கடியை உள்வாங்கி எழுதுகிறார் எனக் காணமுடிகிறது. இதனை, "பெண்ணின் உடற்கூறு, மனக்கூறு எப்படிச் செயற்பட்டாலும் அதைக் கட்டுப்படுத்துவதொன்றே ஆணாதிக்கத்தின் தன்மையாக உள்ளது. சிறுமி, பருவம் அடைந்ததாலே அவள் தவறு செய்வதற்கு தவறு செய்ய தூண்டுவதற்கு ஏதுவானவள் எனக் கருதி காவலுக்குட்படுகிறாள்…. கற்பு, கற்பு நிலை எனக் கொடி தூக்கிப் பிடித்துக் கொண்டும் இயல்பாக உள்ள பெண்களைச் சந்தேகித்தும் வாழ்வது ஆண்களின் குணாம்சத்தில் ஒன்றாக மாறிப் போனது." (பா.செல்வகுமார், இலக்கியத்தில் பெண்ணியம் தலித் பெண்ணியம், ப.237) என்பனவற்றை காட்சிப்படுத்தும் சிறுகதைகள் உமா மகேஸ்வரியினுடையது எனக் கூறப்படுகிறது. ஆண் என்பதாலேயே பல சலுகைகள் அவனுக்கு வழங்கப்படுவதை சுட்டிக் காட்டும் விதமாகத்தான் ஆண் என்னும் சிறுகதை அமைந்துள்ளது.

தொலைந்தவன் சிறுகதையின் மையப்பொருள்

நான்கு பெண் பிள்ளைகள் ஓர் ஆண் என இருக்கும் குடும்பத்தில் பெற்றோர் ஆண் குழந்தையின் செயல்களை எதிர்கொள்ளும் விதமும் பெண் குழந்தைகளின் செயல்களை எதிர்கொள்ளும் விதமும் வேறுபட்டு அமைவதைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது, அவன் ஆண் பிள்ளை அப்படித்தான் இருப்பான் என ஒவ்வொரு தவறுக்கும் பெண்ணையே தண்டிக்கும் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. சிறுவயதாக இருக்கும் அவன் ஆண் குழந்தை என்பதால் அவனைப் பாதுகாக்கும் பொறுப்பு முழுக்க பெண் பிள்ளைகளுக்குத்தான் அவன் தொலைந்து போனால் பெண் பிள்ளைகளைத் தண்டிப்பார்கள். அவனுக்கு வேண்டிய செலவுகள் மிகுதியாக இருக்கும் பெண் பிள்ளைகளுக்கு அது போல் செலவு செய்ய மாட்டார்கள். படிக்க வைப்பதில் பாரபட்சம். அவன் செய்கிற ஒவ்வொரு சிறு செயல்களையும் பாராட்டி

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

அகமகிழ்வார்கள். ஆனால் பெண் பிள்ளைகளைக் கண்டு கொள்ளமாட்டார்கள். அவன் தன் சித்தியுடன் தவறாக இருக்கும் போது போது சித்தியைத்தான் அம்மா வசை பொழிகிறாள். அவன் சிறுவன் அவனுக்கு ஒன்றும் தெரியாது என்று அவனை நியாயப்படுத்துகிறார்கள். சித்தியுடனான அவனது செயலைத் தந்தை ஆண் பிள்ளையென்றால் அப்படி இப்படித்தான் இருப்பான் என்று சமாளிக்கிறார். இதுவே பெண் பிள்ளைகள் அப்படி இருந்தால் என்னவாகியிருக்கும் என்று பெண் பிள்ளைகள் யோசிக்கிறார்கள். அவன் படித்து முடிப்பதற்கு மற்றவர்கள் தியாகம் செய்ய வேண்டும் நிலை. அவன் செய்யும் பிடிவாதங்கள், திருமணத்திற்கு தயாரான நிலையில் திருமணத்தை நிறுத்துவது என அவனது விளையாட்டுக்கள் பெற்றோருக்கு பெரும் அலைக்கழிப்பை ஏற்படுத்துகின்றன. ஆனாலும் அவன் அவன் ஆண்பிள்ளை என்பதற்காக அனைத்தையும் பொறுத்துக் கொள்கிறார்கள். அவன் வசை மாறி பொழிந்தால் தம்பிதானே பொறுத்துக் கொள் என்கிறார்கள். அவன் மனைவிக்காகவும் அக்கா, தங்கைகள் அவனைப் பொறுத்துக் கொள்கிறார்கள். இரத்தபாசம், அன்பு என்பன போன்ற பூச்சுக்களால் ஆணின் செயல்பாடுகள் அனைத்தும் நியாயம் செய்யப்படுகின்றன.

ஆண் என்பதால் தரப்படும் சலுகைகள்

குடும்பத்தின் வாரிசாகக் கருதப்படக் கூடிய ஆண் குழந்தையைச் சீராட்டி, பாராட்டி வளர்க்கவே பெற்றோர் பெரிதும் விரும்புகின்றனர். அக்காவுக்கு அவனைப் பாதுகாப்பதே வேலை, அவன் எங்காவது தொலைந்து விடுவானோ என்னும் சிந்தனையிலேயே தன் சுதந்திரத்தைப் பறிகொடுக்கும் அக்கா. அவன் தொலைந்த போது அம்மாவின் செயல் "எங்கேடா இருக்கே?.... குழந்தையைக் கவனிக்காம என்னடி செஞ்சீங்க.. என்று எங்கள் முதுகில் வரிசையாய் ஆளுக்கொன்று விழுந்தது." (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.86) என்று தம்பியின் பொருட்டு அக்காக்கள் அடி வாங்குகின்றனர். பெண்களை வளர்ப்பதிலும் ஆண்பிள்ளையை வளர்ப்பதிலும் பேதம் பார்க்கும் பெற்றோர் குறித்து "அம்மா அநிச்சையாக எங்கள் வளர்ப்பிற்கிடையேயான பேதக்கோட்டை வரைந்து கொண்டே இருந்தார்கள். அம்மா அழுத்தமாக தன் ஆவேசமான ஆவல்கள், மூர்க்கமான பாசம், முழுமையான அன்பு அத்தனையையும் இழை இழையாய்த் தம்புவின் மேல் நெய்து கொண்டே போக அவன் அவற்றை அறுத்தெறிந்த விட்டு வலையிலிருந்து நழுவுவது போல விலகி ஓடிக் கொண்டிருந்தான். முதல் டிகாக்ஷன் காபி, முறுகலான தோசை, அப்பா அடிகுழாயில் மூச்சிரைக்க அடித்து அவன் குளிக்க நிரப்பி வைக்கும் ஆற்றுத் தண்ணீர், தனிக் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவன் நுனி விரலில் ஒதுக்கி விடுகிற உடைகள்... ஒவ்வொன்றிலும் அடிநாதமாக அர்ச்சனைகளும் நாமாவளிகளும் ஓடிக்கொண்டிருந்தன. தவப்புதல்வனே போற்றி.. குலக்கொழுந்தே போற்றி, வம்ச விளக்கே போற்றி, வாரிசாக வந்தோனே போற்றி" (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.88) என்று ஆணுக்கு முதன்மையளித்து அவனை போற்றி வளர்க்கும் விதம் பற்றி பெண்ணின் பார்வையில் விளக்கப்படுகிறது. ஆண் பிள்ளையின் சிறு சிறு செயல்கள் கூட வானளாவப் புகழப்படுகின்றன. "படிப்பின் சிறு வெற்றிகள், அட்டைகள் வைத்து அவன் உருவாக்கிய கட்டிடங்கள், விளையாட்டுகள், பரிசுக் கோப்பைகள் ஒவ்வொன்றின் போதும் திருஷ்டி கழிக்கத் தலையைச் சுற்றி அடுப்பில் அம்மா போடும் மிளகாய் நெடி வீடு முழுக்கக் கமறும். யேய் நீ பாரதியார் பாட்டுப்போட்டியில் first வந்தியே அப்ப அம்மா உனக்குத் திருஷ்டி சுத்தினாங்க" (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.89) என்று ஆண் குழந்தையை வெகுவாக சீராட்டி வளர்க்கும் விதம் பற்றிக் கூறப்படுகிறது. பெண் பிள்ளைகள் மேல் அக்கறை காட்டுவது என்பது அவளுடைய நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதாகவே இருக்கிறது.

சித்தியுடனான தொடர்பை அக்காள் பார்த்து விட்டு அம்மாவிடம் கூட அதைப் பற்றிக் கண்டு கொள்ளாததோடு சித்தியைத்தான் தாய் வசைமாறிப் பொழிகிறாள். "போச்சு என் பிள்ளையைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிட்டா... என்று சித்திக்குத் திட்டு விழுந்தது. இதில் அவன் பங்கென்று எதுவுமில்லையா என்று அம்மாவைக் கேட்க நினைத்து வசவுக்குப் பயந்து வாய் பொத்திக் கொண்டேன்" (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.93) என்று ஆணின் செயலில் குற்றம் காண்பதில்லை.பெண்ணே பழிக்கப்படும் நிலையில் இருக்கிறாள். தந்தை ஆண் பிள்ளை செய்த தவறுக்குக் கூறும் சமாளிப்பான பதில் "அப்பாதான் அம்மாவோடு அடுப்படியில் குசுகுசுத்தார். ஆம்பிளைப் பிள்ளைன்னா கொஞ்சம் அப்படி இப்படித்தானிருப்பான். நாமதான் விட்டுப் பிடிக்கணும் என்று உரக்கச் சொல்லிக் கொண்டு வெளி வந்தார்." (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.94) என்று குடும்பத்தில் ஆண் பிள்ளையென்றால் தரப்படும் சலுகைகள் இக்கதையில் கூறப்படுகின்றன. தாய், தந்தையை வேண்டாமென்று முரண்டு பிடித்தான். தன்னை வளர்த்த கடனுக்காக பணம் தருவதாகக் கூறினான். அப்போதும் அவன் மேல் பெற்றோர் கோபம்

Academic Research News
Peer-Reviewed Journal

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

கொள்ளவில்லை. அவனுக்குத்திருமணம் செய்து வைத்தால் சரியாகுமென்று பெண் பார்த்தார்கள். பேசி முடித்துத் திருமணத் தேதி குறித்த பின் வேண்டாம் என்று முரண்டு பிடித்தான். "நிச்சயதார்த்தத் தேதி குறித்த பிறகு இந்தப் பெண் வேண்டாம் என்று கவிழ்ப்பு. அப்பா முகத்தில் கரிப்பூச்சு. தலை குனிவு. பெண் வீட்டாரின் சாபம். எல்லாவற்றிலும் இந்தத் தம்புவின் நமட்டுச் சிரிப்பொலி" (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.96) என்று தம்புவின் இடர்ப்பாடுகளுக்கு இயைந்து கொடுத்துப் போகும் பெற்றோர். அவன் செய்கிற அனைத்துச் செயல்களும் வரம்பு மீறியனவாக இருந்தாலும் அவனைக் கண்டிக்கவோ, திட்டவோ செய்வதில்லை. இது குடும்பத்தில் ஆண் பிள்ளைக்குத் தருகிற சலுகையாகக் கொள்ளமுடிகிறது.

பெண்களுக்குத் தரப்படும் கட்டுப்பாடுகள்

குடும்ப அமைப்பில் ஆண்களுக்குத் தரப்படும் சலுகைகளைப் போல பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவர்கள் கல்வி கற்க முழு மனதுடன் அனுமதிக்கப்படுவதில்லை. மாறாக ஆண் குழந்தையைப் பராமரிக்க அவர்கள் தேவைப்படுவார்கள். தம்புவைப் பார்த்துக் கொள்ளும் சுமதி, வசந்தி ஆகியோரின் அரவணைப்பு. மேலும் ஆண் குழந்தையைத் தாயானவள் பெண் குழந்தைகளை விட பன்மடங்கு கூடுதலாகப் பராமரித்து வர வேண்டும். தாயை, சகோதரிகளை தம்பு ஒருபோதும் மதிப்பதில்லை. தன் விருப்பத்திற்கு இயைந்தவாறு அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென விதிகளை விதிக்காததுதான் குறை. அவன் விளையாடும் போது தொலைந்து போனதும் மகள்களை தாய் வசைமாரிப் பொழிகிறாள் "குழந்தையக் கவனிக்காம என்னடி செஞ்சீங்க என்று எங்கள் முதுகில் வரிசையாய் ஆளுக்கொன்று விழுந்தது" (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப.86) என்று குறிப்பிடுவதில் பெண் பிள்ளைகள் ஆண் குழந்தையைப் பராமரிக்கத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதாகக் கூறப்படுகிறது. இது போல் படுக்கையில் தம்புவுக்குத்தான் முதலிடம். அவனுக்குத் தலையணை போதவில்லையென்றால் பெண் பிள்ளைகளின் தலையணைகளை எடுத்துக் கொடுத்து விடுவார்கள். "திண்டுகள், தலையணைகள் சூழப் படுத்திருப்பான். பாற்கடல் பள்ளிகொண்ட மகாவிஷ்ணு போல் பொட்டைக் கழுதைக்கென்னடி காலிடுக்கில் தலகாணி பிடுங்கிய தலையணைகள் ஆண் சிங்கமாகிய அவனது திருமஞ்சத்தை இதப்படுத்த ஏறிக் கொள்ளும்" (உமா மகேஸ்வரி கதைகள், ப.88) என்பதில் பெண் பிள்ளைகள் கீழிறக்கம் செய்யப்படும் விதம் பற்றிக் காணமுடிகிறது. "அம்மாவாக இருப்பதுதான் எத்தனை பரிதாபத்துக்குரியது அம்மாவிடம் வார்த்தைகளேயில்லை." (உமா மகேஸ்வரி கதைகள், ப.90) என்ற கூற்று குடும்பத்தில் தாய் என்னும் பெண் எத்தனை வாதைக்குள்ளாகிறாள் என்பதைத்தான் வெளிப்படுத்துகிறது. தம்பு கோபம் கொள்ளும் போது பெண்கள் பொறுத்துப் போக வேண்டும் என்று வலியுறத்தப்படுகின்றனர். "அவன் கோபக்காரனென்று தெரிந்ததும் நீ பேச்சை வளர்த்தி இருக்கக் கூடாது என்று கடைசிக் குற்றச்சாட்டும் என் தலையில் வந்து விடிந்தது" (உமா மகேஸ்வரி கதைகள், ப.91) என்று தம்பு சினம்கொள்ளும் போது அக்காவானவள் பொறுத்துப் போக வேண்டும் எனக் கூறப்படுகிறது. தம்பு சித்தியுடன் தவறாக இருந்ததைப் பார்த்த சுமதி அதை தன் தாயிடம் கூறுகிறாள். அவளோ அவன் தவறு செய்திருக்கமாட்டான் என்று கூறி சித்தியை திட்டுகிறாள். அவனுடைய தந்தையோ ஆண் பிள்ளை என்று அப்படி இப்படித்தான் இருப்பான் என்று கூறுகிறார். இது போல் பெண் குழந்தைகள் நடந்து கொண்டால் இது போல் ஏற்றுக் கொள்வார்களாக என்று கேட்கிறாள் வசந்தி "இதே நிலையில் நானோ, அக்காவோ, தங்கைகளோ இருந்தால் அப்பா என்ன சொல்வார் என்று கேட்டது என் வேதாளம். சிரிப்புத்தான் வந்தது" (உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கதைகள், ப. 94) என்று கூறுவதாக அமைகிறது.

முடிவுரை

குடும்பத்தில் பாலின பேதம் என்பது பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. வாரிசுரிமையை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பில் குடும்பத்தில் ஆண் முதன்மை என்பது இயல்பானதுதான். ஆனால் இத்தகைய ஆணியச் சமூக நிலையைக் கேள்விக்குட்படுத்தும் படைப்புகள் வரத் தொடங்கியது. சமீப காலத்தில்தான். பெண்களை வீட்டிற்குள்ளேயே இருத்தி வைக்கும் வழமை இன்றைக்கும் தொடர்ந்து வருகிறது. இதனைத்தான் உமா மகேஸ்வரியின் தொலைந்தவன் என்னும் சிறுகதை உணர்த்துகிறது. அவருடைய கதைகள் பலவற்றில் ஆணாதிக்க மேலாண்மையின் கொடூரங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆண் என்பதாலேயே அவனுக்கு வழங்கப்படும் சலுகைகள், பெண் என்பதால் அவளை முன்னிறுத்தி உருவாக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் என்பதை இக்கதையின் மூலம் உணர்த்துகிறார். தம்பு மற்றும் அவனது சகோதரிகளிடையே நடைபெறும் இடர்ப்பாடுகள் வழி ஆண்

CP - Volume 2, Issue 2, July 2026 E-ISSN: 2584-167X

என்றால் ஒரு விதமாகவும் பெண்ணை ஒரு விதமாகவும் பேதம் செய்து வளர்க்கும் வழக்கம் சமூகத்தில் புரையோடிப் போயிருப்பதைத் தோலுரித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

குறிப்புகள்

[1] பா.செல்வகுமார், இலக்கியத்தில் பெண்ணியம் – தலித் பெண்ணியம், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2022
[2] க.பஞ்சாங்கம், தலித்துகள் பெண்கள் தமிழர்கள், பரிசல் வெளியீடு, சென்னை, 2021
[3] சித்திரலேகா மௌனகுரு, பெண்நிலைச் சிந்தனைகள், தாயதி வெளியீடு, சென்னை, 2023
[4] பி.இரயாகரன், ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும், கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை, 2002.
[5] அரங்க. மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.